


# மெய்மை

## உலக மெய்யியல் தின மெய்யியல் வருடாந்த இதழ் –3

தத்துவம் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

2024

# மெய்மை சஞ்சிகை இதழ் - 03

தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலைகலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## இதழ் குழுவினர்.

- ### இதழ் ஆசிரியர்



கலாநிதி.சோ.ஜெகநாதன்

**Ph.D in Philosophy** (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

**M.Phil (UPDN)**

**PGD in Psychology (UPDN), BA(EUSL),**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

தத்துவவியல் மற்றும் விழுமியக்கற்கைகள் துறை,

கலைகலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

- ### இதழ் குழு மாணவர்கள்



தருமரெத்தினம் பரஸ்காந்

நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு

**(2018/2019)**



டானியல் றொமிட்டா

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு

(2019/2020)



எஸ்.ஏ.ஜீ.எப்(f).z(சுஹறா)

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு

(2019/2020)



த.ஹம்சலியா

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு

(2020/2021)

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் கற்கைத் துறைகள் தனித்துவமான முறையில் அவற்றிற்கேயுரிய கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவது பாராட்டத்தக்க செயல்களாகும். இந்தவகையில் தத்துவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21ம் நாளில் உலக மெய்யியல் தினத்தைக் கொண்டாடும் ஒரு அம்சமாக ''மெய்மை'' எனும் கட்டுரைத் தொகுதியினையும் வெளியிடுகின்றது. மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிப்பது இதன் சிறப்பம்சமாகும். இவ்வருடம் தனது மூன்றாவது இதழை வெளியிடுகின்றது. இப்பீடத்தின் பீடாதிபதி என்ற வகையில் இதன் இவ்விதழுக்கும் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அனைத்து துறைகளையும் உட்கொண்டதாகவிருந்த மெய்யியல் பல துறைகளை சங்கமித்திருக்கின்றது. ஏனைய துறைகள் இதிலிருந்து பிறந்ததனால் இதனை சமூக விஞ்ஞானங்களின் தாய் (Mother of all social sciences) என அழைப்பர். விஞ்ஞான கண்டுபிடிப்புக்களின் வளர்ச்சி, கணணி யுகம் உருவாக்கம் முதலியன ஏற்பட்டதன் பின்னர் இதன் விசாலம் இன்னும் அதிகரித்திருக்கின்றது. பிரயோக ரீதியாக தத்துவத்தை நோக்கும் பாங்கு இப்பொழுது உருவாகியிருக்கின்றது. இதனை அறிமுகப்படுத்தி வளர்ச்சியடையச் செய்வது மெய்யியல் துறையின் பாரிய கடமையாக உள்ளது. இவ்வாறான கல்விச் செயற்பாடுகள் இதனை மேம்படுத்தும் என நம்புகின்றேன். இதனை தொடர்ச்சியாக வெளிக்கொணர உழைக்கின்ற துறைத்தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதலை தெரிவிப்பதுடன் இவ்வாறான செயற்பாடுகளை மேலும் முன்னெடுக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.




**கலாநிதி. வ. குணபாலசிங்கம்**

**B.A (EUSL), PGDE(OUSL), M.Phil in Hindu Civilization (UOJ), Ph.D in Hindu Civilization (UOJ)**

**பீடாதிபதி,**

**கலைகலாசார பீடம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம்,**

**இலங்கை.**

## துறைத் தலைவரின் கருத்துரை

இந்த ஆண்டிற்கான உலக மெய்யியல் தினக் கொண்டாட்டத்தை நடாத்துவதனையும், அதன் ஒரு அம்சமான "மெய்மை" எனும் இதழின் மூன்றாவது இதழை வெளியிடுவதையும் எனது தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுத்துவதில் உவகையடைகிறேன். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பாடத்தினை கற்ற முதலாவது தொகுதியில் நானும் ஒருவன். நாங்கள் முதல் தெகுதியாக பல்கலைக்கழகம் வந்தபோது கலைப்பீடத்தின் கீழ் தமிழ், நுண்கலை, அரசறிவியல், மெய்யியல் என நான்கு பாடங்கள் மட்டுமே இருந்தன. பொருளியலை வணிக முகாமைத்துவ விரிவுரையாளர்கள் கற்பித்தனர். இந்த ஐந்து பாடங்களில் மூன்றை தெரிவு செய்து கற்றோம். தற்பொழுது பதினாறு பாடங்கள் உள்ளன. மெய்யியல் தனித்துறையாக உள்ளது. இவ்வாறான வளர்ச்சியின் ஒரு கட்டமாக ஆளணியினை குறிப்பிடலாம். ஐந்து நிரந்தர சிரேஷ்ட விரிவுரையாளர்கள் உள்ளனர். இவர்களுள் நான்கு பேர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்றவர்கள். இந்த நான்கு பேருக்கும் கற்பித்தவராக திரு.மு.ரவி காணப்படுகிறார். இவ்வாறான ஒரு சிறப்பு மிக்க இத்துறை வருடாவருடம் உலக மெய்யியல் தினத்தைக் கொண்டாடுகிறது. இதன் ஒரு அம்சமாக "மெய்மை" எனும் கட்டுரை இதழும் வெளிவருகின்றது. இதற்கு மகுடம் சூட்டுவது போல் பேருரையானது ஒரு ஆய்வு வெளியீடாக ஒவ்வொரு வருடமும் வெளிக்கொணர்வது என்ற எண்ணத்தையும் இத்துறை கொண்டுள்ளது. இதன் முதலாவது ஆய்வுக் கட்டுரையினை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் M.S.M. அனஸ் அவர்கள் சமர்ப்பிக்கின்றார். சமகால மெய்யியல் பாடப்பரப்பில் புலமையுள்ள ஒரு இலங்கையராக பேராசிரியர் அனஸ் காணப்படுகிறார். இவருடைய ஆக்கம் ஒரு சிறு நூலாக வெளிவருகிறது. மேற்கூறிய இவ்வாறான முயற்சிகளுக்கு பேருதவியாக இருக்கின்ற உபவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்கள், நிர்வாகிகள், ஊழியர்கள் என அனைவருக்கும் இத்துறையின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.



**திரு.V.அழகரெத்தினம்**

**BA(EUSL), MLIS (Col), M.Phil (UOJ)**

**PGDE (OUSL), CTHE (Col)**

**துறைத்தலைவர்,**

**தத்துவவியல் மற்றும் விழுமியக்கற்கைகள் துறை,**

**கலை கலாசார பீடம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம்,**

**இலங்கை.**

## இதழாசிரியர் உரை ...................

கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறையின் புதிய வரவோடு உருவான "மெய்மை" சஞ்சிகையானது உலக மெய்யியல் தினத்தை முன்னிட்டு வெளிவருவதில் இதழாசிரியர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன். மெய்யியல் துறைசார் விரிவுரையாளர்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களை சுமந்து வரும் மெய்மைக்கு இவ்வருடம் மூன்றாவது பிறந்த தினமாகும். இவ்விதழில் பண்பாடு, அரசியல், சமூகவியல், வரலாறு, கல்வி, விஞ்ஞானம் சார்ந்து மெய்யியல் நோக்கில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருண்மைகள் எமது சிந்தனை அலையில் சிறு நேர்நிலையான பாய்ச்சலை ஏற்படுத்தினால் அதுவே எமக்கு ஆத்ம திருப்தியை தரக்கூடியதும் இச்சஞ்சிகையின் வெற்றியுமாகும். இவ்வருடத்திற்கான மெய்மை வெளிவருவதில் பல சவால்கள் காணப்பட்ட போதும் பல நல்லுள்ளங்களின் ஆதரவு கிடைத்துள்ளமையினையும் நன்றியோடு நினைவு கூற வேண்டியுள்ளது. துறைத்தலைவர் மற்றும் விரிவுரையாளர்கள், மெய்யியல் சிறப்புக்கற்கை மாணவர்கள், பல்கலைக்கழக நிர்வாகத்தினர் அனைவருக்கும் இதழாசிரியரின் நன்றியினையும் பாராட்டுக்களையும் உரித்தாக்குகிறேன்.

நன்றி....




**இதழாசிரியர்,**

**கலாநிதி.சோ.ஜெகநாதன்**

**Ph.D in Philosophy (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)**

**M.Phil (UPDN)**

**PGD in Psychology (UPDN), BA(EUSL),**

**சிரேஷ்ட விரிவுரையாளர்,**

**தத்துவவியல் மற்றும் விழுமியக்கற்கைகள் துறை,**

**கலைகலாசார பீடம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம்,**

**இலங்கை.**

## உள்ளடக்கம்

1. கற்பு பற்றிய பெரியார் மற்றும் திருவள்ளுவரின் சிந்தனைகள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு
2. பிரடரிக் நீட்சேயின் சிந்தனையில் 'கடவுள் இறந்துவிட்டார்' மற்றும் 'அதீத மனிதன்' என்ற எண்ணக்கருக்கள்
3. உளவளத்துணை : ஓர் வரலாற்று நோக்கு
4. ஒளித்திரைகளும் சிறுவர்களும்
5. சூழல் நியதிவாதமும் மானிட ஆதிக்கவாதமும் - ஓர் சூழலியல் மெய்யியல் நோக்கு.
6. பிரயோக ஒழுக்கவியலில் மருத்துவ ஒழுக்கம்
7. மரணதண்டனை ஒரு வரலாற்று நோக்கு
8. உளவியலும் கல்வி உளவியலும்
9. சோக்கிரடீஸின் ஒழுக்கவியல் சிந்தனைகள்
10. கலையும் கைவினையும்
11. ஒழுக்கவியலின் வளர்ச்சி போக்கு
12. மெய்யியலில் தர்க்கப்புலனறிவாதம் - ஓர் அறிமுகம்
13. உளவளத்துணையில் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள்
14. மருத்துவர் மற்றும் நோயாளியின் உறவு – ஒரு மருத்துவ ஒழுக்கவியல்சார் ஆய்வு
15. "சிறுவர் கல்வி உரிமையும் நடைமுறைகளும்" ஐக்கிய நாடுகள் சபை பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் நோக்கு
16. சிறுவர்கள் மத்தியில் மெய்யியல் சிந்தனைகள்
17. ஊக்கமும் மனவெழுச்சியும்
18. பெண்மை பற்றிய அரிஸ்டோட்டிலின் நோக்கு

19. உளவியலில் “புலக்காட்சி” என்ற எண்ணக்கரு பற்றிய கெஸ்டால் உளவியலாளர்களை மையப்படுத்திய பார்வை
20. தர்க்க அணுவாதம்: ஒரு மெய்யியல் ரீதியான கண்ணோட்டம்
21. சோக்ரடீஸின் ஒழுக்கவியல் சிந்தனைகளின் ஏற்புடைமை
22. பிரயோக ஒழுக்கவியலில் ஊடக ஒழுக்கவியல்
23. தமிழர் தத்துவ மரபில் சித்த தத்துவம்
24. அறிவாராய்சியியலில் இம்மானுவேல் கான்ட்
25. நகைச்சுவையின் தத்துவம்
26. இலத்திரனியல் கழிவுகள் மனித சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்
27. இந்து மதத்தில் பெண்ணிய சிந்தனை
28. சூழல் ஒழுக்கவியல் பற்றிய ஒரு அறிமுகம்.
29. மரண தண்டனை - ஓர் ஒழுக்க நோக்கு
30. இலத்திரனியல் கழிவுகளும் எதிர்காலமும்

# *1. கற்பு பற்றிய பெரியார் மற்றும் திருவள்ளுவரின் சிந்தனைகள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு*

**Dr. R. Premkumar**

**Senior Lecturer - GI,**

**Dept. of Philosophy and value Studies,**

**Faculty of Arts and Culture,**

**Eastern University, Sri Lanka.**

premkumarr@esn.ac.lk

**அறிமுகம்**

தமிழ் இலக்கிய வரலாற்றின் படி சங்கமருவிய காலத்தில் எழுந்த சிறந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக திருக்குறள் போற்றப்படுகின்றது. கி.பி ஏழாம் நூற்றாண்டு வரை இதன் காலத்தை இலக்கிய வரலாற்று அறிஞர்கள் வரையறை செய்கின்றனர். அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருள்களை எடுத்துரைக்கும் இந்நூலில் அறத்துப்பாலின் இல்லறவியல் எனும் பிரிவில் இடம் பெறும் வாழ்க்கை துணைநலம் மற்றும் பொருட்பாலில் இடம் பெறும் பெண்வழிச்சேறல் மற்றும் வரைவின்மகளிர் போன்ற அதிகாரங்களில் பெண்மை பற்றிய கருத்துக்களை வள்ளுவர் வெளிப்படுத்துகின்றார்.

இதேபோல் தமிழ்நாட்டில் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திராவிட இயக்க செயற்பாட்டாளரும் பொதுவுடமைச் சிந்தனையாளரும் ஆகிய ‘பெரியார்’ என அழைக்கப்படுகின்ற ஈ.வே. ராமசாமி (1879-1973) தமிழ் சமூகத்திலும் இந்திய சமூகத்திலும் ‘பெண்மை’ பற்றிய கருத்துக்களை பகுப்பாய்வு செய்வதைக் காண முடிகின்றது. இத்தகைய பகுப்பாய்வில் தற்கால பெண்ணிய மெய்யியல் சிந்தனைகளின் முக்கிய கருத்துக்களை பெரியார் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகப் பொதுமறை என்று தமிழர்களால் போற்றப்படும் திருக்குறளில் ‘பெண்மை’ பற்றிய கருத்துக்களை வள்ளுவர் சரியாக வெளிப்படுத்தியிருக்கவில்லை என்ற விமர்சனத்தை ஆணித்தரமாக முன்வைப்பவராக பெரியார் காணப்படுகின்றார். இந்து மதத்திற்கு எதிராகவும் பகுத்தறிவு சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக பெரியாரின் சிந்தனைகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பிற்புலத்தில் கற்பு தொடர்பாக வள்ளுவரும் பெரியாரும் எத்தகைய கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளனர் என்பதை மெய்யியல் ரீதியாக பகுப்பாய்வு செய்வதே இக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

**வள்ளுவரும் கற்பும்**

திருக்குறளில் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் இடம்பெறும் சில குறட்பாக்களின் மூலம் வள்ளுவர் கற்பு தொடர்பாக கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார். குறிப்பிட்ட காலத்தின்

சிந்தனைக்கு உட்பட்டே ஒருவன் சிந்திக்க முடியும் என்ற உண்மைக்கு வள்ளுவரும் விதிவிலக்கல்ல என்ற விடயத்தினை நாம் கற்பு தொடர்பான வள்ளுவரின் சிந்தனைகளில் இருந்து புரிந்து கொள்ள முடியும். கற்பு தொடர்பான வள்ளுவரின் சிந்தனைகள் அடிப்படையில் ஆண்மையவாததன்மை கொண்டதாக இருக்கின்றது. கற்பினை பெண்ணுக்குரிய முக்கிய ஒழுக்க சீலமாக வள்ளுவர் கருதுகின்றாரே தவிர அதை ஆணுக்குரிய ஒழுக்க சீலமாக பெண்ணுடன் ஒப்பிடும்போது கருத்திற் கொள்கின்றார் என்று உறுதியாக கூற முடியாதுள்ளது. இதற்கான சான்றுகளை திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பால் முதலிய பிரிவுகளில் இடம்பெறும் குறட்பாக்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

'வாழ்க்கைத் துணைநலம்' எனும் அதிகாரத்தில் இல்வாழ்க்கையினை வாழும் ஆணுக்கு துணையாக பெண்ணை அல்லது பெண்களை வள்ளுவர் கூறுகின்றார். "மகளிர்" (குறள்:57) 'பெண்டிர்' (குறள்: 58) என்ற சொற்கள் வள்ளுவர் பலதாரமணத்தை அங்கீகரிக்க கூடியவரோ? எனும் ஐயப்பாட்டைத் தோற்றுவிக்கின்றது. ஏனெனில் 'மகளிர்' 'பெண்டீர்' என்ற சொற்கள் பன்மைச் சொற்களாகும். (ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை குறிப்பது). மேலும் பலதாரமணம் தமிழ், இந்திய சமூக மரபாக காணப்படுவது இதற்கு தக்கச் சான்றாகும். கற்பே பெண்ணுக்கு சிறப்பான பண்பு எனக் கூறுவதும் ("பெண்ணிற் பெருந்தக்க யாஉள கற்பெனும் திண்மையுண் டாகப் பெறின்….."குறள்:54), தெய்வங்களை வணங்காமல் கணவனே கண்கண்ட தெய்வமாக சித்திரிப்பதன் மூலமாகவும் ("தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்………." குறள்: 55), தமது கற்பினை காப்பாற்றிக் கொள்பவள் என எடுத்துக்காட்டுவதன் மூலமும் ("தற்காத்து…" குறள்:56), மகளிர் தனது கற்பினை காப்பாற்றிக் கொள்வதே முதன்மையானது என வலியுறுத்துவதன் மூலமும் ("…மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை…" குறள்:57) பெண்ணுக்கு கற்பு மிகவும் அவசியமானது என்பதை எடுத்துக் காட்டுகின்றார் வள்ளுவர். திருக்குறள் பொருட்பாலில் இடம்பெறும் 'பெண்வழிச்சேறல்' எனும் அதிகாரத்தில் இடம்பெறும் பத்து குறட்பாக்களும் ஆணுக்குப் பெண் சமமானவள் அல்ல என்றும் மனைவியின் பேச்சினை ஒரு கணவன் கேட்கவே கூடாது என்றும் வலியுறுத்தி கூறுவது குறிப்பிடத்தக்கது.

"அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்

பெண்ணேவல் செய்வார்கண் இல்…" (குறள்:909)

மேலும் ஆணுக்கு கற்பு பெண்ணைப் போல் திருக்குறளில் எந்த அதிகாரத்திலும் கூறப்படவில்லை. ஆயினும் இல்லறவியலில் இடம்பெறும் "பிறனில் விழையாமை" எனும் அதிகாரத்தில் ஏனையவரின் மனைவியினை ஒருவன் விரும்பக் கூடாது என்றும் அதனை மிகப்பெரிய பாவமாகவும் வள்ளுவர் கருதுவதுடன் பொருட்பாலில் இடம் பெறும் 'வரைவின் மகளிர்' எனும் அதிகாரத்தின் மூலம் ஒரு ஆண் விலைமாதுடன் தொடர்பு வைத்துக் கொள்வதனால் ஏற்படும் தீமையான விளைவுகளையும் எடுத்துரைக்கின்றார். ஆயினும் திருமணம் ஆகாத பெண்ணை விரும்புவது தொடர்பாக அவர் எந்த கருத்தையும் தெளிவாகக்

கூறவில்லை. இத்தகைய பின்னணியில் வள்ளுவர் ஆண்மையவாத சிந்தனையினை கொண்டவராகக் காணப்படுகின்றார்.

### கற்பும் பெரியாரும்

கற்பு தொடர்பாக வள்ளுவரின் கருத்தினை பெரியார் கண்டிக்கின்றார். கற்புத் தொடர்பாக வள்ளுவரின் கருத்து ஒருதலைப் பட்சமானது, அநிதியானது என்ற கருத்துக்களை பெரியார் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது. கற்பு தொடர்பாக சொற்பொருளியல் ஆய்வினை மேற்கொள்ளும் பெரியார், கற்பு என்பது பெண்ணுக்கு உரிய பண்பாக ஆண்களால் கற்பிக்கப்பட்டு வரைவிலக்கணப்படுத்தப்படும் ஒரு பண்பாக இருப்பதை எடுத்துக்காட்ட முயல்கின்றார். வரலாற்று ரீதியாகவும், இலக்கிய ரீதியாகவும் கற்பு தொடர்பாக பின்வரும் கருத்தினை முன்வைக்கின்றார் பெரியார்:

“காமத்தையும் அன்பையும் குறிக்கும் காலங்களில் சமத்துவ பொருள் கொண்ட நாயகர் - நாயகி, தலைவர் - தலைவி என்ற வார்த்தைகளை உபயோகித்து விட்டு கற்பு என்ற நிலைக்கு வரும்போது அதை பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்படுத்தி பதியாகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ள வேண்டுமென்ற கருத்துக் கொள்ளப்படுகின்றது…” (பெரியார் 2004: 10-11)

பொதுவுடைமை வாதியாக சிந்திக்கும் பெரியார் இர்ஷயாவை தவிர வேறு எந்த ஐரோப்பிய நாடுகளிலும் பெண் சமத்துவம் பேணப்படவில்லை என்று உறுதியாக கூறுகின்றார். இவ்வகையில் ‘கற்பு’ எனும் விடயம் ஆண்களினால் உருவாக்கப்பட்டு பெண்களை கொடுமைப்படுத்தும் ஒன்றாகவே காண்கிறார். ஆண்களினால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த நிலையை அடிமை கற்பாகவும் நிர்பந்த கற்பாகவும் கருதுகின்றார் பெரியார். இருபாலாருக்கும் பொதுவான கற்பினை இயற்கை கற்பாகவும், சுதந்திர கற்பாகவும் கருதும் பெரியார், இத்தகைய கற்பினையே ஏற்றுக் கொள்கின்றார். ஆண்கள் பல தாரமணம் புரிந்து கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியருடன் வாழ்வதையும், இத்தகைய ஒரு ஆணுடன் கற்பாக கருதி ஒரு பெண் வாழ்வதை மிகப்பெரிய அநீதியாக பெரியார் கருதுகின்றார். பொதுவுடமை சிந்தனையாளர்களால் கவரப்பட்ட பெரியார் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமைகளும், உணர்வுகளும் இருப்பதாக கருதுகின்றார். ஆயினும் இந்திய தமிழ் சமூகங்களில் பெண்களுக்கு கற்பு எனும் பெயரில் அதிக அநீதி இழைக்கப்படுவதாக இப்படி மனம் வருந்துகின்றார்:

“…மற்றும் சில சமூகங்களில் பர்தா என்றும், கோ என்றும் திரை என்றும் அதாவது பெண்கள் அறைக்குள் இருக்க வேண்டியவர்கள் என்றும் முகத்தை மூடிக்கொண்டு வெளியில் போக வேண்டியவர்கள் என்றும் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளும் புருஷன் பல பெண்களை மணக்கலாம், பெண்கள் ஏக காலத்தில் ஒரு புருஷனுக்கு மேல் கட்டிக்கொண்டு வாழக்கூடாது என்ற கொள்கையும், நம் நாட்டில் ஒரு தடவை புருஷன் பெண்சாதி என்கிற சொத்தம் ஏற்பட்டு விட்டால், பிறகு அந்தப் பெண்ணுக்கு சாகும் வரைக்கும் வேறு எவ்வித சுதந்திரமும் இல்லை என்றும், புருஷன் பெண்ணின் முன்பாகவே பல பெண்களை கட்டிக்கொண்டு கூடி வாழலாம் என்றும், புருஷன் தன் மனைவியை தன்னுடைய வீட்டில் வைத்துக்கொண்டு அவளுடன்

ஒன்றித்து வாழாமல் இருந்தால் கூட மனைவி புருஷனை சாப்பாட்டுக்கு மாத்திரம் கேட்கலாமே ஒழிய, இன்பத்திற்கோ, இச்சையை தீர்ப்பதற்கோ அவனை கட்டுப்படுத்தும் உரிமை இல்லை என்ற கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன."(மேலது: ப.12)

**முடிவுரை**

கற்பு பற்றிய வள்ளுவர் மற்றும் பெரியார் நோக்கினை பகுப்பாய்வு செய்யும் பொழுது வள்ளுவரைக் காட்டிலும் பெரியார் அதிகளவு பெண்மையவாத சிந்தனையை கொண்டிருப்பதனை காணமுடிகின்றது. வள்ளுவர் அவர் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட இந்து, சமண, பௌத்த கருத்து நிலைகள் அவரின் ஆண்மையவாத சிந்தனைக்கு அடிப்படையாக இருந்திருக்கலாம் அதேவேளை பெரியாரின் பெண்மையவாத சிந்தனைகளுக்கு அடிப்படையாக அவர் காலத்தில் காணப்பட்ட திராவிட இயக்க சிந்தனைகளும் பொதுவுடமை சிந்தனைகளும் காரணமாக இருந்திருக்கின்றன எனக் கருதலாம். இத்தகைய பிற்புலத்தில் வான்புகழ் கொண்ட வள்ளுவரைக் காட்டிலும் திராவிட இயக்க சிந்தனையாளராகிய பெரியாரின் 'கற்பு' பற்றிய சிந்தனைகள் அதிக நீதியுடையதாக இருப்பதை காண முடிகின்றது.

**உதவி நூல் பட்டியல்**


1. திருவள்ளுவர் (1998) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

2. பெரியார் ஈ. வே .ரா., (2004)"பெண் ஏன் அடிமையானாள்?", சென்னை: பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம்.

3. வேலுப்பிள்ளை.ஆ (2004) "தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்", சென்னை: குமரன் புத்தக இல்லம்.

4. Vaiyapuripillai.S (1998), History of Tamil Language and Literature, Madras: New Century Book House.

## *2. பிரடரிக் நீட்சேயின் சிந்தனையில் 'கடவுள் இறந்துவிட்டார்' மற்றும் 'அதீத மனிதன்' என்ற எண்ணக்கருக்கள்*

**N. R.Jancy Rosairo**

**Assistant Lecturer,**

**Dept. of Philosophy and value Studies,**

**Faculty of Arts and Culture,**

**Eastern University, Sri Lanka.**

**jency1997.07@gmail.com**

**அறிமுகம்**

இருத்தலியம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ம் நூற்றாண்டிலும் தத்துவத்தில் மனித வாழ்க்கைக்காக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரும் பங்களிப்பாக உள்ளது. **வரலாற்றில் சோக்கிரடிசின் "உன்னையே அறிந்து கொள்" (Know thy self or Knowledge of the self) என்பதாகவே இருப்புவாதத்தின் அடித்தளம் அமைகின்றது எனலாம்**. இதன் மூலம் மனிதனை முதன்மைப்படுத்தும் அல்லது மனித வாழ்வினை அர்த்தமுள்ள வகையில் ஆராய முற்படும் தத்துவத்தின் அடித்தளங்களில் ஒன்றாக இருப்பு வாதத்தினை அடையாளப்படுத்தலாம். தன்னை அறிய வேண்டும், தன்னுள்ளே காணப்படுகின்ற ஆற்றல்களை உணர்தல் வேண்டும். இதன் மூலம் மனிதன் தானாகவே தனது இருத்தலைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற தனது சிந்தனையை இருப்பியல்வாதம் முன்வைத்தது எனலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய இருப்பே முதன்மையானதும், அடிப்படையானதுமாகும். இத்தகையதான இருப்பினைக் கொண்டே மனிதன் மற்றவற்றையெல்லாம் மதிப்பீடு செய்கின்றான். தனக்குள்ள பிரச்சினைகளை மனிதன் தனக்குள்ள வாய்ப்புக்களைக்கொண்டே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது இச்சிந்தனையின் அடிப்படையான அம்சமாக அமைந்துள்ளது. **இவ்விருத்தலிய சிந்தனையின் முதலாவது சிந்தனையாளராக Soren Kierkegaard (சோரன் கிக்ககார்ட்) அடையாளப்படுத்தப்பட்டு இருத்தலிய சிந்தனையின் தந்தை என்று குறிப்பிடப்பட்ட போதிலும் சில ஆய்வு எழுத்தாளர்கள் தங்களுடைய கருத்தில் இருத்தலிய சிந்தனையின் வெளிப்பாடுகள் மெய்யியல் வரலாறு முழுவதிலும் காணக்கூடியதாக உள்ளது என்று குறிப்பிடுகின்றனர். உதாரணமாக புனிதர் அகஸ்டின், புனிதர் அன்செலம், வில்லியம் சேக்ஸ்பியர், ஸ்டொயிக் தத்துவங்கள் என்பனவற்றினைக் குறிப்பிட முடியும்.** எனினும் 20ம் நூற்றாண்டில் மிகவும் அவதானத்துக்குரிய வகையில் இந்த சிந்தனைகளை முன்வைத்தவர்களாக கிக்ககார்ட் மற்றும் Freiedrich Nietche (பிரடெரிக் நீட்சே) ஆகியோர் அமைகின்றனர். இவர்களை விடவும் Karl Jesper, Simone de Beauvoir, Alburt Camus முதலானவர்களும் பிரதானமானவர்களாக அமைகின்றனர். இக்கட்டுரையானது இருத்தலிய சிந்தனையாளரான பிரடெரிக் நீட்சேயின் இருத்தலிய சிந்தனைகளில் கடவுள் இறந்து விட்டார், அதீத மனிதனும் ஒழுக்க விழுமியங்களும் என்ற எண்ணக்கருக்களின்

முக்கியத்துவத்தினையும் அவ்எண்ணக்கருக்கள் தொடர்பான பூரண விளக்கத்தினை முன்வைப்பதாகவும் அமைந்துள்ளது. “கடவுள் இறந்துவிட்டார். கடவுள் இறந்து கொண்டே இருக்கிறார். மேலும் நாங்கள் அவரைக் கொன்றுவிட்டோம்” என்பதை 1882 இல் பிரெட்ரிக் நீட்சே எழுதினார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்கள் மதவாதிகளாக இருந்து வருகின்றனர், ஆனால் நவீன உலகில் மதம் அதன் முந்தைய சுயத்தின் நிழலாக மாறிவிட்டது. நீட்சேவின் “கடவுள் இறந்துவிட்டார்” என்ற வியத்தகு சொற்றொடர் இந்த வெளிப்பாட்டின் அதிர்ச்சியூட்டும் தரத்தைப் படம்பிடிப்பதாகும். நீட்சேயின் அதீத மனிதன் (Super man) தனக்கான இலட்சியங்களை உருவாக்கிக் கொண்டு அதற்கான துன்ப துயரங்களையும் தாங்கிக்கொண்டு வாழ்கின்றான்.

## இருத்தலியம் அறிமுகம்

நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட மெய்யியல் என்கிற சொல் கிரேக்கச் சொல்லான philosophia என்கிற சொல்லிருந்து வந்ததொன்றாகும். ஆரம்பத்தில் தத்துவார்த்த போக்கு, உறுதியான விஞ்ஞான ரீதியான போக்கினை கொண்டதாக மெய்யியல் அமையவில்லை. ஆரம்பத்தில் ஒழுக்கவியல், சமயம் சார்ந்த போக்குகளை கொண்டதாகவே தத்துவம் காணப்பட்டது. **ஐசாக் நியூட்டன் 1647ஆம் ஆண்டு எழுதிய “Mathematical Principles of Natural Philosophy” என்ற நூலில் “இயற்கையானது கணித மொழியினால் உருவாக்கப்பட்டது” என்று குறிப்பிட்டு அதன்படி தத்துவமானது விஞ்ஞான ரீதியான போக்கினைக் கொண்ட ஒரு துறையாக வளர்ச்சி அடையவேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டினை தோற்றுவித்தார்.** இதன் காரணமாக 17ம் நூற்றாண்டில் மெய்யியல் தளமானது விஞ்ஞானரீதியான போக்கில் பயணிக்க ஆரம்பித்தது எனலாம். 17,18ம் நூற்றாண்டுகளில் விஞ்ஞானத்தை போலவே மெய்யியலிலும் உறுதியான, தெளிவான இரண்டு தத்துவப் பிரிவுகள் தோன்றின. அவையாவன

1. **பகுப்பாய்வு மெய்யியல் (Analytic Philosophy)**
2. **கண்டம் மெய்யியல் (Continental Philosophy)**

கண்டம் மெய்யியல் (Continental Philosophy) என்பது பகுப்பாய்வு மெய்யியலுக்கு எதிராக அமெரிக்கா, பிரித்தானியா தவிர ஆங்கிலம் பேசாத பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் தோற்றம் பெற்ற தத்துவப் பிரிவாகும். **இத் தத்துவப் பிரிவானது இருத்தலியல் வாதம் (Existentialism), தோற்றப்பாட்டியல் வாதம் (Phenomenology) என்ற இரு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.**

மேலைத்தேய தத்துவ வரலாற்றில் ஒவ்வொரு காலப்பகுதியிலும் அக் காலத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட சில சிந்தனைகள் நூற்றாண்டுகள் கடந்தும் மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுபவையாக, அனைத்தையும் அப்படியே, கூறியது கூறியபடியே வாழ்க்கைக்கு பிரயோகிக்கக்கூடிய விடயங்களை உள்ளடக்கியவையாக உள்ளன. இவற்றில்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு அறிவார்ந்த இயக்கமாக வெளிப்பட்ட இருத்தலியல் சிந்தனைகள் பிரதானமானவையாக அமைகின்றன. இருத்தலியம் என்பது ஆங்கிலத்தில் Existentialism என்று குறிப்பிடப்படுகின்றது. இது வாழ்க்கையினை சாத்தியமானதாக்கும் ஒரு தத்துவமாக வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுகின்றது. வெறுமனே உயிர்வாழ்தல், இன்பம் நுகர்தல் என்கின்ற வாழ்க்கை அல்லாமல் முழுமையான, உண்மையான, பெறுமதியளிக்கின்ற, ஒரு மனிதனுடைய கௌரவத்தை செழித்தோங்கச் செய்வதற்கான வாழ்க்கையினை வாழ்வதற்கான அடிப்படைகளை வழங்குபவையாக இத் தத்துவ சிந்தனைகள் உள்ளன. (Christopher, & Gregory, 2008).

பொதுவாக எந்தவொரு தத்துவமும் வாழ்க்கையின் முன் இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வினை தேடி அத்தகைய தீர்வினை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டதாக இருக்கும். இதனடிப்படையிலேயே இருத்தலிய சிந்தனைகள் 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மேலைத்தேய நாடுகளில் விஞ்ஞான வளர்ச்சியின் ஊடாக ஏற்பட்ட கண்டுபிடிப்புக்களும், புதிய கொள்கைகளும், கைத்தொழில்மயமாக்கலின் விளைவினால் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட இயந்திரத்தமமான மாற்றங்களும் கடவுள் நம்பிக்கை, மறுவுலக நம்பிக்கை போன்ற ஏற்கனவே நடைமுறையில் இருந்த பழைய கொள்கைகளையும், மரபுகளையும் கேள்விக்கு உள்ளாக்கி நிராகரித்த நிலையில் மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்கு அர்த்தம் என்று கற்பித்துக்கொண்டிருந்த விடயங்களும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து மனித வரலாற்றில் ஏற்பட்ட நெருக்கடிகள், எதிர்பாராத இழப்புக்கள் என்பன வாழ்க்கை என்பது அர்த்தமற்ற ஒன்று என்ற சிந்தனையை மக்களிடையே ஏற்படுத்தியது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகள், உலகமகா யுத்தங்கள் என்பவற்றில் ஏற்பட்ட இழப்புக்கள் இவ்வாறான சிந்தனைகள் பெருவாரியாக ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தன. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலேயே அபத்தமான, அர்த்தமற்றதான உள்ள இந்த உலகில் மனித வாழ்க்கைக்கு எவ்வாறான வகையில் அர்த்தத்தை வழங்க முடியும் என்ற கேள்வியுடன் இருத்தலிய சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன (Robert, 2003). இந்த சிந்தனையாளர்களில் சிலர் கடவுள் இருப்பை ஏற்றுக்கொண்டும், சிலர் கடவுள் இருப்பை மறுத்தும் வெவ்வேறு புரிந்துணர்வுகளுடன் மாறுபட்ட வகைகளில் மனித வாழ்க்கைக்கான அர்த்தத்தை புரிந்துகொள்ளும் மற்றும் கற்பிக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வாழ்க்கையின் அர்த்தம் என்ன?, மனிதர்கள் ஏன் இப்பூமியில் வாழ்கின்றார்கள்?, மனிதர்கள் வாழ்வதன் நோக்கம் என்ன? என்பது போன்ற வினாக்கள் ஒருவரினால் முன்வைக்கப்பட்டால் அவர் இருத்தலியல் அடிப்படையில் சிந்திக்கின்றார் என்று அர்த்தம். இத்தகைய இருத்தலிய சிந்தனைகள் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 20ம் நூற்றாண்டிற்குரிய தத்துவமாக மிளிர்கின்றபோதும் இதன் சாயல்கள் தத்துவ வரலாறு முழுவதும் பொதிந்துள்ளமையினை அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக **ஆதி கிரேக்க காலத்தில் 'மனிதனே அனைத்தையும் அளவீடு செய்யும் கருவியாகின்றான்' என்று சொபிஸ்டுகளில் ஒருவரான புரோட்டகோரஸ் குறிப்பிடுவதும், நல்வாழ்க்கை என்பது என்ன? ஒரு மனிதன் நல்வாழ்க்கையினை எவ்வாறு அமைத்துக்கொள்ள முடியும்? என்று கிரேக்க**

**காலத்தில் சோக்கிரடீசும், அரிஸ்டோட்டிலும் கேள்விகளை எழுப்பி கருத்துக்களை முன்வைத்ததும் தனி மனித இருப்புக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தினையும், தனி மனிதன் தன்னளவில் எவ்வாறு சமுதாய இருப்பினை நிர்ணயிக்கும் காரணியாகின்றான் என்பதனையும் அடிப்படையாகக் கொண்டதாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது** (Christopher, & Gregory, 2008).

இதனைத் தொடர்ந்து ஸ்டொயிக் தத்துவங்கள், பஸ்காலின் சிந்தனைகள், வில்லியம் சேக்ஸ்பியரின் படைப்புக்கள், சோரன் கிக்ககாட்டின் சிந்தனைகள் என பல்வேறு வடிவங்களில் இருத்தலிய சிந்தனைகளை வரலாற்று வளர்ச்சியில் பார்க்க முடிகின்றது. எனினும் ஒரு தத்துவ இயக்கமாக, முழுமையான வெளிப்பாடாக இருத்தலிய சிந்தனைகள் இருபதாம் நூற்றாண்டில் வெளிப்பட்டன. இதில் பிரதானமான சிந்தனையாளர்களாக **மார்ட்டின் கைடேகர், ஜோன் பால் சார்த்தர், ஆர்தர் சோப்னாவர், பிரடரிக் நீட்சே, அல்பேர்ட் கம்யு** போன்றவர்களைக் குறிப்பிட முடியும்.

## பிரடரிக் நீட்சே பற்றிய ஓர் அறிமுகம்

பிரடரிக் நீட்சே 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு ஜெர்மானிய மெய்யியலாளரும், மொழியியலாளரும் ஆவார். இவர் மதம், ஒழுக்கநெறி, சமகாலப் பண்பாடு, மெய்யியல், அறிவியல் ஆகியவை தொடர்பில் பல முக்கிய ஆக்கங்களை எழுதியுள்ளார். **நீட்சேயின் தத்துவத்தின் மையக்கருத்து "மனிதர்கள் எதுவாக மாறுவதற்கு தகுதியுடையவர்களாக இருக்கின்றார்களோ அதுவாக ஆகுவதற்குரிய வழிகாட்டலை தத்துவம் வழங்க வேண்டும்" என்பதாகும்.** வாழ்நாள் முழுதும் இறை எதிர்ப்பாளராகவும் கடவுள் இறந்துவிட்டார் என்ற புகழ்வாய்ந்த சொற்றொடரை மனிதகுலத்திற்கு தந்தவராகவும் இருந்தார். நீட்ஷேயின் அவரது தத்துவார்த்தக் கொள்கைகளுக்கு அவரை ஈர்த்துச்சென்றதில் முக்கியப்பங்கு வகிப்பதில் ஷோப்பனாவரின் **Will to live The World as Will and Representation** என்ற நூல்கள் தான் முக்கியமாகக் கருதப்படுகிறது.

நீட்சே 1944ம் ஆண்டு அக்டோபர் 15ஆம் திகதி ஜெர்மனியில் ராக்கன் நகரில் பிறந்தார். ஒரு தம்பி, ஒரு தங்கை இவருடன் கூடப் பிறந்தவர்கள். 5 வயதாக இருக்கும் போதே தந்தை காலமாகிவிட்டார். அவரது தந்தை கிறிஸ்தவ மதத்தில் முற்று முழுதாக தன்னை அர்ப்பணித்து, ஒரு தேவாலயத்தின் அருட்தந்தையாக இருந்து, தனது குடும்பத்தையும் அதற்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்ற அவரது தீர்க்கமான எண்ணத்தை, முற்றிலுமாக முறியடித்தவராகவே நீட்சே தனது தந்தையின் இறப்பிற்குப் பின்னர் தனது தத்துவத்தை முன்வைப்பதை இங்கே காணலாம். நீட்சே முன்வைத்த தத்துவக் கருத்துக்களில் கடவுள் இறந்துவிட்டார், அதீத மனிதன் என்ற எண்ணக்கருக்கள் முக்கியம் பெறுகின்றன.

***(Birth of tragedy)*** **சோகத்தின் பிறப்பு - 1872 நீட்ஷேயின் முதல் புத்தகம். ஆனால் அவரை உலக தத்துவவியலாளர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினராலும் திரும்பி ஆச்சரியப்பட வைத்த நூல் என்றால் அது ஜரதுஹ்ட்ரா இவ்வாறு கூறினார் (*Also spoke Zarathustra* –**

**1883).** அதன் பின் எழுதிய புத்தகமாகிய *Will to Power* என்ற புத்தகமே ஹிட்லரின் வெற்றிக்கு வித்திட்டதாக அறியப்படுகிறது. மேலும் நீட்சே எழுதிய புத்தகங்களாக,

- Thus Spoke Zarathustra (1883)
- Beyond Good and Evil (1886)
- On the Genealogy of Morality (1887)
- The Birth of Tragedy (1872)
- The Gay Science (1882)
- Human all to human (1878)
- Untimely Meditations (1873)
- The case of Wanger (1888)
- On the Future of our educational Institutions (1889)
- We philologists (1874)
- Twilight of the Idols (1888) பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

நீட்ஷே ஜெர்மானிய இசைவாணர் ரிச்சர்ட் வேக்னரின் (*William Rich rd. Wagner*: 1813-1883) இசையை 1881இல் முதன் முதலாகக் கேட்டு மகிழும் வாய்ப்புப் பெற்றார். இசையிலும் இலக்கியத்திலும் மிகுந்த நாட்டம் கொண்டிருந்த அவர், பியானோவை சிறப்பாக இசைப்பவராகவும், இசைப்படைப்புகளை உருவாக்குபவராகவும் இருந்தார். கவிதை எழுதுவதிலும் அவருக்கு நாட்டம் இருந்தது. ஆனால் தனது இசைப்படைப்புகள், கவிதைகள் ஆகியனவற்றில் அவருக்கே திருப்தி இருக்கவில்லை என்பதால் அந்த முயற்சிகளைப் பின்னர் ஒரேயடியாக கைவிட்டார்.

1869இல் லீப்ஜிக் பல்கலைக்கழகம் அவரது வெளியிடப்பட்ட எழுத்துக்களின் வலிமையைக் கருத்தில் கொண்டு ஆய்வு அல்லது ஆய்வுக் கட்டுரை இல்லாமல் முனைவர் பட்டம் வழங்கியது. மேலும் பாசல் பல்கலைக்கழகம் அவரை பாரம்பரிய மொழியியல் பேராசிரியராக நியமித்தது. அடுத்த ஆண்டு நீட்சே பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

1881 தொடக்கம் 1888ம் ஆண்டு வரை சுவிற்சலாந்தில் சில்ஸ் மரியா, லுட்சேன் என்ற இடங்களில் வாழ்ந்துள்ளார். இறுதியாக இத்தாலியிலுள்ள டுறின் என்ற இடத்திலும் (கடைசிக்காலகட்டத்தில் மனநலக்காப்பகத்திலும்) இறுதியாக அவரது சகோதரியின் பாதுகாப்பில் இருந்து 1900ம் ஆண்டு அவரது ஆன்மா உடலை விட்டு சென்றதையும் காணலாம்.

## நீட்சேயின் கடவுள் இறந்துவிட்டார் என்ற எண்ணக்கரு

**நீட்ஷே "கடவுள் இல்லை கடவுள் இறந்து விட்டார், நாம் கடவுளைக் கொன்று விட்டோம்" (*The Gay Science*) என்னும் நூலில்தான் அவர் அறிவித்தார்.** 1950களின் பிற்பகுதியிலும் 1960களின் பிற்பகுதியிலும் இக்கருத்து முக்கியத்துவம் பெற்றது. நீட்சேவின் கடவுள்

இறந்துவிட்டார் என்ற தத்துவம் இருத்தலியல், நீலிசம் மற்றும் சோசலிசம் ஆகியவற்றின் கோட்பாடுகளை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

**நீட்சேக்கு முன் கடவுள் இறந்துவிட்டார் என்பது ஜெரார்ட் டி நெர்வலின் 1854ஆம் ஆண்டு கவிதையான *"Christ at the olive trees"* இல் எழுதப்பட்டது.** இந்தக் கவிதையானது ஜீன் போலின் 1797ஆம் ஆண்டு நாவலில் வெளியானது. இலக்கிய அறிஞர் ஜார்ஜ் ஸ்டெய்னர் நீட்சேவின் "கடவுள் இறந்துவிட்டார்'' என்ற கோட்பாடு ஜீன் போலின் மேற்கூறிய "இறந்த கிறிஸ்து'' கனவு தரிசனத்திற்குக் கடன்பட்டதாகக் கூறுகிறார். ஆனால் ஜீன் போலை நீட்சே எப்போதாவது படித்தார் என்பதற்கு அவர் உறுதியான ஆதாரம் எதையும் அளிக்கவில்லை.

நீட்சே நாத்திகர் மட்டுமல்ல. அவர் இறை நம்பிக்கைக்கு எதிரானவர். கடவுள் நம்பிக்கை வளர்ச்சியைத் தடுக்கிறது. நீட்சேவைப் பொறுத்தவரை நாம் கடவுள் மீதான நம்பிக்கையை வீணடித்து, நம்முடைய சொந்த மதிப்புகளை வளர்த்துக்கொள்வதிலும், நம்முடைய சொந்த இலக்குகளை நிர்ணயிப்பதிலும், தனிப்பட்ட சிறப்பை அடைவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

**The Gay Science என்ற புத்தகத்தில், உலகம், இயற்கை மற்றும் வாழ்க்கை பற்றி நம்மிடம் உள்ள பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் அமைப்புகளைக் குறிக்க நீட்சே கடவுள் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.** இந்த நம்பிக்கைகள் நமக்கு பாதுகாப்பையும், அர்த்தத்தையும், ஆறுதலையும் தரும் ஒன்று. இருப்பினும் உலகத்தைப் பற்றி நாம் கொண்டுள்ள பாரம்பரிய நம்பிக்கைகள் அனைத்தும் மனிதனால் உருவாக்கப்பட்டவை. அவை நித்தியமானவை அல்ல மாறாக மனிதனால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள்.

**நீட்சேவின் நோக்கம் பாரம்பரிய அறநெறி கிறிஸ்துவத்தை ஒழிப்பதாகும், ஏனெனில், அவரது மனதில் பலவீனமான மற்றும் சிந்திக்காத மக்களைக் கட்டுப்படுத்தும் சுய சேவை மதத் தலைவர்களின் முயற்சியை இது பிரதிபலிக்கிறது. கடவுள் பற்றிய யோசனை இனி தேவையில்லை என்று நீட்சே நம்பினார். உண்மையில் கடவுள் பொருத்தமற்றவராக இருந்தார், ஏனென்றால் மனிதன் தனக்கென ஒரு ஆழமான மற்றும் திருப்திகரமான "தலைமை ஒழுக்கத்தை" உருவாக்கக்கூடிய இடத்திற்கு பரிணமித்துக்கொண்டிருந்தான்**.

கடவுள் இறந்து விட்டார் என நீட்ஷே பிரகடனப்படுத்திய போது உண்மையில் அவர் கடவுளுக்கு எதிராக எதையும் சொல்லிக் கொண்டிருக்கவில்லை இதுவரை நாம் பின்பற்றி வந்த கடவுள் தொடர்ந்தும் பிரயோகப்படுத்த முடியாமல் இருக்கின்றார். ஏனெனில் மனிதன் வளர்ந்து விட்டான். இதுவரையிலான கடவுளின் சகல வடிவமைப்புகளும் பொருத்தமற்றதாகிவிட்டன என்று சொன்னார். மனிதன் அதிகம் முதிர்ச்சியடைகின்ற போது அவனுக்கு முதிர்ச்சி பெற்ற கடவுள் தேவைப்படுகின்றது. பழைய மறை நூல்களில் கடவுள் கொடியவனாக இருக்கின்றான். மேலும் நீங்கள் வேறு எவரையேனும் வணங்கினால் நான் உங்களது எதிரியாக இருப்பேன், நான் உங்களை நரகத்தில் சித்திரைவதை செய்வேன், நான் உங்களை நெருப்புக்குள் வீசுவேன் இது ஒரு வித பூரணக் கடவுளாகத் தோன்றுகின்றது.

இன்னும் பண்படுத்தப்படவில்லை. இன்னும் நவீனப்படுத்தப்படவில்லை என நீட்ஷே கூறுகின்றார்.

**“ஒருவர் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் அவருக்கு காட்டு” என கிறிஸ்தவம் போதிக்கின்றது. இது அடிமையின் உச்சம் என்றார் நீட்சே. கிறிஸ்தவ போதனைகள் பொய்யுரை என்றார். இதற்கு காரணம் “*God is dead*” என்றார்.** கிறிஸ்தவ ஒழுக்க சிந்தனைகள் கடவுள் என்பதனை அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப்பட்டது. ஆகவே இக்கடவுள் இறந்துவிட்டார். எனவே **ஒருவர் தனது சுயத்தை அடையாளம் காண கடவுளை முன்னிறுத்தாமல் பகுத்தறிவில் செயற்பட வேண்டும். மனிதர்கள் தாங்களே தங்கள் செயலுக்கு அர்த்தம் கற்பிக்க வேண்டும் மாறாக கடவுள் அல்ல என நீட்சே குறிப்பிடுகின்றார்.**

கடவுள் என்பது மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு புனைகதை. ஆகவே கடவுள் இருக்கிறார் என்று நம்புவதற்கு சரியான காரணம் இல்லாதபோது கடவுள் ‘‘இறந்துவிடுகிறார்’’. நீட்ஷேவின் கூற்றுப்படி கடவுள் பற்றிய யோசனை மக்கள் பரவலான மற்றும் வெளித்தோற்றத்தில் அர்த்தமற்ற துன்பங்களைக் கையாள உதவுவதற்காக உருவாக்கப்பட்டது.

கடவுள் என்பது துன்பத்தைத் தணிக்கவும், அதிர்ச்சியைத் தணிக்கவும், துன்பங்களை எதிர்கொள்ளும் தோழமையை வழங்கவும் உருவாக்கப்பட்ட ஒரு உளவியல் புனைகதை. ஆனால் இந்த சவால்களை எதிர்கொள்ள நாம் கடவுளை நம்ப வேண்டிய அவசியமில்லை என்கிறார் நீட்சே. வேறொரு உலக நிறுவனத்தைத் தழுவி துன்பத்திலிருந்து தப்பிக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, துன்பத்தை நாம் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நீட்சே நினைக்கிறார்.

## நீட்சேயின் அதீத மனிதனும் ஒழுக்க விழுமியங்களும்

ஐரோப்பாவின் மத்திய காலத்திலிருந்து கடவுள் என்ற எண்ணக்கரு மனித சமூகத்தினை ஆளுமை செய்து வந்தது. நவீன காலத்தில் ஏற்பட்ட அறிவொளி விஞ்ஞான வளர்ச்சியினால் கடவுள் என்ற எண்ணக்கருவில் மாற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக மனித வாழ்க்கையின் சகல பகுதிகளிலும் விஞ்ஞானத்தின் ஆதிக்கம் ஏற்படத் தொடங்கியது. அதேவேளை கடவுள் அல்லது சமயத்தின் ஆதிக்கம் மெல்ல மெல்ல தனது செல்வாக்கினை இழக்க தொடங்கியது. இத்தகைய பிற்புலத்தில் நீட்சேயின் அதீத மனிதன் (Super man/Over man) என்ற எண்ணக்கரு உருவாக்கம் பெறுகிறது. **கடவுள் இறந்துவிட்டார் கடவுளை நாம் கொன்று விட்டோம் என நீட்சே கூறுவதன் மூலம் மனிதன் கடவுளின் இடத்திற்கு வந்து விட்டான் என்பதை நீட்சே மனித சமூகத்திற்கு அறிவிக்கின்றார்.**

**கடவுள் இல்லாத உலகத்தில் மனிதன் தான் கடவுள். அதாவது மனிதன் அந்தஸ்து நிலையினை அடைய வேண்டும். அவன் தான் அதீத மனிதன் என அழைக்கப்படுகின்றான் இது ஆங்கிலத்தில் *super man / over man* என அழைக்கப்படுகின்றது.** நீட்சே படைக்கும் மாமனிதன் அடங்கியொடுங்கி கொடுங்கோள் ஆட்சி செய்பவன் அல்ல. அறிவு, ஆற்றல், மதிப்பு ஆகிய மூன்றின் சங்கமாக நீட்சேயின் மாமனிதன் விளங்குகின்றான். நீட்சே படைக்கும்

மாமனிதன் இந்த ஒழுக்க சமூகத்தில் நிலைபெற்றிருக்கின்ற ஒழுக்க விழுமிய கருத்துக்களில் இருந்து விலகி சுயாதீனமாக இருப்பான் என்றும் எதிர்காலத்தில் பின்பற்றப்படுவதாக இருக்கின்ற பரிமாணங்களை புதிதாக உருவாக்குவான் என்றும் கூறப்படுகின்றது.

நீட்சேயின் கருத்துப்படி ஒழுக்கவியல் இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக இருக்கின்றது.

1. **தலைவன் ஒழுக்கம் (*Master Morality*)**
2. **மந்தை ஒழுக்கம் / அடிமை ஒழுக்கம் (*Slave/Herd Morality*)**

மத்திய காலத்திலிருந்து கிறிஸ்தவம் ஐரோப்பாவில் தாழ்ந்த/அடிமை ஒழுக்கத்தை முன்வைத்திருந்தது. சமயம் என்ன கூறுகின்றதோ அதனை அப்படியே பின்பற்றுகின்ற தன்மையினை இது குறிக்கின்றது. இத்தகைய ஒழுக்கத்தினை தாழ்ந்த ஒழுக்கமாக நீட்சே கருதுகின்றார். மந்தை ஒழுக்கத்தினை நீட்சே நிராகரிக்கின்றார்.

நீட்சே உணர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்குகின்றார். பகுத்தறிவின் முக்கியத்துவத்தை குறைத்து விடுகின்றார். **பகுத்தறிவினை ஆபத்தானதாக நீட்சே கருதுகின்றார். நன்மை தீமைக்கு அப்பால் (*Beyond Good and Evil*) என்ற படைப்பில் ஒழுக்கவியல் தொடர்பாக அதிகம் பேசப்படுகின்றன.** அதிகாரம், உணர்ச்சிகள், விருப்பங்கள் உணர்வுகள், ஆசைகள் என்பன நீட்சேக்கு முக்கியத்துவம் உடையனவாக இருக்கின்றன. இத்தகைய பிற்புலத்தில் ஏற்கனவே சமூகத்தில் ஒழுக்க விழுமியங்கள் நீட்சேயின் சிந்தனையில் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை.

மந்தை ஒழுக்கத்தில் தனிமனிதனுக்குச் செயல் உரிமை இல்லை. சமூக நீதிகளை அவன் அப்படியே ஏற்றுக்கொள்கிறான். சமூகத்தைப் புறக்கணிக்கும் போது, 'குற்ற உணர்வு அல்லது தண்டனை' பற்றிய பயம் மனிதனுக்கு ஏற்படுகின்றது. இதனையே மனிதர்கள் 'மனசாட்சி' எனக் கூறுகின்றனர். வலியோர் நலிந்தோரைத் தம் பிடியில் வைத்துக் கொண்டிருப்பதற்காகப் பயன்படும் குணங்களை நற்பண்புகள் என்றும், அதற்கு மாறானவற்றைத் தீமைகள் எனவும் நிர்ணயித்தனர். அன்பு, அருள், இரக்கம் முதலிய பண்புகளைப் போராட்டத்தில் பணிந்தோரின் பண்புகளாகவும், மாறானப்பண்புகளை வெற்றியடைந்தோரின் பண்புகளாகவும் நீட்சே வரையறுக்கின்றார்.

**நீட்சேயின் அதீத மனிதன் மந்தை ஒழுக்கத்தை பின்பற்றாமல் தலைவன் ஒழுக்கத்தை உருவாக்குகின்றான்.** கிறிஸ்தவ தத்துவத்திற்கு எதிராக நீட்சேயின் அதீத மனிதன் உருவாக்கப்படுகின்றான். கிறிஸ்தவம் அவ்வுலக வாழ்க்கையினை முதன்மைப்படுத்தி இவ்வுலக வாழ்க்கையினை புறக்கணிக்கிறது. பொருள்முதல்வாதியாக இயற்கையை நோக்கும் நீட்சேயின் முன்பு கிறிஸ்தவம் முக்கியத்துவத்தை இழக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தான் என்ன நினைக்கிறானோ அதை செய்ய வேண்டும். அவனுக்குரிய இலட்சியங்களை அவனே உருவாக்கிக்கொள்ள வேண்டும். இதுவே அதீத மனிதனுக்குரிய இலக்கணமாகும்.

நீட்சேயின் அதீத மனிதன் உலகினை மட்டும் அடக்கியாள்பவனாக இருக்க மாட்டான் தன்னையும் அடக்கியாள்பனாக இருப்பான். **நீட்சேயின் நோக்கின்படி புத்தரும் ஹிட்லரும் அதீத மனிதர்கள்.** கிறிஸ்தவம் உலகில் சார்ந்த ஆசையையும், பந்தங்களையும் துறக்க

சொல்கின்றது. உலகத்தினை முதன்மைப்படுத்துகின்றது. இவ்வாறாக கிறிஸ்தவ ஒழுக்கத்திற்கு எதிர்மறை பண்புகளைக் கொண்டவனாக அதீத மனிதன் காணப்படுகின்றான்.

தனிமனித சுதந்திரம், தனிமனித மதிப்பீடுகள் என்பவற்றுக்கு எதிரானதாக கிறிஸ்தவம் இருப்பதாக நீட்சே கருதியதன் காரணமாக அதீத மனிதனை கிறிஸ்தவ சிந்தனைகளுக்கு எதிரானதாக கருதுகின்றார். அவ்வுலக வாழ்க்கையினை மறுப்பதன் மூலம் இவ்வுலக இன்பங்களை மட்டும் ஏற்றுக் கொள்ளும் நீட்சே இவ்வுலகினை கடவுள் அல்ல மனிதனே உருவாக்கி ஆளுகின்றான் என்ற கருத்தினை உருவாக்கி முன்வைக்கின்றார். இவர் முன்வைக்கும் ஒழுக்கமானது நன்மை மற்றும் தீமைகளைக் கடந்து எது தனிமனிதனுக்கு மகிழ்ச்சியை தருகின்றதோ அதுவே நல்லது அதனையே அதீத மனிதன் செய்வான் என்ற முடிவுக்கு நாம் வரலாம். நீட்சேயின் அதீத மனிதன் தனக்கேற்ற ஒழுக்க விழுமியங்களை உருவாக்கி அதற்கேற்ப வாழ்க்கை இனி வாழ்பவனாக இருப்பான் என நீட்சே குறிப்பிடுகின்றார். **வாழ்க்கை என்பதை அதிகாரத்திற்கான சித்தம் என கருதும் நீட்சே ஒவ்வொருவரும் அவர்களது விருப்பத்துக்கு ஏற்ப வாழ வேண்டும் என்றும் அதீத மனிதன் சுயாதீன திட்டத்துடன் செயல்படுவான் என்றும் குறிப்பிடுகின்றார்.**

ஒழுக்க விழுமியங்கள் ஒவ்வொருவரையும் பொறுத்தது. ஒருவருக்கு எது சரியென தோன்றுகின்றதோ அதை அவர் செய்வார். எது பிழையென தோன்றுகின்றதோ அதை அவர் செய்ய மாட்டார். அதீத மனிதன் தான் விரும்பிய செயல்களை செய்வதற்கு தேவையான இயலுமையினையும் சுதந்திரதினையும் கொண்டிருக்கின்றார். இவ்வுலகில் நாம் பாவம் என்ற எண்ணக்கருவினை நீக்க வேண்டும் என நீட்சே கருதுகின்றார். புறவயமான, முழுமையான மதிப்பீடுகளை நீட்சே எதிர்க்கின்றார். இத்தகைய நிலைப்பாடு அகவயமான சார்பு நிலையான மதிப்பீடுகளுக்கு அழைத்துச் செல்கின்றது. துறவறம் சார்ந்து மதிப்பீடுகளைக் கொண்டவனாக நீட்சேயின் அதீத மனிதன் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நீட்சேயின் கருத்துப்படி அதீத மனிதன் பல எதிரிகளை உருவாக்கிக் கொள்வான் என்பதன் மூலம் அவன் பெரும்பாலானவர்களின் மதிப்பீடுகளுக்கு எதிரான மதிப்பீடுகளை உருவாக்கிக் கொள்வான் என்பது வெளிப்படை. **ஒரு மனிதனை நீட்சே ஒரு மரத்துக்கு ஒப்பீடுகின்றார். எவ்வாறு ஒரு மரம் அதன் இஸ்டம் போல் வளர்கின்றதோ அவ்வாறே மனிதனும் வளர்கிறான், வளர வேண்டும் என இவர் எதிர்பார்க்கின்றார்**. இத்தகைய இயற்கைவாதநோக்கு புறவய ஒழுக்க மதிப்பீடுகளை கேள்விக்குறியாக்குகின்றது. ஒரு மனிதன் அவன் விரும்பிய படி வாழ வேண்டும் அப்போது அவன் அதீத மனிதனாகின்றான். **நீட்சேயின் அதீத மனிதன் தனக்கான இலட்சியங்களை உருவாக்கிக் கொண்டு அதற்கான துன்ப துயரங்களையும் தாங்கிக்கொண்டு வாழ்கின்றான். உணர்வுகளும் ஆசைகளும் அதீத மனிதனைப் பொறுத்தவரையில் பாவங்களோ சாபங்களும் அல்ல அவை வரங்களாகும்.**

## முடிவுரை

இருத்தலிய சிந்தனையாளரான நீட்சே ‘‘கடவுள் என்பது மனிதர்களை கற்பனை உலகில் அடக்கி வைக்கின்ற அதிகார பூர்வமான கருத்தியல்’’ என்றார். கடவுள் ஒரு மன உற்பத்தியாளர், வலியைக் குறைக்கவும், துன்பத்தை எளிதாக்கவும், துன்பத்தை

எதிர்கொள்வதற்காகவும் ஒரு நண்பராக இருக்க வேண்டும். ஆனாலும் இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க, நாம் கடவுளை நம்ப வேண்டிய அவசியமில்லை என்று நீட்சே கூறுகிறார். வேறொரு உலகத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் துன்பத்திலிருந்து தப்பிக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, நம்மை மேம்படுத்துவதற்கு துன்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று நீட்சே வாதிடுகிறார். மத எதிர்ப்பாளரான நீட்சே, கிறிஸ்துவம், "ஆன்மாவின் அனைத்து சுதந்திரம், பெருமிதம், சுயநம்பிக்கை ஆகியவற்றை பலி கொடுத்துவிட்டது'' என்று கூறுகிறார். கிறிஸ்தவம் போதிக்கும் எளிமை, பிறருக்கு உதவுதல், மனிதநேயம் போன்றன அடிமைத்தனத்தின் பண்புகள் என இவர் கூறுகிறார்.

நீட்சேயினுடைய சிந்தனைகளும் தத்துவங்களும் தனிமனிதர்கள் ஆற்றல் மிக்கவர்களாக செயற்படுவதற்குரிய வழிமுறைகள் பற்றிய தேடலாக அமைந்துள்ளது. **ஒருவர் தனது சுயத்தை அடையாளம் காண கடவுளை முன்னிறுத்தாமல் பகுத்தறிவில் செய்றபட வேண்டும், மனிதர்களே தங்கள் செயலுக்கு தங்களே அர்த்தம் கற்பிக்க வேண்டும் மாறாக கடவுள் அல்ல என்றார். நீட்சே உருவாக்கிய அதீத மனிதன் பாரம்பரிய ஒழுக்க விழுமியங்களிலிருந்து விலகி சிறந்த மதிப்பீடுகளே தானே உருவாக்கி தலைவனை ஒழுக்கத்தை கொண்டிருப்பான். ஒரு தனிமனிதனாக மரபு வழிப்பட்ட அறநெறிகளை ஒதுக்கித்தள்ளி புதிய பாரம்பரியாங்களை உள்ளிட்ட புதியதொரு ஒழுக்க நிலையை அறிமுகப்படுத்த நீட்ஷே முயன்றார்.** ஒழுக்க நிலையே உயர்நிலையினையும், உன்னத நிலையினையும் ஒருங்கே கொண்ட மனிதர்களைத் தோற்றுவிக்கும் என்று கூறிய நீட்ஷே அவ்வாறான ஒழுக்க நிலையே ஆள்நிலை ஒழுக்கம் (Master Morality) என்றார். இத்தகைய ஒழுக்கத்தினையே அதீத மனிதன் கொண்டிருப்பான். அதீத மனிதனை (Super man/Super hero) உருவாக்குவதில் நட்பு முக்கியமானது என நீட்சே குறிப்பிடுகின்றார். **நீட்சே "உங்களது சிறந்த எதிரியினை உங்கள் நண்பனில் பெற்றிருக்க வேண்டும்" என Thus Spoke Zarathustra (1883) என்ற இந்நூலில் குறிப்பிடுகின்றார்**. இம்மனிதன் ஒரு சுய நல வாழ்வை வாழாது அவனுடைய சூழலுக்கும் சமூகத்திற்கும் அவன் மாபெரும் சொந்தமாக இருக்கின்றான். அவனது நடத்தையும் வழிகாட்டலும் பெருமளவில் மனித குலத்துக்கு நன்மையாக இருக்கின்றது.

**உசாத்துணைகள்**


1. முனைவர்.முத்துமோகன்.ந, ''ஐரோப்பிய தத்துவங்கள்'', மா பிரிண்டர்ஸ், சென்னை
2. Barrett, W. (1958). *Irrational Man – A Study in Existential Philosophy.* USA: Doubleday and Company Inc.
3. Blackham, H.J. *Six Existentialist Thinkers*. London: Routledge,1961.print
4. Buben, A., 2022. *Existentialism and the desirability of immortality*, London: Routledge.
5. Christopher, P., Gregory, G. (2008). *Existentialism for Dummies*. USA: Wiley Publishing, Inc.

6. Justin Remhof, (2018). ***"God is dead": Nietzsche and the Death of God.*** Cornell University Press
7. Solomon, R., 2005. *Existentialism*, 2nd edition, New York & Oxford: Oxford University Press.

# *3. உளவளத்துணை : ஓர் வரலாற்று நோக்கு*

**அறிமுகம் :**

உளவளத்துணையைக் குறிக்கும் **"Counselling"** என்ற ஆங்கிலச் சொல்லை **உளவளத்துணை, மனித மேம்பாடு, ஆற்றுப்படுத்தல், சீர்மியம், சீர்மியமும் உதவும் முறையும், வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்** எனப் பலவாறு அழைப்பர். உளவளத்துணையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று அர்ப்பணிப்புடன் செயற்படுபவர் **"உளவளத் துணையாளர்" (Councellor)** மற்றும் **"ஆலோசனை வழங்கும் உளவியளாளர்கள்" (Counselling Psychologist)** என்றும், சேவையைப் பெற்றுக் கொள்ள விழைவோர் **"விழைஞர்"** அல்லது **"சேவை நாடிகள்"** அல்லது **"ஆலோசனை நாடிகள்" (Client)** என்றும் அழைக்கப்படுகின்றனர்.

உளவளத்துணை பல்வேறு வகைகளாகப் பகுத்தாரயப்படுகின்றது. **கல்விச் சீர்மியம், தொடர் தொழிற் சீர்மியம், திருமணச் சீர்மியம், குடும்பச் சீர்மியம், நெருக்கடி நிலைச் சீர்மியம், அனர்த்த நிலைச் சீர்மியம், பொழுதுபோக்கு மேம்பாட்டுச் சீர்மியம், பரீட்சைச் சீர்மியம், மருத்துவச் சீர்மியம், சமயச் சீர்மியம்** போன்ற வகைகளைக் குறிப்பிடலாம்.

**உளவளத்துணை தொடர்பான அறிஞர்களது வரைவிலக்கணங்கள் :**

உளவளத்துணை தொடர்பாக பலர் பல கருத்துக்களையும், வரைவிலக்கணங்களையும் முன்வைத்துள்ளனர். அவ்வாறான சில கருத்துக்களைப் பார்ப்போம்.

- **வோர்டின் (Bordin)** - "உளவளத்துணை என்பது உளவளத்துணையாளருடன் சேவை நாடி நேரில் கலந்துரையாடி சிக்கலுக்குத் தீர்வு காணப் பயன்படுத்தப்படும் ஒரு நுட்ப முறையாகும்."
- **கர் ஆர்.றோஜர் (Car R.Rogers)** - "ஒருவருக்கு அவரைப் பற்றிய சுயவிளக்கத்தை ஏற்படுத்தி அதனடிப்படையில் அவர் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அவரே தீர்த்துக் கொள்வதற்கு வழங்கப்படும் உதவியாகும்."
- **ஜுடி ஹரோ (Judy Harrow)** - "உளவளத்துணை என்பது உதவியளிக்கும் ஒரு கலையாகும்."
- **எட்வின் ஹெர் (Edwin Herr)** - "உளவளத்துணை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையிலான ஓர் ஊக்க மற்றும் தொழில்வாண்மை உறவாகும். இதில் சேவைநாடியின் தேவைக்கேற்ப அதன் முறைகள் மாற்றமடையும். ஆனால் அதில் எப்போதும் உளவளத்துணையாளருக்கும் சேவை நாடிக்குமிடையே பரஸ்பர உறவு இருக்கும். அது சேவை நாடியின் செயல் மற்றும் சுயதர்மத்தை மையப்படுத்தியதாக இருக்கும்.
- **எனி ஜோன்ஸ் (Eni Jones)** - "உளவளத்துணை என்பது சக்தியைப் பெற்றுக்கொடுக்கும் செயல் நடவடிக்கைகளில் ஒன்றாகும்."

**உளவளத்துணை தொடர்பான பொதுவான வரைவிலக்கணங்களும், கருத்துக்களும் :**

என்றவாறு அறிஞர்கள் பலர் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். மேலும் பின்வருமாறும் உளவளத்துணைக்கு வரைவிலக்கணங்கள் வழங்கப்படுகின்றன.

- ''ஒருவருக்கு மற்றொருவர் அர்த்தமுள்ள பிரயோசனமுள்ள உரையாடலின் மூலம் உதவி புரியும் வழிமுறையே உளவளத்துணையாகும்.''
- ''உளவளத்துணையானது பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு இருவருக்கிடையே நிகழும் தொடர்ச்சியான கலந்துரையாடலாகும். இருவர் சந்தித்து சொந்தப் பிரச்சினைகளை ஆழ ஆய்வதும், அவற்றிற்குரிய தீர்வுகளை இனங்காணுவதுமாகிய செயன்முறையாகும்.''
- ''வாழ்க்கையில் அல்லது வேலைத்தளத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வுகளைக் கண்டறியும் வழிமுறையே உளவளத்துணையாகும்.''

இவ்வாறாக உளவளத்துணை தொடர்பான வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்படுவதுடன் மேலும் பல விளக்கங்களும் முன்வைக்கப்படுகின்றன. அந்தவகையில் **உளவளத்துணை** என்பது ஒரு சக்தி வாய்ந்த முக்கியத்துவமான செயற்பாடாகும். இது இரு நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையில் இடம்பெறும் ஒரு செயற்பாடாகும். இச்செயற்பாடானது உளவளத்துணைநாடியின் தேவையினை கொண்டு வித்தியாசப்படும். இது எப்போதும் உளவளதுணையாளருக்கும் உளவளத்துணைநாடிக்குமிடையில் பரஸ்பர உடன்பாடான தொடர்பாடலாக கருதப்படுகின்றது.

**உளவளத்துணை தொடர்பாடலானது** ஒவ்வொரு நாளும் இடம்பெறும் ஏனைய தொடர்பாடல் திறமையை விட வித்தியாசமானது. அவ்வாறு ஒவ்வொரு நாளும் இடம்பெறும் தொடர்பாடல் ஒரு வழி தொடர்பாடலாகவும் இருவருக்கும் இடையே உள்ள பரஸ்பர பரிமாற்ற தொடர்பாடலாக காணப்படும். இதற்கு மாற்றமாக உளவளத்துணை ஆழமானதாகவும் தீவிரமானதாகவும் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்காத ஒரு தொடர்பாடல் முறையாக கருதப்படுகின்றது. தெளிவாக கூறுவதாயின் இரு சாரார்களுக்கிடையில் இடம்பெறும் ஒரு தொடர்பாகவும் இதில் ஒரு சாரார் ஆற்றுப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுபவராகவும் மற்றவர் அதற்கு உட்படுத்தப்படுபவராகவும் கொள்ளப்படும்.

உளவளத்துணையானது **உளமருத்துவம் (Psychiatry)** என்பதிலிருந்து வேறுபட்டது. இது ஒரு உளவியல் நடவடிக்கை. ஆனால் உளமருத்துவம் ஒரு மருத்துவ நடவடிக்கை. அது மருத்துவவியலின் ஒரு பகுதியாக இயங்குகிறது. நோயின் இயல்பை ஆராய்ந்து **கண்டறிதல், வகைப்படுத்துதல், சிகிச்சையளித்தல், நோய் முன்னேறாது தடுத்தல்** முதலியவை உளவள மருத்துவத்தில் இடம்பெறுகின்றன.

மேலும் உளவளத்துணை என்ற செயற்பாடு **ஆலோசனை (Advice)** வழங்கலிலிருந்து வேறுபட்டது. ஆலோசனை வழங்கலில் ஆலோசனை வழங்குவோரிடத்தில் ஒருவித மேலாதிக்க

நிலைகொள்ளல் இடம்பெறுகின்றது. ஆனால் உளவளத்துணையில் எதுவித மேலாதிக்கத்திற்கும் இடமில்லை.

**வழிகாட்டல் (Guidance)** என்பதிலிருந்தும் இது வேறுபடுகின்றது. வழிகாட்டலில் குறித்த இலக்கு நோக்கிய நகர்வு முக்கியத்துவம் பெறுகின்றது. தர்க்க ஆதாரங்களுடன் வழிகாட்டிச் செல்லல் வழிகாட்டலில் சிறப்பிடம் பெறுகின்றது. ஆனால் உளவளத்துணை உள்ளத்தை வளப்படுத்துதலுடனும், செழுமைப்படுத்தலுடனும், அபிவிருத்திப்படுத்தலுடனும் இணைந்த உளவியற் செயற்பாடாக அமைகின்றது.

உளவளத்துணையானது தனிப்பட்டவர்களுக்கிடையேயான மனவெழுச்சி ரீதியான முடிவெடுப்பதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்காக வழங்கப்படும் ஒரு செயற்பாடாகும். இது உளவளத்துணைநாடியின் வளர்ச்சி மற்றும் வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் திறனையும் அதனை சமாளிக்கும் தன்மையையும் வளர்க்கின்றது.

உளவளத்துணை என்பது பிரச்சினைக்கு உட்பட்ட ஒரு நபரிடம் மறைந்திருக்கும் வளமான **திறன்கள், பலங்கள்** ஆகியவற்றை வெளிக்கொணர்வதன் மூலம் அவருக்கு அந்த பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு வழியமைத்துக் கொடுக்கும் ஒரு **பொறிமுறை** எனலாம். இந்தக் கருத்தின்படி எல்லா ஆட்களுள்ளும் மறைந்த திறமைகளும், நிபுணத்துவமும் இருப்பதாகவும் அவற்றை வெளிக்கொணர்வதன் மூலம் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**உளவியல்** மற்றும் **உளவியல் பகுப்பாய்வு** அகராதியானது உளவளத்துணை பற்றி பின்வருமாறு கூறுகின்றது. **"உளவளத்துணை இரு மனிதர்களுக்கிடையே ஒரு தொடர்பாகும். இங்கே ஒரு நபர் மற்றைய நபருக்கு அவருடைய பிரச்சினையை தீர்க்க முனைவதை அல்லது உதவி செய்வதை இது சுட்டிக்காட்டுகின்றது. இருந்தபோதிலும் இது ஒரு ஆற்றுப்படுத்தும் உளவியலாளருக்குரிய தொழிநுட்ப பாடமாக கருதப்படுவதில்லை, மாறாக ஆற்றுப்படுத்தல் மற்றும் அதன் தோற்றமானது உளவியல் சார்ந்த உட்கருத்துக்களையும் அதன் விளக்கங்களையும், உள்ளடக்கங்களையும் தருகின்றது."** என்றவாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது.

இன்றைய இயந்திரமயமான உலகில் மனிதன் பல சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் உள்ளான். அதற்கேற்ப தன்னை மாற்றி புதிய சூழ்நிலைக்குள் மனநலத்துடன் வாழ வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மனிதன் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு **உதவி** மற்றும் **வழிகாட்டல்** மூலம் ஆறுதலை வழங்க முடியும். அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் அறிவியல் முறையாக உளவளத்துணையைக் குறிப்பிடலாம்.

உளவளத்துணையானது ஒருவருக்கு ஏற்படுகின்ற உளவியல் சார்ந்த சிக்கல்களைத் தகுந்த முறையில் அணுகுவதையும் கையாளுவதையும் அதற்கான தீர்வை நோக்கி வழிப்படுத்துவதையும் இம்முறை நோக்காகக் கொண்டுள்ளது. அதாவது உளச் சிக்கலுள்ள ஒருவருக்கு உளச் சாந்தியை ஏற்படுத்தி முழுமையான வாழ்வு வாழச் செய்யும் ஒரு

அறிவியல் நுட்பமுறை இது எனலாம். வேறுவகையில் கூறுவதாயின் உளவளத்துணையானது மனிதர்களது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவி புரியும் அடிப்படை சுகாதாரத்தை மூலமாகக் கொண்ட தொழில் வாண்மையான **(Profession)** சேவையாகவே அறியப்படுகின்றது. **வைத்தியசாலைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி நிலையங்கள், தொழில் அமைப்புக்கள்** என சகல மட்டங்களிலும் இது வியாபிக்கப்பட்டுள்ளமையும் அறியத்தக்கது. **பிரித்தானிய சீர்மிகு பல்கலைக்கழகம் 1991** ஆம் ஆண்டு **"சீர்மிகு நாடி வளப்படுத்தும், அவரது மனவெழுச்சிக்கு அங்கீகாரம் தருதல், அவருடைய ஆற்றல்வினைகளை உச்ச நிலையில் ஆற்றுவதற்கு துணை நிற்றல், அவரது வாழ்க்கை உளவள சீர்வளத்துடன் வாழ்வதற்குரிய மன சுகத்தை உருவாக்குவதற்கு உதவுதல் போன்றவை ஆற்றுப்படுத்தலின் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது"** எனக் கூறுகின்றது.

**மேலைத்தேயத்தில் உளவளத்துணையின் வரலாற்று ரீதியான வளர்ச்சி :**

நாளாந்தம் தமது வாழ்வில் மனிதர்கள் பல சிக்கல்களை எதிர்பார்த்தோ, எதிர்பாராமலோ முகங்கொடுக்க நேரிடும். இவ்வாறு வரும் தடைகளை எதிர்க்கும் பிரிவினர் முன்னேறிச் செல்கின்றனர். மற்றுமொரு பிரிவினர் அதனை எதிர்கொள்ள முடியாமல் உள நெருக்கீட்டுக்கும் மனஅழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர். இத்தகைய பிரச்சினைகளில் இருந்தும் மீட்டெடுக்கப் பயன்படும் உளவளத்துணையானது நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

மனித இனம் ஆரம்பமான நாளிலிருந்தே உளவளத்துணையும் வளர்ந்து வந்துள்ளது. **பெற்றோர், ஆசிரியர், நண்பர், முதியோர்** ஆலோசகர்களாக வழிகாட்டிகளாக ஆற்றுப்படுத்துநராக உதவி வந்துள்ளனர். வருத்தம் வரும் போது மருத்துவரை நாடுவது இயற்கையே. மருத்துவம் விஞ்ஞான ரீதியாக வளரும் முன் நாட்டு வைத்தியர்கள் மக்கள் மத்தியிலே செல்வாக்குடையவர்களாக இருந்தனர். இந்த வைத்தியர்கள் நோயாளிகளின் வீடுகளுக்கு சென்று அவர்களுடன் அளவளாவி பேசி அவர்களின் பிரச்சினைகளை அக்கறையோடு கேட்டனர். அவர்களின் உடல் நோய்களுக்கு சிகிச்சை அளித்து வந்தனர். அதே நேரத்தில் இந்த நோயாளிகள் சில நேரங்களில் **கவலை, மனச்சோர்வு, பயம், பதட்டம், மன இறுக்கம்** போன்ற உளரீதியான நோய்களினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். நாட்டு வைத்தியர்கள் இத்தகைய நோய்களுக்கு விடை காணாது தவித்தனர். இந்த மருத்துவர்களின் பயிற்சி முழுவதும் மானிட உடலியலைச் சார்ந்திருந்ததால் நோயாளிகளின் மூளையில் அல்லது நரம்பு மண்டலத்தில் ஏற்பட்ட சிக்கல்களே இந்நோய்களுக்குக் காரணம் என்றெண்ணி **மனநோய், பைத்தியம்** என்று நம்பி வந்தார்கள். ஏனென்றால் இத்தகைய உளப் பிரச்சினைகளுக்கு போதிய விஞ்ஞான ரீதியான அறிவு அவர்களுக்கு கிடைக்கவில்லை.

உளவளத்துணையானது மேலைத்தேயத்தில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட துறையாக காணப்படுகின்றது. ஆரம்பத்தில் இது உளவளத்துறையாக விருத்தியடைந்திருக்கவில்லை. ஆனால் இத்துறையின் செயற்பாடு மறைமுகமாக இடம்பெற்றே வந்தது. குறிப்பாக கிரேக்க காலத்தில் **சோக்கிரடீஸ்** என்பவரின் உரையாடல் உளவளத்துணையாகக் காணப்பட்டது.

மத்திய காலத்தில் கிறித்தவ பாதிரியார்களின் **திருச்சங்கங்கள்** அடிப்படையில் உளவளத்துணை சார்ந்ததாகவே காணப்பட்டது. **1879** இல் வில்கலம்வூண்டின் வருகையின் பின்னர் உளவியல் ஒரு விஞ்ஞான பூர்வ கற்கை நெறியாக மாற்றமடைந்தோடு அதனுடைய செல்வாக்கு உளவளத்துறையில் தாக்கம் செலுத்தியது. **அமைப்புவாதம், செயற்பாட்டு வாதம், நடத்தை வாதம், உளப்பகுப்பு வாதம்** என்பன உளவியல் அடிப்படையில் கோட்பாடாக அமைந்தாலும் அதனுடைய பிரயோகத்தை நாம் உளவளத்துறையில் காணமுடியும்.

**19** ஆம் நூற்றாண்டின் இறுதியில் **கிரிசிங்கர், கிறேப்பிளின் கோல்ஜி றெமன்கஜல்** போன்றோரும் இன்னும் பல விஞ்ஞானிகளும் மனித ஆளுமையில் ஏற்பட்ட ஆழமான பாதிப்புக்களின் விளைவுகளை விளக்கிக் காட்டினர். இவை மூளை சம்பந்தப்பட்ட நோய்கள் என்று எண்ணினர். ஆனால் இவ் விளக்கத்தை எல்லா மருத்துவர்களும் ஒத்துக்கொள்ளவில்லை. மேலும் ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. நோயாளி தன்னுடைய அன்றாட வாழ்வில் வருகின்ற பிரச்சினைகளையும் நெருக்கீடுகளையும் சமாளிக்க இயலாததால் சில நோய்கள் மனதில் ஏற்படுகின்ற பாதிப்புகளால் வருகின்றன என்று விளக்கினர்.

மருத்துவர், நோயாளியின் மனதினைத் தன்வயப்படுத்தி அவருடைய மனத்தை அறிதுயில் நிலைக்கு **மனோவசியம் (Hypnosis)** கொண்டு வந்து மனதில் மறைந்து கிடக்கும் எண்ணங்களையும், உணர்வுகளையும், வெளிக் கொணர்வதாகும். இச்சிகிச்சை முறையினால் பலர் தங்களின் நோய்களில் இருந்து சுகமடைந்தனர். இத்தகைய நோய் நீக்கும் முறை வளர்ச்சியடைந்திருந்தாலும் **பிருவர் (Breuer)** சிறப்பாக நோயாளி தனது மனதில் உள்ள பிரச்சினைகளையும், உணர்ச்சிகளையும், சுதந்திரமாக வெளிப்படுத்த அறிதுயில் முறையை உபயோகித்தார். இம்முறையில் ஒரு புதிய திருப்பத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது. அதாவது நோய்க்குக் கொடுத்து வந்த முக்கியத்துவம் மாறி நோயாளிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை உருவாகியது.

உளவளத்துணையை விஞ்ஞான பூர்வமாக ஆரம்பித்தற்கு அடித்தளமிட்டவர் **சிக்மன்ட் பிராய்ட்** எனக் கூறலாம். துணைநாடி வருபவர் தனது ஆழ் மனத்தில் புதைந்து கிடக்கும் **எண்ணங்கள், கசப்பான அனுபவங்கள், உணர்வுகள்** இவற்றை எதுவித தடையோ, தணிக்கையோ இன்றி வெளிப்படுத்த **சுதந்திரமாக தொடர்புபடுத்தல் (Free Association)** என்னும் முறையை இவர் கையாண்டார். மேலும் ஆழ்மனதின் கதவுகளைத் திறக்க இம்முறை சிறந்ததாக அமைகிறது. பிராய்ட் தன்னிடம் துணைநாடி வருபவர் மீது மிகுந்த புரிந்துணர்வும் மரியாதையும் காட்டினார். புரொய்ட்டைப் பொறுத்தமட்டில் மனநோயாளிகளோடு மனிதாபிமானத்தோடு நடந்து கொள்வது இன்றியமையாதது என்பதை உணர்ந்தார். ஏனென்றால் அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளை சமாளிக்கும் அளவிற்கு பக்குவப்படவில்லை. மனநோயைக் குறித்த அறிவானது நம்மை நோயாளியோடு நெருங்கிய உறவை வளர்க்க உதவுகின்றது என்பதைக் கண்டறிந்தார். மனிதரை மனிதராக அனுபவரீதியாக உய்த்துணர்ந்தார். பிராய்ட் உருவாக்கிய உளவளச் சிகிச்சை முறையானது **"உளப் பகுப்பாய்வு"** என்று அழைக்கப்படுகின்றது.

பிற்பட்ட காலப்பகுதியில் சிக்மன் பிராய்ட்டின் **மனம்** பற்றிய கருத்துக்களும் கால்யூங்கின் **கூட்டுநடமை** பற்றிய கருத்துக்களும் இன்று வரை உளவளத்துணையில் சிகிச்சைக்கான

அடிப்படையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலைத்தேயத்தில் இன்று இதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கை நெறிகளும் உருவாக்கப்பட்டதோடு மேலைத்தேயவர்கள் வளர்ச்சி அடையும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு தங்களுடைய சிகிச்சை முறைகளை நடைமுறைப்படுத்திக் கொண்டே இருக்கின்றனர்.

**இலங்கையில் உளவளத்துணையின் வரலாற்று ரீதியான வளர்ச்சி :**

இலங்கையினைப் பொறுத்தவரையில் இந்த உளவளத்துனையானது **மதகுருமார், பூசாரியார், கிராம உத்தியோகத்தர், பரிசாத்தியார், மருத்துவிச்சி** போன்றவர்கள் அக்கால உளவளத்துணையாளர்களின் செயற்பாட்டை மேற்கொண்டிருந்தனர். இது ஒரு **தர்மம்** என்ற அடிப்படையிலும் **நம்பிக்கைகள்** என்ற அடிப்படையிலும் இடம்பெற்று வந்தது.

மேலைத்தேய நாடுகளில் இணையத்திற்கு முன்னமே உள மருத்துவமனை தோற்றம் பெற்று ஒரு விஞ்ஞானபூர்வமான சிகிச்சை முறை மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதன் செல்வாக்கு இலங்கையிலும் பரவத் தொடங்குகிறது. 1745இல் ஆளுனர் சேர் பொலின் கெலுட்டனின் ஆலோசனையில் பொரலையில் உள்ள கெம்பல் பூங்காவிற்கு அருகாமையில் **முதலாவது** உள மருத்துவமனை கட்டப்பட்டது. இதன் தலைமை வைத்தியராக **பென்றிக்** பொறுப்பேற்றுக் கொண்டார். அங்கு ஏற்பட்ட இட நெருக்கடி காரணமாக பத்தரையில் இரண்டாவது மருத்துவமனை கட்டப்பட்டது. 1964இல் **கொழும்பு பிரதான மருத்துவமனை** மற்றும் **கொழும்பு பல்கலைக்கழகம்** போன்றவற்றில் உளநோய் மருத்துவ பிரிவு உருவாக்கப்பட்டது. 1971இல் அங்கோடையில் மற்றுமொரு மருத்துவமனை உருவாக்கப்பட்டது.

1983இல் உளவளத்துறைக்கான **புதிய யுகம்** என்று கூறும் அளவிற்கு அரச அங்கீகாரத்துடன் **இலங்கை விவகார அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகம், கல்வி உளவியல் பிரிவு, தேசிய மகுடம்** என்பன இணைந்து **யொவுன் மிதுரோ** எனும் பெயருடன் நிகழ்ச்சித் திட்டத்தை **பல்கலைக்கழகம், பாடசாலை, பொதுக்கூட்டம்** என்ற ரீதியில் முன்னெடுத்துச் சென்றனர். இத்திட்டத்தினால் கவரப்பட்ட **எபாசி, அலோயா, சஹன, செவன, சாத்திய** போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் **இளைஞர் விவகார அமைச்சு, மனித வள அமைச்சு, சிறுவர் நன்னடத்தை** போன்ற அரச நிறுவனங்கள் உளவளத்துணை செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றன.

1981ஆம் ஆண்டு **மாணவர், ஆசிரியர்** தேவை கருதி பல்கலைக்கழகங்களில் போதனைக்குரிய பாடமாக ஆரம்பிக்கப்பட்டது. 1985இல் நாட்டில் பல பாகங்களிலும் உளவளத்துணை சேவைகள் முன்னெடுக்கப்பட்டன. 1986இல் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் கவனம் அதன் பக்கம் திரும்பியமை ஆற்றுப்படுத்துகையின் மைல்கல் எனலாம். 1988ஆம் ஆண்டு **யாழ்ப்பாண ஆற்றுப்படுத்துகை நிலையம்** தோற்றம் பெற்றதாக தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கொல்லுபிட்டியில் உள்ள **மாநம** வித்தியாலயத்தில் ஒரு பாடப் பிரிவாக ஆரம்பிக்கப்பட்டு 1995களில் படிப்படியாக வளர்ச்சியடைந்து பட்டப்பின் படிப்பு வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இலங்கை பல்கலைக்கழகங்களிலும் உளவளத்துணை ஒரு துறையாக உருவாக்கப்பட்டது. **2003**ஆம் ஆண்டில் ஆற்றுப்படுத்துகை ஒரு ஸ்தாபனமாக தோன்றி **2005**இல் **70** அங்கத்தவர்களையும் உள்வாங்கி இன்று **100** பேரைக் கொண்டு நாடளாவிய ரீதியில் பல நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. **2008**இல் இருந்து உளவளத்துணை சேவை நாடிகளுக்கு அவர்களது தகவல்களை அந்தரங்கமாக வெளிப்படுத்துவதற்காக தொலைபேசி இலக்கங்கள் கூட வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு இலங்கையில் பாரியதொரு துறையாக வளர்ச்சியடைந்து ஏனைய துறைகளுடனும் செல்வாக்குச் செலுத்துவதுடன் உள்ளத்தில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வினை வழங்கும் பணியை நாடு பூராகவும் முன்னெடுத்துச் செல்கிறது.

**முடிவுரை :**

உளவியலானது வளர்ந்து வரும் ஒரு கலையும் விஞ்ஞானமுமாகும். உளவியல் உதவியை நாடுவது என்பதை இன்னமும் ஒரு கறைபடிந்த துறையாகவே நம் மக்கள் கருதி வருகிறார்கள். சமுதாயத்தில் இதனைப் பற்றிய தவறான பார்வை இதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. இது ஒரு தவறான கணிப்பாகும். அன்றாடம் நாம் பல உடல் நோய்களுக்கும், சிறுசிறு நோய்களுக்கும் மருத்துவரை நாடியே சிகிச்சை பெறுகின்றோம். உளவியல் பிரச்சினைகளிலும் அதே நிலையைக் கடைப்பிடிப்பது நன்மையாக அமையும்.

**தருமரெத்தினம் பரஸ்காந்**

**நான்காம் வருடம், இரண்டாம் அரையாண்டு.**

**மெய்யியல் சிறப்பு (2018/2019)**

## *4. ஒளித்திரைகளும் சிறுவர்களும்*

தொழில்நுட்ப வளர்ச்சியில் உச்ச நிலையில் காணப்படும் தற்கால உலகமானது ஒளித்திரை (screen)குழந்தைகளின் வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கமாகிவிட்டன. தொலைக்காட்சிகள் மற்றும் கணினிகள் முதல் ஸ்மார்ட்போன்கள் மற்றும் டேப்லெட்டுகள் வரை, குழந்தைகள் சிறு வயதிலிருந்தே இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகளவு உருவாகியுள்ளனது. ஒளித்திரை பரந்த கல்வி வளங்கள், பொழுதுபோக்கு மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை வழங்குவதோடு அதேவேளையில், குழந்தைகளின் வளர்ச்சியில் ஒளித்திரை தாக்கம் செலுத்தி வருவது தற்கால உலகின் பாரிய சவாலாக உருவாகியுள்ளது. குழந்தைகளின் உடல் ஆரோக்கியம், அறிவாற்றல் மற்றும் சமூக நல்வாழ்வு, கலாச்சார, உளவியல், நடத்தை போன்ற காரணிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு குழந்தைகளின் மிக முக்கிய பருவமான இக்கால கட்டத்தில் அனைத்துவித செயல்பாடுகளிலும் இந்த ஒளித்திரையை சிறுவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

குழந்தைகள் கற்றுக்கொள்வது, விளையாடுவது மற்றும் தொடர்புகொள்வது, பொழுதுபோக்கு போன்றவற்றில் ஒளித்திரை புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் இலத்திரனியல் சாதனங்களின் அதீத வளர்ச்சி அவற்றின் நீண்டகால தாக்கத்தைப் பற்றி பரவலான விவாதத்தைத் தூண்டியுள்ளது. அன்றாட வாழ்வில் அதிகரித்து வரும் ஒளித்திரைகளின் பாவனை சாதகம் மற்றும் பாதகம் இரண்டையும் வழங்குகிறது. இதன் காரணமாக குழந்தையின் வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களில் அவற்றின் செல்வாக்கை இன்னும் விரிவாக ஆராய்வது அவசியமாகும்.

ஒளித்திரையினால் பல்வேறுபட்ட நன்மைகள் சிறுவர்களுக்கு கிடைத்தாலும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கும் போது சிறுவர்களுடைய அனைத்துவித செயல்பாடுகளிலும் ஒளித்திரையானது பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அதனால் சிறுவர்களின் நடத்தை மற்றும் உளவியல் சார் பகுதிகளிலும் சிக்கல்களை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. ஒளித்திரை குழந்தைகளுக்கு கல்வி கற்க மிகச் சிறந்த ஊடகமாக தற்காலத்தில் காணப்படுகின்றது. ஒளித்திரையானது கல்வி சார்ந்த வீடியோக்கள் மூலம் கற்றலை ஈடுபாட்டுடன் அணுகக்கூடியதாக மாற்றுகின்றது. குழந்தைகள் தங்கள் வேகம் மற்றும் ஆர்வங்களை பூர்த்தி செய்யும் இணையத்தளங்கள் மூலம் கணிதம், அறிவியல் மற்றும் மொழிகள் ஏனைய பாடங்களை ஆராயலாம். இருப்பினும், அதிகப்படியான திரை நேரம், குறிப்பாக வீடியோக்களை அதிகமாகப் பார்ப்பது போன்ற செயல்பாடுகள் கவனத்தை ஈர்க்கும் திறன் மற்றும் விமர்சன சிந்தனைத் திறனை எதிர்மறையாக பாதிக்கும். பொழுதுபோக்கிற்கான திரைகளை அதிகமாக நம்புவது, அறிவாற்றல் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஆக்கப்பூர்வமான விளையாட்டு மற்றும் சிக்கல் தீர்க்கும் நடவடிக்கைகளுக்கான திறன்களை குறைக்கிறது.

குறிப்பாக மின்-கற்றல் தளங்கள் மற்றும் ஒன்லைன் வகுப்பறைகளின் எழுச்சியுடன், கல்வியில் ஒளித்திரைகளின் பங்கு மிகவும் முக்கியமானது. மெய்நிகர் கற்றல் கருவிகள் மாணவர்களை

வளங்களை அணுகவும் பாடங்களில் தங்கள் சொந்த வேகத்தில் ஈடுபடவும் அனுமதிக்கின்றன. இருப்பினும், கல்வி நோக்கங்களுக்காக ஒளித்திரைகளை நம்பியிருப்பது சில சமயங்களில் இயற்பியல் புத்தகங்களைப் படிப்பது அல்லது செயல்திட்டங்களில் பங்கேற்பது போன்ற நேரடி கற்றல் நடவடிக்கைகளுக்கான உந்துதலைக் குறைக்கலாம். மேலும், கல்வி அல்லாத டிஜிட்டல் உள்ளடக்கத்தில் இருந்து கவனச்சிதறல்கள் ஏற்படுவதோடு அதனால் மாணவர்கள் தங்களது வயதுக்கு மீறிய செயற்பாடுகளில் ஈடுபடுவதும் கல்வித் தவிர்த்து வேறுபட்ட சிந்தனை மற்றும் செயற்பாடுகளில் தங்களது கவனத்தை திசை மாற்றம் செயற்பாடுகளை ஒளித்திரைகள் மேற்கொள்வதால் சிறந்த கற்ற நடவடிக்கையில் ஈடுபட முடியாமைக்கு மிக முக்கிய ஒரு காரணமாக தற்காலத்தில் ஒளித்திரைகள் காணப்படுகின்றன.

குழந்தைகளின் சமூகம் சார் அனுபவங்களை ஒளித்திரைகளின் தாக்கம் நன்மை மற்றும் தீமைகளையும் வழங்குகின்றது. ஒருபுறம் இலத்திரனியல் சாதனங்கள் குழந்தைகள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்திருக்க அனுமதிக்கின்றன. குறிப்பாக தொலைதூர அல்லது சமூக ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் தங்களது உறவினர்களுடன் உறவுகளை மேற்கொள்ளவும் உரையாடல்களை மேற்கொள்ளவும் ஒளித்திரைகள் உதவுவதோடு மறுபுறம், அதிகப்படியான திரை நேரம் நேருக்கு நேர் தொடர்புகளை கட்டுப்படுத்துகிறது. தகவல் தொடர்பு திறன் மற்றும் அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கும் திறன் ஆகியவற்றின் வளர்ச்சியை பாதிக்கிறது.

ஒளித்திரைகளில் மூழ்கியிருக்கும் குழந்தைகள், நண்பர்களுடன் விளையாடுவது அல்லது குடும்ப உரையாடல்களில் ஈடுபடுவது போன்ற மதிப்புமிக்க சமூக அனுபவங்களை இழக்க நேரிடலாம். இவ்வாறான பாதிப்புகள் ஒரு குழந்தையுடைய சமூகம் மற்றும் தனிநபர் சார் ஒழுக்க செயற்பாடுகளை பாதிப்பதாக காணப்படுகின்றது. ஒரு குழந்தை தனது தேவையான சில கற்றலை குடும்பங்களின் ஊடாகவே பெற்றுக் கொள்கின்றது. இவர்கள் ஒளித்திரையினால் மூழ்கி இருப்பதன் காரணமாக குடும்பங்களுடன் செலவழிக்கும் நேரம் குறைக்கப்படுகின்றது. இதனால் சில சமூகம் சார் பழக்கவழக்கங்களை அறிய முடியாத சூழ்நிலை ஏற்படுவதோடு சக நண்பர்களோடு விளையாட செல்லாததன் காரணமாக தலைமைத்துவ பண்புகள் ,தோல்வியை சகித்துக் கொள்ளும் மனப்பான்மை, மற்றும் சிறந்த தொடர்பாடல் திறன் அதுமட்டுமின்றி குழு செயற்பாடுகளில் ஈடுபடாமை போன்ற காரணிகள் அவர்களுடைய சமூகம் சார் நடத்தை காரணிகளை பாதிப்பதோடு சமூகத்தில் சிறந்த ஒரு பிரஜையாக உருவெடுப்பதற்கான காரணிகள் குறைக்கப்படுகின்றது.

அதிகப்படியான ஒளித்திரைப் பயன்பாடு குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இக்கால உலகின் சிறுவர்கள் எதிர்நோக்கும் ஓர் பாரிய சவாலாக உடல் பருமன் பிரச்சினைகளுக்கு காரணமாக ஒளித்திரை பயன்பாடும் ஒரு முக்கிய காரணியாக தற்காலத்தில் காணப்படுகின்றது. ஒளித்திரையில் சிறுவர்கள் அதிக நேரத்தை செலவழிப்பதோடு அதிகளவு நேரம் ஒன்லைன் கேம் விளையாடுவதன் காரணமாக மைதானங்களுக்கு சென்று சக நண்பர்களோடு விளையாடுவதற்கான விருப்பமின்மையும் இதற்கு ஒரு காரணியாக அமைகின்றது. கூடுதலாக, ஒளித்திரை மூலம் வெளிப்படும் நீல ஒளி

தூக்கத்தை சீர்குலைக்கிறது. இது போதிய ஓய்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய விளைவுகளான சோர்வு, எரிச்சல் மற்றும் குறைந்த கல்வி செயல்திறன் போன்றவற்றுக்கு வழிவகுக்கிறது. வெளிப்புற விளையாட்டு மற்றும் வழக்கமான உடல் செயல்பாடுகளை ஊக்குவிப்பது இந்த எதிர்மறை விளைவுகளைத் தணிக்கவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் உதவும்.

ஒளித்திரை பலவகையான உடல் ஆரோக்கிய பிரச்சனைகளுக்கு காரணியாக உள்ளது. "computer vision syndrome" என்று பொதுவாக குறிப்பிடப்படும் கண் சோர்வு, ஒளித்திரை சாதனங்களில் நீண்ட நேரம் செலவிடும் குழந்தைகளிடையே பெருகிய வரும் நோயாக தற்காலத்தில் காணப்படுகின்றது. வரண்ட கண்கள், தலைவலி மற்றும் மங்கலான பார்வை ஆகியவை இதன் அறிகுறிகளாகும். வழக்கமான இடைவெளிகளை ஊக்குவித்தல், "20-20-20 விதியை" பின்பற்றுதல் (ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் 20 வினாடிகளுக்கு 20 அடி தொலைவில் உள்ள ஒன்றைப் பார்ப்பது) மற்றும் சரியான வெளிச்சத்தை உறுதிப்படுத்துவது இந்த விளைவுகளைத் தணிக்க உதவும்.

குழந்தைகள் ஒளித்திரை பயன்பாடு அவர்களின் உணர்ச்சி மற்றும் நடத்தை வளர்ச்சியை கணிசமாக பாதிக்கிறது. வன்முறை அல்லது அதிகப்படியான வணிகமயமாக்கப்பட்ட விடயங்களில் அதிகம் ஈர்க்கப்படுவதோடு வயதுக்கு பொருந்தாத விடயங்களை அறிவதோடு, கவலை, ஆக்கிரமிப்பு அல்லது நம்பத்தகாத எதிர்பார்ப்புகளுக்கு வழிவகுக்கும். சமூக ஊடகங்கள், குறிப்பாக, சுயமரியாதையின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும், ஏனெனில் குழந்தைகள் தங்களை ஒன்லைனில் சிறந்த சித்தரிப்புகளுடன் ஒப்பிடுவதனால் சிறுவர்களிடையே சுய நம்பிக்கை இழப்பதற்கு மிக முக்கிய ஒரு காரணியாக அமைகின்றது.

இளம் குழந்தைகளுக்கு ஒளித்திரை தற்காலத்தில் ஆரம்ப வளர்ச்சி காலகட்டத்தில் அதிகப்படியான அல்லது பொருத்தமற்ற திரை பயன்பாடு பேச்சு மற்றும் சமூக தொடர்புகளை குழந்தையின் வளர்ச்சி மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒளித்திரை சார்ந்த செயல்பாடுகளை விட நேரடி மனித தொடர்புகளால் அதிகம் பயனடைகிறார்கள் என்று ஆராய்ச்சி முடிவுகள் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பெற்றோர் ஒரு குழந்தைக்கு ஒரு புத்தகத்தைப் படிப்பது மொழி வளர்ச்சியை மட்டுமல்ல, உணர்ச்சிப் பிணைப்பையும் ஊக்குவிக்கின்றது. இது ஒளித்திரையால் பிரதிபலிக்க முடியாது.

ஒளித்திரை குழந்தைகளை உலகளாவிய கலாச்சார மரபுகளை அறியவும், பல்வேறு மரபுகள், மொழிகள் மற்றும் முன்னோக்குகளைப் பற்றி அறிய வாய்ப்புகளை வழங்குகின்றன. இது சிறுவர்களின் யதார்த்த உலகைத் தாண்டிய கற்பனை ரீதியான ஒரு உலகத்தை உண்மையாக நினைப்பதற்கு தூண்டுகோலாக அமைகின்றது. இருப்பினும், ஒளித்திரை கலாச்சார யதார்த்தமற்ற இலட்சியங்களை அறிமுகப்படுத்தலாம், இது குழந்தையின் சுய-அடையாளத்தையும் உலகத்தைப் பற்றிய புரிதலை தவறாக புரிந்து கொள்வதற்கு காரணமாக அமையலாம். உதாரணமாக, சமூக ஊடக தளங்கள் பெரும்பாலும் இலட்சியமான (உண்மைக்கு புறம்பான கற்பனை உலகம்) வாழ்க்கை முறைகளை சித்தரிக்கின்றன. இது போதாமை உணர்வு காரணமாக அமைவதால் சிறுவர்கள் தவறான கண்ணோட்டத்தில்

உலகை புரிந்து கொள்ளவும் உண்மையற்ற விடயங்களை உண்மையான வாழ்க்கை நடத்தை என நம்பி அதை தனது வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சிறுவர்கள் பல்வேறு பட்ட முறையில் இயற்கையான மனிதனிடத்தில் இருந்து விடுபட்டு வித்தியாசமான ஓர் நடத்தை கொண்ட மனிதனாக உருவெடுப்பதற்கு காரணமாக அமைகின்றது.

ஒளித்திரைகளைப் பற்றிய மிகவும் ஆபத்தான விளைவுகளில் ஒன்று போதைப்பொருளை வளர்ப்பதற்கான அவற்றின் திரனாகும். சமூக ஊடக விருப்பங்கள், வீடியோ கேம் அதிகமாகப் பார்ப்பது ஆகியவற்றுடன் தொடர்புடைய டோபமைன் வெளியீடு குழந்தைகளிடையே மாறுபட்ட நடத்தைகளை உருவாக்கலாம். இந்த சார்பு நிலைப்பட்ட மனப்பான்மை பெரும்பாலும் ஒளித்திரைகளில் இருந்து விலகுவதில் சிரமமாக காணப்படும். இது அமைதியின்மை, எரிச்சல் அல்லது திரை நேரம் கட்டுப்படுத்தப்படும்போது மீறுதல் போன்ற நடத்தை சிக்கல்களுக்கு வழிவகுக்கிறது. தெளிவான விதிகளை நிறுவுதல் மற்றும் விளையாட்டு அல்லது கலை போன்ற மாற்று நடவடிக்கைகளை ஊக்குவிப்பது சார்புநிலையைக் குறைக்கவும் ஆரோக்கியமான பழக்கங்களை உருவாக்கவும் உதவும்.

ஒளித்திரைகளின் எல்லா விதமான செயற்பாடுகளும் எதிர்மறை விளைவுகளைத் குறைப்பதில் மிக முக்கியமான காரணிகளில் ஒன்று பயன்படுத்தும் ஊடகம் ஆகும். எல்லா திரை நேரமும் சமமாக உருவாக்கப்படவில்லை அதிகப்படியான தூண்டுதல் பொழுதுபோக்கை விட படைப்பாற்றல், விமர்சன சிந்தனை அல்லது உடல் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் முறைமைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கூடுதலாக, திரை நேரம் மற்றும் நேரடியான செயல்பாடுகளுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவது அவசியமாகும். வெளிப்புற விளையாட்டு, குடும்ப உணவு அல்லது பொழுதுபோக்கு போன்ற செயல்பாடுகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவது அத்தியாவசிய திறன்கள் மற்றும் உறவுகளை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை குழந்தைகளுக்கு வழங்குகிறது.

தொழில்நுட்பம் தொடர்ந்து முன்னேறும் போது, குழந்தைகளின் வாழ்க்கையில் ஒளித்திரைகளின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே செல்லும். ஆக்மென்டட் ரியாலிட்டி (Augmented reality) மற்றும் விர்ச்சுவல் ரியாலிட்டி (Virtual reality) ஆகியவை சிறந்த கல்வி மற்றும் பொழுதுபோக்கு அனுபவங்களை வழங்க வாய்ப்புள்ளது. இந்த கண்டுபிடிப்புகள் திறனைக் கொண்டிருந்தாலும், அவற்றின் உளவியல் மற்றும் உடல்ரீதியான தாக்கங்கள் குழந்தைப் பருவ வளர்ச்சியில் பொறுப்புடன் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்ய கவனமாக ஆய்வு செய்யப்பட வேண்டியது தற்கால பிரச்சனையாக காணப்படுகின்றது. குழந்தைகள் மற்றும் ஒளித்திரைகளுக்கு இடையிலான உறவை நிர்வகிப்பதில் பெற்றோர்களும் உறவினர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். திரை நேரத்திற்கான தெளிவான எல்லைகளை நிறுவுதல், சிறுவர்களை கண்காணித்தல் மற்றும் ஒளித்திரை அடிப்படையிலான மற்றும் ஒளித்திரை அல்லாத செயல்பாடுகளுக்கு இடையே சமநிலையை வளர்ப்பது அவசியமாகும்.

ஒளித்திரை குழந்தைகளின் வாழ்க்கையின் பிரிக்க முடியாத பகுதியாக மாறிவிட்டன. ஒளித்திரை சாதகம் மற்றும் பாதகம் இரண்டையும் வழங்குகிறது. கல்வி மற்றும்

இணைப்புக்கான மதிப்புமிக்க கருவிகளாக அவை இருக்க முடியும் என்றாலும், கட்டுப்பாடற்ற பயன்பாடு குழந்தையின் உடல், சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சியைத் தடுக்கலாம். வரம்புகளை அமைப்பதன் மூலமும், பல்வேறு செயல்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலமும், ஆரோக்கியமான ஒளித்திரைப் பழக்கங்களை வளர்ப்பதன் மூலமும் சமநிலையை அடைவது மிகவும் முக்கியமானதாகும். பொறுப்பான ஒளித்திரையைப் பயன்படுத்துவதற்கு குழந்தைகளை வழிநடத்துவதன் மூலம், அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் நல்வாழ்வைத் தடுக்காமல், தொழில்நுட்பத்தினால் நன்மைகள் உள்ளது என்பதை உறுதிசெய்ய பெற்றோர்கள் பிள்ளைகளை தொடர்ச்சியான கண்காணிப்பிற்கு உட்படுத்துவது சாலப் பொருத்தமானதாகும்.

**தியாகராஜா தர்ஷன் குமார்**

**நான்காம் வருடம் இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2018/2019)**

## *5. சூழல் நியதிவாதமும் மானிட ஆதிக்கவாதமும் - ஓர் சூழலியல் மெய்யியல் நோக்கு.*

சூழல் நியதிவாதம் மற்றும் மானிட ஆதிக்கவாதம் ஆகிய இரண்டு எதிரெதிரான உலகக் கண்ணோட்டங்கள், மனிதன் இயற்கையுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற கேள்விக்கு வெவ்வேறுபட்ட பதில்களை வழங்குகின்றன. சூழல் நியதிவாதம், இயற்கையின் சொந்த நியதிகளுக்கு மனிதன் கட்டுப்பட வேண்டும் என்ற கொள்கையை முன்வைக்கிறது. இயற்கை ஒரு தன்னியக்க அமைப்பு என்றும், மனிதன் அதன் ஒரு பகுதி மட்டுமே என்றும் இது கூறுகிறது. மறுபுறம், மானிட ஆதிக்கவாதம், மனிதன் இயற்கையின் ஆதிக்கம் செலுத்தும் உயிரினம் என்றும், இயற்கை வளங்களை தனது விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ள உரிமை உடையவன் என்றும் கருதுகிறது.

இவ்விரு கருத்துக்களுக்கு இடையிலான முரண்பாடு, சூழலியல் சிக்கல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. மானிட ஆதிக்கவாதக் கோட்பாடு, இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துதல், சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது. இதன் விளைவாக உயிரினப் பன்முகத்தன்மை குறைதல், காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய அச்சுறுத்தல்கள் எழுந்துள்ளன. சூழல் நியதிவாதம், இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண மனிதன் தனது நடத்தையை மாற்றிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

இக்கட்டுரையானது, சூழலியல் மெய்யியல் என்ற கோணத்தில் இவ்விரு கருத்துக்களையும் ஆய்வு செய்யும் வகையில், சூழல் நியதிவாதம் மற்றும் மானிட ஆதிக்கவாதத்தின் தத்துவ அடிப்படைகள், அவற்றின் வரலாறு, நவீன உலகில் அவற்றின் பொருத்தம் போன்ற பல்வேறு அம்சங்கள் ஆராயப்படுவதோடு மேலும், ஒரு சமநிலை அணுகுமுறை மூலம், சூழலையும் மனிதனையும் இணைத்து ஒரு நிலைபேறான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான வழிகள் பற்றி விவாதிக்கப்படுகின்றதொன்றான ஆக்கமாக இது காணப்படுகின்றது.

### சூழல் நியதிவாதம் (Environmental canonism) / சூழல் ஆதிக்கவாதம் (Environmental Determinism)

சூழல் நியதிவாதம் என்பது, மனிதன் இயற்கையின் ஒரு பகுதி என்றும், இயற்கையின் சொந்த நியதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தும் ஒரு தத்துவக் கொள்கை ஆகும். இந்தக் கொள்கை, மனிதனின் செயல்பாடுகள் இயற்கை சமநிலையைப் பாதிக்கின்றன என்றும், இதனால் பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எழுகின்றன என்றும் எச்சரிக்கிறது. அவ்வகையில் சூழல் ஆதிக்கவாத எண்ணக்கருவானது Friedrich Ratzel (1844-1904), Ellen Churchill Semple (1863-1932), Thomas Griffith Taylor, William Morris Davis (1850-1934), Ellsworth Huntington (1876-1947) ஆகிய அறிஞர்களால் முன்வைக்கப்பட்டது.

சூழல் ஆதிக்க வாதம் அல்லது சூழல் நியதி வாதத்தை (Environmental Determinism) காலநிலை ஆதிக்கவாதம் (Climatic Determinism) மற்றும் புவியியல் ஆதிக்கவாதம்

(Geographical Determinism) என்றும் கூறப்படுகின்றது. குறிப்பாக மனிதனானவன், வரலாற்றின் ஆரம்ப காலத்தில் இருந்தே சூழலுக்குக் கட்டுப்பட்டே வந்துள்ளான் என்றும், சூழல் சகலதையும் தன் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்து வருகின்றது என்றும் மனிதன் சூழலை நிருவகிக்கும் அதிகாரி அல்ல என்றவாறு சூழல் ஆதிக்கவாதக் கருத்துகள் காணப்படுகின்றன. 1884ஆம் ஆண்டின் சியாட்டல் வாசகம் முழுவதும் சூழலில் நாம் ஒரு உறுப்பினர் என்ற வகையில் ஆதிக்கவாதத்தினை முன்வைப்பதாகவே அமைந்தது.

ரிச்சல் தனது அமைவிட நியதி வாதத்தினூடாக மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பானது ஒரு வளர்ச்சி முறை நியதியாகும் மக்களது அமைவிடங்களைப் பொருத்தே அவர்களின் பண்புகளும் வேறுபட்டு அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்று கிரிபத் டயிலர் பின்வருமாறு சூழல் ஆதிக்கவாதக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். மனிதன் இயற்கைக்கு ஏற்ப தன்னை அனுசரித்துக் கொள்கின்றான். அந்த அனுசரிப்பானது ஒரு எல்லைக்குள்ளேயே நிகழ முடியும் என்றும் மனிதனுக்கு இயற்கை விதித்துள்ள விதிகளில் இருந்து விலகிச் செல்ல முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் சூழல் நியதிவாதத்தின் வேர்கள் பண்டைய காலத்து நாகரிகங்களில் காணப்படுகின்றன. பழங்குடி சமூகங்கள் இயற்கையுடன் இணக்கமாக வாழ்ந்ததற்கான ஏராளமான சான்றுகள் உள்ளன. ஆனால், தொழில் புரட்சிக்குப் பிறகு மனிதன் இயற்கையை ஆதிக்கம் செலுத்தும் முயற்சிகள் தீவிரமடைந்தன. இதன் விளைவாக, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் உலகளாவிய அளவில் தீவிரமடைந்தன. இந்த நிலையில்தான், சூழல் நியதிவாதம் ஒரு தனித்துவமான தத்துவக் கொள்கையாக உருவானது.

குறிப்பாக ஐரோப்பாவில் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி, முதலாம் இரண்டாம் உலக மகாயுத்தங்கள், 1960ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்ததான உயர் சனத்தொகை பெருக்கம், 1990ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்ததான சனத்தொகையின் வேகமான வளர்ச்சி, போன்றன உலக ரீதியாக வளங்களை உச்ச மட்டத்தில் நுகர வாய்ப்பேற்படுத்தியதோடு, இதனால் வேறு சூழலியல் சார் பிரச்சினைகள் உலக ரீதியாக ஏற்பட காரணமாகியது.

எனவே இதன் அடிப்படையிலேயே 1970ஆம் ஆண்டுகளில் சூழல் ஆதிக்கவாதக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து 1987ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட புருண்லாண்ட் ஆணைக்குழுவின் எமது பொதுவான எதிர்காலம், ஆனாலட் அல்கோர் மற்றும் அரசுகளுக்கு இடையிலான காலநிலை மாற்றம் பற்றிய அமைப்பு (Inter Governmental Panel on Climate Change - IPCC) இன் அசௌகரியமான உண்மைகள் (An Inconvenient Truth) எனும் திரைப்படம், ஹைலாட் நெல்சன் என்பவரால் 1972 ஆம் ஆண்டு முதல் பிரகடனப்படுத்தப்பட்டு அனு‘டிக்கப்பட்டு வரும் புவி தினம் (ஏப்ரல்-22 ஆம் திகதி) போன்றனவும் இதற்கு சார்பானதாகவே காணப்பட்டுகின்றன. இதன்படி சூழலைப் பாதுகாப்பதன் மூலமே அழிவுகளைக் குறைக்கலாம். சூழல் எங்களுக்குரியது, சூழல் ஒரு சகோதரன், எனவே சூழலை மையப்படுத்தி, சூழலைப் பாதுகாத்து, சூழலை முழுமையாக விட்டு வைத்தலையே சூழல் ஆதிக்கவாதம் குறிப்பிடுகின்றது.

இவ்வகையில் சூழல் ஆதிக்கவாதக் கருத்தை தெளிவாக விளங்கிக் கொள்வதற்காக நகர சூழல் சம்பந்தமான சில பிரச்சினைகளை உதாரணமாகக் கொண்டு நோக்கலாம். பொதுவாக நகர சூழலியல் பிரச்சினைகள் என நோக்கும் போது அங்கு இயற்கையின் செல்வாக்கு சிறப்பாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பிட்ட நகரப் பிரதேசத்தின் மண், தரைத்தோற்ற அமைப்பு, காலநிலை என்பன நகரின் சகல அம்சங்களிலும் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம். குறிப்பாக நகர தரை உயர வேறுபாட்டுடன் கழுவு நீரோட்டம். கழிவு நீர் வெளியேற்றம் என்பன காணப்படுகின்றது. மேற்கூறப்பட்டவாறு சூழலியல் சார்ந்த அம்சங்கள் மனிதனை கட்டுப்படுத்துகின்றது என்பதையே சூழல் ஆதிக்கவாத எண்ணக்கருவும் எடுத்துக்கூறுகின்றது.

இயற்கை ஒரு சிக்கலான மற்றும் இணைக்கப்பட்ட அமைப்பு என்றவகையில் மனிதன் தனது செயல்பாடுகளால் இந்த அமைப்பைப் பாதிக்கும்போது, அது முழு அமைப்பையும் பாதிக்கின்றது என்றும் மனிதன் இயற்கையின் ஒரு பகுதி மட்டுமே. மற்ற உயிரினங்கள் போலவே, மனிதனும் இயற்கையின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றதுடன் மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது, எதிர்கால தலைமுறையினரின் தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது. உலகளாவிய வெப்பமயமாதல், கடல் மட்டம் உயர்வு போன்ற காலநிலை மாற்றங்கள், சூழல் நியதிவாதத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன, காடுகளை அழித்தல், வனவிலங்குகளை வேட்டையாடுதல் போன்ற செயல்கள் உயிரினப் பன்முகத்தன்மையை குறைக்கின்றன. மேலும் காற்று, நீர் மற்றும் மண் மாசுபாடு மனித ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கிறது. இத்தகைய உதாரணங்கள் அனைத்தும், மனிதன் இயற்கையுடன் இணக்கமாக வாழ வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன. சூழல் நியதிவாதம், இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒரு முக்கியமான தத்துவக் கொள்கையாக விளங்குகிறது.

### மானிட ஆதிக்கவாதம் / சூழல் சாத்திய வாதம் (Environmental Possibilism)

மானிட ஆதிக்கவாதம் என்பது, மனிதன் இயற்கையின் ஆதிக்கம் செலுத்தும் உயிரினம் என்றும், இயற்கை வளங்களைத் தன்னிச்சையாகப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை மனிதனுக்கு உண்டு என்றும் கூறும் ஒரு தத்துவக் கொள்கை ஆகும். இந்தக் கொள்கை, இயற்கை மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு வளமாகக் கருதுகிறது. மானிட ஆதிக்கவாதத்தின் வேர்கள் மேற்கத்திய தத்துவத்தில் காணப்படுகின்றன. ரெனே டேகார்ட்ஸ் போன்ற தத்துவவாதிகள் மனிதனை இயற்கையிலிருந்து தனித்து நின்று பார்க்கும் ஒரு பார்வையை முன்வைத்தனர். தொழில் புரட்சியின் போது, இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை அடைவதே முக்கிய இலக்காகக் கொள்ளப்பட்டது. இது மானிட ஆதிக்கவாதக் கொள்கையை மேலும் வலுப்படுத்தியது.

அவ்வாறே மானிட ஆதிக்கவாத எண்ணக்கரு தொடர்பாக Paul Vidal de la Blache (1845-1918), Lucien Febvre (1878-1956), Harlan H. Barrows (1877-1960), Carl Ortwin Sinuer (1889-1975) ஆகிய அறிஞர்கள் வேறுபட்ட காலப்பகுதிகளில் கருத்துக்களை முன்வைத்தனர். சூழல் மனிதனை நேரடியாக கட்டுப்படுத்தினாலும், மனிதன் தன் திறமையினால் சூழலை தனது

தேவைக்கு ஏற்ப மாற்றி அல்லது வடிவமைக்கும் திறமைவாய்ந்தவனாக உள்ளான் என்ற கருத்தே இதன் மூலம் வலியுருத்தப்படுகின்றது. இவர்கள் மனிதன் தன் திறமை, அறிவு, நுட்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சூழலை தனக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்கின்றான் எனக்குறிப்பிட்டுள்ளனர். மேலும் லாபிலாச். மனி சுற்றுப்புறத்தினுள் நுழைந்ததும் அதனை மாற்றியமைக்கும் சிற்பியாகின்றான் என்றவாறு தனது எண்ணக்கருவை தர்க்க ரீதியான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வலியுறுத்தியுள்ளார்.

சூழல் மீதான மனிதனின் பல்வேறுபட்ட செயற்பாடுகள் காரணமாக சூழல் பல மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதை அவதானிக்கலாம். இம்மாற்றங்களின் காரணமாக குறிப்பாக மனித செயற்பாடுகள் காரணமாக சூழல் பாதிக்கப்பட்டு வருகின்றதுடன் குறிப்பாக சனத்தொகையின் உள்வரவால் அதிகரித்த நகர சனத்தொகை, தொழிநுட்ப விருத்தி, கைத்தொழில் மையங்கள் போன்றன நகர மையங்கள் சார்ந்து இட அமைவு பெற்றிருத்தல் என்பன மானிட ஆதிக்கவாதத்திற்கே வழிவகுத்துள்ளன. நகரப் பகுதிகளுக்கான மனித அழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்து, அதனால் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இவ்வாறான பிரச்சினைகளுள் நகர சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் முக்கியம் பெறுகின்றன. குறிப்பாக நகர நிலம், நீர், வளிமண்டலம் செறிவாக மாசடைந்து வருவதைக் குறிப்பிடலாம்.

எனவே இதன்படி சூழலை மனிதன் பயன்படுத்த வேண்டும் ஆனால் அதனை அழிவடையச் செய்யக் கூடாது, குறித்த வரையறைக்கு உட்பட்டே காணப்பட வேண்டும், தரமிழப்பு மற்றும் மீள் உருவாக்க வாய்ப்புகளை இழத்தல் போன்றவற்றை தவிர்த்து வளங்களை சமநிலையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேயே மானிட ஆதிக்கவாதம் காணப்படுகின்றது. இதற்காகவே 1992ஆம் ஆண்டின் ரியோடிஜெனிரோவில் இடம்பெற்ற புவி உச்சி மாநாட்டில் சூழல் மாசடைந்திருப்பது கண்டறியப்பட்டு சூழலை பாதுகாப்பதன் அவசியம் உணர்த்தப்பட்டது.

மனிதன் இயற்கையின் எஜமான் என்ற வகையில், மனிதன் இயற்கையை ஆதிக்கம் செலுத்தி, அதன் வளங்களைத் தனது விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளும் உரிமை உடையவன் என்றும் பொருளாதார வளர்ச்சி என்பது மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு அவசியம் என்றதுடன் தொழில்நுட்பம் மூலம் இயற்கையின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் எனவும் மானிட ஆதிக்கவாதம் வலியுறுத்துகின்றது. காடுகளை அழித்து விவசாயம் மற்றும் தொழில் நிறுவனங்களை அமைப்பது, கனிம வளங்களை அளவுக்கு அதிகமாகச் சுரண்டுவது இயற்கை சமநிலையைப் பாதிக்கிறது, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் வாயுக்கள் சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன. இத்தகைய உதாரணங்கள் அனைத்தும், மானிட ஆதிக்கவாதம் எவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. சூழல் நியதிவாதம் மற்றும் மானிட ஆதிக்கவாதம் ஆகிய இரண்டு கருத்துக்களையும் சமநிலைப்படுத்தி, நிலைபேறான வளர்ச்சியை நோக்கி நகர வேண்டிய அவசியத்தை இவை வலியுறுத்துகின்றன.

## சூழல் நியதிவாதமும் மானிட ஆதிக்கவாதம்

சூழல் நியதிவாதம் மற்றும் மானிட ஆதிக்கவாதம் ஆகிய இரண்டு கருத்துக்களும் மனிதனும் இயற்கையும் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற கேள்விக்கு முற்றிலும் மாறுபட்ட பதில்களை வழங்குகின்றன. சூழல் நியதிவாதம் இயற்கையை மனிதனைப் போலவே மதிக்கின்ற அதேசமயம், மானிட ஆதிக்கவாதம் இயற்கையை மனிதனின் பயன்பாட்டிற்கான ஒரு வளமாகக் கருதுகிறதுடன் சூழல் நியதிவாதம் மனிதனை இயற்கையின் ஒரு பகுதியாகக் கருதுகிறது. மானிட ஆதிக்கவாதம் மனிதனை இயற்கையின் ஆதிக்கம் செலுத்துபவனாகவும் மேலும் சூழல் நியதிவாதம் நிலைபேறான வள பயன்பாட்டை வலியுறுத்துகிறது. மானிட ஆதிக்கவாதம் வளங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது போன்ற எதிரெதிரான முரண்பாடுகள் காணப்பட்ட போதும் இவ்விரு கருத்துக்களும் இறுதியில் மனிதனின் நலனையே முன்னிறுத்துகின்றன. சூழல் நியதிவாதம் நீண்ட கால நலனையும் மானிட ஆதிக்கவாதம் குறுகிய கால நலனையும் முன்னிறுத்துகிறது. இவ்விரு கருத்துக்களில் எது சரியானது என்ற விவாதத்தைத் தாண்டி, ஒரு சமநிலை அணுகுமுறை அவசியம். மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, இயற்கையையும் பாதுகாக்கும் வகையில் ஒரு வளர்ச்சி மாதிரியை உருவாக்க வேண்டும் என்பதே உண்மையாகும். சூழல் நியதிவாதம் மற்றும் மானிட ஆதிக்கவாதம் ஆகிய இரண்டு கருத்துக்களும் தீவிரமான விவாதங்களுக்கு வழிவகுக்கின்றன. இருப்பினும், ஒரு சமநிலை அணுகுமுறையை ஏற்றுக்கொண்டு, மனிதனும் இயற்கையும் இணைந்து வாழும் ஒரு உலகை நோக்கி நகர வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய எண்ணக்கருக்களை சூழலியல் மெய்யியல் நோக்கில் அணுகும் போது சூழலியல் மெய்யியல் என்பது மனிதனும் இயற்கையும் இடையிலான உறவை மையமாகக் கொண்டு, நெறிமுறைக் கேள்விகளை ஆராயும் ஒரு தத்துவத் துறை ஆகும். இது மனிதனின் இயற்கையுடனான தொடர்பைப் பற்றியும், நாம் எவ்வாறு இயற்கையை மதித்துப் பாதுகாக்க வேண்டும் என்பதைப் பற்றியும் ஆராய்கிறது. அவ்வாறே சூழல் நியதிவாதம் மற்றும் மானிட ஆதிக்கவாதம் ஆகிய இரண்டு கருத்துக்களையும் சூழலியல் மெய்யியல் கோணத்தில் மறுபரிசீலனை செய்யும்போது, இரண்டுமே பல குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றன. சூழல் நியதிவாதம், மனிதனின் தேவைகளை முற்றிலும் புறக்கணித்து, இயற்கையை மையமாகக் கொண்ட ஒரு கண்ணோட்டத்தை முன்வைக்கிறது. மானிட ஆதிக்கவாதம், இயற்கையை வெறும் வளமாகக் கருதி, அதை அளவுக்கு அதிகமாக சுரண்டுகிறது.

சூழலியல் மெய்யியல் இவ்விரு கருத்துக்களின் தீவிரங்களைத் தவிர்த்து, மனிதனும் இயற்கையும் ஒன்றோடொன்று இணைந்திருக்கும் ஒரு ஒருங்கிணைந்த அமைப்பின் ஒரு பகுதி என்ற கண்ணோட்டத்தை முன்வைக்கிறது. இது மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது, இயற்கையையும் பாதுகாக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்துகிறது. ஒரு புதிய சூழலியல் நெறிமுறையானது, மனிதனும் இயற்கையும் இடையிலான சமநிலையைப் பேணும் வகையில் உருவாக்கப்பட வேண்டும். இந்த நெறிமுறை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அவ்வாறே நிலைபேறான வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியை அடைவதோடு இயற்கை வளங்களை பாதுகாத்து, எதிர்கால தலைமுறையினருக்கு அவற்றைப் பாதுகாத்து வைப்பது. சுற்றுச்சூழல் பாதிப்புகள் அனைத்து

மக்களையும் சமமாக பாதிக்காத வகையில், சமூக நீதியை உறுதி செய்ய வேண்டும். மேலும் பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களின் உரிமைகளையும் மதித்து, உயிரினப் பன்முகத்தன்மையைப் பாதுகாக்க வேண்டும். அவ்வகையில் ஒரு புதிய சூழலியல் நெறிமுறையை உருவாக்குவது எளிதான காரியமல்ல. இதற்கு அரசியல் தலைவர்கள், விஞ்ஞானிகள், பொதுமக்கள் என அனைவரின் ஒத்துழைப்பும் அவசியமாவதுடன் சூழலியல் மெய்யியல், நாம் வாழும் உலகத்தைப் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்தி, ஒரு நிலைபேறான எதிர்காலத்தை உருவாக்க உதவும் ஒரு முக்கியமான துறையாகும்.

இருந்தபோதிலும் சூழலியல் மெய்யியல் கோணத்தில் இவ்விரு கருத்துக்களை மறுபரிசீலனை செய்த போது இரண்டுமே பல குறைபாடுகளை வெளிப்படுத்தியது. சூழல் நியதிவாதம் மனிதனின் தேவைகளை முற்றிலும் புறக்கணித்தது. மானிட ஆதிக்கவாதம் இயற்கையை வெறும் வளமாகக் கருதி அதை அளவுக்கு அதிகமாக சுரண்டியது. இவ்விரு கருத்துக்களின் தீவிரங்களைத் தவிர்த்து, மனிதனும் இயற்கையும் ஒன்றோடொன்று இணைந்திருக்கும் ஒரு ஒருங்கிணைந்த அமைப்பின் ஒரு பகுதி என்ற கண்ணோட்டத்தை சூழலியல் மெய்யியல் முன்வைக்கிறது.

இந்த ஆய்வின் முடிவில் சூழல் நியதிவாதம் மற்றும் மானிட ஆதிக்கவாதம் ஆகிய இரண்டிற்கும் மாற்றாக, ஒரு சமநிலை அணுகுமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் தெளிவாகிறது. மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, இயற்கையையும் பாதுகாக்கும் வகையில் ஒரு வளர்ச்சி மாதிரியை உருவாக்க வேண்டும். நிலைபேறான வளர்ச்சி, சமூக நீதி, உயிரினப் பன்முகத்தன்மை பாதுகாப்பு போன்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சூழலியல் நெறிமுறையை உருவாக்க வேண்டும் என்பதே மெய்யியல் நிலைப்பாடாகும்.

**அப்துல்லா மொஹம்மட் இஷ்ஸத்**

**நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு**

**(2018/2019)**

## *6. பிரயோக ஒழுக்கவியலில் மருத்துவ ஒழுக்கம்*

ஒழுக்கவியல் அல்லது ஒழுக்க மெய்யியலானது மெய்யியலின் ஒரு பிரிவாக கருதப்படுகின்ற அதே நேரம் மனித நடத்தையுடன் தொடர்புப்பட்ட ஒரு எண்ணக்கருவாகும். இவ் ஒழுக்கவியலானது வாழ்க்கை முறை, ஒழுக்க விதிகள், வாழ்க்கை முறை ஒழுக்க விதிகள் பற்றிய விசாரனை ரீதியான ஆய்வு எனும் மூன்று விதமான பகுப்பின் கீழ் நோக்கப்படுவதோடு, விதிகள் பற்றிய விபரிப்பு ரீதியான ஆய்வாக அமையாது விமர்சன ரீதியான ஒரு ஆய்வாகவும் அமைகின்றது.

ஒழுக்கவியல் பற்றி **பேட்டன் ரசல்** பின்வருமாறு குறிப்பிடுகின்றார். **“ஒழுக்கவியல் நன்மை பற்றிய ஆய்வும், ஒழுக்கவியல் பற்றிய ஆய்வும் ஆகும்.”** நன்மை என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் பல்றே கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஒரு சாரார் நன்மை என்பதற்கு அன்பு செலுத்துதல் எனவும், இன்னும் சிலர் பிரபஞ்சத்தின் மீது காதல் கொள்ளுதல் எனவும், வேறு சிலர் இன்பம் அளிக்க கூடிய செயல் நன்மை என்கின்றனர். இன்பம் அளிக்ககூடிய செயல் நன்மை என்றால், ஒருவருக்கு நன்மை அளிக்கும் செயல் இன்னுமொருவருக்கு நன்மை அளிக்காமல் துன்பம் அளிக்கலாம். இவ்வாறு சற்று முரண்பாடான கருத்துக்கள் ஏற்படுகின்றது. எனவே கோட்பாட்டு ரீதியான விளக்கமாக ஒழுக்கவியல் அமையும் அதேவேளை மனித அறத்துடன் தொடர்புப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் நன்மை, தீமை, சரி அல்லது பிழை, நீதி மற்றும் குற்றம் போன்ற எண்ணக்கருக்களை பகுப்பாய்வு செய்யும் இயலாக விளங்குகிறது.

ஒழுக்கவியல் எனும் பதத்துடன் மிக இணைந்ததான வகையில் **“அறம்”** (**Moral**) எனும் எண்ணக்கரு விளங்குகிறது. அறம் எனும் சொல் ஆங்கிலத்தில் **“Moral**” என அழைக்கப்படுகின்றது. குறித்த இந்த ஆங்கிலச் சொல் “Mos” என்ற சொல்லின் வழியே பெறப்பட்டது. இக்கிரேக்க சொல்லின் அர்த்தம் “Custom” அதாவது “வழக்காறு” என்பதாகும்.

இவ்வாறான ஒழுக்கவியல் நல்வாழ்க்கை என்பது யாது? ஒழுக்க கடமைகள் கட்டுப்பாடுகள் என எம்மை கட்டுப்படுத்துபவன எவையேனும் இருக்கின்றதா? ஒழுக்கப்பெறுமானங்கள் சார்புடையனவா? அல்லவா? நாம் கட்டாயம் செய்ய வேண்டியது என எவையேனும் இருக்கின்றதா? போன்ற அனுபவசோதனைக்கு உட்படுத்த முடியாத பல்வேறு பிரச்சினைகள் ஒழுக்கவியலில் ஆய்வுக்குட்படுவதன் மூலமும் பகுத்தறிவின் துணைக்கொண்டு இயற்கையில் அமைந்த செயல்களை, நடத்தைகளை சிறப்பான வழியில் நிறைவேற்ற வழிக்காட்டுவதே ஒழுக்கவியலின் நோக்கமும், செய்கையும் ஆகும்.

ஆரம்பத்தில் இவ்வாறான ஒழுக்க நியமங்கள் இறைவனால் படைக்கப்பட்டன. பின்னர் காலத்தின் தேவைக்கேற்ப ஒழுக்கவியலின் செந்நெறி பண்பில் மாறுதல் ஏற்பட்டதன் விளைவாக,

- நியம ஒழுக்கவியல்

- விபரண ஒழுக்கவியல்
- அதீத ஒழுக்கவியல்
- ஒழுக்க உளவியல் என பல பிரிவுகள் தோற்றம் பெற்றன.

சமகாலத்தில் பூகோள நவீன தொழில்நுட்பத்தினைக் கருத்தில் கொண்டு பிரயோக சிந்தனையின் அடிப்படையில் ஒழுக்க வாழ்வுக்கு சவாலாக அமையும் அனைத்து விடயங்களிலும் ஒழுக்கவியல் தனது கரிசனையை செலுத்தியது. இதுவே **பிரயோக ஒழுக்கவியல்** தோற்றத்திற்கு பின்புலமாக அமைந்த காரணியாகும்.

பிரயோக ஒழுக்கவியல் என்பது மனிதனின் நாளாந்த செயற்பாடுகள் எந்தளவு தூரம் ஒழுக்க ரீதியாக நெறிப்படுத்தக் கூடியவாறு இருக்கின்றது என்பதனை பற்றி ஆய்வு செய்கின்ற ஒரு துறையாக அடையாளப்படுத்தப்படுகின்றது. அத்தோடு நியமம் கூறும் விஞ்ஞானமாகவும், மனித நடத்தை பற்றிய ஆய்வாகவும் அதாவது மனித நடத்தை எப்படி இருக்க வேண்டும் என்ற அடிப்படையினை விளக்கக்கூடிய ஒன்றாக விளங்குகின்றது.

பிரயோக ஒழுக்கவியலானது குறிப்பிட்ட சில செயற்பாடுகள் மற்றும் வழக்காறுகள் எந்தளவு தூரம் ஒழுக்க ரீதியாக அனுமதிக்கக் கூடியதாக இருக்கும் என்பதை பற்றி ஆராய்கின்ற ஒன்றாகும். இது அதீத ஒழுக்கவியல், நியம ஒழுக்கவியல் போல் அல்லாது தனது ஆய்வினை சில வினாக்களை எழுப்புவதன் மூலம் ஆரம்பிக்கின்றது.

**உதாரணமாக:**

- எவ்வாறான நிபந்தனைகளின் கீழ் கருச்சிதைவினை ஒழுக்க ரீதியாக அனுமானிப்பது?
- உலக வறுமை தொடர்பான எமது கடமை என்ன?

மேற்குறிப்பிட்டவாறான வினாக்களுக்கு நாம் விடையளிக்க முற்படும் போது அதற்கான ஒழுக்க கொள்கைகளையும், நியமங்களையும் பிரயோகிக்க வேண்டி ஏற்படும். இவ் பிரயோக ஒழுக்கவியல் மருத்துவம், தொடர்பாடல் ஊடகம், கல்வி, விளையாட்டு, சட்டம், கணினி, வணிகம், மனித உரிகைள் போன்றவற்றில் காணப்படுகின்ற ஒழுக்க வாழ்வுக்கு சவாலாக அமைகின்ற விடயங்கள் மீது இப்பிரயோக ஒழுக்கவியல் தாக்கம் செலுத்துகின்றது.

பிரயோக ஒழுக்கவியலில் முதன்மை பெறுவது மருத்துவ ஒழுக்கவியலாகும். மருத்துவ ஒழுக்கவியல் என்றால் என்ன எனவும், மருத்துவ ஒழுக்க மீறுகைகள் என நாம் கருதும் சந்தர்ப்பங்களாக,

மருத்துவத்துடன் தொடர்புடைய ஒழுக்க பெறுமானங்களையும், தீர்ப்புக்களையும் ஆய்வு செய்யும் ஒரு பிரிவே மருத்துவ ஒழுக்கவியல் ஆகும். மருத்துவ ஒழுக்கவியல் பிரயோக ஒழுக்கவியலில் ஒரு பிரிவாக அமைந்த போதும் அது உயிரியல், தொழில்நுட்பவியல், விஞ்ஞான மெய்யியல், சமூகவியல் போன்ற பாடப்பரப்புக்களுடன் தொடர்புடையது. அனேகமான மருத்துவர்கள் நோயாளிக்கு சிகிச்சை வழங்குவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளனர். மருத்துவத்தையும் அது சார்ந்த தொழிலையும் மையப்படுத்தி வளர்ந்து

வரும் சமூக, ஒழுக்க, மெய்யியல் பிரச்சினைகளில் அக்கறை அற்றவர்களாகவே இருக்கின்றனர். உண்மையில் இவற்றில் அக்கறையும் ஈடுபாடும் உள்ள ஒரு மருத்துவரால் மட்டுமே ஒழுக்க ஒழுக்க பெறுமானங்கள் மருத்துவத்தில் மையமாக உள்ளது என்பதை உணர முடியும்.

மருத்துவ பணியாளர்கள் தாங்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க பிரமாணங்களுக்கு உட்பட்டு நோயாளர்களிடம் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள் சுமூகமாக அமைந்தால் ஒழுக்க சிக்கல்கள் ஏற்படாது. அங்கு முரண்பாடு தோன்றுமானால் அவ்விடத்தில் தான் மருத்துவர்கள் ஒழுக்க பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். அத்தோடு நினைவுக்கெட்டாத காலமுதலே வைத்திய தொழிலுக்கு சில ஒழுக்க பிரமாணங்கள் இருந்து வருகின்றன. வைத்தியர்களின் கடமைகளையும், அவர்களின் தொழில் ரீதியான கட்டுப்பாடுகளையும் ஒழுக்க அடிப்படையில் வற்புறுத்துவதாக மருத்துவ ஒழுக்க பிரமாணங்கள் விளங்குகின்றன. அவ்வாறான ஒழுக்க பிரமாணங்களாக,

- பபிலோனியாவின் ஹமுறாபிக் பிரமாணம்.
- ஹிப்போக்ரட்டிஸின் சத்திய பிரமாணம். (கி.மு 4ம் நூற்றாண்டு)
- ஜெனிவா உடன்படிக்கை சாசனம். (1949)
- சர்வதேச தாதியர் சங்கம் (1953)
- அமெரிக்க மருத்துவ சபை

இவை போன்ற பல பிரமாணக் கோவைகள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் வைத்தியத் தொழிலிலுள்ளோர் பின்பற்ற வேண்டிய மிக உயர்வான ஒழுக்க விதித் தொகுப்புக்களைக் கொண்டுள்ளது எனக் கூறலாம்.

தனது தொழிற் கடமைகளில் உயர்ந்த ஒழுக்க பெறுமானங்களை கடைப்பிடிப்பவனே நல்ல வைத்தியன் ஆவான். என வைத்திய ஒழுக்கவியல் பிரமாணங்கள் கூறுகின்றன. தொழிலில் உயர்ந்த தேர்ச்சியும், சமூகம் எதிர்ப்பாரக்கும் ஒழுக்க பெறுமானங்களும் ஒன்றினைவதன் மூலமே நல்ல வைத்தியன் என்ற கருத்து முழுமை பெறுகிறது.

வைத்தியர்கள் அதிகப்பட்சக் கவனத்துடனும், நீதியுடனும், மனித நேயத்துடனும், நடந்துக்கொள்ள வேண்டுமென சமூகம் எதிர்ப்பார்க்கின்றது. பண்டைய பபிலோனியா இன்று வரை எழுந்துள்ள வைத்திய ஒழுக்கவியற் சட்டக்கோவைகள் இவற்றையே தெளிவாக கூறுகின்றன.

**ஹிப்போக்ரட்டிஸின் சத்திய பிரமானத்தை சுருக்கமாக நோக்கினால்,**

> “சுகத்தை வழங்கும் அப்பலோ, ஹைஜியா மற்றும் கடவுள்கள், பெண் கடவுள்கள் சாட்சியாக நான் சத்தியப் பிரமாணம் செய்கின்றேன். நான் எனது ஆற்றலுக்கும் நீதிக்கும் ஏற்றவாறு இந்த சத்திய பிரமாணத்தையும் உடன்படிக்கையையும் நிறைவேற்றுவேன். இக்கலையைக் கற்றுத் தந்தவரை எனது பெற்றோருக்கு சமமாக

மதிப்பேன். அவருக்கு பணத்தேவை ஏற்ப்பட்டால் எனது பாகத்திலிருந்து அவருக்கு கொடுப்பேன். அவரது பிள்ளைகளை எனது சகோதரர்களுக்குச் சமமாக மதிப்பேன் நோயாளியின் நலனுக்காக பத்திய அளவுகளை எனது ஆற்றலுக்கும் தீர்மானத்துக்கும் ஏற்றவகையில் பிரயோகிப்பதோடு தீங்கிலிருந்தும் அநீதிகளிருந்தும் அகற்றுவேன் மரணத்தை ஏற்ப்படுத்தக் கூடிய விஷமருந்துகளை அவர்கள் விரும்பினாலும் அவர்களுக்குக் கொடுக்கவோ அல்லது அதற்கு ஆலோசனை வழங்கவோ மாட்டேன். ஒரு பெண்ணுக்குக் கருச்சிதைவைச் செய்யமாட்டேன் தூய்மையானகவும் புனிதமாகவும் என்னையும் எனது தொழிலையும் காப்பேன் நான் எந்த வீட்டிற்குச் சென்றாலும் நோயாளியின் நலனே எனது நோக்கம் நீதியற்ற மற்றும் தீய செயகளிலிருந்து தவிர்த்துக் கொள்வேன். குறிப்பாக ஆண் மீதோ அல்லது பெண் மீதோ, அவர்கள் சுதந்திரமானவர்களாயினும் அடிமைகளாளயினும் பாலியல் உறவுகளில் ஈடுபட மாட்டேன் சிகிச்சை செய்யும் காலத்தில் ஒருவரின் வாழ்வில் நான் கேட்ட, அல்லது பார்த்த விடயங்களை வெளியிட மாட்டேன்.''

இவற்றினை மீறும்போது மருத்துவத்தில் ஒழுக்க மீறுகள் ஏற்படுகின்றன.

மேலும் மருத்துவர்கள் புதிய நோய்களை தோற்றுவிக்கின்றார்கள் என்ற கருத்தும் மருத்துவ ஒழுக்க மீறலில் காணப்படுகின்றது. இன்று பயன்பாட்டில் உள்ள மருந்துகள் உணவோடு சேரும்போது நஞ்சாக மாறுகிறது. மருத்துவர்களிடம் காணப்படும் கருணையின்மையும், கவனக்குறைவும், திறமையீனமும் புதிய நோய்களை தோற்றுவிக்கின்றன. பொருளாதார நிலையை வைத்தும் சில வைத்தியர்கள் புதிய நோயை தோற்றுவிக்கின்றனர். இது பிரயோக ஒழுக்கவியலில் காணப்படும் பாரிய ஒழுக்க மீறலாகும்.

அத்தோடு மருத்துவர்கள் ஞாபக மறதியினால், தனது சொந்த விருப்புவெறுப்பினால் மருந்தை மாற்றி எழுதுதல், குணம் குறிகளை வைத்து தவறாக நோய்களை இனங்கண்டு சிகிச்சை வழங்குதல், நோயாளிகள் பொய் கூறுவதால் தவறான மருந்துகள் வழங்குதல், கையெழுத்து தெளிவின்மை போன்ற மருத்துவ தவறுகள் ஏற்படும்போது மருத்துவத்தில் ஒழுக்க மீறுகள் ஏற்படுகின்றன.

மேலும் தாதியர்கள் மருத்துவர்களுக்கு சிகிச்சை முறைகளை அமுல்படுத்தல், நோயாளி விடயத்தில் தீர்மானமெடுக்கும் அரிதான வாய்ப்பு, மருத்துவர்களின் நேரடித் துணையாட்களாக தொழிற்படல் போன்ற பணிகளைச் செய்யும் போது ஓரளவு அதிகாரத்தை பெறுகின்றனர். இவ்வதிகாரத்தை வேண்டுமென்றோ அல்லது அறியாமலோ துஸ்பிரயோகம் செய்யும்போது ஒழுக்க மீறல்கள் நடைபெறுகின்றன. பொருந்தாத வேளையில் பொருந்தாத மருந்து வழங்குதல், காலத்தாமதமாக செயற்படுதல், மனதை புண்படுத்தும் வார்த்தைப் பிரயோகம் போன்றவை மருத்துவத்தில் பலத்த ஒழுக்க மீறலாக உள்ளது.

**பரிசோதனைக் குழாய் குழந்தை முறை.**

இன்று திருமணமானவர்களுக்கு குழந்தை பேரில்லாதது முக்கிய பிரச்சினையாக உள்ளது. போதிய வைத்திய பரிசோதனைகளை, சிகிச்சைகளை மேற்கொண்ட பின்னர் தம்பதிகள்

இன்று நடைமுறை தீர்வு என்று எடுக்கும் தீர்மானம் பரிசோதனைக் குழாய் குழந்தை முறையாகும்.

இதில் இரண்டு முறைகள் உண்டு.

i. கணவனின் விந்தை மனைவிக்கு செயற்கை முறையில் கொடுத்தல். **(A.I.H)**
ii. நன்கொடையாளருடைய விந்தை செயற்கை முறையில் மனைவிக்கு வழங்குதல். **(A.I.D)**

A.I.H முறையை விட அதிக பிரச்சினையை தருவது A.I.D ஆகும். செயற்கை கிசு மகற்பேற்றிற்கு ஒரு தீர்வாக இருந்தாலும் அது பல ஒழுக்கவியல் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது. அதாவது நன்கொடையாளருடைய விந்தின் மூலம் மனைவி பிள்ளைப் பெற்றுக்கொள்ளும் போது தந்தை குழந்தையின் உயிரியல் தந்தை என்ற தகுதியை இழக்கின்றார். சமூகத்தந்தை (வளர்ப்பு தந்தை) மட்டுமே இங்கு தந்தை பிள்ளை உறவில் பாதிப்பு ஏற்படுகின்றது.

அதே நேரம் தாய் விடயத்திலும் இவ்வாறான பிரச்சினை எழுகிறது. கணவனின் விந்து செலுத்தப்பட்டாலும் குழந்தையை பெற்றெடுப்பவள் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மற்றொரு பெண்ணாகும். இங்கு தந்தை உயிரியல் தந்தையாகவும், சமூகத் தந்தையாகவும் விளங்குகிறார். ஆனால் குழந்தையின் தாய் உயிரியல் தாய் அல்ல. சமூகத் தாய் (வளர்ப்புத் தாய்) மட்டுமே. இங்கு தாய்மை இரு கூறாக்கப்படுகின்றது. குழந்தையின் தாய் பெற்றெடுத்தவளா? அதாவது உயிரியல் தாயா? அல்லது குழந்தையை வளர்த்து வரும் சமூகத் தாயா? என கேள்வி எழுப்பப்பட்டு குடும்ப அமைப்பிற்கு சவாலாகவும், சொத்துரிமையிலும், தாய் தந்தை மரபிலும், பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே குழாய் குழந்தை முறை மருத்துவத்தில் உள்ள ஒரு ஒழுக்க பிரச்சினையாகும்.

**கருச்சிதைவு**

கரு வளர்ச்சி பெற்று இயற்கையாக தாயிலிருந்து வெளிவரும் முன்னர் அதை கரு நிலையில் திட்டமிட்டு அழித்தல் கருச்சிதைவு எனப்படும். கருச்சிதைவு,

i. சிசுவை கொலை செய்தல்
ii. பெண்களின் உரிமை

என்ற இரு பிரச்சினைகளை மையமாக கொண்டு விவாதிக்கப்படுகின்றது.

மனித கர்ப்பசிசு பாதுகாக்கப்பட வேண்டும். என வைத்தியதொழில் ஒழுக்க பிரமாணங்கள் வற்புறுத்துகின்றன. **ஹிப்போக்ரடிஸ்** சத்திய பிரமாணத்திலும் கருச்சிதைவு செய்யமாட்டேன் என குறிப்பிடுகின்றார். கருச்சிதைவு அடிப்படையில் மனித உரிமை பிரச்சினையாகும். மனிதனுக்குள்ள வாழும் உரிமை கர்ப்பசிசுவுக்கும் இருக்க வேண்டும். எனவே மருத்துவத்தில் உள்ள கருச்சிதைவு ஒரு உயிர் கொலையாக கருதப்படுகின்றது. அதே நேரம் ‘‘தாயின் கருவறையில் மறைந்திருக்கும் குழந்தையை அழிப்பது கொடிய பாவமாகும். ஏன்று கிறிஸ்தவ சமய ஞானியர் கூறுகின்றனர். அத்தோடு ‘‘கரு’’ மனித உரிமை பிரச்சினை மட்டுமல்ல அது

சமூக அரசியல் பிரச்சினையுமாகும். ஆகவே கருச்சிதைவு மருத்துவத்தில உள்ள ஒழுக்க பிரச்சினையாக கொள்ளப்படுகின்றது.

**சுகமரணம்**

வைத்தியதுறை முன்னேற்றத்தினால் தொழில்நுட்ப தீர்மானங்களை எடுப்பது இலகுவாயுள்ளது. எனினும் இதன் விளைவாக ஒழுக்க பிரச்சினைகள் மேலும் சிக்கலடைகின்றன. சுகமரணம் என்பது தாங்க முடியாத நோயினால் அவதிப்படுவோரை செயற்கை முறையில் நோவின்றி மரணமடையச் செய்வது ஆகும். சுகமரணத்தின் நோக்கம் துன்பத்தை முடித்து வைப்பதாகும். இதனைக் **"கருணைக் கொலை"** எனவும் கூறலாம். நோயாளி தனது உயிரை முடித்து விடுமாறு வைத்தியரை கோரலாம். ஆனால் வைத்தியர் அவ்வாறு செய்வது நீண்ட கால ஒழுக்க பிரச்சினையாக உள்ளது. **ஹிப்போக்ரடிஸின்** சத்திய பிரமாணமும் நோயாளி விரும்பினாலும் வைத்தியர் மரணத்தை ஏற்படுத்த இணங்க கூடாது எனக் கூறுகிறது.

சுகமரணத்தில் இரண்டு வகை உண்டு

i. **மரணத்தை செயற்கையாக ஏற்படுத்துதல்.**
ii. **இறக்கவிடுதல்.**

எனினும் மருத்துவ துறையில் உயிரை வாழ வைப்பதும், மரணத்தை முடிந்தவரை தாமதப்படுத்துவதும் அல்லது தள்ளிப்போடுவதும் வைத்திய சாஸ்திரத்தின் குறிக்கோளாகும். எனவே வைத்திய துறையில் ஏற்படுத்தும் சுகமரணமானது பாரிய ஒழுக்க மீறலாக விளங்குகிறது.

பிரத்தியேக இலாபம் கருதி வைத்தியர் ஒருவர் நோயாளியின் மீது காட்டும் அக்கறை சமகாலத்தில் எழுந்துள்ள தீவிர ஒழுக்க மீறலாகும். அத்தோடு சுயாதீனமாக நோயாளியை இறக்க விடாது கருவிகளின் துணைக்கொண்டு அதனை நீடிக்க செய்வது ஒழுக்க ரீதியான பிரச்சினையாக உள்ளது. மேலும் நோயாளியின் நோய் பற்றிய உண்மை நிலையினை வைத்தியர் நோயாளிக்கு கூறுவதா? இல்லையா? ஏன்பதும் கூட ஒழுக்க ரீதியில் பிரச்சினைக்குரியதொன்றாகும்.

**ரஞ்சன் பிரியங்கா தர்ஷினி**
**நான்காம் வருடம் இரண்டாம் அரையாண்டு**
**மெய்யியல் சிறப்பு (2018 / 2019)**

## *7. மரணதண்டனை ஒரு வரலாற்று நோக்கு*

ஒழுக்க மெய்யியலில் விவாதிக்கப்படும் விடயங்களில் ஒன்றாக குற்றமும் தண்டனையும் என்ற எண்ணக்கரு காணப்படுகின்றது. குற்றம் எனப்படுவது crime என அழைக்கப்படுகின்றது. crime என்பது krima என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது ஆகும். சமூக முறைகளுக்கு எதிரான செயல்களை குறிப்பதற்கு இச் சொல் பயன்படுத்தப்பட்டது. மனித விருப்பு வெறுப்புகள் அங்கீகரிக்கப்படுவதனூடாகச் சமூகத்தில் சட்டங்கள் தோற்றம் பெற்றன. சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையில் நீண்ட தொடர்பு காணப்படுகிறது. இந்த சட்டத்தினுடைய தோற்றங்கள் சம்பிரதாயத்தோடும், தேசவழமையோடும் தொடர்புபட்டதாகும். சட்டங்களை மீறுகின்ற போது சமூக ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்கு தண்டனை என்பது அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இத்தகைய தண்டனைகளில் மரணதண்டனை மிகவும் கொடுமையான தண்டனையாகக் காணப்படுகின்றது. தண்டனைக்குப் பரிசாக மரணத்தைக் கொடுப்பது என்பதே இதுவாகும். மரணதண்டனை என்பது ஒரு அதிகார நிறுவனம் தனது நடவடிக்கைகள் ஊடாக மனிதர் ஒருவரின் உயிர் வாழ்வைப் பறிக்கும் தண்டனையாகும்.

மரணதண்டனை என்பது அன்றும், இன்றும் உலகெங்கும் விரிவாக விவாதிக்கப்படும் ஒரு முக்கியமான சட்ட மற்றும் சமூக பிரச்சினையாகும். மரணதண்டனையின் வரலாறு மனித நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே ஆரம்பமான ஒன்றாகக் காணப்படுகிறது. பல்வேறு பழங்கால அரசுகளும், சமூகங்களும் சமூக ஒழுங்கு, நீதி ஆகியவற்றை நிலைநாட்ட முக்கிய வழியாகக் கருதி தண்டனைகளை அறிமுகப்படுத்தினார்கள். இத்தகைய தண்டனைகள் மரண தண்டனையினை அடிப்படையாகக் கொண்டு தொடங்கின. மரணதண்டனை மனித குலத்தின் மிகப் பழமையான தண்டனை முறைகளில் ஒன்றாகும். அந்தவகையில் மரணதண்டனையின் வரலாற்றுரீதியான வளர்ச்சியை விரிவாக நோக்கலாம்.

பண்டைய காலத்தில் ரோமா, எகிப்து, பாபிலோனியம் மற்றும் சீனா போன்ற மன்னராட்சிகள் சட்ட ஒழுங்கு மற்றும் அரச அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மரண தண்டனையை பயன்படுத்தினார்கள். கிரேக்கர் மற்றும் ரோம நாகரிகங்கள் மரணதண்டனையை மனித குல வரலாற்றில் முக்கியமான ஒரு கட்டமாகக் கொண்டிருந்தன. ரோமன் பேரரசு மற்றும் பண்டைய கிரேக்கம் போன்ற நாடுகளில் அரசியல் துரோகிகள், கொலைகாரர்கள் மற்றும் சமூகவிரோத செயலில் ஈடுபட்டவர்களுக்குக் கல்லெறி, தூக்கு, தலை வெட்டுதல் போன்ற கொடூரமான மரண தண்டனைகள் வழங்கப்பட்டன. கிரேக்கதத்துவவாதியான சோக்கிரட்டீஸ் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். சோக்கிரட்டீசின் மரணம் அரசின் கட்டுப்பாட்டில் கருத்து சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டதற்கான முன்னுதாரணமாகவே பார்க்கப்படுகிறது. இதே போல ரோமரின் சிலுவையில் அறையுதல் போன்ற தண்டனைகள், குற்றவாளிகளை கடுமையாக தண்டிக்கும் வழிமுறையாக இருந்தது. ரோமர்கள், கொடிய முறைமைகளின் மூலம் குற்றவாளிகளுக்கு அச்சம் ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து மத்தியகாலத்தில் இதன் செல்வாக்கைப் பார்த்தால் மரணதண்டனை மத்தியகாலத்திலும் மிகப் பெரிய பங்கு வகித்தது. குறிப்பாக ஐரோப்பாவில் மரண தண்டனை மத மற்றும் அரசியல் கட்டுப்பாட்டின் பிரதான சாதனமாக இருந்தது. புனித விசாரணைகள் (Inquisitions) 12ஆம் நூற்றாண்டில் ஆரம்பமானது. இது குறிப்பாக கத்தோலிக்க தேவாலயத்தின் அதிகாரத்தை எதிர்த்த மத துரோகிகளுக்கு கடுமையான தண்டனையாக மரண தண்டனை வழங்கப்பட்டது. அதன் மேல் இக்காலகட்டங்களில் அரசர்கள் தங்கள் ஆட்சியை நிலைநாட்ட மரண தண்டனையை உபயோகித்தனர். கெங்கிஸ் கான் போன்ற பேரரசர்களின் ஆட்சியில், மரணதண்டனை சமூக கட்டுப்பாட்டிற்கான ஒரு பயங்கரமான கருவியாக பயன்படுத்தப்பட்டது. குற்றவாளிகள் மட்டும் அல்லாமல், எதிர்க்கட்சிகள், அரச துரோகிகள் எனச் சிறிய குற்றங்களுக்கும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. இது அச்சத்தை உருவாக்குவதற்கான வழியாக கருதப்பட்டது.

ஐரோப்பாவில் கிறிஸ்தவ நாடுகளில் அரசியல் துரோகம், மத நம்பிக்கையை மீறுதல், போராட்டங்கள் போன்றவற்றுக்காக கடுமையான மரண தண்டனைகள் வழங்கப்பட்டன. அப்போதைய யூத கிறிஸ்தவ நம்பிக்கைகள் மற்றும் சட்ட அமைப்புகள், 'முன்னோர் சாசனங்கள்' மற்றும் 'பைபிள்' போன்ற மதநூல்கள் என்பன மரணதண்டனையை ஆதரித்தன. 16ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ராணி எலிசபெத் காலத்தில் அரசுக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இந்த காலத்தில் மரணதண்டனை சமூக ஒழுக்கத்தையும் அரச அதிகாரத்தின் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்த ஒரு உபகரணமாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து 18ம் நூற்றாண்டில் மரணதண்டனையின் வளர்ச்சிப் போக்கை நோக்குவோமேயானால் பிரெஞ்சு புரட்சி ஏற்பட்ட காலத்தின் போதும் (1789-1799) மரணதண்டனை மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. அதிபர் ரோபிஸ்பியர் தலைமையில், அரச எதிர்ப்பாளர்கள், அரசியல் மாறுபட்டவர்கள் போன்றவர்களுக்கு கில்லோட்டின் (guillotine) எனும் கருவியால் தலை வெட்டப்பட்டது. இது பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்டது. இது ஒரு அரசியல் பூர்வமான தண்டனையாக மாற்றப்பட்டு, அரசியல் விரோதங்களை அடக்க ஒரு கருவியாக மாற்றப்பட்டது. இதேபோல் அமெரிக்கப் புரட்சியின் (1775-1783) போது மக்கள் அரசின் சட்டங்களை மீறிய குற்றங்களுக்காக அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. இந்த நேரத்தில் மரணதண்டனையின் அரசியல் நோக்கம் வெளிப்படையாகக் காணப்பட்டது.

18-ஆம் நூற்றாண்டின் கடைசியில் Cesare Beccaria என்ற புகழ்பெற்ற சிந்தனையாளர் தனது 'On Crimes and Punishments' (1764) எனும் நூலில், மரண தண்டனையை கடுமையாக விமர்சித்தார். அவர் மரணதண்டனை ஒரு பயனற்ற மற்றும் கொடூரமான தண்டனை என்றும், அதை மனித உரிமைகளுக்கு எதிரானது என்றும் கூறினார். மற்றும் Beccaria மரண தண்டனையை முற்றிலும் நீக்க வேண்டும் என்பதற்கான வலியுறுத்தல்கள் முன்வைத்தார். அவர் கூறிய விடயங்கள் ஐரோப்பிய நாடுகளின் சட்ட அமைப்புகளில் பெரும் தாக்கம் ஏற்படுத்தின. முதன் முதலில் பதிவான மரண தண்டனை முறைமைகள் கிமு 18ஆம்

நூற்றாண்டில் மேசொப்பொத்தாமியாவின் ஹம்முராபி சட்டத் தொகுப்பில் காணப்படுகின்றன. பண்டைய சட்டங்களில் குறிப்பாக ஹமுராபி சட்டம் மரண தண்டனைக்கான சட்டப்படி அடித்தளம் அமைத்துக் கொடுத்த சட்டமாகக் காணப்பட்டது. இதில் பல்லுக்கு பல் என்ற கொள்கை வழிநடத்தப்பட்டது. இந்த காலத்தில், மரணதண்டனை சமூகத்தில் பயம், சட்ட ஒழுங்கை நிலைநிறுத்தும் கருவியாக இருந்தது.

இதனைத் தொடந்து 19ம் நூற்றாண்டில் இதன் வளர்ச்சிப் போக்கை பார்த்தால் 19-ஆம் நூற்றாண்டில், உலகம் முழுவதும் மனித உரிமைகள் குறித்த புரிதல் பெருமளவில் வளர்ந்தது. ஐரோப்பிய நாடுகள் மரணதண்டனையை நவீன யுகத்திற்கு ஏற்ப மாற்றம் செய்ய தொடங்கின. பிரித்தானியா 1800 களில் பல்வேறு குற்றங்களுக்கான மரண தண்டனை வழங்கும் முறையை நீக்கியது. 1861ல் இது கொலை மற்றும் மிகக்கடுமையான குற்றங்களுக்கு மட்டும் மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. இதேபோல் அமெரிக்காவில் சில மாநிலங்கள் மரண தண்டனையை முழுமையாக நீக்கவும் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தவும் தொடங்கின. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் மரண தண்டனை பற்றிய சீர்திருத்தங்களைப் பற்றிய சிந்தனைகள் விருத்தியடைந்தன. அமெரிக்காவில், பென்சில்வேனியா 1794ஆம் ஆண்டு, கொலை தவிர்ந்த குற்றங்களுக்கு மரண தண்டனையை நீக்கிய முதல் மாநிலமாக மாறியது. அவ்வாறே, குயாக்கர் (Quaker) சமூகத்தின் ஆதரவில் மரண தண்டனை குறித்த கருத்துக்கள் சீர்திருத்தமடைந்தன. இவர்களின் அடிப்படைக் கருத்துக்களில் மனிதனை திருத்துவது அவசியம் என்றும் கருணை காட்ட வேண்டும் என்றும் இருந்தது. இதனால் மரண தண்டனை மெல்ல மெல்ல குறைவுபட்டது.

19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் 200க்கும் மேற்பட்ட குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது, ஆனால் இக்காலத்திற்குப் பிறகு மக்கள் எதிர்ப்புகள் அதிகரித்தன. பிரிட்டன் 1965ஆம் ஆண்டு பொதுவான குற்றங்களுக்கு மரண தண்டனையை ரத்து செய்தது. 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் மரணதண்டனை தொடர்பான முக்கியமான மாற்றங்களின் காலமாக இருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு (1945) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declaration of Human Rights) 1948ல் உருவாக்கப்பட்டது. இதில், ”வாழ்வதற்கான உரிமை” மனிதர்களுக்கு அடிப்படை உரிமையாகக் குறிப்பிடப்பட்டது. இதனால், பல நாடுகள், குறிப்பாக ஐரோப்பிய நாடுகள், மரணதண்டனையை முற்றிலுமாக நீக்கின. இதன் விளைவாக, மரணதண்டனை தொடர்பான சர்ச்சைகள் ஆதிகரித்தன 20ஆம் நூற்றாண்டின் முதன்மை அம்சமாக, மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு மிகுந்த அளவில் அதிகரித்தது. மகாத்மா காந்தி, மார்டின் லூதர் கிங் போன்ற ஆளுமையாளர்கள் அஹிம்சை மற்றும் மனித நேயம் அடிப்படையில் மரண தண்டனைக்கு எதிராக குரல் கொடுத்தனர். மரண தண்டனை தொடர்பான கருத்துக்கள் ஐரோப்பாவில் பெரும்பாலும் எதிர்ப்பு பெற்றன. ஐரோப்பிய ஒன்றியத்தில் 1983ஆம் ஆண்டில் மரண தண்டனையை முற்றிலுமாக ரத்து செய்யும் சட்டம் அமலுக்கு வந்தது. இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் மற்ற உலக நாடுகளுக்கு முன்னோடியாக இருந்தன.

20ஆம் நூற்றாண்டில் மரண தண்டனை அநேகமான கருத்துக்களை எழுப்பியது, குறிப்பாக அமெரிக்காவில் 1972ஆம் ஆண்டில், அமெரிக்க உச்ச நீதிமன்றம் Furman v.Georgia என்ற வழக்கில் மரண தண்டனை செயல் முறையில் அரசியலமைப்புக்கு முரண்படுகிறது என்று தீர்ப்பு அளித்தது. பின்னர், 1976ஆம் ஆண்டு Gregg v. Georgia வழக்கில் சில மாநிலங்களில் புதிய நடைமுறைகளுடன் மரண தண்டனை மீண்டும் அமல்படுத்தப்பட்டது. மரணதண்டனை என்பது மனித சமூகம் மற்றும் சட்டமுறை உள்பட பல பரிணாமங்களில் செல்வாக்கான மற்றும் விவாதத்திற்குரிய ஒரு அம்சமாகவே உள்ளன. இதனுடைய வரலாறு பல்வேறு கலாச்சாரங்கள், சமூகங்கள் மற்றும் அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் மாறுபட்டுள்ளது. இருப்பினும் இன்றும் சில நாடுகளில் கொடுமையான பல குற்றங்களிற்கு மரணதண்டனை வழங்கப்படும் நிலை காணப்படுகின்றது.


**தனுஜிகா குணதீஸ்வரன்**

**நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு**

(2018/2019)

## *8. உளவியலும் கல்வி உளவியலும்*

**உளவியல் என்பது மனிதன் மற்றும் அவன் சுற்றியுள்ள சமூகத்தின் மனநிலை மற்றும் பண்புகளைக் குறிக்கும் அறிவியல் துறையாகும்.** இது அறிவியல் முறையில் மனிதர்களின் சிந்தனை, உணர்ச்சி, செயல் மற்றும் சமூக உறவுகளைக் குறித்து பேசுகின்றது. உளவியலானது மருத்துவம், கல்வி, சமூக பணிகள், தொழில்முறை மேம்பாடு மற்றும் மனோதத்துவம் என அனைத்து துறைகளிலும் அந்த துறைக்கு நன்மை செய்வதாக அமைந்துள்ளது. கல்வி என்பது ஒரு சமூகத்தின் பொது அறிவு மற்றும் பண்புகளைக் கொண்டு முறையாக பயிற்சி அளிப்பதன் மூலம் அதன் அங்கத்தவர்களை மேம்படுத்தும் செயலாகும். இந்தச் செயலின் மையத்திலும் மனிதன் மற்றும் அவனது மனநிலையைப் புரிந்து கொள்வது முக்கியமாகும். இந்நிலையில் உளவியல் துறையின் மேன்மையான பயன்பாடுகள் கல்வி துறையிலும் அவசியமாகின்றன. அந்த அடிப்படையில் உளவியலில் கல்வி உளவியல் முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

கல்வி உளவியல் என்பது உளவியல் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை கல்வி நிலையங்களில் பயன்படுத்துவதற்கான துறை ஆகும். இது மாணவர்களின் கற்றல் மற்றும் வளர்ச்சி செயற்பாடுகளை உளவியல் கோணத்தில் ஆராய்ந்து கல்வி அடிப்படையில் செயல் திட்டங்களை வடிவமைக்க உதவுகிறது. இந்த துறை உளவியலை கல்வியில் அடிப்படை கருவியாக பயன்படுத்தி மாணவர்களின் அறிவை, கருத்துக்களை மற்றும் சமூக பண்புகளை வளர்க்கும் வழிமுறைகளைக் கையாள்கின்றது. மாணவர்களின் மனதின் செயற்பாடுகள், உணர்ச்சிகள், மனநிலைகள் மற்றும் உளவியல் அம்சங்களின் விளைவுகளை கருத்தில் கொண்டு கல்வி உளவியல் கல்வி முறைகளில் மாறுபாடுகளை உருவாக்குகின்றது.

அண்மைக்காலம் வரை கல்வியுலகில் ஆராய்ச்சிகள் கற்போனைக் பற்றியும் கற்றலைப் பற்றியும் பெருமளவு மேற்கொள்ளப்பட்டன. இன்று கற்பித்தல் செயல் பற்றிய பல விளக்கங்கள் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன. Buroonar, Kaakni, Bloom Plandars போன்றோரது கருத்துக்கள் இதற்குச் சான்றுகளாகும். கல்வியில் வகுப்பறைச் சூழ்நிலையின் முக்கியத்துவம், ஆசிரிய மாணவர் இடைவினையின் தன்மை, கற்பித்தலில் இலக்குகளின் வழி கற்றல் அனுபவங்களை அமைத்தல் மற்றும் கற்பித்தலில் அடங்கும் தனித்திறன்களை வரிசைப்படுத்தி இவற்றில் தேர்ச்சி பெற நுண்கலைக் கற்பித்தல் பயிற்சியளித்தல் போன்றன யாவும் இப் புதுப்போக்கினைத் தெளிவுபடுத்துவனவாகும். கற்பித்தலை ஆராய்ந்து அதன்தன்மையை விவரிக்கும் மாதிரி அமைப்புக்களை Glesar, Sdoluro போன்றோர் தந்துள்ளனர். கிளேசரது அமைப்பில் கற்பித்தலில் இணைபகுதிகளாக இலக்குகள், மாணவர்களது நடத்தை, கற்பித்தல் முறைகள், மதிப்பீடு ஆகியன குறிப்பிடப்படுகின்றன. இந்த வகையில் கற்றல், கற்பித்தல், கற்போன், ஆசிரியர் போன்ற எக்கோணத்தினின்றும் கல்விச் செயலினை ஆராய்ந்தாலும் நம் ஆராய்ச்சியின் மையப் பகுதியாகக் கல்வி உளவியல் இருக்கும் என்பதாகும்.

கல்வி உளவியல் நம்மை சுற்றியுள்ள அனைத்து கல்வி அமைப்புகளின் முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. இது மாணவர்களின் குறைந்த மற்றும் மேம்பட்ட கற்றல் திறன்களைப் பெற்று சிந்தனை திறன்களை மேம்படுத்தவும், அவர்களின் உளவியல் தேவைகளை புரிந்துகொள்வதையும்,

தேவையான ஆதரவுகளை வழங்குவதையும் மேற்கொண்டு வருகின்றது. அதேசமயம் மாணவர்கள் எடுக்கும் முடிவுகளுக்கும், அவர்களுடைய அடிப்படைக் கருத்துக்களுக்கும், மனநிலைகளுக்கும் பொதுவாக சிறந்த தீர்வுகளையும் அளிக்கின்றது. கல்வி உளவியல் மாணவர்களின் உள்ளார்ந்த சிந்தனை மற்றும் மனவளர்ச்சி வளர்ச்சியை ஆராய்கின்றது. ஒவ்வொரு மாணவரின் மனநிலை, அவருடைய கற்றல் திறன், உணர்ச்சி நிலைகள், சமூக உறவுகள் மற்றும் அவருடைய தனித்துவம் கல்வி சூழலில் சிறந்த கற்றல் அனுபவத்தை வழங்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக ஒவ்வொரு மாணவரும் தனிப்பட்ட முறையில் கற்றுக்கொள்ளுகிறார். சில மாணவர்கள் சிறந்த நினைவக திறன்களுடன் இருக்கலாம். மற்றவர்கள் பார்வை மற்றும் செயற்பாட்டின் மூலமாக கற்றுக்கொள்வார்கள். உளவியல் கோணத்தில் இது ''சித்தாந்த ரீதியான கற்றல்'' என அழைக்கப்படுகிறது. இதன் மூலம் ஆசிரியர்கள் தனி மாணவர்களின் கற்றல் முறைகளை புரிந்துகொண்டு அவற்றை விரிவுபடுத்த முடியும்.

கல்வி உளவியலானது கற்றல் மற்றும் நினைவகக் கோட்பாடுகளை பயன்படுத்தி மாணவர்களின் சிந்தனை திறன்களை மேம்படுத்துகிறது. அத்துடன் மாணவர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை குறிப்பாக சமூக மற்றும் தனிப்பட்ட உளவியல் சிந்தனை முறைகளை விளக்குகின்றது. உதாரணமாக, இளைஞர்களுக்கான பிரச்சினை தீர்க்கும் திறன்களை மேம்படுத்தும் பயிற்சிகள், அவற்றின் முழுமையான திறன்களை பெருக்கும். இவை மாணவர்களுக்கான திறமைகள் மற்றும் அவர்களின் ஒத்திகைகளின் மூலம் மதிப்பிடப்பட்டு மேம்படுத்தப்படுகின்றன. இந்த முறைகள் சமூக மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைத் திறன்களை உருவாக்குகின்றன.

மாணவர்களின் மனநிலை மற்றும் அவர்களின் உளவியல் நிலைகளைப் புரிந்து கொள்வதன் மூலம் கல்வி உளவியல் ஆசிரியர்களுக்கு சரியான கற்றல் சூழலை உருவாக்க உதவுகிறது. இது மாணவர்களின் உளவியல் தேவைகளை கவனமாக பூர்த்தி செய்து அவர்களுக்கான அனுபவத்தை மேம்படுத்துகின்றது. மாணவர்கள் மிகவும் பாதுகாப்பான மற்றும் ஊக்கமளிக்கக் கூடிய சூழல்களில் கற்றுக் கொள்ள வேண்டும். இது அவர்களது சிந்தனைகளை விரிவுபடுத்தி கற்றலில் ஆர்வத்தை உருவாக்கும். கல்வி உளவியலின் மூலம் மாணவர்களின் உணர்ச்சி நிலைகள், மனநிலைகள் மற்றும் சமூக உறவுகள் ஆகியவை இந்த சூழல்களில் பாதிக்கப்படுகின்றன.

மாணவர்களின் சிந்தனைகள் மற்றும் செயல் முறைகள் சமூக மற்றும் கலாச்சார சூழலின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன. கல்வி உளவியல் இந்த அம்சங்களை மிகவும் முக்கியமாக கருதுகின்றது. குடும்ப அமைப்பு, சமூகப் பார்வைகள், கலாச்சார வழிமுறைகள் மற்றும் பரிமாணங்கள் ஆகியவை மாணவர்களின் மனநிலையை பாதிக்கின்றன. கல்வி உளவியலின் மூலம் மாணவர்கள் உள்ளடங்கியுள்ள சூழலை அடிப்படையாகக் கொண்ட சரியான கற்றல் முறைகள் உருவாக்கப்படுகின்றன. இது அவர்கள் ஒவ்வொரு சமூகத்தில் மற்றும் கலாச்சார சூழலில் சிறந்த முறையில் கற்றல் செய்து வளர தகுந்த வழிகாட்டுதல்களையும் தருகிறது.

இன்று உலகின் பல பகுதிகளில் மாணவர்கள் சிக்கலான கற்றல் தேவைகளை எதிர்கொள்கிறார்கள். குறிப்பாக ஆபத்தான சூழல்களில் வாழும் குழந்தைகள் இயலாமை மற்றும் அதிகமான மனஅழுத்தங்களை அனுபவிக்கும் மாணவர்கள் தனித்துவமான கற்றல் முறைகளின் அடிப்படையில் மேம்பாட்டை எதிர்நோக்கின்றனர். இவற்றுக்கு மாணவர்களின் உளவியல் தேவைகளை புரிந்து கொள்வதன் மூலம் அவர்களுக்கு தேவையான உதவிகளும் வழிகாட்டுதல்களும் வழங்க முடிகின்றன.

கல்வி உளவியலின் பல்வேறு உளவியல் கருவிகளின் மூலம் மாணவர்களின் திறன்களைக் கணக்கிட்டு சரியான கற்றல் முறைகள் உருவாக்கப்படுகின்றன.

கல்வி உளவியலானது ஆசிரியர்கள் மாணவர்களின் மனநிலை மற்றும் கற்றல் தேவைகளைப் புரிந்து கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அவர்களின் மனநிலையும், தன்னம்பிக்கையும், உணர்ச்சிகளும், அவர்கள் மாணவர்களுடன் நெருக்கமான உறவை உருவாக்க உதவுகின்றன. ஆசிரியர்களின் உளவியல் நிலைகள், அவர்களின் கல்வி முறைகளை வகுக்க மற்றும் கல்வி தொடர்புடைய சூழலை உருவாக்குவதில் மிகவும் முக்கியமானது. கல்வி உளவியலின் மூலம் ஆசிரியர்கள் மாணவர்களை அதிகமாக புரிந்துகொண்டு அவர்களது கற்றல் திறன்களை அதிகரிக்கும் வழிமுறைகளை வகுக்க முடிகின்றன.

மாணவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு உளவியல் திறன்கள், குறிப்பாக தரவுகள் மற்றும் மதிப்பீட்டுத்தந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை மாணவர்களின் உணர்ச்சிகளையும், அவர்களின் உளவியல் நிலைகளையும் கருத்தில் கொண்டு சரியான மற்றும் நேர்மையான மதிப்பீடுகளை வழங்குகின்றன.

உளவியல் அறிவும், அவற்றின் பயன்பாடுகளும், கல்வி அமைப்புகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் மூலம், கல்வி செயற்பாடுகள் மட்டுமின்றி அதன் ஆராய்ச்சி, முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி என்பவற்றின் பல்வேறு விடயங்களில் ஆய்வு செய்யப்படுகின்றது. கல்வி உளவியல், அதன் உட்பட மதிப்பீடுகள், உளவியல் கோட்பாடுகள் மற்றும் முறைமை மூலம், மாணவர்களின் சிந்தனைகளையும், சமூக நிலைகளையும், மனநிலைகளையும் புரிந்துகொள்வது அவசியமாக இருக்கின்றது. மாணவர்களின் சிறந்த கற்றல் மற்றும் வளர்ச்சி மேம்பாட்டிற்கான முக்கிய பங்கு கல்வி உளவியலின் வாயிலாக மட்டுமே வெற்றியடைய முடியும். இதனால் கல்வி உளவியலானது கல்வி அமைப்புகளை மேம்படுத்த புதிய கல்வி முறைகளை உருவாக்க மனநிலை மற்றும் உளவியல் பரிமாணங்களை அவ்வப்போது சரிபார்த்து மாணவர்களுக்கு சிறந்த கல்வி அனுபவத்தை வழங்க உதவுகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**ஸ்ரீவராஜா கோபிகா**

**நான்காம் வருடம் இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு**

**(2018/2019)**

## *9. சோக்கிரடீஸின் ஒழுக்கவியல் சிந்தனைகள்*

அறிய வேண்டும் என்ற மனிதனின் பேரவா தான் மெய்யியலின் தோற்றதிற்கு காரணமாக அமைந்தது. கால ஓட்டத்தில் நிகழ்ந்த சிந்தனை நிர்மாணங்கள் காரணமாக மெய்யியல் ஓர் ஒழுங்குமுறையான அறிவுமுறையாக வடிவம் பெற்றுள்ளது. ஆரம்பகாலத்தில் மெய்யியல் என்ற பெருவிருட்சத்தில் கிளைகளாக பௌதீக அதீதம், அறிவாராய்ச்சியல், அளவையியல், ஒழுக்கவியல் ஆகிய நான்கு பகுப்புக்கள் முதன்மைக்குரியதாகின்றன. அவ்வகையில் மனித நடத்தைக்கு அல்லது வாழ்க்கைக்கு அடிப்படையாக **ஒழுக்கம்** காணப்படுகின்றது. மனிதன் தன் வாழ்வை நெறிப்படுத்தி அதன் முழுப்பயனையும் அளவிட முனைகின்றான். அவ்வேளை அவன் எதனை நோக்கமாக கொள்ள வேண்டும், எந்த அளவிற்கு அவன் அதனை விரும்ப வேண்டும், எவ்வாறு அதனை அடைய முயற்சிக்க வேண்டும் என்பவற்றை முழுமையாக கூறுவதே ஒழுக்கவியல் கோட்பாடு ஆகும். ஒழுக்கவியல் கோட்பாடுகள் பிரச்சினைகளினையும், தீர்வுகளினையும் ஒழுங்கு அடிப்படையில் விளக்குகின்றது எனலாம். ஒழுக்கம் வாழ்க்கையின் ஆதாரங்களில் ஒன்று. மனிதன் பிறப்பு தொடக்கம் இறப்பு வரை ஒவ்வொரு படிமுறைகளிலும் ஒழுக்கம் முக்கியமானதொன்றாக பார்க்கப்படுகின்றது.

ஒழுக்கவியல் என்பது மனிதன் தினம் தினம் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு விடயமாகும். பிறருக்கு ஒழுக்கத்தினைப் பற்றி சொல்வதனை விடுத்து தன்னிடம் எந்தளவு ஒழுக்கம் இருக்கின்றது என்பதனை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். ‘‘பக்தி என்பது தனிச்சொத்து ஆனால் ஒழுக்கம் என்பது பொதுச்சொத்து’’ என கூறப்படுகின்றது. மனித வாழ்க்கையினை செம்மைப்படுத்தவும் மனித நாகரீகத்தினை வழிமொழிவதிலும் தத்துவஞானிகளின் பங்கு அளப்பரியது. வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் பல தத்துவ மேதைகள் உதித்து இருக்கின்றனர். இவர்களுள் தலையாயவராக போற்றப்படுபவர் மற்றும் தத்துவஞானிகளின் தந்தையாக போற்றப்படுபவரே சோக்கிரட்டீஸ் ஆவார். கிரேக்கத்தின் புகழை உலகறியச் செய்தார். கி.மு 469ல் பிறந்தார். சோக்கிரட்டீஸ் வாழ்க்கையினை பற்றி வித்தியாசமான முறையில் சிந்தித்துள்ளார். ‘‘வாழ்வின் உண்மைகளினை கண்டறிய வேண்டும்’’ என்ற அதீத தாகம் இவரிற்கு காணப்பட்டது. தான் அறிந்த உண்மைகளினை மக்களிற்கு சொல்ல வேண்டும் என நினைத்தார். அத்தோடு இவர் தனக்கு முன்னைய சிந்தனையாளர்கள் போல் இயற்கை உலகினை பிரதான ஆய்விற்குரிய விடயமாக நோக்காது ‘‘மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்றும் அதற்காக எவ்வாறான விடயங்களினைப் பின்பற்ற வேண்டும் என்றும் தன்னுடைய ஆய்வை முன்னெடுத்தார்.

கிரேக்க மெய்யியல் சிந்தனைகளில் ஸோபிஸ்டுகள் பிரவேசித்ததன் விளைவாக கிரேக்க தேசத்தின் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட விடயங்கள் ஒரு கலங்கலான நிலையில் பின்னடைவிற்குச் சென்றது. அவரவர் செய்யும் தொழில்களினைச் சரிவரச் செய்து கொள்ளத் தெரிந்திருப்பதே அக்காலத்தில் ஒழுக்கம் எனப்பட்டது. தொழில் சார்ந்த ஒன்றாகவே ஒழுக்கம் ஆரம்பகாலத்தில் பார்க்கப்பட்டது. உதாரணமாக எடுத்துக் கொண்டால் ஒரு இயந்திரவியலாளனின் ஒழுக்கமானது இயந்திரவியலை சரியாக தெரிந்து வைத்திருப்பதாகும்.

ஒரு வைத்தியரின் ஒழுக்கம் என்பது வைத்தியத்தை சரிவர தெரிந்திருப்பதோடு நோயாளியின் நோயை சரிவர குணப்படுத்துவதாகும்.

இவ்வகையில் கிரேக்க தேசத்தின் ஒழுக்கமானது ஸோபிஸ்டுகளினால் வளர்த்தெடுக்கப்பட்டது. மனிதனை ஓர் வெற்றிகரமான பிரஜையாக்குவது ஓர் ஒழுக்கவியலின் ஓர் முக்கிய பகுதியாகக் காணப்படுகின்றது. இவ் வகையில் ஸோபிஸ்டுகளின் காலத்தில் சீரான ஒழுக்கம் பரப்பப்படவில்லை எனவும் மேலும் நமக்கு எது நன்மையாகின்றதோ அதுவே ஒழுக்கம் என்ற கருத்து பரப்பப்பட்டிருந்தது. இதனை முற்றுமுழுதாக நிராகரித்து இருண்ட வானில் தோன்றிய ஒளிக்கீற்று போல் சோக்கிரட்டீஸ் பிரவேசமானார்.

சோக்கிரட்டீஸ் ஒழுக்கவியலுக்கு வரைவிலக்கணம் கூறுகின்றபோது **நன்மை, தீமை, சரி, பிழை ஆகியவைகளில் நன்மையை ஆராய்வதே ஒழுக்கம் என்றார்**. மேலும் மனித வாழ்க்கையினை பூரணத்துவம் ஆக்குவது எனக் கூறினார்.

ஒழுக்கமானது நன்மை, உண்மை, நீதி, அழகு என்பவற்றில் உள்ளடக்கி இருக்கின்றது. ஸோபிஸ்டுகள் கூறுவது போன்று அவரவர் செய்யும் தொழிலிற்கு ஏற்ப அல்லது விருப்பத்திற்கு ஏற்ப அமைந்தது அல்ல. பதங்கள் கூறுகின்ற ஒழுக்கமானது வெறும் கற்பனையானதே என்ற ஸோபிஸ்டுகள் கருத்து காணப்பட்டது. அறிவு நிலையினை அடிப்படையாகக் கொண்டே ஒழுக்கமானது தீர்மானிக்கப்பட வேண்டும் என கூறினார்.

சோக்கிரட்டீஸ் **ஒழுக்க மெய்யியலின் தந்தையாக** மதிக்கப்படுகின்றார். ஒழுக்க வாழ்வையும் நன்மை என்ற கருத்தையும் இவர் நிலைநிறுத்தியுள்ளார். மனித செயலின் நோக்கத்தின் அடிப்படையிலே அதன் ஒழுக்க நிலை தீர்மானிக்கப்படுகின்றது. சோக்கிரட்டீஸினது கருத்துக்கள் ஒழுக்கவியலுடனேயே ஆரம்பமாகின்றது. இவர் நல்லறிவே நல்ஒழுக்கம், நல் ஒழுக்கமே நல் அறிவு என குறிப்பிடுகின்றார். இவருடைய ஒழுக்கப் போதனைகள் அறிவாராய்ச்சியலுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஒழுக்க வாழ்வினையும் நன்மை என்ற கருத்தினையும் மனித செயற்பாடுகளின் நோக்கத்தின் அடிப்படையில் ஒழுக்க நிலை தீர்மானிக்கப்படுகின்றது.

சோக்கிரட்டீஸினது கருத்துப்படி அறிவு தான் ஒழுக்கம், ஒழுக்கம் தான் அறிவு என கூறினார். “உன்னையே நீ அறிவாய்” என்பது இவருடைய கருத்தாகும். மனிதன் இயல்பாகவே நல்லவன் எனக் கூறும் சோக்கிரட்டீஸ் மனிதன் பிறக்கின்றபோது தீயவனாகப் பிறப்பதில்லை. அவன் வளர்ச்சியடையும் போது அவனிடத்தில் தீமைகள் குடிகொள்கின்றன. இதனடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அறிந்து கொள்வதன் மூலமே நன்மையான நடத்தை எது, தீமையான நடத்தை எது என்பது தீர்மானிக்கப்படுகின்றது. பெரும்பான்மையானோர் ஒழுக்கம் சார்பாக இவ் கருத்தையே முன்வைக்கின்றனர்.

தவறு என்பது சந்தர்ப்ப சூழ்நிலையால் தான் மனிதன் தீயவன் ஆகின்றான். நல்ல மனிதர்களிடத்தே தான் நல்ல எண்ணங்கள் தோன்றும். நல்லெண்ணம் உடைய ஒருவரிடத்தில் தான் நல்லொழுக்கம் ஏற்படும். எனவே நல்ஒழுக்கத்தினை தோற்றுவிப்பதற்கு நல் அறிவே காரணமாகின்றது என சோக்கிரட்டீஸ் குறிப்பிட்டார். இவை அனைத்தினையும் நாம்

பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அறிவு தான் மேலோங்கி நிற்கும். இத்தகைய அறிவின் மூலமாகவே எல்லா வகை உண்மைகளினையும் அறியமுடியும். நல்லொழுக்கம் என்பது ஸோபிஸ்டுகள் கூறுவது போல் அவரவர் விருப்பத்திற்கு உரிய ஒன்றல்ல. தனிமனிதன் அறிவினால் நிராகரிக்கப்பட்டுள்ளான். புலன்கள் அவனை பல சந்தர்ப்பங்களிலே ஏமாற்றி விடுகின்றன. அறிவு என்பது நிச்சயத்தன்மையானது. மாறக்கூடியதல்ல. உண்மையான நிச்சயத்தன்மையான அறிவை பகுத்தறிவு சிந்தனை மூலமே பெறப்பட முடியும்.

மனிதரிடத்தில் சில விடயங்கள் தொடர்பான அபிப்பிராயங்களும், கருத்துக்களும் காணப்படுகின்றன. ஆனால் உண்மையான அறிவு என்பது பகுத்து ஆராயப்படுகின்றது. நல்ல முடிவுகளினை எடுப்பதற்கு, அறிவு தொடர்பான ஆய்வுகளினை ஆய்வு செய்த சோக்கிரட்டிஸ் பின்வருமாறு கூறுகின்றார். ''மனிதன் என்பவன் இயற்கையான ஓர் பிராணி ஆகினும் அவனது சுபாவமானது ஏனைய சுபாவங்களினைப் போலன்றி பகுத்தறிவுடையதாக காணப்படும்''. அதாவது அறிவு படைத்தவனாக மனிதன் காணப்படுகின்றான். அவன் இயற்கையான உந்துதலின் ஊடாகவும், தூண்டல் காரணமாகவும் மனிதன் தவறானவன் ஆகின்றான். மனிதன் பகுத்தறிவினை பயன்படுத்தி சிலவற்றினை மேற்கொள்கின்ற போதும், சிறந்த ஒழுக்கமானது பரப்பப்படுகின்றபோதும் ஒழுக்கவியலின் இலட்சியம் நிறைவேறுகின்றது. மேலும் பகுத்தறிவினைப் பயன்படுத்தி இயற்கையில் அமைந்த செயல்களினை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தி செயற்கை முறையில் நடத்தையை நிறைவேற்ற முனைவதே ஒழுக்கவியலின் நோக்கமும் செய்கையும் ஆகும். மனிதன் ஒருமைத்தன்மை கொண்டமைந்த செயற்கை நடவடிக்கைகளினை உருவாக்கத் துணை புரிவதே ஒழுக்கவியலாகும் என சோக்கிரட்டீஸ் கூறுகின்றார்.

சோக்கிரட்டீஸ் தனது மெய்யியலில் அறம் அல்லது ஒழுக்கத்திற்கு உன்னத நிலையினை வழங்கினார். அறம் அல்லது ஒழுக்கம் தான் வாழ்க்கையின் பூரணத்துவம் ஆக்கும் என்றும் இது தனிமனிதனால் விரும்பப்பட்டோ அல்லது உருவாக்கப்பட்டதோ இல்லை என்றும் குறிப்பிட்டார். அது எப்போதும் மாறாது ஒலித்துக் கொண்டிருக்கும்.

சமூகம் மிகச்சிறந்த நன்மைகளினை பெற்றுக்கொள்வதற்கு தத்துவம் துணையாக இருக்கும் என்ற நம்பிக்கையினைக் கொண்டிருந்தார். இவர் பகுத்தறிவினை அடிப்படையாக கொண்ட ஓர் ஒழுக்க நெறிமுறை ஒன்றினை கட்டமைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். மாறாக இறையியல் அடிப்படையில் அல்ல. சோக்கிரட்டீஸினுடைய பிரதானமான தேடல் எவ்வாறு ஒரு சிறந்த அர்த்தமுள்ள நல்லொழுக்கமுள்ள வாழ்க்கையினை அமைத்துக் கொள்வதாக அமைகிறது. இதனடிப்படையில் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படாத வாழ்க்கையினை வாழ்வதற்கு தகுதியற்றதாக அமையும் என்பது இவருடைய கருத்தாகும்.

சோக்கிரட்டீஸ் நாம் பிறருக்கு துன்பம் விளைவிக்க கூடாது என்கின்றார். மேலும் அரசிற்கு விசுவாசமாக நடக்க வேண்டும் எனக் கூறுகின்றார். சோக்கிரட்டீஸ் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சிறையில் வைக்கப்பட்ட போது சிறையிலிருந்து தப்புவதற்கு அவருடைய நண்பர்கள் வழி கூறினர். ஆனால் அதனை சோக்கிரட்டீஸ் ஏற்கவில்லை. இதிலிருந்து அவருடைய ஒழுக்கம் தெளிவாகப் புலனாகின்றது. நாட்டினது சட்டதிட்டங்களிற்கு கீழ்ப்படிந்து நடப்பதே உண்மையான பிரஜைக்கு அழகு என்கின்றார். சோக்கிரட்டீஸிற்கு மரண தண்டனை

விதிக்கப்பட்ட நிலையில் மன்னிப்பு கோரினால் விடுதலை செய்யப்படும் என அரசு கோரியிருந்தது. ஆனால் அதனையும் ஏற்றுக் கொள்ளாது அவர் மன்னிப்பு கேட்கவில்லை. மரண தண்டனையினை விரும்பி ஏற்றுக் கொள்கின்றார். இவர் சட்டதிட்டங்களிற்கு அவர் கொடுத்த முக்கியத்துவமும் அவருடைய ஒழுக்கமும் புலனாகின்றது.

இவருடைய கருத்தின் படி ஒழுக்கம் என்ப நற்பண்பு எனவும் அநீதியை தீய பண்பு எனவும் அழைக்கின்றார். ஒழுக்கத்தினை பின்பற்றுபவர்கள் மேன்மையாளர்கள் எனவும் அறிவு மிக்கவர்களாகவும், நல்லவர்களாகவும், விவேகத்துடனும் இருப்பார்கள் என கூறப்படுகின்றது. ஒழுக்கம் என்பது நல்லது என்பதை நானறியேன். ஆதலினால் அது நற்பண்பா இல்லையா என்பதனை நான் உணர்வேன். பகுத்தறிவுள்ள மனிதனிடம் ஒழுக்கம் காணப்படும். ஆனால் ஒழுக்கத்தினை பின்பற்றாது அநீதியினை கடைப்பிடிப்பவர்கள் பிற்காலத்தில் வருந்துவார்கள் என கூறப்படுகின்றது. ஒழுக்கமானது மனிதனுடைய வெளிப்புற நிலையில் இல்லை. ஆனால் அது அவனுடைய உள்ளம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். உளத்தன்மையே உண்மையான மனிதத்தன்மையே ஆகும். ஒழுக்கத்தினை பின்பற்றுவோர் தமது மனதில் பல செயல்கள் ஒன்றோடொன்று குறுக்கிடாமல் பார்த்துக் கொள்கின்றது. ஒழுக்கத்தினை பின்பற்றுபவர்கள் வேறொரு வேலையினை செய்ய மாட்டார்கள். ஒழுக்கத்தினை பின்பற்றுபவர்களது அகவாழ்க்கையானது மேலோங்கி காணப்படுகின்றது.

நல்லொழுக்கம் என்பது ஆன்மாவின் நன்நிலையினை குறிக்கும். நல்லொழுக்கமானது நற்பழக்கவழக்கங்களினை பின்பற்றுவதற்கு வழிவகுக்கும் என கூறுகின்றார். ஒரு நெறியாளனை ஒழுக்கத்தின் மூலம் மனிதரை நெறிபிறழ்ந்தவராக செய்துவிட முடியுமா? அல்லது பொதுவாக பேசுகின்றபோது நல்லவர்கள் அல்லது நற்பண்பின் வாயிலாக பிறரை தீயவராக ஆக்க முடியுமா? ஏன்பது சோக்கிரட்டீஸினது வாதமாக உள்ளது. ஒழுக்கம் என்பது நண்பருக்கு நன்மை செய்வதாகவும் பகைவருக்கு தீமை செய்வதாகவும் அமைகின்றது. மற்றும் பொன், பணம், செல்வம் என்பவற்றினை விட மேலானது ஒருவருடைய ஒழுக்கம் திகழ்கின்றது என கூறமுடிகின்றது. மனிதன் இயற்கை உந்துதல்களினை கட்டுப்படுத்தி செம்மையான நடத்தைகளினை ஆற்றுவதற்கு ஒழுக்கவியல் துணைபுரிகின்றது. அதே போல மனிதனுக்கு நன்மையை பயக்கவல்ல செயற்தத்துவமாக ஒழுக்கவியல் காணப்படுகின்றது என்றார்.

மனிதனை பற்றிய மிக திருத்தமான ஆய்வு என்பது மனிதனை ஆராய்ச்சி செய்வதாகும். சோக்கிரட்டீஸ் அவருடைய ஒழுக்கவியலில் தன்னைப்பற்றி அறிந்து கொள்வதே எல்லா அறிவினதும் ஆரம்பம் என கூறுகின்றார். டெல்பீக் என்ற கிரேக்க தேவாலயத்தில் சோக்கிரட்டீஸ் மனிதர்கள் அனைவருக்கும் மத்தியில் அதிஞானம் உள்ள மனிதன் இவன் தான் என எடுத்துக்கூறப்பட்டது. இவ்வாறு சொல்வதற்கு ஓர் காரணம் முன்வைக்கப்பட்டது. இவர் தம்முடைய அறியாமையினை அறிந்திருந்தார் என்பதாகும். இது மனித இயல்பு பற்றிய ஓர் உண்மையினை முன்வைக்கின்றது.

சோக்கிரட்டீஸிற்கு எவ்வளவு தெரிந்தாலும் அவர் எனக்கு எதுவுமே தெரியாது என்கின்றார். ஆரம்பத்தில் ணுநசழ ஆக இருந்த சோக்கிரட்டீஸ் முடிவில் ர்நசழ ஆக மாறியுள்ளார். இவ் தன்னடக்கமானது சிறந்த ஒழுக்கத்தினைக் காட்டுகின்றது எனலாம். சோக்கிரட்டீஸ் பல்வேறு

வகையான ஒழுக்க கருத்துக்களை உரையாடல் வடிவில் கூறி மக்களை நல்வழிப்படுத்தியுள்ளார். ஸோபிஸ்டுகளினால் பாதிப்படைந்த மக்களை நல்வழிப்படுத்தி நல் வாழ்க்கைக்கு அழைத்துச் செல்கின்றார்.

''எனக்கு தெரிந்திருப்பதெல்லாம் எனக்கு எதுவுமே தெரியாது என்பது தான். எனது அறியாமை அறிந்து கொள்வதற்கான ஞானம் எனக்குண்டு. நான் ஞானத்தை விரும்பும் ஒரு தனியாள் ஆவேன்''.எதனையும் அப்படியே நம்பி விடாதே ஏன்? எதற்கு என வினாவினை எழுப்பி பகுத்தறிவால் சிந்தித்து உண்மையினை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை தான் அவர் இவ் உலகிற்கு அவர் இட்டுச் சென்ற சொத்து.

சோக்கிரட்டீஸ் இறைவழிபாட்டினை நிராகரித்தார். ஒழுக்கம், மதம் பற்றியும் இவரிற்கு முற்பட்ட காலத்தில் இருந்த தவறான கருத்தினை கூறியமையால் அவரினை பகுத்தறிவு வாதியாகவும் கூறினார். கற்பனை தெய்வங்களினை வணங்குவதில் எவ்விதமான பயனும் இல்லை எனக்கூறியதோடு சோக்கிரட்டீஸ் மேலான அறிவையும், ஒழுக்கத்தினையும் நிறுத்தக்கூடிய தெய்வங்களினையே வணங்க வேண்டும் என்றார். இந்தவகையிலே கிரேக்க கால மெய்யியலாளரான சோக்கிரட்டீஸின் ஒழுக்க கொள்கையானது மேலோங்கி இருந்தது.

**விதுஷிகா பத்மஈஸ்வரன்**

**நான்காம் வருடம் இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2018/2019)**

# *10. கலையும் கைவினையும்*

தொழில் சார்ந்த கலைகள் கைவினைக் கலைகள் ஆகும். பெரும்பாலும் இவை கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காக தங்களுக்கு அருகில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிப்பது ஆகும். மண்பாண்டங்கள் செய்தல், மூங்கில் கூடைகள் வனைதல், பாய் முடைதல், பட்டு நெசவு செய்தல், பிரம்பு பின்னுதல், மண் பொம்மைகள் தயாரித்தல் மற்றும் பரதநாட்டிய நடன கலைஞர்கள் அணியும் கோவில் நகைத்தொழில் போன்றவை கிராமப்புறக் கைவினைக் கலைகள் ஆகும். இவர்கள் இயற்கையாகக் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு கைத்திறனால் புழங்கு பொருட்களை அழகியல் தன்மையோடு உருவாக்குகின்றனர். இத்தகைய கலையே கைவினைக் கலை என்றும் மரபு வழிப்பட்ட தொழில்களில் கலையம்சத்துடன் விளங்குபவையே நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் என்றும் அன்றாட நடைமுறைப் பயன்பாட்டிற்கு முதன்மை அளிப்பதாக இருந்தால் அது கைவினைப் பொருள்களாகும். அதுவே கலைத் தன்மையோடு விளங்கினால் கைவினைக் கலை என்றும், கலை நுட்பத்தோடு செய்யப்படும் கைவினைத் தொழில் கைவினைக் கலையாக மாறுகிறது. என்றும் கைவினைக் கலைகள் குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப் படுகின்றன. மேற்கூறிய விளக்கங்களின் அடிப்படையில் மரபு வழியாகக் கைத்திறனோடு உருவாக்கப்படும் பொருட்கலையே கைவினைக் கலை எனப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாக, மரபு வழி வந்து கலையம்சத்துடன் திகழ்பவை நாட்டுப்புறக் கைவினைக் கலைகள். கைவினை என்னும் பெயர்ச்சொல் கை ¸ வினை என்னும் இரு சொற்களின் கூட்டிணைவாகும். இவ்விரு சொற்களையும் தனித்தனியே பொருள் கொள்வோம் என்றால் கை என்பது உடலின் உறுப்பையும், வினை என்பது செய்யும் தொழிலையும் குறிக்கும். இதன் வாயிலாகக் கைவினை என்பது கையால் செய்யப்படும் தொழிலைக் குறிப்பாக உணர்த்தி நிற்பதை அறியலாம். இவ்வாறு கைகளைக் கொண்டு அழகுணர்வோடு உருவாக்கப்படும் கைவினைப் பொருள்களே கைவினைக் கலைப் பொருட்களாக மாறுகின்றன் கலை வடிவம் பெறுகின்றன. இயற்கைப் பொருட்களான மண்ணைக் கொண்டு உருவத்தையும், கல். மரத்தைக் கொண்டு சிற்பத்தையும், வண்ணத்தைக் கொண்டு ஓவியத்தையும் கலைத் தன்மையோடு மனிதன் உருவாக்கி வந்துள்ளான். இவையெல்லாம் மனிதனின் கைவினை நுட்பத்திற்கும் கலை உணர்விற்குமான சான்றுகளாகும்.

கலை மற்றும் கைவினை என்பது ஒருவரின் சொந்த கைகளால் பொருட்களை உருவாக்கும் பல்வேறு வகையான செயல்பாடுகளை விவரிக்கிறது. கலை மற்றும் கைவினைப்பொருட்கள் பொதுவாக ஒரு பொழுதுபோக்கு. சில கைவினைப்பொருட்கள் வரலாற்றுக்கு முந்தைய காலங்களிலிருந்து நடைமுறையில் உள்ளன. மற்றைய பொருட்கள் எல்லாம் மிகவும் சமீபத்திய கண்டுபிடிப்புகள் ஆகும். வில்லியம் மோரிஸ், ஜான் ரஸ்கின் மற்றும் பலர் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ''கலை மற்றும் கைவினை'' இயக்கத்தை ஊக்குவித்தனர். இது சொற்றொடரை பிரபலப்படுத்தியது. கலை மற்றும் கைவினைப் பொருட்கள் இயக்கமானது

அலங்கார மற்றும் நுண்கலைகளில் ஒரு சர்வதேசப் போக்கு ஆகும். இது பிரிட்டிஷ் தீவுகளில் முதன்முதலில் முழுமையாக வளர்ந்தது பின்னர் பிரிட்டிஷ் பேரரசு மற்றும் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா முழுவதும் பரவியது. அலங்காரக் கலைகளின் வறுமை மற்றும் அவை உற்பத்தி செய்யப்பட்ட நிலைமைகளுக்கு எதிரான எதிர்வினையாக ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 1880 மற்றும் 1920 க்கு இடையில் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் இந்த இயக்கம் செழித்தது. சிலர் இது நவீன பாணியின் வேர் என்று கருதுகின்றனர். பின்னர் ஆர்ட் நோவியோ இயக்கம் என்று அழைக்கப்பட்ட பிரிட்டி’ வெளிப்பாடு. மற்றவர்கள் இது இங்கிலாந்தில் உள்ள ஆர்ட் நோவியோவின் அவதாரம் என்று கருதுகின்றனர்.

ஜப்பானில் இது 1920களில் மிங்கே இயக்கமாக உருவானது. இது பாரம்பரிய கைவினைத்திறனைக் குறிக்கிறது. மேலும் பெரும்பாலும் இடைக்கால, காதல் அல்லது நாட்டுப்புற அலங்கார பாணிகளைப் பயன்படுத்தியது. இது பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தத்தை ஆதரித்தது மற்றும் அதன் நோக்குநிலையில் தொழில்துறைக்கு எதிரானது. இது 1930 களில் நவீனத்துவத்தால் இடம்பெயர்ந்த வரை ஐரோப்பாவில் கலைகளில் வலுவான செல்வாக்கைக் கொண்டிருந்தது. அதன் செல்வாக்கு கைவினைத் தயாரிப்பாளர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் நகரத் திட்டமிடுபவர்கள் மத்தியில் நீண்ட காலத்திற்குப் பிறகு தொடர்ந்தது. 1887 ஆம் ஆண்டு கலை மற்றும் கைவினை கண்காட்சி சங்கத்தின் கூட்டத்தில் டிஜே கோப்டன் சாண்டர்சன் இந்த வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தினார். இது வரலாற்றாசிரியர் தாமஸ் கார்லைல், கலை விமர்சகர் ஜான் ரஸ்கின் மற்றும் வடிவமைப்பாளர் வில்லியம் மோரிஸ் ஆகியோரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டது. ஸ்காட்லாந்தில், இது சார்லஸ் ரென்னி மெக்கிண்டோர்‘ போன்ற முக்கிய நபர்களுடன் தொடர்புடையது. இயற்கை மற்றும் கோதிக் கலை பற்றிய வயலட் லீ டுக்கின் புத்தகங்களும் கலை மற்றும் கைவினை இயக்கத்தின் அழகியலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கலை மற்றும் கைவினைக் கொள்கைகள் கட்டிடக்கலை, ஓவியம், சிற்பம், கிராபிக்ஸ், விளக்கப்படம், புத்தகம் தயாரித்தல் மற்றும் புகைப்படம் எடுத்தல், உள்நாட்டு வடிவமைப்பு மற்றும் தளபாடங்கள் மற்றும் மரவேலைகள், கறை படிந்த கண்ணாடி, தோல் வேலைப்பாடு, லேஸ்மேக்கிங் உள்ளிட்ட அலங்கார கலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. எம்பிராய்டரி, கம்பளம் தயாரித்தல் மற்றும் நெசவு செய்தல், நகைகள் மற்றும் உலோக வேலைகள், பற்சிப்பி மற்றும் மட்பாண்டங்கள். 1910 வாக்கில் ‘‘கலைகள் மற்றும் கைவினைப்பொருட்கள்’’ மற்றும் கையால் செய்யப்பட்ட அனைத்து பொருட்களுக்கும் ஒரு பெ‘ன் இருந்தது. மாறக்கூடிய தரம் அமெச்சூர் கைவினைப்பொருட்கள் மற்றும் திறமையற்ற பின்பற்றுபவர்களின் பெருக்கம் இருந்தது. இவ்வாறாக கைவினைக்கலையின் வளர்ச்சிப்போக்கு காணப்பட்டது.

மேலுமாக நாட்டுப்புறக் கைவினைக் கலைகளின் வகைப்பாட்டினை நோக்குவோமாயின் கைகளால் உற்பத்தி செய்யப்படும் கைவினைக் கலைப் பொருட்கள் உலகமே கண்டு வியந்து பாராட்டும் சிறப்புப் பெற்றவையாகும். அவையாவன மண்பாண்டப் பொருட்கள், சுடுமண் சிற்பங்கள் மர வேலைப்பாடுகள், ஓலைப் பொருட்கள், பின்னல் பாய்கள், காகிதப் பொம்மைகள், சப்பரம், தேர், தெய்வ அலங்காரங்கள், நெல்மணி, ஏலக்காய் மாலைகள்

போன்ற கைவினைக் கலைப் பொருட்கள் குறிப்பிடத் தக்கவையாகும். இவை பற்றி நோக்குவோமாயின்.

பல தரப்பட்ட இக்கைவினைக் கலைகளை வகைப்படுத்தி அறிவதன் வாயிலாகப் பல்வேறுபட்ட கலைப் பொருட்களையும் அவற்றின் சிறப்புகளையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம். நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் எவையெவை என்பதை இங்கு விளக்கிக் கொள்ள கூடியதாக இருக்கும். அந்த வகையில் நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் மண்சார்ந்த கலைகள் மரம்சார்ந்த கலைகள் ஓலைசார்ந்த கலைகள், காகிதம்சார்ந்த கலைகள் போன்றவையாகும். மண் சார்ந்த கலைகள் பற்றி நோக்குவோமாயின் மண்பாண்டக் கலை மிகவும் பழைமை வாய்ந்ததாகும். கைத்திறனுடன் வண்ணம் கூட்டி மண்பாண்டம் செய்வதே ஒரு கலையாக மாறிவிட்டது என்று கூறலாம். அகழ்வாராய்ச்சியில் (Archaeology) தோண்டி எடுக்கப்பட்டுள்ள முதுமக்கள் தாழிகள் மண்ணால் செய்யப்பட்டவையே என்பது இங்கு அறியத் தக்கதாகும். மண்ணாலான புழங்கு பொருட்கள், தெய்வ உருவங்கள், குதிரைகள் போன்றவற்றைக் கலைத் திறனோடு செய்யும் கைவினைஞர்கள் வேளார், குயவர் என அழைக்கப்படுகின்றனர். மண் சார்ந்த தொழில்களே இவர்களது பூர்வீகமான குலத் தொழிலாகும். வேளார் இன மக்கள் அடுப்பு, மண் சட்டி, பானை, குளுமை (தானியங்களைப் பாதுகாக்கும் மட்கலம்) போன்ற பொருட்களை அன்றாடம் செய்து விற்றுத் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். மேலும் தோண்டி, குடம், கலையம், விளக்கு, முகூர்த்தப் பானை, தாளப் பானை, கடம், பூத்தொட்டி, அகல் என்று பலவகையான பொருட்களையும் கலைத் தன்மையோடு உருவாக்கி வருகின்றனர். பானைகள் ஏழைகளின் குளிர்சாதனப் பெட்டியாக விளங்கி வருகின்றன. மண் பாண்டத்தில் சமைப்பதும், மண் பானைச் சோறும் மருத்துவப் பயன்பாடு மிக்கவை ஆகும். கைவினைக் கலைஞர் ஒருவர் மண்ணிலேயே நாகசுரத்தை உருவாக்கி இசையோடு வாசித்தும் காட்டிச் சாதனை செய்துள்ளார் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

**சுடுமண் சிற்பங்கள்**

தெய்வங்களுக்கு மண் சிலை வடித்து வழிபடுவது தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்துவரும் வழக்கமாகும். சிறுதெய்வக் கோயில்களில் கம்பீரமாக அமைந்துள்ள அய்யனார், முனியப்பன், மதுரை வீரன், மாரியம்மன், முத்தாலம்மன், காளியம்மன், பேச்சியம்மன் போன்ற தெய்வ உருவங்களும், குதிரை, யானை, காளை போன்ற தெய்வ வாகனங்களும் வேளார்களால் கலை நேர்த்தியுடன் செய்யப்பட்டு வருகின்றன. களிமண்ணை எடுத்து வந்து நன்றாகக் காயவைத்துக் கல், தூசி நீக்கி, நீருற்றிப் புளிக்க வைத்து, ஆற்று மணல், வைக்கோல் சேர்த்து மிதித்துக் குழைத்துப் பெரிய பெரிய தெய்வ உருவாரங்களும் குதிரைகளும் செய்யப்படுகின்றன. பின்பு அவை நெருப்பில் போட்டுச் சுடுமண் சிற்பங்களாக மாற்றப்படுகின்றன. வண்ணங்கள் பூசப்பட்டுக் கோயிலில் நிலைநிறுத்தப்பட்டு வழிபாட்டிற்கு உரியவை ஆகின்றன. குதிரை ஓடுவது போன்றும் நிற்பது போன்றும் அதன்மேல் தெய்வங்கள், அரசர்கள் அமர்ந்திருக்கும் நிலையிலும் சிற்பங்கள் மண்ணாலேயே வடிவமைக்கப் படுகின்றன. மண் சிற்பங்களில் விதவிதமான ஆபரணங்கள் செய்தல், முக பாவங்களை அமைத்தல்,

உடல் நெளிவு சுழிவுகளை அழகு படச் செய்தல் போன்றவற்றை வேளார்கள் கலை நுட்பத்துடன் செய்து காட்டுகின்றனர்.

கல்லால் சிற்பங்களை வடிப்பதற்கும் மண்ணால் சிற்பங்கள் செய்யப் படுவதற்கும் அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. அதாவது கற்சிற்பங்கள் மேலிருந்து கீழ்நோக்கி உருவாக்கப்படும். ஆனால் மண் சிற்பங்கள் கீழிருந்து மேலாகச் செய்யப்படும். மேலும் கல் சிற்பங்களில் வண்ணங்களைத் தீட்ட இயலாது. மண் சிற்பங்களில் தேவையான வண்ணங்களைத் தீட்டி அழகுக்கு அழகு சேர்க்கலாம். மண் சார்ந்த இக்கைவினைப் பொருட்கள் கலைப் பொருட்களாக மட்டுமின்றித் தமிழரின் வாழ்க்கையோடும் வழிபாட்டோடும் பிரிக்க முடியாத கூறாகவும் அமைந்துள்ளன. சுடுமண் கலை வடிவங்களைத் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடனாக வாங்கி வைத்து வழிபடும் வழக்கம் நாட்டுப்புற மக்களிடம் உள்ளது. நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் நோய் குணமடைவதற்குத் தெய்வத்திடம் வேண்டிக் கொள்கின்றனர். நோய் குணமடைந்தவுடன் பாதிக்கப்பட்ட உடல் உறுப்பினைப் போன்று மண்ணால் செய்து அதனைத் தெய்வத்திற்குக் காணிக்கை ஆக்குகின்றனர்.

**காகிதம் சார்ந்த கலைகள்**

காகிதங்களைக் கொண்டு பொம்மை, முகமூடி, கூடுகள் செய்யும் கைவினைக் கலை சிறப்புப் பெற்றுத் திகழ்கிறது. நாட்டுப்புற நிகழ்த்து கலைகளான (Folk Performing Arts) பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், புலியாட்டம், பொம்மையாட்டம் போன்றவற்றில் குதிரை, மயில், காளை, பொம்மை, இவற்றின் கூடுகளை ஆட்டக் கலைஞர்கள் சுமந்து கொண்டு ஆடுவார்கள் இக்கூடுகள் எல்லாம் காகிதங்களைக் கொண்டு உருவாக்கப் படுபவை என்பதை அறிந்துகொள்ள கூடியதாக உள்ளது.

கூடுகள்

களிமண் கொண்டு கூடுகளுக்கான அச்சுகள் உருவாக்கப்படுகின்றன. அதன்மேல் காகிதங்கள், துணிகள் ஒட்டப்பட்டுப் பின் வண்ணங்கள் தீட்டப்படுகின்றன. இத்தகைய கூடுகள் கலையழகுடன் செய்யப்பட்டு ஆட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன. ஆட்டக் கலைஞர்கள் கூடுகளைச் சுமந்து கொண்டு வெகுநேரம் ஆட வேண்டி இருப்பதால் அவை அதிகக் கனமின்றி இருக்கக் (light weight) காகிதத்தாலேயே இக்கூடுகள் செய்யப்படுகின்றன. அலங்கரிக்கப்பட்ட கூடுகளை ஆட்டக் கலைஞர்கள் சுமந்து கொண்டு ஆடும் பொழுது உண்மையான குதிரையின் மீது அமர்ந்து சவாரி செய்து வருவது போன்றும், மயிலே நம் முன்னால் தோன்றி நடனம் ஆடுவது போன்றும் தோற்றமளித்துப் பார்வையாளர்களைப் பரவசப் படுத்தும். இத்தகைய தோற்றத்திற்குக் காரணம் கைவினைக் கலைஞர்களின் கலைத் திறனே ஆகும்.

**தசரா முகமூடிகள்**

தசரா முகமூடிகளை உருவாக்கும் கலைஞர்கள் பாணர் என அழைக்கப் படுகின்றனர். முகமூடி செய்வதைத் தங்கள் பரம்பரைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். முகமூடிக்கான அச்சுகளைப் பாணர்கள் களிமண் கொண்டு செய்கின்றனர். களிமண் அச்சின் மீது

காகிதங்களை ஒட்டி, வண்ணமிட்டு முகமூடிகள் தயாரிக்கின்றனர். புராண மாந்தர்கள் (பிரம்மன், வி'ணு, விநாயகர், ஆஞ்சநேயர், இராவணன்) ஆண், பெண், தெய்வங்கள் (காளி, சுடலை மாடன்), மனிதர்கள் (கிழவன், கிழவி, காவலர்) விலங்குகள் (புலி, குரங்கு, கரடி, மாடு) போன்ற முகமூடிகள் தசரா விழாவிற்காகப் பாணர்களால் செய்யப்படுகின்றன. இவ்வாறாகக் காகிதம் சார்ந்த கலைப் பொருட்கள் நிகழ்த்து கலைகளிலும் வழிபாட்டிலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றன.

**பச்சை குத்துதல்**

உடலில் பச்சை வண்ணத்தில் ஊசி கொண்டு குத்திப் பல்வேறு வடிவங்களை வரைந்து அழகுபடுத்திக் கொள்வது பச்சை குத்துதல் எனப்படும். மார்பு, மேல் கை, முன்னங் கை, கால் போன்ற உடற் பகுதிகளில் பச்சை குத்தப் படுகிறது. குறவர் என்ற இனத்தைச் சேர்ந்தோர் பச்சை குத்தும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மஞ்சள் பொடியுடன் அகத்திக் கீரை சேர்த்து அரைக்கின்றனர். அதனை ஒரு துணியில் கட்டி, தீயிலிட்டு எரித்துக் கரியாக்கிக் கொள்கின்றனர். நீர் கலந்து அதனைப் பசையாக்குகின்றனர். கூர்மையான ஊசியினால் அந்தப் பசையைத் தொட்டுத் தோலில் குத்திக் குத்தி எடுத்துத் தேவையான உருவங்களை வரைகின்றனர். பச்சை குத்தப்பட்ட பின் சுடுநீரால் கழுவி அதனைச் சுத்தம் செய்கின்றனர். இப்பொழுது பச்சை குத்திய இடம் அழகாகத் தோற்றம் அளிக்கும். இது எந்நிலையிலும் அழியாது.

தெய்வ வடிவங்கள், கோலங்கள், தேள், பாம்பு போன்ற உருவங்கள், பெயர்கள் போன்றவை பச்சை குத்துதலில் இடம் பெறுகின்றன. குறிப்பாகப் பெண்கள் அழகிற்காகவும் அடையாளத்திற்காகவும் இக்கலையைப் பயன்படுத்தி வருகின்றனர். அரசியல் தலைவர்கள், சின்னங்கள், திரைப்பட நடிக, நடிகையர் படங்களைப் பச்சை குத்திக் கொள்ளும்பழக்கம் இன்றைய இளைஞர்களிடம் காணப்படுகிறது. தற்பொழுது மருதாணிப் பசை கொண்டு இத்தகைய உருவங்கள் அச்சினால் உடலில் வரையப் படுகின்றன. இதனால் பச்சை குத்துதல் கலை இன்று வழக்கொழிந்து வருகிறது. இக்கலை தமிழகத்தில் மட்டுமல்லாது ஆசியாவின் பிற பகுதிகளிலும் அமெரிக்கா, நியூசிலாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் பரவிக் காணப்படுகிறது. ஜப்பானியரின் அக்குபஞ்சர் மருத்துவ முறையானது பச்சை குத்துதல் கலையோடு தொடர்பு படுத்திக் காணத் தக்கதாகும்.

கிராமிய கைவினைப் பொருட்கள் பெரும்பாலும் பொம்மைகள் மற்றும் அலங்காரப் பொருட்களே ஆகும். இப்பொருட்கள் சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணமுள்ள பொருட்களை கொண்டு, எளிமையான முறையில் இலை, பிரம்பு, காய், மரம் மற்றும் மட்பண்டங்களை கொண்டு செய்யப்படுபவை. மேலே கூறப்பட்ட பொருட்களுடன் வரைபடத்தாளையும் சேர்த்து இயக்காற்றலுடைய, உயிரூட்டம் பெற்ற அழகான பொம்மை அல்லது ஒரு பொருளை தயார் செய்யலாம். இவ்வாறாக தொழில் சார்ந்த கலைகள் கைவினைக் கலைகள் இவை பெரும்பாலும் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காக தங்களுக்கு அருகில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிக்கின்றனர். இவ்வாறாக கைவினைக் கலைகள் மக்களோடும்,

வாழ்வியலோடும் பின்னிப்பிணைந்த ஒன்றாகவும் அழகியல் உணர்வின வெளிப்படுத்துவதாகவும் காணப்படுகின்றன எனலாம்.


**அருணாசலம் பானுஜா**

**நான்காம் வருடம், இரண்டாம் அரையாண்டு.**

**மெய்யியல் சிறப்பு**
**(2018/2019)**

# *11. ஒழுக்கவியலின் வளர்ச்சிப் போக்கு*

ஒழுக்கவியலானது நீண்டதொரு வரலாற்று பின்னணியை கொண்டதாக காணப்படுகின்றது. அந்தவகையில் ஒழுக்கவியலானது ஒவ்வொரு காலகட்டங்களாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. அவை முறையே,

1. கிரேக்கர் காலம்
2. மத்திய காலம்
3. நவீன காலம்
4. தற்காலம்

என்ற காலகட்டங்களின் ஊடாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த காலப்பகுதிகளில் வாழ்ந்த மெய்யியலாளர்கள் ஒழுக்கவியல் தொடர்பாக தம்முடைய கருத்துக்களை முன்வைத்து ஒழுக்கவியலின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளனர். இவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பின் வந்தவர்களால் எடுத்துச் செல்லப்பட்டதோடு பல விவாதங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உட்படுத்தப்பட்டவை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிரேக்கர் காலம்

ஒழுக்கவியலினுடைய வரலாறு கிரேக்க காலத்திலிருந்து ஆரம்பமாகின்றது. கிரேக்க காலமானது கி.மு 500 தொடக்கம் கி.பி 500 வகையான காலப்பகுதியாகும். கிரேக்க தத்துவ சிந்தனையினுடைய தத்துவஞானியாக "சோக்ரடீஸ்" காணப்படுகின்றார். இவரை ஒழுக்கவியலின் தந்தை எனவும் அழைக்கப்படுகின்றனர் இவருடைய ஒழுக்கவியல் பற்றிய கருத்துக்கள் உரையாடல் பாணியில் அமையப் பெற்றுள்ளன. சோக்ரடீஸ் நல்லொழுக்கமே நல்லறிவு என குறிப்பிட்டார். இவர் ஒழுக்க வாழ்வையும் நன்மை என்ற கருத்தையும் நிலைநிறுத்த பாடுபட்டார். மனித செயலினுடைய நோக்கத்தை அதன் ஒழுக்க நிலை தீர்மானிக்கின்றது என்பது அவரது போதனைகளினுடைய சாராம்சமாக காணப்பட்டது.

சோக்ரடீஸ் தனது ஒழுக்கவியல் சிந்தனையில் மூன்று ஒழுக்கவியல் சிந்தனைகளை வலியுறுத்துகின்றார்.

- பிறருக்கு தீங்கிழைத்தல் கூடாது.
- அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட வேண்டும்.
- பெற்றோர் மற்றும் குரு போன்றோருக்கும் மதிப்பளித்து நடத்தல் வேண்டும்.

பகுத்தறிவினுடைய துணை கொண்டு தனது இயற்கையில் அமைந்த செயற்கைகளை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தி செயற்கை முறையில் நடத்தையை நிறைவேற்ற முனைவதே ஒழுக்கவியலின் நோக்கமும் செய்கையும் ஆகும். நன்மை, தீமை, சரி, பிழை ஆகியவற்றின் தன்மைகளை ஆராய்வதே ஒழுக்கவியல் என சோக்ரடீஸ் குறிப்பிட்டுள்ளார்.

சோக்ரடீஸ் "உன்னையே நீ அறிவாய்" என்ற கருத்தினை முன்வைத்துள்ளார். அதாவது அறவாழ்வு மனித இயல்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால் நல்வாழ்வு வாழ மனித

இயல்பு பற்றிய அறிவு தேவை என்பதனை அடிப்படையாகக் கொண்டு இக்கருத்தினை முன்வைத்தார். புலன் வழியாக அமைகின்ற அறிவு உண்மையானது அல்ல மாறாக அதனைக் கடந்து விளங்குகின்ற உலகமே உண்மையான உலகம் என்றும் அதனை நாம் அறம் பற்றிய அறிவினாலேயே அறியலாம் எனவும் கூறினார். சோக்ரடீஸின் மாணவரான பிளேட்டோ சோக்ரடீஸ் போலவே ஒழுக்கவியலுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளார். பிளேட்டோவினுடைய ஒழுக்கம் உயர்வானது மனித வாழ்க்கையினுடைய சாதாரண வரையறைக்கு அப்பால் முன்னுரை இலட்சிய வாதத்தை மையமாகக் கொண்டுள்ளது. இவர் தனது படைப்பாகிய குடியரசு எனும் நூலில் ஒழுக்கவியல் பற்றிய சிந்தனைகளை முன்வைத்துள்ளார். இவர் "நன்மையாம் தன்மை தனில் இருக்கும் எனவும் மக்கள் சரியான வகையில் தேர்ச்சி பெற்றால் அதனை கண்டு கொள்ளலாம்" எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவர் தனது இலட்சிய அரசை ஒழுக்கத்தின் அடிப்படையில் நிலை நாட்ட முற்பட்டுள்ளார். ஒரு அரசானது எப்போதும் ஒழுக்கத்தை நிலை நாட்ட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இவர் ஒழுக்க நியமங்கள் கடவுளை பார்க்க உயர்வானது என குறிப்பிடுகின்றார்.

பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டோட்டில் முறைமைப்படுத்தப்பட்ட நடைமுறைக்கு சாத்தியமான கருத்துக்களை முன்வைத்த சிந்தனையாளராக காணப்படுகின்றார். இவர் நல்லொழுக்கம் பற்றிய கருத்துக்களை The Nicomachean ethics, The Eudemian ethics, Magna Moralia ஆகிய தனித்தனி கட்டுரை நூல்களில் எழுதியுள்ளார். ஒழுக்கத்தின் முடிவை இவர் டைமோனியா என குறிப்பிட்டுள்ளார். ஒழுக்க நெறியின் பொதுவான நோக்கம் மகிழ்ச்சியாகும் என குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கத்தால் வருவது மகிழ்ச்சியானால் அந்த ஒழுக்கமே சிறந்த ஒழுக்கமாகும் என குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கத்திற்கு ஏற்ப ஆன்மாவின் செயற்பாடுகள் முழு வாழ்க்கைக்குமான செயல்பாடாக அமையும் எனவும் இவர் கூறுகின்றார்.

## மத்திய காலம்

கி.பி 4ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி மத்திய காலம் ஆகும். இக்கால ஒழுக்கவியல் சிந்தனைகள் கிறிஸ்தவ சமயத்தினை அடிப்படையாகக் கொண்டு இருந்தன. இக்கால பகுதியில் கிறிஸ்தவ மத சபையின் ஆட்சி காணப்பட்டது. இங்கு மனிதனுடைய அகநிலை சார்ந்த ஒழுக்கத்தில் அக்கறை காட்டப்பட்டது. ஒரு மனிதன் வானுலக வாழ்க்கையினை குறிக்கோளாக கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய ஒழுக்க சிந்தனைகள் மனிதனின் உள்ளார்ந்த விருப்பத்தின் அடிப்படையில் வளரும் ஆன்மீக நிலையினாலேயே வானுலகம் கிடைக்கும் என்பதனை வலியுறுத்தியது. இக்காலத்தில் டொமிக்ஸன், ஜான்டஸ் ஸ்காட்ஸ், ஒக்ஹாம் வில்லியம், புனிதர் அகஸ்டின், தாமஸ் அக்குவைனஸ் போன்றோர் தமது ஒழுக்கவியல் சிந்தனைகளை கிறிஸ்தவ மதச் சூழலில் உருவாக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காலத்தில் முதன்மையான இறையியல் மெய்யியலாளராக புனித அகஸ்தின் காணப்படுகின்றார். இவர் தன்னுடைய இறையியல் சார்ந்த கருத்துகளை விளக்குவதற்கு ஒழுக்கவியலையும் அறிவு பற்றிய கொள்கையையும் அதிகாரப்பூர்வமான ஒன்றாக எடுத்துக்

கொண்டார். இவரால் எழுதப்பட்ட The unity of God மற்றும் On the freedom of the will ஆகிய இரு நூல்களும் ஒழுக்கவியல் சிந்தனைகளை கூறுகின்றன.

அடுத்ததாக மத்திய கால சிந்தனையாளரான தாமஸ் அக்குவைனஸ் தனது ஒழுக்க சிந்தனைகளையும் முன் வைத்திருந்தார் இவர் ஒழுக்க சிந்தனைகளை இருவகையாக விளக்கியிருந்தார். அவை,

- இயற்கையானவை
- இறையியல் சார்ந்தவை

இவற்றில் இயற்கையான ஒழுக்கம் என்பதனை முழுமையான பயிற்சி நடைமுறை சார்ந்த அறிவின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என குறிப்பிட்டுள்ளார். இறையியல் சார்ந்த ஒழுக்கத்தை அன்பு, நம்பிக்கை, விசுவாசம் என்பவற்றின் மூலம் பெறலாம் எனவும் குறிப்பிடுகின்றார். இயற்கையானவை உலகியல் ரீதியான மகிழ்ச்சி தருபவை எனவும் இறையியல் சார்ந்தவை நிலையான மகிழ்ச்சி தருபவை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய ஒழுக்கவியலில் இயற்கைவாதி என்னும் எண்ணக்கரு பிரதானமானதாக காணப்படுகின்றது. இது நோக்கியல் ரீதியான சிந்தனை கிரேக்க ஒழுக்கவியலில் உள்ள ஒருமைவாத இறையியல் சிந்தனையிலிருந்து பெறப்பட்டதாகும். இவ்விதியானது தேவாலயம், வேதாகமம், பிரபஞ்சத் தேவைகள், மனிதனது இலட்சியங்கள் பற்றிய விஞ்ஞானம் சார்ந்த அறிவு இன்பவற்றை ஒழுக்க தீர்மானங்களின் வழிமுறைகளாக வழங்குகின்றது.

## நவீன காலம்

17 ஆம் நூற்றாண்டிற்கு பிற்பட்ட காலம் நவீன காலமாகும். இக்காலத்தில் இறையியல் ரீதியான நோக்கத்தில் இருந்து வேறுபட்ட ஒழுக்க சிந்தனைகள் தோற்றம் பெற்றன. இக்காலப் பகுதியில் தனிமனித உணர்வுக்கு முதன்மை கொடுத்ததனால் மெய்யியல் மீள்நிர்மாணம் செய்யப்பட்டதோடு ஒழுக்கவியலில் புதிய மாற்றங்களும் ஏற்பட்டன.

நவீன ஒழுக்க கொள்கையானது "தோமஸ் ஹொப்ஸ்" (கி.பி 1558 – கி.பி 1679) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவர் தனது "லெவியதான்" எனும் நூலில் மனித செயல்பாடுகளின் இலட்சியங்களையும் அவரது ஒழுக்க முறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார். "இப் பிரபஞ்சத்தில் எவ்விதமான ஒழுக்க ஒழுங்கும் இல்லை எனவும் ஒழுக்க கொள்கைகள் மனவெழுச்சியானதும் விருப்பங்களினதும் அகரீதியான வெளிப்பாடுகளாகவே கொள்ளப்பட வேண்டுமே தவிர புறநிலையாக நிரூபிக்கப்படக்கூடிய விதிகளாக அமையக்கூடாது எனக் கூறியுள்ளார்.

காரணமுதல்வாதியான ஸ்பினோசா ஒழுக்கவியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தவராக காணப்படுகின்றார். இவர் தன்னுடைய "Ethics Demonstrated In The Geometricmanner" என்கின்ற நூலில் ஒழுக்கவியல் கருத்துக்களை முன்வைத்தார். நிலையான முழுமையான மகிழ்ச்சியை தரக்கூடிய ஒன்றை ஸ்பினோசா தேடினார். இவர் அறிவியலைக் கொண்டு இவ்வுலகு பற்றிய முழுமையான தெளிந்த அறிவினை பெற வேண்டும் எனவும் அவ்வறிவே

பேரின்ப வாழ்வுணர்வை தரும் எனவும் அது ஒழுக்கவியலின் உயர்ந்த வடிவம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அனுபவமுதல்வாதியான ஜான் லாக் (கி.பி 1632 - கி.பி 1704) என்பவர் தன்னுடைய "An Essay Containing Human Understanding" என்கின்ற நூலில் ஒழுக்க கருத்துக்களை முன்வைத்துள்ளார். இவர் ஒழுக்கவியல் ரீதியான எண்ணக்கருக்கள் அனுபவத்தில் பெறப்பட்டவை என்றும் குறிப்பிட்டுள்ளார். இவர் தன்னுடைய அரசியல் கொள்கைக்கு பயன்பாட்டு வாத ஒழுக்கத்தை முன்வைத்துள்ளார்.

நவீன மெய்யெழுத்தாளரான டேவிட் கியூம் An Say Enquiry Principal Of Moral, A Treatise Nature ஆகிய நூல்களில் தன்னுடைய ஒழுக்க கருத்துகளை முன் வைத்துள்ளார். இந்நூலில் ஒழுக்க எண்ணக்கருக்களான நீதி, நல்லொழுக்கம், நன்மை, உரிமை என்பவற்றினை விளக்கியுள்ளார். ஒரு மனிதனின் செயற்பாடுகளை ஒழுக்க ரீதியாக அங்கீகரிக்க உளவியல் சார்ந்த ஊக்கி தேவை என குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் நூற்றாண்டு ஒழுக்க சிந்தனையானது பயன்பாட்டுவாத ஒழுக்கவியல் கருத்துமுதல்வாத ஒழுக்கவியல் என்ற இரு மரபுகளுக்குரிய ஒழுக்கவியலாக காணப்பட்டது. பயன்பாட்டுவாத சிந்தனையினை ஜெரமி பெந்தம், ஜே.எஸ்.மில் போன்றோர் முன்வைத்தனர். பயன்பாட்டுவாத கருத்தின் படி ஒரு விடயம் மனிதனுக்கு பயன்தந்தால் அது ஒழுக்கம் எனவும் பயன்தராவிட்டால் அது ஒழுக்கம் இல்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது. நன்மை என்பது மகிழ்ச்சி தருவது எனவும் ஒவ்வொரு மனிதனின் மகிழ்ச்சியும் மற்றைய மனிதனின் மகிழ்ச்சிக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல என ஜெரமி பெந்தம், ஜே.எஸ்.மில் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். ஜெரமி பெந்தம் நடைமுறைக்கு ஏற்ற விடயங்களில் இருந்து கோட்பாட்டை விளக்கியுள்ளார்.

கருத்து முதல்வாதிகளான இமானுவேல் கான்ட், கெஹல் போன்றோர் ஆன்மீக அடிப்படையில் அமைந்த ஒழுக்கவியல் கொள்கைகளை முன்வைத்தனர். இவர்கள் தூய அறிவு பற்றிய விமர்சனம், தீர்ப்பு பற்றிய விமர்சனம், ஒழுக்கவியல் பற்றிய விமர்சனம் போன்ற படைப்புகளில் மெய்யியல் துறையை உள்ளடக்கி ஒழுக்க கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

சார்ல்ஸ் டார்வின் இயற்கை நேர்வின் அடிப்படையில் ஒழுக்க கருத்துகளை முன்வைத்தார். கால் மார்க்ஸ் போராட்டத்துடன் தொடர்புபட்ட கருத்துக்களை முன்வைத்தார். நீட்சே ஒரு பாரிய உன்னத மனிதனை நிறுவி அவனுக்கே நன்மை அனைத்தும் என்று வாதாடினார். சாதாரண மனிதன் வெறும் விலங்குகளுக்கு சமன் என்றார். அவர் தன்னுடைய ஒழுக்க கோவையை சற்று மாயாவாதம் குறைந்ததாகவும் அகநிலை சார்ந்த கடந்த நிலைக்கு சமமாக உருவாக்கினார்.

### தற்காலம்

சமகால ஒழுக்கவியல் சிந்தனையின் முன்னோடியாக ஜி.இ.மூர் என்பவர் காணப்படுகின்றார். இவர் "Principia Ethica" என்னும் தன்னுடைய நூலில் ஒழுக்க சிந்தனைகளை முன் வைத்துள்ளார். இவருடைய விதிவிலக்கான ஆளுமை மற்றும் ஒழுக்கப் பண்பு ஏனைய

மெய்யியலாளர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. இவர் இச் சிந்தனையில் ஒழுக்கவியல் பற்றிப் பேசாது ஒழுக்கவியலில் காணப்படும் நன்மை, தீமை ஆகிய எண்ணக்கருக்களை விளக்கியுள்ளார். நல்லது பற்றியதும் தீயது பற்றியதுமான அறிவே ஒரு ஆய்வின் இலட்சியம் என குறிப்பிட்டுள்ளார். மேலும் கருத்தியல் மறுப்பு, பொது உணர்வின் பாதுகாப்பு, புற உலகின் நிருபணம் என்கின்ற கட்டுரைகளும் ஒழுக்கம் தொடர்பான கருத்தை விளக்குகின்றன. இக்கால சிந்தனையில் குறிப்பிடத்தக்க ஒழுக்க கருத்துகளை முன்வைத்தவர்களாக ஏ.ஜே அயர், ஸ்டீபன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

ஒழுக்கவியலானது தற்காலத்தில் சமூகவியல், அரசியல், சட்டம், உளவியல் மானிடவியல், சமயம், பொருளியல், அழகியல் போன்ற அனைத்து அறிவியல் துறைகளுக்குள்ளும் பரந்துபட்ட ஒன்றாக காணப்படுகின்றது. இன்றைய நடைமுறை வாழ்வியல் எதிர் நோக்குகின்ற பல சமூக சிக்கல்களும் சர்ச்சைக்குரியதாக விளங்கும் விடயங்களும் சமகாலத்தில் கரிசனைக்குரியதாக காணப்படுகின்றன. உதாரணமாக கருக்கலைப்பு, சிறுவர் துஸ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை போன்றவற்றை குறிப்பிடலாம். ஆரம்பகால ஒழுக்கவியல் சிந்தனையானது நன்மை தீமை பற்றியதாகவும் மத்திய காலத்தில் சமய ரீதியானதாகவும் நவீன காலத்தில் ஒழுக்கவியலில் பிரயோகிக்கப்படும் பதங்களின் அர்த்தத்தினை தேடுவதாகவும் அமைந்தது. தற்கால ஒழுக்கவியல் செயல்பாடுகள் எதிர்கால சமூக நலனில் அக்கறை கொள்கின்றது. ஒழுக்கவியலானது மனிதனுக்கும் வாழ்வியலுக்கும் அத்தியாவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. இது தற்காலத்தில் பிரயோக ஒழுக்கவியலாக காணப்படுகின்றது.

**ஜெகதீஸ்வரன் ஜெதுஷா**

**4ஆம் வருடம், 2ஆம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2018/2019)**

## *12. தர்க்கப்புலனறி வாதம் ஓர் அறிமுகம்*

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மெய்யியலின் புதிய போக்குகளை வடிவமைப்பதிலும், நிர்ணயிப்பதிலும் ஒரு இயக்கமாகவும், சிந்தனை பள்ளியாகவும் தர்க்கப்புலனறி வாதம் செயற்பட்டுள்ளது.

1920 ஆம் ஆண்டு மொறிஸ் சிலிக் ஆஸ்திரியாவில் வியன்னா பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இவரது தலைமையில் ஒரு மெய்யியல் சிந்தனைக் குழு உருவானது இது வியன்னா வட்டம் என பெயர் பெற்றது. இது தர்க்கப்புலனறி வாதமாக அறியப்படுகின்றது. பல்வேறு துறை சார்ந்தவர்களும் இதில் அங்கத்தவர்களாக இருந்தனர் உதாரணமாக, ஒட்டோநியூரத், வைஸ்மன், ஹன்ஸ் ஹான், றூடெல்வ் கார்ணப், மூவர், விக்கின்ஸ்ரைன் போன்றவர்கள் முக்கியமானவர்களாக காணப்படுகின்றனர்.

மெய்யியலை புதிய சிந்தனையின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தி பல்வேறு சிந்தனை போக்குகளை ஆராய்வது, அவற்றை விமர்சிப்பது, அதன் மூலம் அவற்றில் இருந்து மெய்யியலை விடுதலை பெறச்செய்வது என்ற அடிப்படையில் சிந்தனையாளர்கள் ஒன்றிணைந்து இருந்தனர். உண்மையில் தர்க்கப்புலனரி வாதிகள் மெய்யியலை தூய்மை செய்யவேண்டும், மெய்யியலைப் போலியான பௌதீகவதீத கொள்கையில் இருந்து வேறுபடுத்தி அதற்கு விஞ்ஞான ரீதியான அடிப்படைகளை வழங்கி அதை பாதுகாக்கவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

விஞ்ஞானங்களை ஒழுங்கமைத்தல், சரியான விஞ்ஞான முறைகளை உருவாக்குதல் விஞ்ஞானத்தின் மொழியை துல்லியப்படுத்துதல் என்பன போன்றவை தர்க்கப்புலனறி வாதிகளின் நோக்கங்களாக இருந்தன. அதிலும் குறிப்பாக ஒருமைப் படுத்தப்பட்ட விஞ்ஞானமாக மெய்யியல் விளக்கவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். எவ்வாறு கணிதத்தை நிச்சயெடுப்பாகவும், அறிவாகவும் கொள்கின்றோமோ அதே போன்று மெய்யியலும் அர்த்தமுள்ளதும், வலிதானதுமான, ஒருமைப்படுத்தப்பட்ட ஒரு அறிவை கொண்டதாக இருக்கவேண்டும் என்பது அவர்களுடைய இலட்சியமாக இருந்தது. இதற்காக வாய்ப்புப் பார்த்தல் விதி என்ற உரைகளை உருவாக்கினார்கள். இது என்னவென்றால் சொற்பதங்களை விளக்குவதன் மூலம் எடுப்புக்களின் அர்த்தத்தை பார்ப்பதுதான் வாய்ப்புபார்த்தல் ஆகும்.

தர்க்கப்புலனறி வாதம் மரபுவாத இறையியலின் அடிப்படைகளை எதிர்த்தது. ஒரு கூற்று அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால் அது அனுபவரீதியாக சோதனைக்கு உட்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். அவ்வாறு செய்யப்படக்கூடிய வாக்கியங்கள் தான் பொருளுடைய வாக்கியங்கள் ஆகும். உண்மையில் தர்க்கப்புலனறி வாதிகளின் இவ்வாறான நோக்கத்திற்கு, விக்கின்ஸ்ரைனின் தர்க்கத்துக்கும் மொழிக்கும் இடையிலான தொடர்பு பற்றிய கருத்துக்களும், பேட்டன் ரசலினுடைய அளவியல் கருத்துக்களும்,

டேவிட்ஹியூமினுடைய அனுபவவாத கருத்துக்களும், காண்டினுடைய அறிவாராய்ச்சியில் கருத்துக்களும் மிகவும் துணை நின்றன எனலாம்.

தர்க்கப்புலனறி வாதமானது ஒரு வகையில் பகுப்பாய்வு எனும் கருத்தினை அடிப்படையில் கொண்டிருந்தது. மெய்யலில் மொழியின் முக்கியத்துவம் 19ம், 20ம்நூற்றாண்டில் உணரப்பட்ட பொழுது மொழி பற்றிய பகுப்பாய்வு மெய்யியல் ஆய்வில் சிறப்பிடம் பெற்றது எனலாம். தர்க்கப்புலனறி வாதக் கருத்தானது எனஸ்ட் மாச்சினால் விளக்கப்பட்ட தர்க்க கொள்கையினையும் இணைந்த ஒரு முயற்சி எனக் குறிப்பிடலாம். தர்க்கப்புலனறி வாதிகள் அனுபவத்தில் கண்டறியக்கூடிய உண்மையினையும் அதன் படி நிறுவப்படக்கூடிய தகமையினையும் மெய்யியல் கொண்டிருக்கவேண்டும் எனக் கருதினார்.

தர்க்கப்புலனறி வாதிகள் உயர்நிலைப்பட்ட ஒழுக்கத்தினையும் மறுத்தனர் விழுமியங்கள் பற்றி கூற்றுக்கள் உலக அனுபவத்திற்கு அப்பாற்பட்டவை என்றும் பௌதிகஅதீதம் போல கருத்தற்ற தன்மையினால் நிராகரிக்கப்படவேண்டும் என்றனர். அயர் போன்றவர்கள் சாதாரணமாக நாம் காணுகின்ற ஒழுக்க கூற்றுகள் எவ்வாறு அர்த்தமற்றவை என்று விளக்கி நின்றார்.

அனுபவரீதியான வாய்ப்புப் பார்த்தல் என்ற கருத்தானது புலனரிவாதிகளின் முக்கிய கருவியாக இருந்தது அனுபவம் என்று கருத்தாக்கத்தை தெளிவுபடுத்தும் போது அது பிரிதோர்வருக்கு பரிமாறி கொள்ளத்தக்கவாரு இருப்பதாக கூறுகின்றார் பரிமாற்ற பண்பு என்பது அனுபவத்தின் அடிப்பட டைன்கிறார் ஓர் எடுப்பினுடைய அல்லது ஒரு கூற்றினுடைய அர்த்தத்தை அறிந்து கொள்வதற்கு ஓர் அடிப்படை உரைகள் வாய்ப்புப் பார்த்தல் விதியாகும் இதன்படி அர்த்தமுள்ள கூற்றுக்கள் இருவகையாக கையாளப்படுகின்றன ஒன்று கணிதம் சார்ந்த கூற்றுகள், கூறியது கூறல் கூற்றுக்கள், தர்க்க ரீதியான கட்டாயக் கூற்றுகள், மனித புலன்களினால் சிறப்பாக பௌதீகம், இரசாயனம், உயிரியல் முதலிய விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படும் முறைகளினால் உறுதி செய்யப்படக்கூடிய கூற்றுக்கள் என்பனவாகும்.

தர்கப்புலனறி வாதம் அர்த்தம் பற்றி விளக்குகின்றது. அர்த்தம் என்பதற்கு தர்க்கப்புலனறி வாதிகள் சுருக்கமாக புலனறிவுக்குதென்படுவதுதான் அர்த்தம் என குறிப்பிடுகின்றனர். இவர்கள் அர்த்தம் பற்றி குறிப்பிடும் போது எந்த ஒன்றும் விஞ்ஞானத்தில் சேர்க்கப்பட வேண்டுமாயின் அர்த்தமுடையதாக இருக்கவேண்டும் என்றும், அதற்கு உண்மைக்கான தர்க்கப்புலனறி முறை பயன்படுத்தப்படவேண்டும் என்றும், அர்த்தம் நேர்வுகளில் பொருந்தி இருக்கிறது என்பதை நிராகரிக்கின்றனனர். அர்த்தம் பற்றிய ஆய்வுக்கு விக்கின்ஸ்ரைன் படக் கொள்கையை முன்வைத்தார். மேலும் மொழியினை ஒழுங்குபடுத்துவதுடன், தெளிவாகுவதும் மெய்யியலின் கடமை என்பதனை உணர்த்துகின்றனர்.

தர்க்கப்புலனறி வாதம் வாய்ப்புப்பார்த்தல் கோட்பாட்டின் மூலம் அனுபவத்தில் வாய்ப்புபார்க்க கூடிய கூற்றுக்களை மாத்திரம் ஏற்றது. அதாவது அனுபவத்தில் வாய்ப்புபார்க்க முடியாத கூற்றுக்களை மெய்யலில் இருந்து அகற்றி எழுச்சி வாக்கியம் என்ற பகுதிக்குள் சேர்த்து விஞ்ஞானத்துக்கு சமமாக மெய்யியலை வளர்க்க முயன்றது. இன்றைய சூழலில் தர்க்கப்புலனறிவாதிகளின் கருத்துக்களை முழுமையாக ஏற்க முடியாவிட்டாலும் அவற்றினை

நிராகரிக்க முடியாது. இதனால் இவர்கள் ஒரு பார்வையில் வெற்றி பெற்றவர்கள் மற்றொருபார்வையில் தன்னகத்தை தவறினை கொண்டவர்கள் என்றும் மதிப்பிடலாம்.

**ரஞ்சன் ரமணி**

**நான்காம் வருடம், இரண்டாம் அரையாண்டு.**

**மெய்யியல் சிறப்பு (2018/2019)**

## *13. உளவளத்துணையில் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள்*

## *(Ethical Issues of Counselling)*

உளவளத்துணை என்பது உளவியலை அடிப்படையாக கொண்ட தொழில்வாண்மைமிக்க சமூகத்தை அபிவிருத்தி நோக்குடனும் உளவியல் ரீதியாக வளப்படுத்தும் ஒரு துறையாக இத்துறை விளங்குகின்றது. ஒரு மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவனாக இருப்பான். நாளாந்த வாழ்க்கை செயற்பாடுகளில் தனியாகவோ அல்லது குழுவாகவோ இயங்குகின்ற போது பல்வேறு பிரச்சனைகள், துன்பங்கள், இடர்பாடுகள், தோல்விகள், மனஅழுத்தங்கள், அடக்குமுறைகள், ஏமாற்றங்கள் போன்றவற்றில் உள்வாங்காமல் இருந்திருக்க முடியாது. அதற்கான சாத்தியமும் இல்லை. ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு பிரச்சனைக்கு முகம் கொடுத்திருந்திருப்பவனாகவே இருப்பான். மனிதன் எதிர்பாராமல் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளில் அதிக மனஅழுத்தத்திற்கு உள்ளாகின்றான். பிரச்சனையில் இருக்கும் ஒரு நபரை நம்பிக்கையூட்டும் வகையில் ஆலோசனை வழிகாட்டல் வழங்கி தான் யார் என்பதனை குறித்த பிரச்சனையில் இருக்கும் நபர் அறிய வைத்து அவனை சிறந்த ஒரு நபராக மாற்றுவதற்கு உளவளத்துணை மிக முக்கியமான ஒரு அங்கமாக விளங்குகின்றது.

இவ்வாறு ஓர் சமூகத்திற்கு சிறப்பான சேவையை வழங்குகின்ற உளவளத்துணையில் காணப்படுகின்ற ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள் எனும் போது உளவளத்துணையில் (Ethics) எனும் கருத்தாக்கமானது மிகவும் முக்கியமானதாகும். ‘‘ஒழுக்கம்’’ என்னும் பதமானது கிரேக்க (Greek) சொல்லில் இருந்து வந்ததாகும். ஆனாலும் இது ஓர் குழப்பகரமான, முரண்பாடான சொற்பதமாகும். ஒழுக்கம் சில நடத்தை நியமங்களைத்தன்னகத்தே கொண்டுள்ளது. ஒழுக்க விழுமியங்கள் மனித வாழ்க்கையில் எந்த அளவிற்கு முக்கியமோ அந்த அளவுக்கு தனிமனித நடத்தையும் சமூக நடத்தையும் ஆரோக்கியமானதாக அமையும். இவை ஒவ்வொருவரின் பார்வையில் வெவ்வேறு மாதிரியாக அமையும். ஒழுக்கமானது சிலரின் பார்வையில் சரியாகவும், தவறாகவும் அமைந்தாலும் ஒரு பொதுவான நியதிக்கு அல்லது நியமங்களுக்கு உட்பட்டே இவைகள் காணப்படுகின்றது.

உளவளத்துணையாளருக்கும் துணைநாடிக்கும் இடையே உளவளத்துணைச் செயற்பாடு நிகழும்போது துணைநாடி தன் ‘‘சுயத்தை இழத்தல்’’ என்னும் நிலை ஏற்படுகின்றது. இதன்போது தனிப்பட்ட விடயம், பிரச்சினை. வாழ்க்கைமுறை, வெளியில் சொல்லமுடியாத இரகசியம் என்பவற்றை எல்லாம் துணைநாடி உளவளத்துணையாளருடன் பகிர்ந்துக் கொள்கின்றார். இதனால் துணைநாடி தொடர்பான விடயங்களையும் உளவளத்துணையாளர் அறிந்துகொள்வதனால் உளவளத்துணையில் ஒழுக்கம்சார் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இதனால் சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளை (Counseling Ethics) அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற உளவியற் சங்கங்கள் உளவளத்துணை ஒழுக்கங்கள் தொடர்பான பல ஒழுக்க நியமங்களைத் தந்துள்ளது.

உளவளத்துணையில் ஒழுக்க நடைமுறைகள் முன்வைக்கப்பட்டாலும் அது எந்த அளவிற்கு உளவளத்துணையில் பயன்படுத்தப்படுகின்றது என்பது கேள்விக்குறியே. ஆனாலும் இவ் ஒழுக்கத்தைப் பேணுவதில் உளவளத்துணையாளர் இடர்களுக்கு முகம் கொடுக்கின்றார் என்பதையும் குறிப்பிட

வேண்டும். மேலும் நாட்டுக்கு நாடு, கலாசாரத்திற்கு கலாசாரம் சில உளவளத்துணை ஒழுக்க விழுமியங்கள் மாறுபட்டுக் காணப்படும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். உளவளத்துணையில் ஒழுக்க விழுமியங்கள் இலங்கையைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்குக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது கேள்விக்குறியே.

ஒழுக்கக் கொள்கைகளின் அடிப்படையில் உளவளத்துணை வழங்கலின் போது பல ஒழுக்கம்சார் பிரச்சினைகள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. எனினும் மேற்படி உளவளத்துணை சார்ந்த ஒவ்வொரு கொள்கைகளையும் அது கூறுகின்ற வழிமுறைகளின் அடிப்படையில் உளவளத்துணைச் செயன் முறைகளை மேற்கொள்கின்ற போது பல சவால்கள் ஏற்படுகின்றது. ஒழுக்கநெறிமுறை ரீதியான சில பிரச்சினைகள் அநேகமாக உளவளத்துணை வழங்கல் சார்ந்த நடைமுறை முரண்பாடுகளை தோற்றுவிக்கக் கூடும். எனவே உளவளத்துணையில் உளவளத்துணையாளர், பயிற்சியாளர் குறித்த முரண்பாடுகளைத் தவிர்க்கச் சூழ்நிலைக்கேற்ற, பொருத்தமான, சரியான ஒழுக்கம்சார் விடயங்களை உளவளத்துணையில் பயன்படுத்த வேண்டும்.

ஆலோசனை வழங்குதலில் ரகசியத்தன்மை என்பது ஒரு முக்கிய கோட்பாடு. துணைநாடி தங்கள் தனிப்பட்ட கதைகள், உணர்வுகள் மற்றும் போராட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, இந்த தகவல் தனிப்பட்டதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் அவ்வாறு செய்கிறார்கள். இது திறந்த மற்றும் நேர்மையாக துணைநாடி இருக்கக்கூடிய பாதுகாப்பான சூழலை உருவாக்குகிறது. இருப்பினும், ஆலோசகர்கள் சில நேரங்களில் தந்திரமான நீரில் செல்ல வேண்டும், அதாவது துணைநாடி அல்லது மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் அபாயம் இருக்கும்போது. இந்தச் சூழ்நிலைகளில், ஆலோசகர் ரகசியத்தன்மையைப் பாதுகாக்கும் கடமையுடன் சமநிலைப்படுத்தும் நெறிமுறை சங்கடத்தை எதிர்கொள்கிறார்.

தகவலறிந்த ஒப்புதல் மற்றொரு முக்கியமான அம்சமாகும். ஆலோசனை வழங்குவதில் பயன்படுத்தப்படும் முறைகள், சாத்தியமான அபாயங்கள், நன்மைகள் மற்றும் ஏதேனும் மாற்று அணுகுமுறைகள் உட்பட ஆலோசனை என்ன என்பதை வாடிக்கையாளர்கள் முழுமையாக அறிந்திருக்க வேண்டும். இந்த வெளிப்படைத்தன்மை துணைநாடிகள் ஆலோசனை செயல்பாட்டில் விருப்பத்துடனும், என்ன எதிர்பார்க்கலாம் என்பது பற்றிய தெளிவான புரிதலுடனும் பங்கேற்கிறார்கள் என்பதை உறுதி செய்கிறது. இருப்பினும், சிக்கலான தகவல்களை அனைத்து துணைநாடிகளும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தெரிவிப்பது சவாலானது, ஆலோசகர் அவர்களின் விளக்கங்களில் தெளிவாகவும் இரக்கமாகவும் இருக்க வேண்டும்.

ஆலோசனை வழங்குவதில் திறமை என்பது ஆலோசகரின் பொறுப்பை உள்ளடக்கியது, அவர் நிபுணத்துவம் பெற்ற பகுதிகளில் மட்டுமே சேவைகளை வழங்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், அவர்கள் தொடர்ந்து கல்வி மற்றும் தொழில்முறை மேம்பாடு மூலம் தங்கள் அறிவு மற்றும் திறன்களை புதுப்பிக்க முயற்சிக்க வேண்டும். சில சமயங்களில் ஒரு ஆலோசகர் தன்னுடைய நடைமுறைக்கு அப்பாற்பட்ட ஒரு வழக்கைச் சந்திக்கலாம், அறநெறிப்படி, அவர்கள் துணைநாடியை மிகவும் தகுதிவாய்ந்த நிபுணரிடம் பரிந்துரைக்க வேண்டும். ஒருவரின் வரம்புகளை அங்கீகரிப்பது மற்றும் மேற்பார்வை அல்லது ஆலோசனையைப் பெறுவது தொழில்முறை ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும் துணைநாடி நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் முக்கியமானது.

ஆலோசகரின் புறநிலை மற்றும் செயல்திறனைக் குறைக்கக்கூடிய இரட்டை உறவுகளைத் தடுக்க தெளிவான எல்லைகளை நிறுவுவதும் பராமரிப்பதும் அவசியம். சிகிச்சை சூழலுக்கு வெளியே ஆலோசகர் வாடிக்கையாளருடன் மற்றொரு குறிப்பிடத்தக்க உறவைக் கொண்டிருக்கும்போது இரட்டை உறவுகள் ஏற்படுகின்றன, இது நலன் முரண்பாடுகள் மற்றும் சாத்தியமான சுரண்டலுக்கு வழிவகுக்கும். சிறிய சமூகங்கள் அல்லது குறிப்பிட்ட கலாச்சார சூழல்களில், இந்த இரட்டை உறவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கலாம், தொழில்முறை எல்லைகளை பராமரிக்க கூடுதல் விழிப்புணர்வு தேவைப்படலாம்.

கலாச்சார உணர்திறன் என்பது துணைநாடிகளின் மாறுபட்ட பின்னணிகள் மற்றும் அனுபவங்களை அங்கீகரித்து மதிப்பதாகும். பயனுள்ள ஆலோசனைக்கு கலாச்சார, சமூக மற்றும் தனிப்பட்ட காரணிகள் ஒரு நபரின் அனுபவத்தையும் அவர்களின் பிரச்சினைகளின் உணர்வையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வது தேவைப்படுகிறது. ஆலோசகர்கள் கலாச்சார சார்புகள் மற்றும் ஒரே மாதிரியான வகைகளைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும், அனைத்து துணைநாடிகளும் புரிந்துகொள்ளப்பட்டு மதிக்கப்படுகிறார்கள் என்று உணரும் இடத்தை வழங்கவேண்டும். இது பெரும்பாலும் கலாச்சார திறனை வளர்ப்பதற்கான தொடர்ச்சியான கல்வி மற்றும் சுய பிரதிபலிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

ஆலோசனை அமர்வுகளின் துல்லியமான மற்றும் பாதுகாப்பான பதிவுகள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்யும் ஒரு நெறிமுறை மற்றும் சட்டபூர்வமான தேவை பதிவேடு பராமரிப்பு ஆகும். பராமரிப்பு, சட்டப் பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை ஆகியவற்றின் தொடர்ச்சிக்கு இந்த பதிவுகள் முக்கியமானவை. எவ்வாறாயினும், ஆலோசகர்கள் முழுமையான ஆவணங்களின் தேவையை துணைநாடி தனியுரிமையைப் பாதுகாப்பதற்கான கட்டாயத்துடன் சமப்படுத்த வேண்டும், பதிவுகள் சட்டத் தரங்களின்படி ரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

தொழில்முறை பொறுப்பு என்பது நெறிமுறை தரங்களை நிலைநிறுத்துதல் மற்றும் ஒருவரின் நேர்மையைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. எரிவதைத் தடுக்க சுய பாதுகாப்பு இதில் அடங்கும், இது வழங்கப்பட்ட கவனிப்பின் தரத்தை சமரசம் செய்யும். ஆலோசகர்கள் தங்கள் சொந்த உணர்ச்சி நல்வாழ்வை நிர்வகிக்க வேண்டும் மற்றும் சிக்கலான அல்லது சவாலான வழக்குகளை எதிர்கொள்ளும்போது மேற்பார்வை அல்லது ஆலோசனையைப் பெற வேண்டும். நிபுணத்துவத்தைப் பேணுவது என்பது தொழில்முறை நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளால் அமைக்கப்பட்ட நெறிமுறை வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதையும் உள்ளடக்குகிறது.

ஆலோசகர் மற்றும் சேவைநாடி உறவில் நம்பிக்கையைப் பேணுவதற்கு நலன் முரண்பாடுகளை நிர்வகிப்பது மிக முக்கியம். ஆலோசகர்கள் தங்கள் தொழில்முறை முடிவுகளை தனிப்பட்ட நலன்கள் பாதிக்கக்கூடிய சூழ்நிலைகளைத் தவிர்ப்பதில் விழிப்புடன் இருக்க வேண்டும். சேவைநாடியின் நலன் முதன்மையமாக இருப்பதை உறுதிப்படுத்த இதற்கு சுய விழிப்புணர்வு மற்றும் சில நேரங்களில் கடினமான உரையாடல்கள் தேவை.

ஆலோசனையில் நெறிமுறை முடிவெடுத்தல் சிக்கலான தார்மீக சங்கடங்களை வழிநடத்த ஒரு கட்டமைக்கப்பட்ட செயல்முறையை உள்ளடக்கியது. ஆலோசகர்கள் நெறிமுறை வழிகாட்டுதல்கள், சட்டத் தேவைகள் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படக்கூடிய தாக்கம் உள்ளிட்ட அனைத்து

தொடர்புடைய காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இது பெரும்பாலும் போட்டியிடும் நெறிமுறைக் கொள்கைகளை சமநிலைப்படுத்துதல் மற்றும் தெளிவான சரியான அல்லது தவறான பதில் இல்லாத சூழ்நிலைகளில் முடிவுகளை எடுப்பதைக் குறிக்கிறது. முடிவெடுக்கும் மாதிரியைப் பயன்படுத்துவது ஆலோசகர்கள் தங்கள் விருப்பங்களை முறையாக மதிப்பீடு செய்யவும், நெறிமுறை தரங்களுடன் சிறப்பாக ஒத்துப்போகும் நடவடிக்கையைத் தேர்வுசெய்யவும் உதவும்.

ஒட்டுமொத்தமாக, தொழில்முறை ஆலோசனையில் நெறிமுறை சிக்கல்கள் பன்முகத்தன்மை கொண்டவை மற்றும் தொடர்ச்சியான பிரதிபலிப்பு, கல்வி மற்றும் உயர் தரமான நடைமுறைக்கான அர்ப்பணிப்பு தேவை. இந்த சவால்களை சிந்தனையுடன் எதிர்கொள்வதன் மூலம், ஆலோசகர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த கவனிப்பை வழங்குவதை உறுதிசெய்ய முடியும், அதே நேரத்தில் தொழிலின் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த முடியும்.

**நிமேஷா தியாகராஜா**

**நான்காம் வருடம் இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2018/2019)**

## *14. மருத்துவர் மற்றும் நோயாளியின் உறவு – ஒரு மருத்துவ ஒழுக்கவியல்சார் ஆய்வு*

மருத்துவர்-நோயாளி உறவுமுறையானது பாரம்பரியமான தந்தைவழி மாதிரியிலிருந்து வேகமாக வளர்ந்து வரும் சுகாதார நிலப்பரப்பில் கூட்டாண்மை அடிப்படையிலான அணுகுமுறையாக மாறியுள்ளது. மருத்துவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையே நம்பிக்கையை வளர்ப்பது மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பது மிகைப்படுத்தப்பட முடியாது. இந்த முன்னுதாரண மாற்றத்தைத் தழுவுவதன் மூலம், மேம்படுத்தப்பட்ட தகவல்தொடர்பு, பகிரப்பட்ட முடிவெடுத்தல் மற்றும் நோயாளிக்கு அதிகாரமளித்தல் உள்ளிட்ட பல நன்மைகளை சுகாதார வல்லுநர்கள் திறக்க முடியும். தொழில்நுட்பத்தின் விரைவான பரிணாம வளர்ச்சி, நோயாளியின் தகவல் மற்றும் மருத்துவத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியுடன், மருத்துவர்-நோயாளி உறவை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தின் பங்கைப் புரிந்துகொள்வது மற்றும் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கும் நடைமுறை உத்திகளைக் கொண்டிருப்பது காலத்தின் தேவை.

பயனுள்ள சுகாதார விநியோகத்தின் மையத்தில் நம்பிக்கை உள்ளது, இது மருத்துவர்-நோயாளி உறவின் அடிப்படைக் கூறு ஆகும். நோயாளிகள் வசதியாகவும், நம்பிக்கையுடனும், மரியாதையுடனும் உணர, திறந்த தொடர்பு மற்றும் ஈடுபாட்டை வளர்ப்பதற்கு நம்பிக்கை அவசியம். நம்பிக்கையானது நோயாளியின் திருப்தி, சிகிச்சையைப் பின்பற்றுதல் மற்றும் ஆரோக்கிய விளைவுகளைச் சாதகமாக பாதிக்கிறது என்பதை ஆராய்ச்சி தொடர்ந்து காட்டுகிறது. நோயாளிகள் தங்கள் சுகாதார வழங்குநர்களை நம்பும் போது, அவர்கள் தங்கள் கவனிப்பில் பங்கேற்கவும், பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை திட்டங்களை தீவிரமாக பின்பற்றவும் வாய்ப்புள்ளது.

### மருத்துவர்-நோயாளி உறவில் நம்பிக்கையின் நன்மைகள்

நம்பிக்கையை நிலைநாட்டும்போது, மருத்துவர்-நோயாளி உறவில் பல நன்மைகளுக்கு வழி வகுக்கும். தங்கள் மருத்துவர்களை நம்பும் நோயாளிகள் அதிக திருப்தி, கேட்டது, மரியாதை மற்றும் தங்கள் உடல்நலப் பயணத்தில் சுறுசுறுப்பாக ஈடுபடுவதாக உணர்கிறார்கள். நோயாளிகள் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள், வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பின்தொடர்தல் சந்திப்புகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதால், நம்பிக்கையானது சிகிச்சையைப் பின்பற்றுவதையும் சாதகமாக பாதிக்கிறது. நம்பகமான மருத்துவர்-நோயாளி உறவு ஆரோக்கிய விளைவுகளையும் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் மேம்படுத்தும்.

### நம்பிக்கை மற்றும் கூட்டாண்மையை உருவாக்குவதில் தொழில்நுட்பத்தின் பங்கு

நம்பிக்கையை வளர்ப்பதிலும், சுகாதாரப் பாதுகாப்பில் கூட்டாண்மைகளை வளர்ப்பதிலும் தொழில்நுட்பம் முக்கியமானது. அணியக்கூடிய மருத்துவ சாதனங்கள், டெலிமெடிசின்

இயங்குதளங்கள், பாதுகாப்பான செய்தியிடல் பயன்பாடுகள் மற்றும் மின்னணு சுகாதாரப் பதிவுகள் மருத்துவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையே தடையற்ற தகவல்தொடர்புகளை செயல்படுத்துகின்றன. இந்த கருவிகள் அணுகல்தன்மையை மேம்படுத்துகிறது, சரியான நேரத்தில் ஆலோசனைகளை எளிதாக்குகிறது மற்றும் நோயாளிகள் தங்கள் கவனிப்பில் தீவிரமாக ஈடுபட உதவுகிறது. மேலும், நோயாளி போர்ட்டல்கள் மற்றும் சுகாதார பயன்பாடுகள் கல்வி ஆதாரங்கள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சுகாதார தகவலை வழங்குகின்றன, நோயாளியின் அதிகாரமளிப்பை ஊக்குவிக்கின்றன மற்றும் சுகாதார வழங்குநர்களுடன் கூட்டு உணர்வை வளர்க்கின்றன.

**அணியக்கூடிய மருத்துவ சாதனங்கள் மூலம் மருத்துவர்-நோயாளி உறவை மேம்படுத்துதல்**

அணியக்கூடிய மருத்துவ சாதனங்களான ஃபிட்னஸ் டிராக்கர்கள், ஸ்மார்ட்வாட்ச்கள் மற்றும் ரிமோட் கண்காணிப்பு சாதனங்கள், நோயாளிகள் தங்கள் ஆரோக்கியத்தை தினமும் நிர்வகிக்கும் விதத்தில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சாதனங்கள் முக்கிய அறிகுறிகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், உடல் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் மற்றும் நோயாளிகளுக்கு நிகழ்நேர கருத்துக்களை வழங்கவும் வழிவகை செய்கின்றன. நோயாளிகளின் வாழ்க்கையில் தடையின்றி ஒருங்கிணைப்பதன் மூலம், அணியக்கூடிய சாதனங்கள் தனிநபர்களுக்கு அவர்களின் உடல்நிலையை முன்கூட்டியே கண்காணிக்கவும், முன்கூட்டியே எச்சரிக்கை அறிகுறிகளைக் கண்டறியவும் மற்றும் அவர்களின் நல்வாழ்வைப் பற்றிய தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது. அணியக்கூடிய சாதனங்களும் மருத்துவர்-நோயாளி உறவை வலுப்படுத்துகின்றன. இந்த சாதனங்கள் மருத்துவர்களுக்கு புறநிலை மற்றும் துல்லியமான தரவை வழங்குகின்றன, மேலும் தகவலறிந்த முடிவெடுக்கும் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சை திட்டங்களை செயல்படுத்துகின்றன. ஆலோசனைகளின் போது அணியக்கூடிய சாதனத் தரவை மேம்படுத்துவதன் மூலம், மருத்துவர்கள் நோயாளிகளுடன் அர்த்தமுள்ள விவாதங்களில் ஈடுபடலாம், ஒத்துழைப்போடு போக்குகளை பகுப்பாய்வு செய்யலாம், முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காணலாம் மற்றும் யதார்த்தமான சுகாதார இலக்குகளை அமைக்கலாம். இந்த பகிரப்பட்ட முடிவெடுக்கும் செயல்முறை நம்பிக்கையை உருவாக்குகிறது, ஏனெனில் நோயாளிகள் மருத்துவர்களை தங்கள் நல்வாழ்வில் பங்குதாரர்களாக கருதுகின்றனர்.

பல ஆய்வுகள் மருத்துவர்-நோயாளி உறவில் அணியக்கூடிய சாதனங்களின் மாற்றத்தக்க தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, நீரிழிவு போன்ற நாட்பட்ட நிலைமைகள் உள்ள நோயாளிகள், தங்கள் இரத்த சர்க்கரை அளவை தொடர்ந்து கண்காணிக்க அணியக்கூடிய குளுக்கோஸ் மானிட்டர்களைப் பயன்படுத்தலாம். இந்தத் தரவு, மருத்துவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது, சிகிச்சைத் திட்டங்களில் சரியான நேரத்தில் மாற்றங்களைச் செயல்படுத்துகிறது, இது மேம்பட்ட நோய் மேலாண்மை மற்றும் குறைக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு வழிவகுக்கும். அணியக்கூடிய தொழில்நுட்பத்தைத் தழுவுவதன் மூலம், மருத்துவர்கள் அவ்வப்போது கிளினிக் வருகைகள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு ஆகியவற்றுக்கு இடையேயான இடைவெளியைக் குறைக்கலாம், இதனால் நம்பிக்கை மற்றும் சிறந்த நோயாளி விளைவுகளை வளர்க்கலாம்.

**நம்பிக்கையை உருவாக்குதல் மற்றும் கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கான உத்திகள்**

நம்பிக்கை மற்றும் நீடித்த கூட்டாண்மைகளை நிறுவ, சுகாதார வழங்குநர்கள் பயனுள்ள உத்திகளைப் பயன்படுத்தலாம். செயலில் கேட்பது நோயாளிகளின் கவலைகளுக்கு மரியாதை அளிக்கிறது மற்றும் அவர்களின் தனிப்பட்ட தேவைகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. பயனுள்ள தகவல்தொடர்பு புரிதலை மேம்படுத்துகிறது மற்றும் நோயாளியின் ஈடுபாட்டை வளர்க்கிறது. பகிரப்பட்ட முடிவெடுப்பது அவர்களின் பராமரிப்பில் உரிமையையும் முதலீட்டையும் வளர்க்கிறது.

கூடுதல் கூறுகள் மருத்துவர்-நோயாளி உறவை பலப்படுத்தலாம். வெளிப்படையான விலை நிர்ணயம் நோயாளிகளுக்கு தகவலறிந்த முடிவுகளை எடுக்க அதிகாரம் அளிக்கிறது. தொழில்நுட்பம் அறிக்கையிடல் மற்றும் நிதி அம்சங்களை ஒழுங்குபடுத்துகிறது, நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையை வளர்க்கிறது. மருத்துவப் பில்கள் மற்றும் மருந்துச் சீட்டுகளைப் புரிந்துகொள்வதற்கும், வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கும் துணைப் பணியாளர்கள் உதவுகிறார்கள். தரம் மற்றும் நிபுணத்துவத்தில் உள்ள நிலைத்தன்மை, சுகாதார அமைப்பில் நோயாளியின் நம்பிக்கையை பலப்படுத்துகிறது. வசதிகள் முழுவதும் ஒரு சீரான தரமான பராமரிப்பு நம்பிக்கையை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த உத்திகளைத் தழுவுவதன் மூலம், நோயாளியின் முன்னோக்குகளை மதிப்பிடும், நம்பிக்கையை வளர்க்கும் மற்றும் நீடித்த கூட்டாண்மைகளை வளர்க்கும் சூழலை மருத்துவர்கள் வளர்க்கின்றனர். இந்த அணுகுமுறை வெளிப்படையான தகவல் தொடர்பு, நெறிப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம், நிதி உதவி மற்றும் சீரான தரமான பராமரிப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இறுதியில், இந்த முயற்சிகள் நம்பிக்கை மற்றும் புரிதலின் அடிப்படையில் வலுவான மருத்துவர்-நோயாளி உறவுமுறைக்கு பங்களிக்கின்றன. மருத்துவர்-நோயாளி உறவு குறிப்பிடத்தக்க மாற்றத்தை அனுபவித்து வருகிறது, தந்தைவழியில் இருந்து விலகி கூட்டாண்மை அடிப்படையிலான மாதிரியை நோக்கி நகர்கிறது. இந்த வளர்ந்து வரும் நிலப்பரப்பில் நம்பிக்கையை வளர்ப்பதும் ஒத்துழைப்பை வளர்ப்பதும் மிக முக்கியமானது. அணியக்கூடிய மருத்துவ சாதனங்களைத் தழுவி, தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம், மருத்துவர்கள் தகவல்தொடர்புகளை மேம்படுத்தலாம், பகிரப்பட்ட முடிவெடுப்பதை எளிதாக்கலாம் மற்றும் நோயாளிகள் தங்கள் பராமரிப்பில் தீவிரமாக பங்கேற்க உதவலாம். செயலில் கேட்பது, பயனுள்ள தொடர்பு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் மூலம், சுகாதார வழங்குநர்கள் தங்கள் நோயாளிகளுடன் நம்பிக்கையை வளர்த்து, நீடித்த கூட்டாண்மைகளை வளர்க்க முடியும். இந்த மருத்துவர் தினத்தில், இந்த முன்னுதாரண மாற்றத்தைத் தழுவி, நமது தொடர்புகளில் நம்பிக்கையை முதன்மைப்படுத்த முடிவு செய்வோம், மேம்பட்ட நோயாளி திருப்தி, சிகிச்சையைப் பின்பற்றுதல் மற்றும் இறுதியில் சிறந்த ஆரோக்கிய விளைவுகளுக்கு வழி வகுக்கும்.

**நமசிவாயம் விஜயநந்தனி**

**நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு.**

**மெய்யியல் சிறப்பு (2018/2019**

## *15. சிறுவர் கல்வி உரிமையும் நடைமுறைகளும் ஐக்கிய நாடுகள் சபை பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு*

மனித வகுப்பில் சிறுவர்கள் என்ற பகுப்பில் யாரை உள்ளடக்குவது என்ற சிக்கல்கள் ஆரம்பத்தில் காணப்பட்டது. இந்த 'சிறுவர்கள்' என்ற பதமானது ஆண்கள், பெண்கள் என்ற இருபாலரையும் உள்ளடக்கும் என்பதிலே ஒருமைப்பாடு காணப்பட்ட போதிலும் எந்த வயதுக் குழுவினரை சிறுவர்கள் என்ற வகுப்பில் உள்ளடக்கலாம் என்ற சர்ச்சையானது தொடர்ந்தது. பல நாடுகள் பதின்நான்கு வயதிற்கு உட்பட்டவர்களே சிறுவர்கள் என்றும் இன்னும் சில நாடுகள் பதினாறு வயதிற்கு உட்பட்டவர்களே சிறுவர்கள் என்றும் வகைப்படுத்தினார்கள். இறுதியில் இந்த முரண்பாடுகளுக்கான தீர்வினை ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமை திட்டத்தின் மூலம் ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் உறுப்புரை ஒன்றின் பிரகாரம் ''பதினெட்டு வயதிற்கு குறைந்த மனித பிறவிகள் ஒவ்வொன்றும் சிறுவர்'' என கருதப்பட்டது. இந்த வயது எல்லையானது ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளில் ஏற்றுக் கொள்வதில் சிக்கல் நிலையானது தோன்றியது. காரணம் ஒரு நாட்டின் சூழ்நிலையும் பிள்ளைகள் பராயம் அடைகின்ற தன்மையில் தாக்கத்தினை செலுத்தியமையினால் ஆகும். இருப்பினும் பாதுகாப்பு குறித்த ஏற்பாடுகளில் வயது எல்லையானது மாறுபட்ட வகையில் அமைந்திருப்பது இங்கே கருதத்தக்க விடயம் ஆகும். இலங்கையினைப் பொறுத்த வரையில் பல்வேறு சட்டங்களிலும் வேறுபட்ட வயதெல்லை ''சிறுவர்'' என்ற சொற் பிரயோகத்தினைப் பிரதிபலிக்கின்றன. தண்டனைச் சட்டக் கோவை சட்டம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம், பராமரிப்புச் சட்டம் என்பவற்றில் பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்கள் என குறிப்பிடப்படுகின்றது.

பிள்ளை ஒன்றை பெற்றோருக்கு ஊடாகவே உலகிற்கு அறிமுகம் செய்கின்றது. குடும்பத்தில் இருந்து சமூகம் நோக்கி வளரும் ஒவ்வொரு சிறுவர்களும் உயிர் வாழும் உரிமை, பிள்ளைகளின் பாதுகாப்பு உரிமை, பங்கேற்கும் உரிமை போன்ற உரிமைகளைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு வீட்டிற்கும் நாட்டிற்கும் பெறுமதிமிக்க வளம் சிறுவர்களே ஆவர். இன்றைய சிறுவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள். எனவே சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் அவசியம் ஆகும். ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்திலும், மனித உரிமைகள் மீதான சர்வதேச ஒருமைப்பாடுகளிலும் வரையறுக்கப்பட்டுள்ள சகல உரிமைகளும் சாதி, நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கோட்பாடுகள், தேசிய சமூகப் பூர்விகம், ஆதனம், பிறப்பு அல்லது தராதரம் போன்ற எத்தகைய பாகுபாடுகளும் இன்றி ஒவ்வொருவருக்கும் உரியனவெனப் பிரகடனம் செய்ததனை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். மனித உரிமைகளைப் பேணிக் காப்பதற்கு அடிப்படையாக அமைவது என்னவெனில் இளம் பராயத்தினருக்கு அப்பராயத்தில் பாதுகாப்பும் கல்வியும் உயர்ந்த சிந்தனைகளுமே ஆகும். சிறுவர்களை உரிய காலத்தில் அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்கிப் பேணாது விடுவதே உலகளாவிய ரீதியில் மனித உரிமை

மீறல்களுக்கு வழி செய்கின்றது. இதனைப் புரிந்து கொண்டு செயற்படாமையே மனித குல அவலங்களுக்கு உலகமானது முகங் கொடுத்துள்ளது என்பதனை மறுக்க முடியாது.

சிறுவர்கள் என்போர் மனித வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் உள்ளவர்கள். இவர்களை பேணிப் பாதுகாப்பது அனைவரினதும் கடமை ஆகும். ஆனால் மனித சமூகம் சிறு வயதினர் விடயத்தில் போதிய அக்கறையினை காட்டுவதில்லை. சிறுவர் சமுதாயம் உரிய உரிமைகளை அனுபவிக்காததால் பின்னாளில் வளந்தோராகும் போது வாழ வேண்டிய முறையில் வாழாது வழி தவறிச் செல்லும் நிலை ஏற்படுகின்றது. அதனாலேயே இன்று சிறுவர் உரிமைகள் தொடர்பில் அதிகமாகப் பேசப்படுகின்றது. அதற்காகப் பல சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதலாம் திகதி சிறுவர் தினமாக உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. கூட்டங்கள், விழாக்கள், அறிக்கைகள், கலை நிகழ்வுகள் என அந்த ஒரு நாள் மட்டும் ஏதோ ஆரவாரிக்கப்படுகின்றது.

1989 ஆம் ஆண்டு சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தின் படி உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகளை பிரதானமாக நான்கு வகைகளாக வகைப்படுத்துகின்றனர். அவையாவன உயிர் வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, அபிவிருத்தி உரிமை, பங்கேற்பு உரிமை என்பனவாகும்.

சிறுவர்களுக்கான உரிமைகளுள் முதன்மையான உரிமை உயிர் வாழ்வதற்கான உரிமை ஆகும். அரசாங்கம் இயன்றவரை அதனை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. உயிர் வாழும் உரிமை என்பதனை நோக்கும் போது ஒரு பிள்ளையின் வாழ்வையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்தல் வேண்டும். சுகாதார வசதிகள், சேவைகள், உணவு, நீர், வதிவிடம் உட்பட போதுமான அளவு வாழ்க்கைத் தரத்தை உரித்தாக்கிக் கொள்ளும் உரிமை, யுத்தம், இயற்கை அனர்த்தம், எயிட்ஸ், மந்த போசனை, அபாயகரமான தொழிலில் அமர்த்துதல் மற்றும் சித்திரவதை போன்ற எல்லா வகையான ஆபத்துக்களில் இருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்ளல் என்பன வாழும் உரிமைக்குள் உள்ளடங்குகின்றது. அத்தோடு சிறுவர்கள் தத்தமது உரிமையை பாதுகாத்துக் கொள்ளும் உரிமையும் வாழும் உரிமைக்குள் அடங்குகின்றது.

பாதுகாப்பு உரிமை எனும் போது உடல் ரீதியாக பாதிப்புற்றுள்ள குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள், பெற்றோர் பிரிந்த பிள்ளைகள், வேலைக்காரப்பிள்ளைகள், பாலியல் ரீதியான இம்சைகளுக்கு ஆளான பிள்ளைகளை பாதுகாப்பதாகும். உடலியல், உளவியல் வன்முறைகள் போன்ற சகல வகையான தீங்குகளிலும் இருந்து சிறுவர்களை பாதுகாப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். அத்தோடு உளத்தைப் பாதிக்கும் சட்ட விரோதமான பொருட்களை பிள்ளை பாவிப்பதை நிறுத்தி பிள்ளையப் பாதுகாப்பதற்கான பொருத்தமான சட்ட, நிர்வாக, சமூக மற்றும் கல்வி நடவடிக்கைகளையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தி உரிமை எனும் போது சிறுவர்களை வளர்ப்பதிலும் அபிவிருத்தி அடையச் செய்வதற்குமான ஆரம்ப பொறுப்பு பெற்றோரிடம் அல்லது அவர்களை பாதுகாக்கும் சட்ட முறையான பாதுகாவலரிடம் உள்ளது. தனது சொந்த திறன்களின் படி ஒவ்வொரு பிள்ளைக்கும் வாய்ப்பினை வழங்கல், கல்வியைப் பெறல், ஓய்விலும் பொழுது போக்கிலும்

கலாசார விவகாரங்களிலும் ஈடுபடுவதற்கான உரிமையை வழங்கல் என்பன அபிவிருத்தி உரிமையாகும்.

எல்லா வகையான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஃபிரயோகத்தில் இருந்து சிறுவர்களை அரசு பாதுகாக்க வேண்டும். சிறுவர் கடத்தல், விற்றல் மற்றும் பலாத்காரமாக கொண்டு செல்லல் என்பவற்றை அரசு தடுத்தல் வேண்டும். எந்த ஒரு பிள்ளையும் சித்திரவதைக்கோ அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற நடத்தைக்கோ அல்லது தண்டனைக்கோ உட்படுத்தலாகாது என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறான உரிமைகள் பாதுகாப்பு உரிமைக்குள் உள்ளடங்குகின்றன.

பங்கேற்பு உரிமை எனும் போது இதில் கருத்துக்களை வெளியிடல், தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், சிந்தித்தல், மனசாட்சிப்படி நடத்தல், மத நம்பிக்கைகளைக் கொண்டிருத்தல், சமுகத்தில் செயற்பாடான பொறுப்புக்களை வகித்தல் போன்றவை தொடர்பாக பிள்ளைகளுக்கு உள்ள உரிமைகளை குறிப்பிடுகின்றது. அத்தோடு தானாக முன்வந்து கருத்து தெரிவிக்கும் பிள்ளையின் கருத்து சுதந்திரம் அரசால் வழங்கப்பட வேண்டும். மற்றும் தகவலைத் தேடவும் பெறவும் பிறருக்கு பரிமாறவும் பிள்ளைக்கு சுதந்திரம் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட நான்கு விடயங்கள் தொடர்பாக பிள்ளையின் உரிமையை பாதுகாப்பதன் பொருட்டு சிறுவர் உரிமை ஒப்பந்தம் ஐம்பத்து நான்கு பிரமாணங்களைக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் இலங்கையிலும் சரி உலகளாவிய ரீதியில் வளர்ந்து வரும் நாடுகளிலும் சரி சிறுவர் கல்வி உரிமையினை நடைமுறைப்படுத்துவது என்பது சவாலான ஒன்றாகவே காணப்படுகின்றது.

**உசாத்துணை**


- ❖ குணரத்தினம்.வே(2009) ''சிறுவர் உரிமையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்களின் பிரச்சினைகளும்'' , மைக்கேல் மொபைல் அச்சகம்.
- ❖ சரோஜா சிவசந்திரன்(2005) ''சிறுவர் உரிமைகள்'', கரிகணன் பிறிண்டேர்ஸ் யாழ்ப்பாணம்



**த.சுதர்சிகா**
**நான்காம் வருடம் இரண்டாம் அரையாண்டு**
**மெய்யியல் சிறப்பு (2018/2019)**

## 16. *சிறுவர்கள் மத்தியில் மெய்யியலின் தாக்கம்*

சிறுவர்கள் தங்கள் இயற்கையான ஆராய்ச்சி மற்றும் (Curious questions) மூலம் மெய்யியல் தொடர்பான பல சுவாரஸ்ய வினாக்களை கேட்கின்றனர். அவர்களின் கேள்விகள் உலகம், அறிவு, பொருள் மற்றும் உள்ளம் போன்ற அடிப்படைத் தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. சிறுவர்கள் மெய்யியல் தொடர்பான பல சுவாரஸ்ய மற்றும் ஆழமான கேள்விகளை கேட்கின்றனர். அவர்களின் இந்தக் கேள்விகள் உலகம், வாழ்க்கை, மரணம், உண்மை, அனுபவம், அறிவு, மற்றும் தனித்துவம் போன்ற முக்கிய தத்துவ விசாரணைகளைக் கொண்டு வருகின்றன.

உலகம் எப்போது ஆரம்பமானது?, எப்போது நான் இறப்பேன்?, நான் யார்? மரணத்திற்கு பிறகு என்ன நடக்கும்?, என்னுடைய எண்ணங்கள் எங்கு இருந்து வருகின்றன?, அறிவு எப்போது தொடங்குகிறது?, ஏன் நான் கனவு காண்கிறேன்?, என்னுடைய பார்வை இல்லாமல் உலகம் இருக்கின்றதா?, ஏன் நம்முடைய எண்ணங்கள் மாற்றப்படுகின்றன?, மனிதர்கள் ஏன் பிறக்கின்றனர்?, நாம் பிறப்பதற்கும் இறப்பதற்கும் எதற்காகக் காரணம் உள்ளது?, அன்பு என்பது உண்மையா?, நான் உலகத்தை எப்படி உணர்கிறேன்?, நான் கண்டதை மட்டும் உண்மையாக ஏற்றுக்கொள்கிறேன், அது உண்மையா?, உண்மை மற்றும் பொய் என்றால் என்ன?, வாழ்க்கையின் நோக்கம் என்ன?, உலகம் என் கண்களில் மட்டும் இருக்கிறதா?, நான் எதை உண்மையாக எடுத்துக்கொள்வது?, எங்கு நான் இருப்பதாக உணர்கிறேன், அது உண்மையா?, என்னுடைய நினைவுகள் என்னைக் காட்டும் உண்மைதானா?, நம் அன்பு மற்றும் நடத்தை பிறருக்கு எவ்வாறு பாதிக்கின்றன?, நீண்ட காலத்திற்கு பிறகு நாம் உணர்ந்ததை மறக்கிறோமா?, கொடுமையை எதற்காக அனுபவிக்கிறோம்?, மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கின்றனர்?, மரணம் நிச்சயமா?, நான் என்னை எவ்வாறு அறிவேன்?, ஆராய்ச்சி செய்வதால் நாம் புதிய உண்மைகளை கண்டுபிடிக்க முடியுமா?, உணர்வு எப்படிப்பட்டது?, உள்ளம் எது?, நாம் மனிதர்களாகப் பிறப்பதற்கான காரணம் என்ன?, நேரம் எவ்வாறு செயல்படுகிறது?, ஆன்மா உண்மையா?, , நான் உலகத்தை என்னவாகக் கற்பனை செய்கிறேன் என்று நினைத்தால், அது உண்மையா?, நம்முடைய அனுபவம் உண்மையா?, கடவுள் இருக்கின்றாரா?, நாம் தனித்துவமானவைகளா? அல்லது மற்ற உயிரினங்களுடன் இணைந்துள்ளவைகளா?, உலகத்தின் இருப்பு என்ன?, அறிவு எப்போது தொடங்குகிறது?, எது உண்மை?, எது கற்பனை?

இவ்வாறாக சிறுவர்களால் எழுப்பப்படும் சில வினாக்கள் எவ்வாறு மெய்யியல் பிரச்சினைகள் மற்றும் சிந்தனைகளுடன் தொடர்புப்படுகின்றது என்பதனை பின்வரும் சில வினாக்களை விளக்குவதன் மூலமாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக காணப்படும்.

### 1. **எனக்கு கண்கள் இல்லை என்றால் உலகம் இருக்கிறதா?**

இது உண்மையில் அறிவியல் மற்றும் மெய்யியல் சார்ந்த ஒரு முக்கியமான கேள்வி. உலகம் இருக்கும், எனது பார்வை இல்லையெனில் என்பது உண்மையைக் கண்டறிதல் அல்லது சுற்றுப்புற உலகின் இருப்பை அறிவு பாதிப்பது பற்றி கேட்கும் கேள்வி. இந்தக்

கேள்வி, பிளேட்டோ மற்றும் ரெனே டேகார்ட் போன்ற தத்துவவாதிகளின் கருத்துக்களைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது.

2. **நான் ஏன் பிறந்தேன்?**

இது உலகின் நோக்கம் மற்றும் மனிதர்களின் வாழ்க்கை எதற்காக என்பது குறித்து கேட்கும் வினா. குழந்தைகள் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது, அதில் உள்ள வாழ்க்கையின் நியாயம், நோக்கம் அல்லது குறிக்கோள் பற்றிய தேடலையும் ஆழமான சிந்தனையையும் பார்வையிட முடியும்.

3. **நான் எப்போது மரணிக்கிறேன்?**

இது மரணம் மற்றும் அதன் அத்தியாவசியம் பற்றிய கேள்வி. மரணத்தின் பின்னர் என்ன நடக்கும்? என்ற கேள்வியும் இதற்கு தொடர்புடையது. இது வாழ்வின் அடிப்படைகள் மற்றும் மரணத்தை உணர்தல் பற்றிய தீவிரமான பரிசோதனையை ஏற்படுத்துகிறது.

4. **நாம் ஏன் பொறுமையாக இருக்க வேண்டும்?**

சிறுவர்கள் பொறுமை பற்றிய கேள்வி கேட்கும்போது, அது பண்பியல் மற்றும் சிறந்த நடத்தை குறித்த ஒரு முக்கியமான தத்துவக் கேள்வி ஆகும். இது வாழ்க்கையில் சமநிலை, சாந்தி மற்றும் சமூக ஒத்துழைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்த ஆராய்ச்சி கேள்வி ஆகும்.

5. **அன்பு எங்கே இருந்து வருகிறது?**

இது அன்பு, உணர்வு மற்றும் மனவியல் சார்ந்த கேள்வி. அன்பு என்பது உணர்வா? அல்லது அது ஒரு செயலா? அல்லது அது எங்கு உள்ளது? என்பது மனித மனது மற்றும் உள்ளத்தின் கூட்டுணர்வுகளைக் கண்டறியும் ஒரு முக்கியக் கேள்வியாகும்.

6. **எது உண்மை, எது பொய்?**

சிறுவர்கள் சில சமயங்களில் உண்மை மற்றும் பொய் ஆகியவற்றின் எல்லைகளைக் கேட்கின்றனர். நான் எதை உண்மையாக எடுத்துக்கொள்வது? என்பது மெய்யியலின் அடிப்படையில் இருக்கும் கேள்வி. இது உண்மையின் தன்மை, அது எப்படி மாறும் என்பதையும் ஆராய்வதாக இருக்க முடியும்.

7. **பார்வை இல்லாமல் எப்படியாவது நாம் உலகை அறிவோமா?**

இந்தக் கேள்வி, அறிவின் இயல்பு மற்றும் பரிமாண உணர்வு பற்றி கேட்கின்றது. இது தத்துவத்தில் நாம் எப்படி உணர்கிறோம்? அல்லது நமது அனுபவங்களின் அடிப்படையில் உலகத்தை எப்படி புரிந்து கொள்கிறோம்? என்ற கேள்விகளுடன் தொடர்புடையது.

8. **நாம் ஒரு கனவில் இருந்தால், அது உண்மைதானா?**

இது கனவுகள் மற்றும் உண்மையின் நிலை பற்றி கேட்கும் கேள்வி. நாம் கனவு காணும்போது, அந்தச் சம்பவங்கள் உண்மையா? என்ற கேள்வி, ரெனே டேகார்ட் போன்ற

தத்துவவாதிகளின் பிரபலமான நான் கற்பனை செய்கிறேன் என்றால் நான் இருக்கிறேன் என்ற கருத்தை நவீன காலத்தில் சிந்திக்க வைக்கின்றது.

9. **எதற்கு துன்பம்?**

இது துன்பம் மற்றும் அதிர்ச்சிகள் பற்றிய கேள்வி. எதற்காக நாம் துன்பங்களை அனுபவிக்கிறோம்? அல்லது துன்பம் எப்படிப் பயனுள்ளதாக இருக்க முடியும்? என்பதன் மூலம் வாழ்க்கையின் சரிவுகளையும், அதன் போக்கு பற்றி அறிந்துக் கொள்ளலாம்.

10. **எப்படி நாம் ஒரு பொருளை உணர்கிறோம்?**

உணர்வு மற்றும் பொருள் பற்றிய அறிவு பற்றி கேட்கும் கேள்வி. ஒரு பொருள் உண்மையில் என்ன? என்ற கேள்வி, அறிவியல் மற்றும் மெய்யியல் தத்துவங்களில் பொதுவான கேள்விகளாக இருக்கின்றது.

சிறுவர்களின் இந்தக் கேள்விகள், அவர்கள் உலகத்தைப் பற்றிய பார்வைகளையும், தத்துவ சிந்தனைகளையும் நம்முடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் ஒரு ஆழமான விளக்கத்தையும், புரிதலையும் உருவாக்க உதவுகின்றன. சிறுவர்களிடத்தில் மெய்யியல் என்பது ஒரு மகிழ்ச்சியான, ஆர்வமுள்ள மற்றும் ஆழமான கற்றல் அனுபவமாக இருக்க முடியும். சிறுவர்கள் உலகத்தை பற்றிய பல சிந்தனைகளையும், கேள்விகளையும் எளிதில் எழுப்பி, அதை புரிந்து கொள்ள முயல்கின்றனர். அவர்களது மெய்யியல் கேள்விகள் பரிசோதனைகள், விசாரணைகள் மற்றும் புத்திசாலித்தனத்தின் தொடக்கம் ஆகும்.

சிறுவர்களின் மெய்யியல் சிந்தனை, சிறுவர்கள் தங்களுடைய இயல்பான ஆராய்ச்சி மனதில் தோன்றும் எண்ணங்கள் என்பவற்றினால் எளிதில் உலகம் மற்றும் தத்துவம் குறித்து கேள்விகள் கேட்பதாக உள்ளது. அவர்கள் எப்போது பார்த்தாலும், கேள்விகளை கேட்டவாறு உள்ளனர். ஒவ்வொரு கேள்வியும் ஒரே நேரத்தில் ஆராய்ச்சி மற்றும் தத்துவ சிந்தனை, வாழ்க்கை பற்றிய புதிய புரிதல்களைக் கொண்டிருக்கின்றன. அவர்கள் கேட்கும் வினாக்கள் பின்வரும் மெய்யியல் பிரச்சினைகள் மற்றும் ஆய்வு விடயங்களுடன் தொடர்புப்படுவதாக காணப்படுகின்றது.

- **உண்மையின் ஆய்வு**

சிறுவர்கள் பொதுவாக நாம் எதை உண்மை என்று அறிவோம்? என்று கேட்கின்றனர். நாம் பார்க்கும் மற்றும் கேட்டதைப் பொறுத்து, உலகம் எப்படிச் செயல்படுகிறது? என்ற கேள்வி அவர்களிடமிருந்து கேட்கப்படுகிறது.

- **அடையாளம் மற்றும் தனித்துவம்**

நான் யார்? என்பது சிறுவர்களின் மெய்யியல் சிந்தனையின் முக்கியக் கேள்விகளில் ஒன்றாகும். இது அவர்களின் அடையாளத்தை, உளவியலின் அடிப்படைகளை மற்றும் அவர்களின் உள்ளே என்ன உள்ளது என்பதற்கான ஆராய்ச்சியையும் குறிக்கிறது.

- **அனுபவம் மற்றும் உணர்வுகள்**

நாம் உணர்ந்த விடயங்களை உண்மையாக ஏற்றுக்கொள்கிறோம்? அல்லது நாம் உறுதி செய்ததிலிருந்து என்ன தெரிகிறது? என்று கேட்கும் சிறுவர்களின் கேள்விகள், உணர்வுகள் மற்றும் அனுபவங்களைப் பற்றிய மெய்யியல் ஆராய்ச்சிகளைக் காட்டுகின்றன.

- **நேரம் மற்றும் வாதங்கள்**

சிறுவர்கள் நேரம் குறித்த கேள்விகளையும் முன்வைக்கின்றனர். நேரம் உண்மையில் எப்படி செயல்படுகிறது? அல்லது நேரம் தள்ளப்பட்டால், அது எங்கு போகும்? என்ற கேள்விகள் இந்தக் கேள்விகளுக்குள் அடங்கும். முதன் முதலில் நேரம் எவ்வாறு குறிக்கப்பட்டது?

- **உலகின் தோற்றம் குறித்த தேடல்**

உலகம் எவ்வாறு தோன்றியது? தோன்றுவதற்கு முன் எவ்வாறான வடிவத்தை கொண்டிருந்தது? தங்களது தோற்றம் எவ்வாறு இடம்பெற்றது? என்ற வினாக்கள் மெய்யியலில் காணப்படும் உலகின் தோற்றம் பற்றிய பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறாக மெய்யியலானது பலராலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சிந்திக்கப்படுகின்றது. மெய்யியல் என்பது அறிவின் மீதான விசாரணை எனப்படுகின்றது. அதாவது இருக்கின்ற ஒரு விடயத்தை ஏன் இருக்கின்றது? என விசாரணை செய்யும் விதமாக காணப்பட வேண்டும் என கூறப்படுகின்றது. மெய்யியல் சிந்தனையானது சிறு வயதிலிருந்தே மனதில் தோன்றுகின்ற ஒரு விடயமாகும் அவற்றை சரியாக புரிந்துக் கொண்டு அது தொடர்பான சரியான புரிதல்களையும் விளக்கங்களையும் பெற்றுக் கொண்டால் நாம் மெய்யியலாளராக ஆகலாம். ஆனால் அவை சரியாக ஊக்குவிக்கப்படுவதில்லை. மேலே குறிப்பிடப்பட்ட வினாக்களில் ஒரு வினாவை சரி சிறு பிராயத்தில் நாம் எவரும் கேட்காமலோ அல்லது சிந்திக்காமலோ இருக்க முடியாது. ஆனால் அதற்கான சரியான பதிலை எத்தனை பேர் பெற்றுக் கொண்டோம் என்பது சந்தேகமாகவே காணப்படுகின்றது.

சிறுவர்களுடன் மெய்யியல் பற்றி பேசுவது ஆரோக்கியமான மற்றும் சிந்தித்து செயல்படக் கூடிய ஒரு சமூகத்தை உருவாக்க வல்லதாக காணப்படும். சிறுவர்களுடன் மெய்யியல் பற்றிய விவாதம் ஒரு சிறந்த பயிற்சி ஆக இருக்கலாம். அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொழுது, நாம் அவர்களுக்கு ஆழமான புரிதலை ஏற்படுத்த, அவர்களின் ஆராய்ச்சிக்கான வழிகளைக் கற்று கொள்ளவும் உதவ முடியும். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கள் இடைநிலை வடிவில் அளிக்கவும் எளிய மற்றும் புரிந்துக்கொள்ளக் கூடிய எடுத்துக்காட்டுகள் வழங்குவதன் மூலமும் தத்துவசிந்தனையை புரியச் செய்யவும் வேண்டும். அல்லது இந்த நிலையில் உங்கள் எண்ணம் என்ன? என்ற கேள்விகளுடன் அவர்களின் சிந்தனையை ஊக்குவிக்க வேண்டும். அனுபவங்களுக்குள் உலகம் எப்படி வேலை செய்கின்றது என்பதைச் சிறுவர்களுக்கு விளக்க, புனைக்கதைகள் அல்லது கதைகளைப் பயன்படுத்துவது சிறப்பாக இருக்கும்.

**முடிவுரை**

சிறுவர்களின் மெய்யியல் கேள்விகள் அன்றாட வாழ்க்கையில் தத்துவத்தை கொண்டு வரும் வழிகாட்டுதல்களாக இருக்கின்றன. இவை புதிய உண்மைகளைப் பாராட்டவும், அவர்களின்

உளவியல் மற்றும் அறிவியலின் அடிப்படைகளை புரிந்து கொள்ளவும் உதவுகின்றன. சிறுவர்களுக்கு அவர்கள் கேட்கும் மெய்யியல் வினாக்களுக்கு பதிலளிப்பதில் இருந்து நாமும், அவர்களும் பல புதிய உலகங்களை கண்டு கொள்ள முடியும்.

**கிரிஷாந்தி வாசுதேவன்**

**4ம் வருட 2ம் அரையாண்டு**

**2018/2019**

# *17.ஊக்கமும் மனவெழுச்சியும்*

# *(Motivation and Emotion)*

## **ஊக்கம்**

'Motivation' என்னும் வார்த்தை இலத்தீன் மொழியான 'Moveers' எனும் வார்த்தையிலிருந்து வந்தது. 'Movere' என்றால் முன்னோக்கி நகர்வது என்று பொருளாகும். பல உளவியலாளர்கள் ஊக்கம் பற்றி ஆய்வு செய்து பல உண்மைகளை வெளிப்படுத்தி உள்ளனர். இவர்கள் வரிசையில் Murphy, John Watson, Mc Dogall, Woodworth, Masolow போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அமெரிக்க உளவியலாளரான மூர்பி என்பவர் 'ஒவ்வொரு காரணமும் ஒவ்வொரு விளைவை உருவாக்கும் என்கிறார். ஊக்கி என்பது காரணமாகவும் அதனால் ஏற்படும் நடத்தை விளைவாகவும் கொல்லப்படுகின்றது'' என்கிறார். ஊக்கம் என்பதற்கு மனித நடத்தைக்கு அடிப்படையாக இயல்பாக அமைவது ஊக்கம் எனவும் கூறுகின்றார். J.E.Ormrod என்பவர் ''ஊக்கம் என்பது ஒரு உள் நிலை என வரையறுக்கின்றார். அது நம்மை செயலில் தூண்டுகிறது. குறிப்பிட்ட திசையில் நம்மைத் தள்ளுகிறது மற்றும் சில செயல்களில் நம்மை ஈடுபடுத்துகிறது.'' என்கிறார். William G Scott என்பவர் ''ஊக்கம் என்பது விரும்பிய இலக்குகளை அடைய மக்களைத் தூண்டும் செயலாகும்'' என்கிறார். ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியில் ஊக்கம் என்பது ''உளவியல், சமூகவியல் காரணிகள் ஏற்படுத்திய இலக்கை அடைவதற்கான நனவு மற்றும் நனவிலித் தூண்டல்கள்" எனக் குறிப்பிடப்படுகிறது. கற்றல் போன்ற உயர்நிலை செயன்முறைகளுக்கு ஆதாரமாக இருப்பது ஊக்கமாகும். எந்தக் காரியத்தையும் தொடங்கி வைப்பதும் அதைத் தொடர்ந்து நடத்துவதற்கும், முடிவு பெறுவதற்கும் காரணமாக இருப்பதும் இந்த ஊக்கமாகும். ஊக்கம், உளவியலில் முக்கிய பங்கு வகிக்கிறது.

உண்மையில் ஊக்கம் என்பது சிக்கலான ஒரு உந்து சக்தி. அது நடத்தையைப் பாதுகாத்து, இலக்கை அடைய உதவுகிறது. மேலும் ஊக்கம் உள்ளார்ந்த உயிரியற் தேவைகள் காரணமாகப் பிறப்பிக்கப்படுகின்ற, உயிர் வாழ்க்கைக்கு அவசியமான உந்தல்களாகும். பசி, தாகம், வலி தவிர்த்தல், நித்திரை, கழிவுப்பொருள் அகற்றல், ஒட்சிசன், பாலியல் உந்தல்கள் என்பவற்றை அடிப்படை ஊக்கிகள் என்பர். ஒருவரில் ஓர் ஊக்கி தூண்டப்பட்டால், அவர் அமைதியின்மை, கிளர்ச்சி போன்ற பல்வேறு உடலியல் மாற்றங்களை உணர்கின்றார். நடத்தை ஒன்றை ஆரம்பிக்கவும், திசைப்படுத்தவும், உயிரி ஒன்றில் செயற்படும் விசைகளே ஊக்கம் என உளவியலாளர்கள் கூறியுள்ளனர்.

ஊக்கிகள் அல்லது உந்துதலின் வகைகளை இருபெரும் பிரிவுகளாக பிரிப்பர். அதாவது உடல்சார் ஊக்கிகள், உளம்சார் ஊக்கிகள் என்பனவாகும். இதில் உடல்சார் ஊக்கிகள் ஒரு மனிதனின் ஊக்கிகள், அவனது உடல் சார்ந்த மாறுதல்களின் அடிப்படையில் எழுவதாகும்.

இவற்றிற்கு உதாரணமாக, பசி, தாகம், பாலூக்கம், தக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை மனிதனின் அடிப்படைத் தேவைகளை விளக்குகின்றன.இவ் அடிப்படைத் தேவையானது மனிதனுக்கு ஒழுங்காக நிறைவேறும் போது வாழ்க்கையானது சிறப்பாக அமையும். இவை இல்லாமல் உயிர் வாழ முடியாது என்பதால் இதனை முதல்நிலை ஊக்கிகள் என்பர்.

உளம்சார் ஊக்கிகள் என்பது அவ்வளவு எளிதாக விளக்கக்கூடிய தொன்றல்ல. உளம்சார் ஊக்கிகள் எவை என்பதை வரையறை செய்வதில் உளவியலாளர்களிடையே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவ்வகை கருத்துக்களை ஆராய்ந்தவர்களில், விக்கார்ட் (Wickkard) என்பவர் 78 உளம்சார் ஊக்கிகளைக் குறிப்பிடுகின்றார். பாதுகாப்புத் தேவை, சமவயதுக் குழுவினரின் பாராட்டு என்பன இவற்றுள் அடங்கும். இது மாத்திரமல்லாது, சமூகத்தேவைகளுடன் இணைந்த ஊக்கிகளான இவை தனித்தன்மை வாய்ந்தவை. இவை ஆளுமையினாலே தோன்றுபவையாகக் காணப்படுகின்றன. தற்கருத்து (Self Concept), இலக்கு (Goal), விழுமியம் (Values), அக்கறை (Interest) என்பன தொடர்பான ஊக்கிகள் இவற்றுள் அடங்கும். ஆனால் உளம்சார் ஊக்கிகளை மேலும் இரண்டு வகையாகப் பிரிப்பர். அவையாவன:

- சமூக ஊக்கிகள் (Social motives)
- தனிப்பட்ட ஊக்கிகள் (Personal Motives) என்பனவாகும்.

இவற்றைவிட லெப்பர், டெசி, றைன் (Lepper-1983, Deci & Ryan-1985) ஊக்கம் பற்றிக் குறிப்பிடுகையில். ஊக்கத்தை இரண்டு வகையாகக் குறிப்பிடுகின்றார்கள். ஒன்று புறஞ்சார்ந்த செயல் ஊக்கம் (Extrinsic motivation) மற்றையது அகஞ்சார்ந்த செயல் ஊக்கம் (Intrinsic motivation) ஆகும்.

**புறஞ்சார்ந்த செயல் ஊக்கமானது சமுதாய அங்கீகாரம், புகழ், பயம் போன்றவற்றால் வருகிறது**. உதாரணமாக: படிக்கவில்லை என்றால் பெற்றோர்கள் அடிப்பார்கள் என்று பயந்து படித்தல். இதில், செயலூக்கம் உள்ளிருந்து வருவதில்லை. பெற்றோர் மீதான அச்சத்தால் மனத்தில் செயலூக்கம் வருகிறது. மேலும் சமுதாய அங்கீகாரம் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவையும் புறஞ்சார்ந்த செயல் ஊக்கம் ஆகும்.

**அகஞ்சார்ந்த செயல் ஊக்கம் என்பது ஒரு செயலின் மூலம் வெற்றி, பணம், புகழ் இவற்றைப் பாராமல், அச் செயலின் மூலம் அடையும் மனநிறைவுணர்ச்சியின் பொருட்டு வரும் செயல் ஊக்கமாகும்.** உதாரணமாக ஒரு புதிய வழிமுறை புலப்படும் போது நாம் ஒன்றைப் புதிதாகக் கண்டுபிடித்து விட்டோம் என்ற உணர்வால் ஏற்படும் மனநிறைவே அகஞ்சார்ந்த செயல் ஊக்கமாகும்.

ஊக்கத்தை பற்றி அறிய பின்வரும் கருத்தாக்கங்களை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1.**தேவை (need):-** தேவை என்பது நாம் உயிர் வாழ அடிப்படையான காரணிகளில் பற்றாக்குறை ஏற்படுவது. உதாரணமாக நம் உடம்பில் குளுக்கோஸ் (Glucose)

அளவு குறையும் போது நமக்கு உணவு தேவைப்படுகிறது. தண்ணீர் அளவு குறைந்தால் தாகம் ஏற்படுகிறது.

2.**உந்துதல் (Drive)**:- தேவை அதிகரிக்கும் போது உந்துதல் அதிகமாகி பதட்டம்(tension) உருவாகிறது.

3.**ஊக்கி (Motive)**:- இலக்கை நோக்கிச் செல்லும் போது அது ஊக்கியாக (motive) மாறுகிறது.

4.**இலக்கு(Goal)**:- நம்முடைய தேவை நிறைவேறும் போது பதட்டம் குறைந்து விடுவதும், திருப்தி அடைந்து விடுவதும் குறிக்கோள் எனலாம்.

5.**ஊக்கம் (Incentive)**:- ஊக்கத்தை அதிகப்படுத்த, வெளியில் இருந்து வரும் ஒன்று என்பதுடன் அதை இயந்திரத்தன்மை (Mechanism) எனலாம். இதை வெளியூக்கி (Extrinsic motivation) எனவும் கூறலாம். தொழில் கூடங்களில் கொடுக்கப்படும் அதிக சம்பளம், போனஸ், சம்பள உயர்வு போன்றவையும் வேலையாட்களுக்கு வேலையை அதிகமாக செய்ய ஊக்குவிப்பதும், பதவி உயர்வு என்பனவும் ஆகும். ஒருவருக்கு தன் வேலையில் உள்ள ஆர்வம் என்பது உள்ளார்ந்த ஊக்கியாகும்.

## மனவெழுச்சி (Emotion)

மனவெழுச்சி என்ற வார்த்தை ஆங்கில வார்த்தையான Emotion என்றும், பிரெஞ்சுச் சொல்லான "Emouvoir'' எனும் சொல்லிலிருந்தும் வந்ததாகும். இதன் அடிச்சொல் "Emovere" என்ற இலத்தீன் சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் பொருள், குழப்பத்திற்கு அல்லது இணைவிற்குரிய ஒரு வழி என்பதாகும். மனித நடத்தையில் மனவெழுச்சியானது முக்கிய செல்வாக்கு வகிக்கின்றது.. இம் மனவெழுச்சி உடல் ரீதியான வெளிப்பாட்டினையும், உளரீதியான மாற்றத்தினையும் ஏற்படுத்தும். ஒருவகையில் கூறப் போனால் அகம் சார்ந்த சிக்கல் மிக்க உடலியல் மாறுதல்களைப் பற்றியதாகவே இது இருக்கிறது. உடலியல், உளவியல் காரணிகள் ஊக்கத்தினால் தூண்டல் அடையும் போது மனவெழுச்சி ஏற்படுகிறது. உடல் அல்லது உளம் எந்தளவிற்குத் தூண்டப்படுகிறதோ அந்தளவிற்கு மனவெழுச்சியும் ஒருவரிடம் காணப்படுகிறது.

டோவர் (Drawer) என்பலர் மனவெழுச்சி என்பது. ''ஓர் உயிரினத்தில் ஏற்படும் உட்புற மற்றும் வெளிப்புறத்தில் (உடல் மற்றும் மனதில்) ஏற்படும் மாற்றம்'' என்கிறார். வில்லியம் ஜேம்ஸ் (William james) என்பவர் கூற்றுப்படி, சூழலில் சில நேரங்களில் நிகழ்ந்த செயல்களால் அந்த இடத்தில் உடல் ரீதியாக நிகழ்ந்த மாற்றங்களின் விளைவாகத் தோன்றிய உணர்வாகும். சிக்மன் பிராய்ட் கூறும் போது "உடல் ரீதியாக உள்வாங்கப்பட்ட சில உணர்வுகளின் வெளிப்பாட்டின் பெறுபேறு மனவெழுச்சி'' என்கின்றார். பொதுவாக மனவெழுச்சி என்னும் போது உடல் ரீதியாக உள்வாங்கப்பட்ட தூண்டலுக்கு கிடைக்கப்பெறும் துளங்கள் என்றும், சுயமாக

ஒருவரில் எழும் உணர்வுகள் என்றும், அறிகைச் செயற்பாட்டின் பரிசோதனையும் அது தொடர்பான வெளிப்படையான நடத்தைகள் யாவும் மனவெழுச்சி எனக்கூறிக் கொள்ளலாம்.

மனவெழுச்சிகள் பல வகைப்படும். கோபம், மகிழ்ச்சி, சினம், எரிச்சல், பதட்டம், உற்சாகம், வெறுப்பு, பொறாமை, அன்பு, பெருமை, ஆச்சரியம், கவலை ஆகியன இவற்றுள் சிலவாகும். மனவெழுச்சியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**1. நேர்முக மனவெழுச்சி (Positive Emotions) என்பது சிரிப்பு, சந்தோசம், மகிழ்ச்சி, போன்றவை நம்முடைய உடல் மற்றும் மன நலத்தைப் பேணுகிறது**

**2. எதிர் மறை மனவெழுச்சி (Negative Emotions) என்பது கோபம், பயம், மனம், மற்றும் உடல் நிலையைப் பாதிக்கும்.**

மேலும் ஆராய்ச்சியாளர்கள் முகபாவனையைக் கொண்டு மனவெழுச்சிகளை இனங்கண்டுள்ளனர். இவற்றுள்ளும் அவர்கள் குறைந்தபட்ச மனவெழுச்சி, அதிகபட்ச மனவெழுச்சி என வேறுபாடு காண்பிக்கின்றனர். சில மனிதர்கள் மனவெழுச்சியை வெளிப்படையாகக் காண்பிப்பதில்லை. அதேநேரம் சிலர் மனவெழுச்சியை அதிகபட்சமாகக் காண்பிப்பர். எனினும் மனவெழுச்சியின் வகைகள் பற்றி ஒரு குறிப்பிட்டளவில் எத்தனை வகைகள் உள்ளன என இன்னும் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. நாம் எமது அனுபவத்தின் ஊடாகப் பல மனவெழுச்சிகளை வகைப்படுத்துகின்றோம். பல உளவியலாளர்கள் அடிப்படை மனவெழுச்சிகளை வகைப்படுத்திக் கூறுவதற்கு முயற்சி செய்துள்ளனர். அந்தவகையில் வில்லியம் மைக்டுகல் (William Mc Dougall - 1921) ஏழு அடிப்படை உள்ளுணர்வுகளை முன்வைத்தார். அவை ஒவ்வொன்றும், ஒவ்வொன்றுடனும் தொடர்புபட்டவை ஆகும். சில உள்ளுணர்வுகள் தம்முள் பயம். ஆழ்ந்த வெறுப்பு, ஆச்சரியம், கோபம், மிகுந்த மகிழ்ச்சி முதலானவற்றை உள்ளடக்கியுள்ளது.

உளவியலாளர்கள் மனவெழுச்சியின் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வகைப்பாடுகளின் பட்டியலை முன்வைத்துள்ளனர். அந்தவகையில் ஜேம்ஸ் றசல் (James Russell) (1980) மனவெழுச்சியின் வட்டவடிவ மாதிரியையும் காட்டியிருந்தார். மனவெழுச்சிகளை கிளர்ச்சி, சந்தோசம் (arousal & pleasantness) ஆகிய இரண்டு தன்மையாக ஒழுங்குபடுத்தியதுடன் மனவெழுச்சிகள் எதிரெதிர்ச் சோடி உணர்வுகளைக் கொண்டுள்ளன. என்கின்றார்.

சைல்வன் ரொம்கின்ஸ் (Sylvan Tomkins 1964 - 1981) எட்டு அடிப்படை மனவெழுச்சியை முன்வைத்துள்ளார். ஆர்வம், ஆச்சரியம், மகிழ்ச்சி, மனக்கவலை, பயம், வெட்கம், அவமானம், கோபம் என்பன அவையாகும். இந்த மனவெழுச்சிகள் யாவும் இயற்கையாகவும், வேகமாகவும் உடல் மூலம் வெளிப்படுவதுடன் முகத்தின் மூலமாகவும் வெளிப்படுகின்றன. உதாரணமாக மனிதர்கள் திருமண நிகழ்வின் போது மகிழ்ச்சியாகவும், மரணச் சடங்கின் போது மிகுந்த கவலையாகவும், அன்பு செலுத்தும் போது பேரானந்தமாகவும் உணர்கின்றனர். இவ்வாறான மனவெழுச்சிகள் ஏற்படும்போது உடலில் சில அறிகுறிகள் ஏற்படுகின்றது.

அதாவது ஒருவருக்கு பயம் அல்லது அனுதாபம் ஏற்படும் போது அதிகரித்த இதயத் துடிப்பு, வியர்வை, விரைவான சுவாசம், தசை பதற்றம், வறண்ட வாய், மாணவர் விரிவடைதல், நடுக்கம்

ஏற்படல் போன்றன உடலில் ஏற்படும். இவை ஏற்படுவதற்கான காரணம் ஆபத்திலிருந்து தப்பிக்கும் அல்லது எதிர்கொள்ளும் திறனை அதிகரிப்பதற்காக ஆகும். அதேசமயம் ஒருவருக்கு கோபம் ஏற்படும் போது மந்தம் அல்லது சோர்வு, கண்ணீர், மார்பு இருக்கம், மெதுவான சுவாசம், பசியின்மை, தசை பலவீனமாதல் போன்றன இடம்பெறும். இவை ஆற்றல் மட்டம் குறைவடைவதற்கான வழிசமைக்கும். உள்நோக்கிய கவனம் மற்றும் திரும்ப பெறுதல் ஆகியவை பெரும்பாலும் இந்த உணர்ச்சியுடன் தொடர்புபடும். மகிழ்ச்சியான உணர்வு ஏற்படும் போது தளர்வான தசைகள், உடலில் சூடான உணர்வு, புன்னகை அல்லது சிரிப்பு, நிலையான அல்லது குறைக்கப்பட்ட இதயத் துடிப்பு, அதிகரித்த ஆற்றல், என்டோர்வின் வெளியீடு போகின்றன இடம்பெறும்.

இவற்றையெல்லாம் எடுத்து நோக்குகையில், ஊக்கம் மற்றும் மனவெழுச்சி பற்றிய பிரச்சனைகள் உளவியலில் காலம் காலமாக ஆராயப்பட்டு வருகின்றன. ஆனால் அவை ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு விதமாக பேசப்பட்டாலும் அதன் அடிப்படை மாறுபட்டாலும் அவற்றுள் பொருள் பொதுவான தன்மையே காணப்படுகின்றது. அந்தவகையில் மனித நடத்தை கோலங்களை நிர்ணயிப்பதில் ஊக்கிகளும் மனவெழுச்சிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. நமது செயற்தன்மை எவ்வாறு அமைகிறது என்பது நாம் எந்த அளவு செயலூக்கம் கொண்டுள்ளோம் என்பதை பொறுத்தும், செயல்படும் வழிமுறை தெரிந்து கொண்டிருப்பதை பொருத்தும் அவ்வூக்கம் நம்மை செயல்படவைக்கும். இவ்வகையாக அமையும் ஊக்கம் வெற்றியினை அடையும் வரை நம்மை செயல்பட வைக்கும். இந்தவாழ்க்கையில் ஆற்றலை முறையாக பயன்படுத்தினால் வாழ்க்கையில் முன்னேற்றத்தை காணலாம்.

**டானியல் றொமிட்டா**

**3ம் வருடம் 2ம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2019/2020)**

## *18. பெண்மை பற்றிய அரிஸ்டோட்டிலின் நோக்கு.*

மேலைத்தேய மெய்யியல் சிந்தனைகளில் மிகவும் செல்வாக்கு மிக்க தத்துவவாதிகளில் ஒருவரான அரிஸ்டோட்டில் பண்டைய கிரேக்க சமூகத்தில் வேரூண்டி காணப்பட்ட பெண்மை பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார். பண்டைய கிரேக்கத்தில் ஒரு ஆணுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் குறைந்தளவு உரிமைகளையே ஒரு பெண் கொண்டிருந்தாள். வாக்களிக்கும் உரிமை, நிலவுரிமை மற்றும் பாரம்பரியமாக சொத்துக்களை பெறும் உரிமை என்பன பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்தன. குறிப்பாக குடும்ப பெண்களுக்கு முழு அளவு சுதந்திரம் ஆண்களை போல் காணப்படவில்லை. இந்நிலையில் கிரேக்க சிந்தனையில் பெண்மை பற்றிய அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் அதிக முக்கியத்துவம் உடையதாக கருதப்படுகின்றது. அவ்வகையில் அரிஸ்டோட்டிலின் கருத்துக்களை நோக்குவோம்.

**அரிஸ்டோட்டில் அரசியல் மற்றும் டி அனிமா (de anima) போன்ற தனது படைப்புக்களில் பெண்மை தொடர்பான கருத்துக்களை முன்வைக்கின்றார். அரிஸ்டோட்டில் இயற்கை நோக்கிலிருந்து பெண்ணை நோக்குகின்றார். அத்தோடு இயற்கை பொருட்கள் தம்முள் வேறுபட்டதாகவும் உயர்வு, தாழ்வு என்ற அடுக்கமைவினை கொண்டதாகவும் இருக்கின்றது என வாதிடுகின்றார்**. இவ்வாறு இயற்கையில் காணப்படும் ஒவ்வொரு கூறுகளும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது என்று கூறுவதுடன் ஒவ்வொரு கூறுகளும் தமக்குரிய பணிகளை ஆற்ற வேண்டும் என அரிஸ்டோட்டில் வலியுறுத்துகிறார். இங்கு இரு வகையில் பெண்ணின் நிலையினை நாம் நோக்க முடியும். ஒன்று பெண்களை இயற்கைப் போன்ற சடப்பொருட்களுக்கு ஒப்பிடப்படல். உதாரணம்: நதி, பூ, வண்டு ….. மற்றயது இயற்கை உயிரிகளான ஆண், பெண் என்பவற்றை ஒன்று இன்னொன்றில் தங்கியதாகவும் அதேசமயம் ஏற்றத் தாழ்வுடையது என்னும் ரீதியில் நோக்கல். நாம் அறிய வேண்டிய விடயம் என்னவெனில் இயற்கை யாரிடமும் ஆண் உயர்வான படைப்பென்றோ பெண் தாழ்வான படைப்பென்றோ எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால் இயற்கைக் கூறுகள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது என்பது ஏற்க வேண்டிய ஒன்றே. இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக உணவுச்சங்கிலியினைக் கூறுவதோடு ஆண், பெண் இருவரது தேவைகளும் இருவரிலும் தங்கிக் காணப்படல் என்பதைக் குறிப்பிடலாம். அதேசமயம் பெண்ணின் இயல்பினை இயற்கைப் பொட்களுக்கு ஒப்பிடலாமே தவிர அவளும் ஆணைப் போல் ஓர் உயிரி என்பதை உணர வேண்டும். ஆதலால் அரிஸ்டோட்டிலின் இக்கருத்தினை முழுமையாக ஏற்பதென்பது முரண்பாட்டிற்குரிய ஒன்றாகும்.

**இவர் அரசியல் என்னும் படைப்பில் இயல்பாகவே ஆளக்கூடிய கூறான ஆணும் இயல்பாகவே ஆளப்பட வேண்டிய கூறான பெண்ணும் இரு பாலினத்தின் இருப்பிற்காக இணைய வேண்டி உள்ளது எனக் குறிப்பிடுகிறார்.** இங்கு அவரது குறுகிய மனநிலையானது வெளிப்படுகின்றது.

**ஆண் பெண் வேறுபாடு தொடர்பாக விசித்திரமான விளக்கத்தினை அரிஸ்டோட்டில் வழங்குகின்றார். ஒரு சிசு உருவாகும் பொழுது அதன் உடல் பெண்ணில் இருந்து வருவதாகவும் அதன் ஆத்மா ஆணிலிருந்து வருவதாகவும் குறிப்பிடும் அரிஸ்டோட்டில் ஆண்மை பெண்மையினை காட்டிலும் உயர்வாக உள்ளது என கருதுகிறார். மனித இனப்பெருக்கத்திற்காகவே உயர்ந்த ஆண் தாழ்ந்த பெண்ணுடன் இணைய வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதாக அரிஸ்டோட்டில் குறிப்பிடுகிறார்.** இதில் ஒரு சிசுவின் உருவாக்கத்தில் இருவரின் பங்கும் இணைவதாலேயே ஒரு விடயம் பூரணமடைகிறது

என உணரும் இவர், ஏன் பெண்மையினை தாழ்வாகக் கருத வேண்டும்? என்பது எனது வினாவாகும். இதற்கு சாருவாகர்களின் கருத்தினை எடுத்து நோக்கினால் இவர் உயர்வாகக் கருதும் ஆண்மையின் உயிர் என்பது இல்லாத ஓர் விடயமாக கருதப்படும் அதேவேளை அவ்வாறொன்று உள்ளது என்றும் நிறுவ முடியாதுள்ளது. ஆனால் அனைவராலும் அறியக்கூடிய விடயமாக உடல் என்பதே உண்டு. இதனை வைத்துப் பார்த்தால் உண்மையில் ஆண்மையினை உயர்வானதாக கருத முடியுமா? ஆதலால் ஏற்றத்தாழ்வின்றி மனிதர்கள் எனும் அந்தஸ்தை வழங்க வேண்டியது முக்கியமானதொன்றாகும்.

**ஒரு ஆணுடன் ஒப்பிடும் போது ஒரு பெண் பின்வரும் விடயங்களில் தாழ்ந்த நிலையினை கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஒன்று, இனப்பெருக்கம் செய்யும் தன்மை இரண்டாவது, இயலாமை ஆகும்.** அவ்வகையில் இனப்பெருக்கம் செய்யும் தன்மை என்ற பண்பு ஒரு பெண்ணை பல்வேறு பரிமாணங்களில் ஆணில் இருந்து வேறுபடுத்தி ஆணுக்கு பெண் சமமானவள் அல்ல என்ற கருத்தினை உருவாக்க உதவுவதாக அரிஸ்டோட்டில் வாதிடுகின்றார். உண்மையில் பெண் என்பவள் ஆணுக்கு சமமானவள் அல்ல என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இனப்பெருக்கம் செய்வதைக் கொண்டு அவள் தாழ்ந்தவள் என்று கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றல்ல. காரணம் ஒரு உயிரை பெற்றெடுப்பது என்பது இலகுவான விடயமல்ல. அதனை தாங்கும் உடல் மற்றும் மன வலிமையினைக் கொண்டே பெண் என்பவள் படைக்கப்பட்டுள்ளாள். ஒரு சமுதாயத்தை உருவாக்க இரு பாலினத்தவரது பங்கும் தேவை. அதிலும் குறிப்பாக பல பரிணாமங்களைப் பெற்று தாய் என்னும் அந்தஸ்த்தைப் பெறும் பெண்ணின் பங்களிப்பானது இன்றியமையாததது ஆகும்.

**இரண்டாவதாக, ஆண் பெண்ணுக்கு சமமானவள் அல்ல என்ற கருத்தினை விளக்க பயன்படும் இயலாமை (disability) என்ற எண்ணக்கருவினை அரிஸ்டோட்டில் பின்வருமாறு விளக்குகின்றார். ஒரு ஆணுடன் ஒப்பிடும் போது ஒரு பெண் இயற்கையாகவே உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் குறைவுபட்ட தன்மையினை கொண்டிருப்பதை சுட்டிக்காட்டும் அரிஸ்டோட்டில், தன்னை ஆளும் தன்மையும் பகுத்தறிவும் ஒரு ஆணுடன் ஒப்பிடும் பொழுது ஒரு பெண்ணுக்கு குறைவாக இருப்பதாக கருதுகின்றார்.**

இவரது இக்கருத்தில், கூறுவதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது தற்காலத்தில் கணவனை இழந்த எத்தனையோ பெண்கள், தானே தனியாக நின்று குடும்பத்தினை சரியான முறையில் நிர்வகிப்பதை அவதானிக்க முடிகிறது. அவள் படைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் இயல்புகளை அடித்தளமாகக் கொண்டு பக்கச்சார்பான கருத்தினைக் கூறுவது ஏற்க முடியாத விடயமே. இயலாமை என்பது சாதாரண விடயமல்ல. ஒரு பாலினத்தையே குறையுடையவர் என சுட்டுகிறது. இன்று அதிகமாக கற்கக்கூடியவர்களாகவும் சாதனைகள் பல புரிந்து வரக்கூடியவர்களாகவும் பெண்களே காணப்படுகின்றனர்.

பிள்ளை பெறுதல் மற்றும் பிள்ளை வளர்த்தல் என்ற செயற்பாடுகள் பெண்களை பொது வாழ்விலிருந்து அந்நியப்படுத்துகின்றன என்ற கருத்தினை அரிஸ்டோட்டில் முன்வைக்கின்றார். மேலும் இல்லறத்துடன் தொடர்புபட்ட பணிகளை ஆற்றுவதற்கு பெண் மிக பொருத்தமானவளாக உள்ளாள் என்ற கருத்தினையும் இவர் முன்வைக்கிறார்.

இன்று ஆண்களில் பலர் சமைப்பவர்களாகவும் பிள்ளைகளை பராமரிப்பவர்களாகவும் வீட்டு வேலைகளை செய்பவர்களாகவும் இருக்கின்றனர். அதற்காக அவர்கள் பொது வாழ்விலிருந்து அந்நியப்படுத்தப்பட்டு விட்டனர் என்பதா? அதன் அர்த்தம். ஒரு விடயத்தை நாம் நோக்கும் விதத்தை பொறுத்தே அதன் கருத்தானது அமைகின்றது. எனவே பெண் என்பவள் அகப்பை பிடிப்பதற்கு மாத்திரமே உகப்பானவள் என்னும் அறியாமையிலிருந்து மக்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவேண்டும். அதேசமயம் இன்று பெரும்பாலான விடயங்கள் மாறியே உள்ளன.

மேலும் சரியான தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஆற்றல் பெண்களுக்கு இல்லை என்றும் ஒழுக்க சீலங்களைப் பின்பற்றுவதில் பெண்கள் குறைபாடுடையவர்களாக இருக்கின்றார்கள் என்றும் அரிஸ்டோட்டில் கருதுகின்றார். இங்கு பெண்களுக்கு சரியாக தீர்மானம் எடுக்க முடியாமலில்லை. அவள் சமூகத்தினால் வரையறுக்கப்படும் ஒழுக்கங்களையும் சட்டங்களையும் தண்டனைகளையும் பின்பற்றுபவளாக காணப்படுகின்றாள். காரணம் அவள் சுயமாக இயங்கும் போது அவளிற்கு சமூகத்தினால் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. உதரணம்: ஒழுக்கமற்றவள், அடங்காப்பிடாரி, படித்த திமிர்.... இவ்வாறு எண்ணிலடங்காதவை. ஆனால் ஆண் என்னும் பாலினத்தை கொண்டு கற்பழிப்பினை நிகழ்த்தி விட்டு சாதரணமாக சமூகத்தில் நடமாடும் பலரை நாம் இனங்காண முடிகிறது. எனவே இருவரும் ஒழுக்க சீலங்களை பின்பற்றுகையிலே சமூகத்தை சீர்படுத்த முடியும் என்பது எனது எண்ணமாகும்.

அத்தோடு ஆண் கட்டளையிடும் உளப்பாங்கினையும் பெண் கட்டளைகளை ஏற்று நடக்கும் உளப்பாங்கினையும் இயல்பிலேயே கொண்டுள்ளனர் என்றும் அரிஸ்டோட்டில் வாதிடுகின்றார். இதனை சிறந்த எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். அதாவது ஒரு நாட்டினை சிறைப்பிடிக்கும் மன்னன் அங்குள்ள மக்களையும் சிறைப்பிடிப்பதோடு அவர்களுக்கான உரிமைகளை வழங்க மறுப்பான். அதுபோல் ஆண்மை வாதத்தை பின்பற்றும் ஆண்கள் பெண்களை சிறைப்பிடித்துக் கொண்டு நாம் ஆளப்பிறந்தவர்கள் என்று கூறுவது இங்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றா? உயர் அதிகாரத்திலிருக்கும் அதிகாரியின் கட்டளைகளை ஏற்று நடப்பது பணியாளர்களது கடமை. அதற்காக அவர்களிற்கு கட்டளையிடும் திறன் அல்ல என்னும் முடிவிற்கு வரமுடியாது.

மேற்கூறப்பட்டவற்றை தொகுத்து சுருக்கமாக கூறுவதாயின் அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி பெண்மை இயற்கையின் குறைவுபட்ட படைப்பாக காணப்படுகிறது. ஒரு ஆணுடன் ஒப்பிடும் பொழுது பகுத்தறிவு மற்றும் தன்னைத் தானே ஆளும் தன்மை போன்ற பண்புகள் குறைவுபட்டவளாக அரிஸ்டோட்டில் பெண்ணை நோக்குகிறார். இவரது இவ்வாறான கருத்துக்கள் விமர்சனத்திற்குரியதே அன்றி போற்றத்தக்க ஒன்றல்ல. ஏனெனில் இன்றைய உலகில் இரும்புப் பெண் என அழைக்கப்படும் அளவிற்கு பெண்கள் தமது இடத்தை கைப்பற்றியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை எனக்கூறின் அது மிகையாகாது.

**எஸ். ஏ. ஜீ. எப்(f). (z)சுஹா**
**மூன்றாம் கல்வி இரண்டாம் அரையாண்டு**
**மெய்யியல் சிறப்பு (2019/2020)**

## 19. *உளவியலில் "புலக்காட்சி" கெஸ்டால் உளவியலாளர்களை மையப்படுத்திய ஆய்வு*

நம் புலன்களின் மூலம் உலகிற்கு எதிர்வினைப் புரிதலை புலன் காட்சி உள்ளடக்கி இருக்கிறது. வெளியிலுள்ள எல்லாவற்றிற்கும் ஒரே நேரத்தில் நம் புலன்களனைத்திலும் ஏற்படும் ஒட்டு மொத்தமான துலங்கலல்ல. இது புலன்காட்சியில் இடம்பெறும் துலங்கல்கள் ஓரளவு குறிப்பானவையாகும். குறிப்பிட்ட வேளையில் அவை ஒரு சில நோக்கங்களை நிறைவு செய்கின்றன. எனவே நம்முடைய துலங்கல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவையாகவும், நோக்கம் சார்ந்தவையாகவும், நம் தேவைகளுக்கு ஏற்றவையாகவும் இருக்கின்றன. நம் நோக்கத்திற்குத் தேவையானவற்றை நாம் தேர்ந்தெடுத்து ஒழுங்குப்படுத்திக் கொண்டு ஏனையவற்றை நம் புலன் காட்சிக்களத்தின் பின்னனியாக விட்டு விடுகிறோம்.

மோஸ்கோ விட்ஸ், ஆர்கெல் என்பவர்களின் கருத்துப்படி **புலன்காட்சி என்பது ஒரு தூண்டலுக்கோ, அல்லது தூண்டல் தொகுதிக்கோ ஒரு பரந்த வீச்சுத் துலங்கலாக இருந்து, அந்தத் தூண்டலில் அடங்கியுள்ள தற்கப்பாலுள்ள செய்தியை ஒருமைப்படுத்துகின்ற செயல்முறையாகும்.** முன் அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட ஏனைய பிற தூண்டல்களின் பொருளும் இதனுடன் சேர்க்கப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

**விக்கென்ஸ், மேயர் என்பவர் ஒரு நிகழ்ச்சியை மாற்றியமைக்கத்தக்க வகையில் புலன் காண்பவரை எதிர்வினை கொள்ளச்செய்யுமாறு தூண்டல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கச் செய்யும் ஓர் செயல்முறையே புலன்காட்சியாகும் என்று வரையறுக்கின்றனர்.**

மர்ஃபி என்பவர் ஒரு சில முக்கியப் பகுதிகளை கீழும் மேலும் தாழ்த்தவும், உயர்த்தவும் செய்தலின் மூலம் சூழ்நிலையுடன் இணக்கம் கொள்ளும் ஒரு வழியே புலன்காட்சியாகும் என்கிறார். அவர் ஒப்புமை, தன்மை, முன் அனுபவம், தயார்நிலை என்னும் நான்கு வெவ்வேறான பகுதிகளை வலியுறுத்துகிறார்.

ஸ்டேக்னர், கார்வோஸ்கி என்பவர்களின் கருத்துப்படி, புலன்களின் வழியே புறத்தேயுள்ள பொருட்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவினைப் பெறும் செயல்முறையே புலன்காட்சியாகும்.

மனிதன் தன் புலனுணர்வுகளைப் பயன்படுத்தி உலகின் பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றி ஒரு சில முடிவுகளுக்கு வருகின்றான். அப்பொருட்களும் நிகழ்ச்சிகளும் உண்மையானவையாகவும் நன்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வண்ணம் நிறுவப்பட்டவையாகவும் இருப்பின் அவன் அவற்றைப் பற்றி தான் கொண்டுள்ள அறிவினை அவ்வளவாக சந்தேகிப்பதில்லை. ஆனால் சடப்பொருட்களை கையாளுகையில் அவன் அறிவினைப் பெறுவதற்கு மெய்ப்பிக்கக்கூடியதின் துணையை நாடுகின்றான்.

சரிநுட்பமான சடப்பொருட்களும், நிகழ்ச்சிகளும் புதியனவாக, அறிமுகமற்றவையாக. ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமையாதவையாக நன்கு அவனிடமிருந்து வெகு தொலைவிலிருப்பவையாக இருத்தல் கூடும். இத்தகைய நிலைகளில் ஒருவன் அவற்றைப் பற்றிக்

கொண்டிருக்கும் அறிவில் பிழை இருக்க வாய்ப்புள்ளதால் அவ்வறிவினை அவன் சரி பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஒருவன் புகைவண்டிகள், மோட்டார் கார்கள், பேருந்துகள், மின்சாரம், தொழிற்சாலைகள், பெரும் கட்டிடங்கள். கடல் எதுவுமற்ற ஓர் தொலைதூர கிராமத்திலிருந்து திடீரென சென்னை போன்ற ஓர் பெரிய நகரத்திற்கு வருகிறான் என்று கொள்வோம். இத்தகைய புதிய சூழலில் அவன் எதனைக் காண இயலும்? அப்போது அவனுக்கு எல்லாமும் ஒரே இரைச்சலாக இருக்கும். அவனைச் சுற்றி எண்ணிறந்த நிறங்கள், வடிவ எல்லைகள், வடிவங்கள், வெளிச்சங்கள் போன்றவை உள்ளன. அவன் பல புதிய பொருட்களால் பார்வையளவில் தூண்டப்படுகின்றான். அவனால் அப்பொருட்களை அடையாளம் கண்டு கொள்ள முடிவதில்லை. அவனால் அவற்றை பயன்படுத்த முடியும் என்றாலும், மற்றவர்களுடன் பேச மொழி தெரியும் என்றாலும் பொருள்களைப் பற்றிய வினாக்களுக்கு அவனால் விடையளிக்க இயலுவதில்லை. பொருட்களைப் பற்றிய வினாக்களுக்கு நாம் விடையளிக்க வேண்டுமானால் நாம் அவற்றைக் காணவும் கையாளவும் பயன்படுத்தவும் கற்றிருக்க வேண்டும். அவனைப் போன்றவர்களுக்கும்

குழந்தைகளுக்கும் நிறங்களின் பெயர்களைக் கூறுதல் எளிதான காரியமே. ஆனால் அளவு, தொலைவு. இயக்கம் போன்றவற்றைப் பொறுத்தவரை அவர்கள் அறிவுப் பெறுதல் வேண்டும். வில்லியம் ஜேம்ஸ் குழந்தையின் உலகம் ஓர் பெரும் ஓசையும் இரைச்சலும் குழப்பமும் ஆகும் என்று கூறியுள்ளார்.

குழந்தைகளுக்கும் நிறங்களின் பெயர்களைக் கூறுதல் எளிதான காரியமே. ஆனால் அளவு. தொலைவு. இயக்கம் போன்றவற்றைப் பொறுத்தவரை அவர்கள் அறிவுப் பெறுதல் வேண்டும். வில்லியம் ஜேம்ஸ் குழந்தையின் உலகம் ஓர் பெரும் ஓசையும் இரைச்சலும் குழப்பமும் ஆகும் என்று கூறியுள்ளார்.

முழு தூண்டல் சூழ்நிலையின் இருப்பை முன் கணிப்பதற்காகத் தூண்டலின் ஒரு பகுதியை உபயோகிக்கும் போது புலன்காட்சி நிகழ்கிறது. அதாவது அது ஒரு பூவினையோ அல்லது விருந்தினையோ நேரில் காணாமல் அதன் வாசனையைக் கொண்டு முன் கணித்தலைப் போன்றதாகும். நம் அன்றாட வாழ்வில் பொருட்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும். புலன்காட்சி சார்ந்த எண்ணற்ற எதிர்வினைகளை நாம் புரிகிறோம். வானில் கருமேகங்கள் கூடி குளிர் காற்று வீசத்துவங்கியதும் மழை வரப்போகிறது என்று புரிந்து கொண்டு நாம் உடனே ஒதுங்குமிடம் தேடி ஓடுகிறோம்.

நீங்கள் ஒரு ரயிலுக்காக காத்திருக்கிறீர்கள். அப்போது ரயில் நிலைய மணி அடிக்கப்படுகிறது. அதைக் கேட்டதும் சற்று தூரத்தில் ரயில் வந்துக் கொண்டிருக்கிறது என்று எண்ணி பெட்டியில் ஏறுவதற்கு வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபட்டுத் தயாராகிறீர்கள். இந்நிகழ்ச்சிகளிலெல்லாம் நாம் நம் புலன்காட்சிச் செயல் முறையில் எண்ணிறந்த காரியங்களை ஒன்றாக இணைக்கின்றோம். நாம் ஏதாவது ஒன்றை அடைவதில் ஏற்படக்கூடிய தோல்விகளின் வாய்ப்புகளைப் புலன்காட்சி குறைக்கிறது. நம் வாழ்க்கைச் செயல்முறைகளை எளிதாக்குகிறது. நம் பொருத்தப்பாடுகளை எளிதாகவும் பயன்மிக்கதாகவும் செய்கிறது. எனவே, “புற உலகின் பொருட்களையும், நிகழ்ச்சிகளையும் நம் புலன்களின் மூலம் அறிந்து கொள்ளவும், அவற்றை நம் முன் அனுபவம்,

கற்றல் ஆகியவற்றின் துணை கொண்டு அவைகளைப் பொருள் வாய்ந்த ஓர் முழுமையாகவும் உருவாக்கவும் நடைபெறுகின்ற செயல்முறையே புலன்காட்சியாகும்” என்றும் வரையறுக்கலாம்

## கெஸ்டால் புலக்காட்சி

**20 நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மன் நாட்டில் தோன்றிய உளவியல் பள்ளி இதுவாகும். கெஸ்டால் என்ற சொல்லின் அர்த்தம் முழுமை, வடிவம், ஒழுங்கமைப்பு என்பதாகும். கெஸ்டால் உளவியலாளர்களின் நோக்கம் ஒரு பொருளை தனித்தனி கூறுகளாக நோக்காது முழுமையாக காட்சிப்படுத்துவதாகும்.** கெஸ்டால் கொள்கையில் புலக்காட்சி மற்றும் கற்றல் என்பன முக்கியமானதாகும். புலக்காட்சியில் 02 வாதங்கள் காணப்படுகின்றது. அவையாவன,

1. **உருவகப் பின்னணி**
2. **புலக்காட்சிப் பற்றிய விதிகள்**

உருவகப் பின்னணி : கெஸ்டால்ட் அமைப்புகளின் முக்கிய கோட்பாடுகள் தோற்றம் மறுசீரமைப்பு, பல்நிலைத்தன்மை மற்றும் மாறாத தன்மை ஆகும்.

- மறுசீரமைப்பு

மறுபரிசீலனை என்பது உணர்வின் ஆக்கபூர்வமான அல்லது உருவாக்கும் அம்சமாகும். இதன் மூலம் அனுபவம் வாய்ந்த புலனுணர்வு அதன் அடிப்படையிலான உணர்ச்சி தூண்டுதலை விட வெளிப்படையான இடஞ்சார்ந்த தகவல்களைக் கொண்டுள்ளது.

உதாரணமாக, ஒரு முக்கோணம் முக்கோணம் இல்லாவிட்டாலும், படம் A இல் உணரப்படுகிறது. B மற்றும் D படங்களில், கண் வேறுபட்ட வடிவங்களை ஒரே வடிவத்திற்கு உரியது என்று அங்கீகரிக்கிறது. C இல் ஒரு முழுமையான முப்பரிமாண வடிவம் காணப்படுகிறது. உண்மையில் அப்படி எதுவும் வரையப்படவில்லை. காட்சி அமைப்பால் உண்மையான வரையறைகளாகக் கருதப்படும் மாயையான வரையறைகளின் ஆய்வில் முன்னேற்றம் மூலம் மறுவடிவமைப்பை விளக்கலாம்.

- **பன்முகத்தன்மை**

நெக்கர் கன சதுரம் மற்றும் ரூபின் குவளை, பல நிலைத்தன்மையின் இரண்டு எடுத்துக்காட்டுகள். மல்டிஸ்டபிலிட்டி (அல்லது பலநிலை உணர்தல்) என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாற்று விளக்கங்களுக்கிடையில் முன்னும் பின்னுமாக நிலையற்ற முறையில் தோன்றும் தெளிவற்ற புலனுணர்வு அனுபவங்களின் போக்கு ஆகும். உதாரணமாக, இங்கு காட்டப்பட்டுள்ள நெக்கர் கனசதுரத்திலும் ரூபினின் உருவம்/குவளை மாயையிலும் இது காணப்படுகிறது. மற்ற எடுத்துக்காட்டுகளில் மூன்று-கால் பிளைவெட் மற்றும் கலைஞர் MC எஷரின் கலைப்படைப்பு மற்றும் ஒளிரும் மார்க்கீ விளக்குகள் முதலில் ஒரு திசையில் நகரும் மற்றும் பின்னர் திடீரென்று

மற்றொன்றின் தோற்றம் ஆகியவை அடங்கும். மீண்டும் கெஸ்டால்ட் உளவியல் எவ்வாறு படங்கள் பலநிலையாகத் தோன்றுகின்றன என்பதை விளக்கவில்லை.

- **மாறாத தன்மை**

மாறாத தன்மை என்பது உணர்வின் பண்பு ஆகும். இதன் மூலம் எளிய வடிவியல் பொருள்கள் சுழற்சி, மொழிபெயர்ப்பு மற்றும் அளவு ஆகியவற்றிலிருந்து சுயாதீனமாக அங்கீகரிக்கப்படுகின்றன. மீள் சிதைவுகள், வெவ்வேறு விளக்குகள் மற்றும் வெவ்வேறு கூறு அம்சங்கள் போன்ற பல வேறுபாடுகள்.

எடுத்துக்காட்டாக, படத்தில் A இல் உள்ள பொருள்கள் அனைத்தும் உடனடியாக ஒரே அடிப்படை வடிவமாக அங்கீகரிக்கப்படுகின்றன. இது B இல் உள்ள வடிவங்களிலிருந்து உடனடியாக வேறுபடுத்தப்படுகிறது. C இல் உள்ளதைப் போல முன்னோக்கு மற்றும் மீள் சிதைவுகள் இருந்தபோதிலும், D இல் உள்ளதைப் போல வெவ்வேறு கிரா∴பிக் கூறுகளைப் பயன்படுத்தி சித்தரிக்கப்படும்போது அவை அங்கீகரிக்கப்படுகின்றன டேவிட் மார் போன்ற பார்வையின் கணக்கீட்டு கோட்பாடுகள் உணரப்பட்ட பொருள்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன என்பதற்கான மாற்று விளக்கங்களை வழங்கியுள்ளன. எமர்ஜென்ஸ், ரீ∴பிகேஷன் மல்டிஸ்டேபிலிட்டி மற்றும் இன்வெரியன்ஸ் ஆகியவை தனித்தனியாக மாதிரியாக பிரிக்கக்கூடிய தொகுதிகள் அல்ல. ஆனால் அவை ஒருங்கிணைந்த டைனமிக் பொறிமுறையின் வெவ்வேறு அம்சங்களாக இருக்கலாம்.

## புலக்காட்சிப் பற்றிய விதிகள்

✓ **அருகாமையின் சட்டம்**

அருகாமையின் விதி கூறுகிறது. ஒரு நபர் பல்வேறு வகையான பொருள்களை உணரும்போது அவர்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கும் பொருட்களை ஒரு குழுவை உருவாக்குவதாக உணர்கிறார்கள். எடுத்துக்காட்டாக, அருகாமையின் சட்டத்தை விளக்கும் படத்தில் 72 வட்டங்கள் உள்ளன. ஆனால் குழுக்களாக வட்டங்களின் தொகுப்பை நாங்கள் உணர்கிறோம். குறிப்பாக படத்தின் இடது பக்கத்தில் 35 வட்டங்கள் கொண்ட குழுவும், படத்தின் வலது பக்கத்தில் 12 வட்டங்கள் கொண்ட மூன்று குழுக்களும் இருப்பதை நாம் உணர்கிறோம். இந்தச் சட்டம் பெரும்பாலும் விளம்பர் லோகோக்களில் நிகழ்வுகளின் எந்த அம்சங்களுடன் தொடர்புடையது என்பதை வலியுறுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

✓ **ஒற்றுமை சட்டம்**

பொருள்களின் வகைப்படுத்தவில் உள்ள கூறுகள் ஒன்றுக்கொள்று ஒத்ததாக இருந்தால் புலனுணர்வு ரீதியாக ஒன்றாக தொகுக்கப்படும் என்று ஒற்றுமை விதி கூறுகிறது. இந்த ஒற்றுமை வடிவம், நிறம் நிழல் அல்லது பிற குணங்களின் வடிவத்தில் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, ஒற்றுமை விதியை விளக்கும் உருவம் 35 வட்டங்களையும் ஒன்றுக்கொன்று சமமான தூரத்தில் ஒரு சதுரத்தை உருவாக்குகிறது. இந்தச் சித்தரிப்பில், 18 வட்டங்கள் இருட்டாகவும், 18 வட்டங்கள் ஒளி நிழல் கொண்டதாகவும் இருக்கும். வட்டங்களின் சதுரத்திற்குள் ஆறு கிடைமட்டக் கோடுகளை உருவாக்கி.

இருண்ட வட்டங்களை மூன்றாகவும், ஒளி வட்டங்கள் ஒன்றாகவும் இருப்பதை உணர்கிறோம். வரிகளின் இந்த கருத்து ஒற்றுமை விதியின் காரணமாகும்.

- ✓ **மூடல் சட்டம்**

கெஸ்டால்ட் உளவியலாளர்கள் மனிதர்கள் பொருள் கொண்டிருக்கும் இடைவெளிகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக பொருட்களை முழுமையானதாக உணர முனைகிறார்கள் என்று நம்பினர். எடுத்துக்காட்டாக, ஒரு வட்டம் முழுமையின் அடிப்படையில் நல்ல கெஸ்டால்ட்டைக் கொண்டுள்ளது. இருப்பினும், முழுமையடையாத வட்டத்தையும் ஒரு முழுமையான வட்டமாக உணர்வோம். வடிவங்கள் மற்றும் உருவங்களை நிறைவு செய்யும் போக்கு மூடல் என்று அழைக்கப்படுகிறது. படிவங்கள். எழுத்துக்கள், படங்கள் போன்ற பொருட்கள் முழுமையடையாதபோது அவை முழுமையாய் இருப்பதை தனிநபர்கள் உணர்கிறார்கள். என்று மூடல் விதி கூறுகிறது. குறிப்பாக, ஒரு முழுப் படத்தின் பகுதிகள் காணாமல் போனால், நமது கருத்து காட்சி இடைவெளியை நிரப்புகிறது. உணர்ச்சியின் மூலம் உணரப்படாத ஒரு வழக்கமான உருவத்தை மனம் நிறைவு செய்வதற்குக் காரணம், சுற்றியுள்ள தூண்டுதல்களின் ஒழுங்குமுறையை அதிகரிப்பதே என்று ஆராய்ச்சி காட்டுகிறது.

எடுத்துக்காட்டாக, மூடல் விதியை சித்தரிக்கும் உருவம், படத்தின் இடது பக்கத்தில் ஒரு வட்டமாகவும், படத்தின் வலது பக்கத்தில் ஒரு செவ்வகமாகவும் நாம் உணருவதை சித்தரிக்கிறது. இருப்பினும்,வடிவங்களில் இடைவெளிகள் உள்ளன. மூடல் விதி இல்லை என்றால் படம் வெவ்வேறு நீளங்கள், சுழற்சிகள் மற்றும் வளைவுகளுடன் வெவ்வேறு கோடுகளின் வகைப்படுத்தலை சிந்தரிக்கும்-ஆனால் மூடல் விதியுடன், நாம் புலனுணர்வுடன் கோடுகளை முழு வடிவங்களாக இணைக்கின்றோம்.

- ✓ **சமச்சீர் சட்டம்**

பொருள்களை மனம் சமச்சீராக உணர்ந்து ஒரு மையப் புள்ளியைச் சுற்றி உருவாகிறது என்று சமச்சீர விதி கூறுகிறது. பொருள்களை சம எண்ணிக்கையிலான சமச்சீர் பகுதிகளாகப் பிரிப்பது புலனுணர்வு ரீதியாக மகிழ்ச்சி அளிக்கிறது. எனவே. இரண்டு சமச்சீர கூறுகள் இணைக்கப்படாமல் இருக்கும் போது, மனம் புலனுணர்வு ரீதியாக அவற்றை இணைத்து ஒரு ஒத்திசைவான வடிவத்தை உருவாக்குகிறது. சமச்சீர் பொருள்களுக்கிடையே உள்ள ஒற்றுமைகள், ஒருங்கிணைக்கப்படாமல் சமச்சீர் பொருளை உருவாக்குவதற்காகப் பொருள்கள் தொகுக்கப்படும் வாய்ப்பை அதிகரிக்கின்றன. எடுத்துக்காட்டாக, சமச்சீர் விதியை சித்தரிக்கும் உருவம் சதுர மற்றும் சுருண்ட அடைப்புக்குறிகளின் உள்ளமைவைக் காட்டுகிறது.படம் உணரப்படும்போது, ஆறு தனித்தனி அடைப்புக்குறிகளைக்காட்டிலும் மூன்று ஜோடி சமச்சீர அடைப்புக்குறிகளைக் கவனிக்க முனைகிறோம்.

- ✓ **பொதுவான விதியின் சட்டம்**

பொருட்கள் மென்மையான பாதையில் நகரும் கோடுகளாக உணரப்படுகின்றன என்று கூறுகிறது. காட்சி உணர்திறன் முறையைப் பயன்படுத்தும் சோதனைகள், ஒரு பொருளின் உறுப்புகளின் இயக்கம், பொருள்கள் இயங்குவதை தனிநபர்கள் உணரும் பாதைகளை உருவாக்குகிறது

என்பதைக் கண்டறிந்தது பொருளின் கூறுகள் இயக்கத்தின் போக்குகளைக் கொண்டிருப்பதை நாம் உணர்கிறோம். இது பொருள் செல்லும் பாதையைக் குறிக்கிறது. தொடர்ச்சியின் விதியானது ஒரே மாதிரியான இயக்கப் போக்கைக் கொண்ட மற்றும் ஒரே பாதையில் இருக்கும் பொருள்களை ஒன்றிணைப்பதைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, புள்ளிகளின் வரிசை இருந்தால் பாதி புள்ளிகள் மேல்நோக்கி நகர்ந்தால், மற்ற பாதி கீழ்நோக்கி நகர்ந்தால், மேல்நோக்கி நகரும் புள்ளிகளையும் கீழ்நோக்கி நகரும் புள்ளிகளையும் இரண்டு தனித்தனி அலகுகளாகக் கருதுவோம்.

- ✓ **தொடர்ச்சியின் சட்டம்**

நல்ல தொடர்ச்சியின் விதி என்றும் அழைக்கப்படுகிறது. பொருள்களின் கூறுகள் ஒன்றாக தொகுக்கப்படுகின்றன. எனவே அவை ஒரு பொருளுக்குள் சீரமைக்கப்பட்டால் புலனுணர்வு முழுமையுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றன. பொருள்களுக்கு இடையில் ஒரு குறுக்குவெட்டு இருக்கும் சந்தர்ப்பங்களில் தனிநபர்கள் இரண்டு பொருட்களையும் இரண்டு ஒற்றை தடையற்ற நிறுவனத்தினர் உணர முனைகிறார்கள். தூண்டுதல்கள் ஒன்றுடன் ஒன்று கூட தனித்தனியாக இருக்கும் கூர்மையான திடீர் திசை மாற்றங்களைக் கொண்ட உறுப்புகளை ஒரே பொருளாகக் குழுவாக்குவதற்கான வாய்ப்புகள் குறைவு. எடுத்துக்காட்டாக. தொடர்ச்சியின் சட்டத்தை சித்தரிக்கும் படம் இரண்டு குறுக்கு விசைகளின் உள்ளமைவைக் காட்டுகிறது. படம் உணரப்படும்போது, ஒரு விசையின் இரண்டு தனித்தனி பகுதிகளுக்குப் பதிலாக பின்னணியில் உள்ள விசையை முற்றைத் தடையற்ற விசையாக நாம் உணர முனைகின்றோம்.

எனவே கெஸ்டால் உளவியலாளர்களின் கருத்துப்படி பார்க்கையில், சில மனிதர்கள் ஒரு பொருளை முழுமையாக பார்க்கின்றனர். பெரும்பாலான ஆட்கள் அவ்வாறு பார்க்கும் மனப்பான்மையில் இருப்பதில்லை என்ற முடிவுக்கு வரலாம்.

**செல்வகுமார் விதுஷாந்தி**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2019/2020)**

# *20.தர்க்க அணுவாதம்: ஒரு மெய்யியல் ரீதியான கண்ணோட்டம்*

**அறிமுகம்**

தர்க்க அணுவாதம் என்பது 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய ஒரு தத்துவக் கோட்பாடாகும், முதன்மையாக பேர்ட்ராண்ட் ரசல் மற்றும் லுட்விக் விட்ஜென்ஸ்டைன் போன்ற தத்துவவாதிகளின் பங்களிப்பினால் தோன்றிய சிந்தனை முறையாகும். இக்கோட்பாடானது சிக்கலான கருத்துகளை எளிமையான, மிகவும் அடிப்படை கூறுகளாக உடைப்பதன் மூலம் யதார்த்தம் மற்றும் மொழியின் கட்டமைப்பை விளக்க முயன்றது. தர்க்க அணுவாதத்தின் பின்னணியில் உள்ள மையக் கருத்து என்னவென்றால், உலகம் அடிப்படை, பிரிக்க முடியாத "அணுக்கள்" - தர்க்கரீதியான கட்டமைப்பு மற்றும் யதார்த்தத்தின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்பதாகும். இந்த கோட்பாடு மொழி, தர்க்கம் மற்றும் உலகம் ஆகியவற்றுக்கு இடையேயான உறவை சமரசம் செய்ய முயற்சிக்கிறது மற்றும் இது பகுப்பாய்வு தத்துவத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வரலாற்று சூழல் மற்றும் வளர்ச்சி**

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்த தத்துவ விவாதங்களின் விளைவாக தர்க்க அணுவாதம் உருவாக்கப்பட்டது. குறிப்பாக இம்மானுவேல் கான்ட் போன்ற முந்தைய தத்துவவாதிகள் மற்றும் வியன்னா வட்டத்தில் உள்ள தர்க்கரீதியான நேர்மறைவாதிகளால் எழுப்பப்பட்ட மொழி மற்றும் பொருளின் அமைப்பு தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கும் முயற்சியாக இது இருந்தது. இது 19ஆம் நூற்றாண்டில் தத்துவத்தில் ஆதிக்கம் செலுத்திய இலட்சியவாதத்தின் மெட்டாபிசிக்கல் மிகுதிகளுக்கு ஒரு பிரதிபலிப்பாகவும் இருந்தது.

இந்த நேரத்தில் தத்துவ நிலப்பரப்பானது ஒரு புதிய அணுகுமுறைக்கு பழுத்திருந்தது. முறையான தர்க்கத்தில் ஃப்ரீஜ் மற்றும் ரசல் ஆகியோரின் பணி, மொழி மற்றும் பொருளைப் பற்றி சிந்திக்க புதிய கருவிகளை வழங்கியது. அதே நேரத்தில் விட்ஜென்ஸ்டைனின் Tractatus Logico Philosophicus என்ற நூலில் ஆரம்பகால வேலை தர்க்க அணுவாதத்தின் வளர்ச்சிக்கு மையமாக இருந்தது.

**தர்க்க அணுவாதத்தின் முக்கிய எண்ணக்கருக்கள்**

உலகம் எளிமையான, பிரிக்க முடியாத கூறுகள் அல்லது "அணுக்களால்" ஆனது என்று தர்க்க அணுவாதம் கூறுகிறது. இவை இன்னும் உடைக்க முடியாத மிக அடிப்படையான உண்மைகள். இந்த அணுக்கள் உலகத்தைப் பற்றிய அடிப்படை முன்மொழிவுகளாகக் கருதப்படுகின்றது. அவை குறிப்பிட்ட அடிப்படை விவகாரங்களுக்கு ஒத்திருக்கும். எடுத்துக்காட்டாக, "பூனை பாயில் உள்ளது" போன்ற ஒரு அடிப்படை முன்மொழிவு ஒரு எளிய உண்மையைக் குறிக்கிறது. இது மிகவும் அடிப்படையான எதையும் குறைக்க முடியாது.

தர்க்கரீதியான அணுவாதத்தின் மையமானது, மொழி உலகிற்கு ஒத்திருப்பதால் அதற்கு அர்த்தம் உள்ளது என்ற கருத்து காணப்படுகின்றது. ஒரு முன்மொழிவு உலகின் விவகாரங்களை துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்தினால் அது அர்த்தமுள்ளதாக இருக்கும். உலகத்தைப் பற்றிய ஒரு கூற்று ஒரு

உண்மையான உண்மைக்கு ஒத்திருந்தால் அது உண்மை என்று இதன் பொருள். எனவே, உண்மை என்பது அந்த அறிக்கையில் உள்ளார்ந்த ஒன்று அல்ல, மாறாக மொழிக்கும் உலகத்திற்கும் இடையிலான உறவிலிருந்து எழும் ஒன்றாகும்.

தர்க்க அணுவாதத்ததின் படி உலகத்தைப் பற்றிய எளிமையான உண்மைகளைக் குறிக்கும் அணுக் கருத்துக்களால் மொழி உருவாக்கப்படுகிறது. அனைத்து சிக்கலான முன்மொழிவுகளையும் இந்த அடிப்படை முன்மொழிவுகளாக உடைக்க முடியும் என்றும், மொழியின் அமைப்பு யதார்த்தத்தின் கட்டமைப்பைப் பிரதிபலிக்கிறது என்றும் கோட்பாடு பரிந்துரைக்கிறது. பேர்ட்ரண்ட் ரசலின் கூற்றுப்படி, உலகத்தைப் பற்றிய ஒவ்வொரு அர்த்தமுள்ள அறிக்கையும் இறுதியில் அணு உண்மைகளைப் பற்றிய அடிப்படை வாக்கியங்களாக சிதைக்கப்படலாம்.

அடுத்து, யதார்த்தத்தின் அமைப்பு மொழியின் தர்க்கரீதியான கட்டமைப்பில் பிரதிபலிக்கிறது என்பதை தர்க்க அணுவாதம் வலியுறுத்துகிறது. டிராக்டேடஸில், விட்ஜென்ஸ்டைன், உலகம் உண்மைகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. மேலும் இந்த உண்மைகளை தர்க்கரீதியான முன்மொழிவுகள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்று வாதிட்டார். மொழியில் உள்ள அணு முன்மொழிவுகள் எளிய உண்மைகளுடன் ஒத்துப்போகின்றன. மேலும் சிக்கலான உண்மைகள் எளிமையான அணு முன்மொழிவுகளால் உருவாக்கப்பட்ட மிகவும் சிக்கலான முன்மொழிவுகளால் குறிப்பிடப்படுகின்றன. மொழிக்கும் உலகத்திற்கும் இடையிலான இந்த கடித தொடர்பு, தத்துவ பகுப்பாய்வின் தெளிவையும் துல்லியத்தையும் பராமரிக்க உதவுகிறது.

தர்க்கரீதியான அணுவாதத்தின் நிலைப்பாட்டில் இருந்து தத்துவவியல் பகுப்பாய்வு, சிக்கலான அறிக்கைகள் அல்லது சிக்கல்களை அவற்றின் அணு பாகங்களாக உடைப்பதை உள்ளடக்குகிறது. பகுப்பாய்வை எளிமையாக்கி, அதன் அடிப்படைக் கூறுகளாகக் குறைப்பதன் மூலம், யதார்த்தத்தின் அடிப்படைக் கட்டமைப்பைப் பற்றிய தெளிவான புரிதலை ஒருவர் அடைய முடியும். விட்ஜென்ஸ்டைன் பிரபலமாக ‘‘எனது மொழியின் வரம்புகள் எனது உலகின் வரம்புகளைக் குறிக்கின்றன’’ என்று கூறினார். மேலும் மெய்யியலின் பணி யதார்த்தத்தின் தன்மையைப் புரிந்துகொள்வதற்காக மொழியின் வரம்புகள் மற்றும் கட்டமைப்பை தெளிவுபடுத்துவதாகும் என கூறப்படுகின்றது.

பேட்ரன்ட் ரசல் மற்றும் லுட்விக் விட்ஜென்ஸ்டைன் இருவரும் பெரும்பாலும் தர்க்க அணுவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்றாலும், அவர்களின் விளக்கங்களும் கோட்பாட்டின் வளர்ச்சிகளும் சற்றே வித்தியாசமாக இருக்கின்றன. பேட்டன் ரசலின் தரக்க அணுவாதத்தின் பதிப்பு 1910கள் மற்றும் 1920களில் உருவாக்கப்பட்டது. குறிப்பாக அவரது படைப்பான தி பிலாசபி ஆ.்.ப் லாஜிக்கல் அடோமிசத்தில் (1918) ரசல், உலகம் அணு உண்மைகளைக் கொண்டுள்ளது என்று வாதிட்டார். அவை யதார்த்தத்தின் அடிப்படை கட்டுமானத் தொகுதிகள். அவரைப் பொறுத்தவரை இந்த அணு உண்மைகள் மனித அனுபவத்திலிருந்து சுயாதீனமாக இருக்கும் குறிப்பிட்ட பொருட்களால் ஆனது மற்றும் அடிப்படை முன்மொழிவுகள் மூலம் விவரிக்கப்படுகின்றது.

மொழியின் அமைப்பு உலகின் கட்டமைப்பைப் பிரதிபலிக்க வேண்டும் என்று ரசல் நம்பினார். எனவே தத்துவத்தின் பணி மொழியை அதன் அணுக் கூறுகளாக பகுப்பாய்வு செய்வதாகும். குறியீட்டு தர்க்கத்தின் முன்னேற்றங்களால் அவர் பெரிதும் பாதிக்கப்பட்டார். குறிப்பாக .்.ப்ரீஜின் வேலை, மேலும்

அவர் பொருள் மற்றும் குறிப்பின் தன்மை போன்ற தத்துவ சிக்கல்களைத் தீர்க்க தர்க்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயன்றார்.

லூட்விக் விட்ஜென்ஸ்டைன் (Logico Philosophicus -1921) இல் விட்ஜென்ஸ்டைனின் ஆரம்பகால வேலை, தர்க்கரீதியான அணுவாதத்தின் தீவிரமான மற்றும் கடுமையான வடிவத்தை வழங்கியது. விட்ஜென்ஸ்டைன் ரசலுடன் ஒப்புக்கொண்டார். உலகம் அணு உண்மைகளைக் கொண்டுள்ளது. ஆனால் அவர் மொழியின் மிகவும் முறையான மற்றும் கட்டமைப்பு பார்வையை முன்மொழிந்தார். டிராக்டேடஸில், விட்ஜென்ஸ்டைன் மொழியும் உலகமும் ஒரு பொதுவான தர்க்க வடிவத்தைப் பகிர்ந்து கொள்ளும் உலகத்துடன் ஒத்துப்போகும் வகையில் தர்க்கரீதியாக கட்டமைக்கப்பட்டால், ஒரு முன்மொழிவு அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று வாதிட்டார்.

எவ்வாறாயினும், விட்ஜென்ஸ்டைனின் பார்வை மொழியின் வரம்புகளில் அதிக கவனம் செலுத்தியது. அர்த்தமுள்ள சொற்பொழிவின் எல்லைகளை அங்கீகரிப்பதே தத்துவத்தின் இறுதிப் பணி என்று அவர் வாதிட்டார். விட்ஜென்ஸ்டைன் மொழி தவறாகப் பயன்படுத்தப்படும்போது அல்லது அதன் தர்க்கரீதியான வரம்புகளுக்கு அப்பால் நீட்டிக்கப்படும்போது பல தத்துவ சிக்கல்கள் எழுகின்றன. இது குழப்பம் மற்றும் போலிச் சிக்கல்களுக்கு வழிவகுக்குக்கின்றது.

**தர்க்க அணுவாதமானது காலப்போக்கில் பல விமர்சனங்களை எதிர்கொண்டது. அவையாவன,**

அந்தவகையில் தர்க்க அணுவாதத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக அணு உண்மை என்ன என்பது பற்றிய கேள்வி எழுகின்றது. ரசலின் கோட்பாடு அணு உண்மைகள் உலகில் இருக்கும் எளிய, சுயாதீனமான நிறுவனங்கள் என்று கருதுகிறது. இருப்பினும், மேலும் சிக்கலான தன்மையை அறிமுகப்படுத்தாமல் இந்த அணு உண்மைகளை எவ்வாறு வரையறுக்க முடியும் என்பது தெளிவாக இல்லை என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். வில்லார்ட் வான், ஓர்மன் குயின் போன்ற சில தத்துவவாதிகள் தெளிவான “அணு உண்மைகள்” இல்லை என்று வாதிட்டனர். எளிய மற்றும் சிக்கலான உண்மைகளுக்கு இடையேயான வேறுபாடு தர்க்கரீதியான அணுவியல் கூறுவது போல் நேரடியானதாக இருக்காது என கூறுகின்றனர்.

அடுத்து மொழி மற்றும் பொருளின் முழுமையான பார்வையில் இருந்து மற்றொரு விமர்சனம் எழுகின்றது. குயின் மற்றும் பிந்தைய விட்ஜென்ஸ்டைன் (அவரது பிற்காலப் படைப்பில்) போன்ற தத்துவவாதிகள், அணுக் கூறுகளாகப் பிரிப்பதன் மூலம் மொழி மற்றும் பொருளைப் புரிந்து கொள்ள முடியாது என்று வாதிட்டனர். பொருள் பெரும்பாலும் சூழலைச் சார்ந்தது, மேலும் தனிப்பட்ட சொற்கள் அல்லது முன்மொழிவுகளைப் பற்றிய நமது புரிதல் அவை உட்பொதிக்கப்பட்ட பெரிய மொழியியல் அமைப்பால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மொழியை எளிய, அணுக் கூறுகளாகக் குறைக்கலாம் என்ற கருத்தை சவால் செய்கிறது.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், ஜே.எல். ஆஸ்டின் மற்றும் பிந்தைய விட்ஜென்ஸ்டைன் போன்ற நபர்களால் வழிநடத்தப்பட்ட சாதாரண மொழித் தத்துவம் தர்க்க அணுவாதத்தின் அனுமானங்களை கேள்விக்குள்ளாக்கியது. சொற்கள் மற்றும் வாக்கியங்களின் பொருள் சில அடிப்படை தர்க்கரீதியான கட்டமைப்பைக் காட்டிலும் அன்றாட பயன்பாடு மற்றும் சமூக நடைமுறையில் வேரூன்றியுள்ளது என்று அவர்கள் வாதிட்டனர். இந்த அணுகுமுறை மொழியின் சாதாரண, நடைமுறைப் பயன்பாடுகளை ஆராய்வதற்கு ஆதரவாக தருக்க அணுவாதத்தின் முறையான போக்குகளை நிராகரித்தது.

**முடிவுரை**

தர்க்க அணுவாதம் ஆரம்பகால பகுப்பாய்வு தத்துவத்தில் ஒரு முக்கியமான மற்றும் செல்வாக்குமிக்க இயக்கமாக இருந்தது. இது மொழிக்கும் உலகத்திற்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்வதற்கான ஒரு புதிய வழியை வழங்குகிறது. சிக்கலான யோசனைகளை எளிமையான கூறுகளாக உடைப்பதற்கான கோட்பாட்டின் முக்கியத்துவம் தர்க்க நேர்மறைவாதம், முறையான தர்க்கம் மற்றும் பகுப்பாய்வு தத்துவத்தின் வளர்ச்சியை வடிவமைக்க உதவியது. பிற்கால தத்துவ இயக்கங்களால் இது விமர்சிக்கப்பட்டது மற்றும் மாற்றப்பட்டது என்றாலும், மொழி மற்றும் உலகின் கட்டமைப்பில் அதன் மைய நுண்ணறிவு சமகால தத்துவத்தை தொடர்ந்து பாதிக்கிறது. இறுதியில், தர்க்கரீதியான அணுவாதம் என்பது தத்துவ சிந்தனையின் பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கியமான தருணத்தைக் குறிக்கிறது, இது பொருள், உண்மை மற்றும் யதார்த்தத்தின் தன்மை பற்றிய விவாதங்களில் தொடர்ந்து எதிரொலிக்கிறது என்பது உண்மையாகும்.

**கீதாஞ்சலி**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2019/2020)**

# 21.சோக்ரடீஸின் ஒழுக்கவியல் சிந்தனைகளின் ஏற்புடைமை

கிரேக்க மெய்யியலில் அதிகம் ஆதிக்கம் செலுத்திய சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் ஆகிய மூவரின் சிந்தனைகள் மற்றும் கருத்துக்கள் அறிவை பெறுதல் என்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில் எழுந்தனவாகும். சோக்கிரடீஸ் தனக்கு முன்னைய மெய்யியல் சிந்தனையாளர்களை போல் இயற்கை உலகினை பிரதானமான ஆய்வுக்குரிய விடயமாக அல்லாமல் மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும், அதற்காக எவ்வாறான விடயங்களை பின்பற்ற வேண்டும் என்பது தொடர்பான சிந்தனைகளை முன்வைத்தவராக உள்ளார். இவற்றுடன் அளவையியல், ஒழுக்கவியல், அறிவாராய்ச்சியில் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பினை சோக்ரடீஸ் மேற்கொண்டுள்ளார். மேலும் சோக்கிரடிஸின் போதனைகள் மற்றும் சிந்தனைகள் முக்கியமாக ஒழுக்கப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை. சோபிஸ்டுகளுடன் சோக்கிரட்டிஸை ஒப்பிடக்கூடிய இடமாக இதனை நாம் கருதலாம். சோக்கிரட்டிஸின் ஒழுக்க போதனைகள் அறிவாராய்ச்சியியலுடன் இணைக்கப்பட்டிருந்தன. அந்தவகையில் சோக்ரடீஸின் ஒழுக்க சிந்தனை தொடர்பாக ஆராய முற்படுவோமாயின்.

சோக்ரடீஸின் யுகம் சோக்ரடீஸ்க்கு முற்பட்ட காலம், சோக்ரடீஸ்க்கு பிற்பட்ட காலம் என இரண்டு வகைக்குள் அடங்கும். சோக்ரடீஸிற்கு முற்பட்ட காலத்தில் கிரேக்கத்தில் சட்டங்களும் வழக்காறுகளுமே ஒழுக்கத்தின் விதிகளாக காணப்பட்டன. அதாவது சட்டங்களுக்கும் வழக்காறுகளுக்கும் பயந்தே மக்கள் ஒழுக்க விதிகளை கடைபிடித்தனர். **உதாரணமாக ஒழுக்க விதிகளை மீறுபவர்களுக்கு சட்டங்களின் மூலம் தண்டனை வழங்குதல், போன்றவற்றை குறிப்பிடலாம்.** அத்தோடு வலிமையை சரியான ஒன்றும் நல்லது ஒன்று ஆகும் எனக் குறிப்பிட்டு வலிமையை முதன்மைப்படுத்தியதாக சோக்ரடீஸிற்கு முற்பட்ட காலத்தில் ஒழுக்கம் காணப்பட்டது. அத்தோடு ஆசைகள், விருப்பங்கள். உணர்வுகள் மற்றும் புறக்காட்சி என்பவற்றின் அடிப்படையில் ஒழுக்கமும் ஒழுக்க விதிகளும் தீர்மானிக்கப்பட்டு காணப்பட்டது என்கின்றனர்.

சோக்ரடீஸின் வாழ்நாளில் அவர் சில முக்கியமான நெறிமுறைகளில் ஆர்வம் கொண்டவராக விளங்குகிறார். அதாவது நல்ல வாழ்க்கைக்கு சுய அறிவு ஒன்றே போதுமானது என சோக்ரடீஸ் அறிவை நல்லொழுக்கத்துடன் அடையாளப்படுத்துகிறார். அறிவை கற்க முடியும் என்றால் அறத்தையும் கற்றுக் கொள்ள முடியும். எனவே சோக்ரடீஸ் நல்லொழுக்கத்தை கற்பிக்க முடியும் என்று கூறுகின்றார். அத்தோடு ஆய்வு செய்யப்படாத வாழ்க்கை வாழ தகுதியற்றது என்று அவர் நம்புகின்றார். தனிப்பட்ட நலன்களுக்கு முன் ஒருவர் அறிவையும் ஞானத்தையும் தேட வேண்டும். இந்தமுறையில் நெறிமுறை நடவடிக்கைக்கான அதாவது ஒழுக்க நெறிமுறைகளுக்கான வழிமுறையாக அறிவு தேடப்படுகின்றது. மேலும் ஒருவர் உண்மையிலேயே அறிந்திருப்பது ஒருவரின் மனசாட்சி அல்லது ஆன்மாவின் கட்டளைகள் என குறிப்பிடுகின்றார். ஒழுக்க கருத்துக்களினூடாக பெறப்படும் அறிவாக உள்ளது. ஆகையால் ஒருவரும் தவறு என அறிந்து தவறு செய்வதில்லை குறிப்பிட்ட ஒரு நபர் தவறு என்பதை அறியாமலேயே தவறை செய்கின்றார். ஆகவே தீய ஒழுக்கம் அறியாமையின்

காரணமாக உள்ளது என்கின்றார். அதாவது சோக்ரடீஸ் தீமையான ஒழுக்கம் என குறிப்பிடாமல் அது அறியாமையின் விளைவு என்கின்றார். **ஊதாரணமாக நாம் நல்லதை தேடுகிறோம் ஆனால் நல்லதை எப்படி பெறுவது என்பது பற்றிய அறியாமை அல்லது அறிவின்மையால் தான் அதை அடையத் தவறுகிறோம்**. அத்தோடு யாரும் வேண்டுமென்றே தங்களுக்கு தீங்கு செய்வதில்லை என அவர் நம்புகின்றார். நமக்கு தீமை வரும்போது நாம் நன்மையை தேட நினைத்தாலும் நல்லது எப்படி அடைவது என்பது பற்றிய அறிவு இல்லாததால் நன்மை கிடைக்காது. இக்கருத்தானது தற்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாக உள்ளது. அதாவது **உதாரணமாக இன்று குற்றச் செயல்களில் ஈடுபடும் பலரது குடும்ப பின்னணி அறியாமையினால் சூழப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதிக வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பாமர மக்கள் தான் எதை செய்வதென்று அறியாது பல ஒழுக்க சீர்கேடுகளில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.**

மேலும் சோக்ரடீஸ் அறிவை பகுத்தறிவின் பாகமாக்கினார். கிரேக்க மக்களின் மீது அதீத ஆர்வம் கொண்ட சோக்ரடீஸ் **"நல்லறிவே நல்லொழுக்கம் நல்லொழுக்கமே நல்லறிவு"** என்ற வாசகத்தின் மூலம் தனது ஒழுக்க சிந்தனையை வெளிப்படுத்துகின்றார். அதாவது நல்வாழ்க்கைக்கு பகுத்தறிவு அவசியம் என்று சோக்ரடீஸ் கருதுகின்றார். அதன் அடிப்படையில் அவர் குறிப்பிடுகையில் சரியானதை செய்வதன் மூலம் ஒரு உண்மையான மகிழ்ச்சி ஊக்கவிக்கப்படுகிறது. உங்களுடைய உண்மையான மகிழ்ச்சி அதாவது உங்கள் ஆன்மாவை பராமரிப்பதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சி அடைகின்றீர்கள். ஆன்மாவை நீண்ட கால விளைவின் அடிப்படையில் மட்டுமே மகிழ்ச்சி தெளிவாக தெரிகிறது என குறிப்பிடுகின்றார். சோக்ரடீஸின் நெறிமுறைகள் டெலிலஜிக்கல் தன்மையைக் கொண்டுள்ளன. இதன் விளைவாக மனித நடத்தை பற்றி ஒரு இயந்திர விளக்கம் தவறாக உள்ளது. மனித செயல்கள் இயற்கை நோக்கத்திற்கு ஏற்ப நல்லதை நோக்கமாக கொண்டுள்ளன எனவும் குறிப்பிடுகின்றார். அதாவது, சோக்கிரட்டிஸின் நெறிமுறை அறிவாற்றல் ஒரு யூடாமலஜிக்கல் தன்மையைக் கொண்டதாகும். அந்த வகையில், ஒழுக்க விதிகளை பொதுமையானதாகவும் பகுத்தறிவு சார்ந்த ஒன்றாகவும் சோக்ரடீஸ் கருதினார்.

மேலும் ஒழுக்கம் என்பது நல்லது பற்றிய அறிவாகவும் கருத்துக்களில் இருந்து பெறப்படுகின்ற ஒன்றாகவும் இவர் குறிப்பிடுகின்றார். மனிதன் சரியாக நடப்பதற்கு சரியான ஒரு அறிவு தேவை. அனைத்து வசதிகளும் செல்வங்களும் இருந்தாலும் கூட நல்லறிவு இல்லாவிட்டால் அவை தீமையானவையாகவே மாறிவிடும், **எடுத்துக்காட்டாக அனைத்து செல்வம் படைத்த செல்வந்தன் ஒருவனிடம் தன்னிடம் இருக்கின்ற செல்வங்களை எவ்வாறு பயன்படுத்துவது பாதுகாப்பது தொடர்பான அறிவு இல்லாவிட்டின் அவன் அதனை தீய வழிகளில் செலவழிக்க கூடும். உதாரணமாக சூதாட்டம் போன்ற சில தீய வழிமுறைகளின் மூலம் அழித்து விடுவான்**. எல்லாவிதமான ஆன்மீகப் பண்பும் நல்ல அறிவுடன் இணைந்தால் மட்டுமே நன்மை தரக்கூடியதாக இருக்கும். அந்தவகையில் இவர் கூறும் ஒழுக்க கருத்து தற்காலம் என்ன எல்லா காலத்திற்கும் பொருத்தமானதாகவே உள்ளமை காணக்கூடியதாய்யுள்ளது.

அனைத்து மனிதர்களிடம் மனதிலும் பொதுமையான கருத்துக்கள் மறைந்தே காணப்படுகின்றது. என்றும் சில வகையான அறிவுப்பூர்வமான கேள்விகளின் மூலமே அதனை வெளிக்கொண்டுவர முடியும் எனவும் சோக்ரடீஸ் நம்புகின்றார். அத்தோடு நன்மையினை தேடுபவர்கள் கட்டாயம் உண்மையினை கண்டறிவார்கள் என்கின்றார். அதாவது உண்மையில் அறிவு என்பது ஒருவர் மனதிலேயே இருக்கின்றது. அது அறியாமல் அதனை எவ்வாறு வெளிக்கொண்டு வருவது என்பதை பற்றிய அறிவு இன்மையினால் காணப்படுகின்றது. ஆகவே உண்மையில் அறிவு என்பது ஒருவர் மனதில் இருக்கின்ற அறியாமையினை ஞாபகப்படுத்துவதாக உள்ளது.

மேலும் யார் ஒழுக்கமுடன் இருக்கின்றார்களோ அவர்கள் தெய்வீக ரீதியாக நல்லறிவு மற்றும் நல்லொழுக்க தொடர்பான வெளிப்படுத்தல்களை பெறுவார்கள் என்கின்றார். ஒழுக்கம் மனிதனின் நல்லறிவான்மை எல்லா செயல்களையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்தி அவனை நல்ல செயல்களை செய்யவும் அதனை செய்வதற்கான ஆற்றலையும் வழங்குகின்றது. நல்லறிவாண்மை என்பது எல்லா ஒழுக்க சீலங்களையும் தன்னுள் அடக்கிய ஒரே ஒரு ஒழுக்க பண்பாகும் இவ்வகையில் நல்லறிவு ஒழுக்கமாகவும் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது என்கின்றார். ஒட்டுமொத்தமாக சோக்ரட்டீஸ் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கும் அறிவையும் ஞானத்தையும் அடைய முயற்சி செய்ய வேண்டும் என்று நம்பினார். ஒழுக்கத்தின் புறநிலை தரத்திற்கு ஏற்ப தனி நபர்கள் நடந்து கொள்ள வேண்டிய கடமை இருப்பதாக நம்புகின்றார். மேலும் ஒரு இணக்கமான சமூகத்திற்கு நீதி முக்கியம் எனவும் கூறுகின்றார்.

சோக்ரடீஸ் அரசியலில் நெறிமுறைகளும் ஒழுக்கமும் முக்கியமென்றும் அரசியல் தலைவர்கள் உயர்தரமான ஒழுக்க நடத்தையில் இருக்க வேண்டும் எனவும் நம்பினார். அதன் தலைவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும் புறநிலை தார்மீக கொள்கைகளின் படி செயல்பட்டால் மட்டுமே ஒரு நியாயமான சமூகத்தை அடைய முடியும் எனவும் நம்பினார். அத்தோடு தனது குடிமக்களிடையே நல்லொழுக்கம் மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கான பொறுப்பு அரசுக்கு உண்டு என்று அரசின் பங்கை எடுத்துக் கூறுகிறார். அந்தவகையில் இவ் விடயத்தினை தற்காலத்துடன் பொருத்திப் பார்க்கும்போது **எடுத்துக்காட்டாக இதனை குறிப்பிடலாம் அதாவது இன்று பல அரசியல்வாதிகள் லஞ்சம், ஊழல், கொள்ளை, கொலை என எல்லா ஒழுக்க சீர்கேடான செயல்களிலும் ஈடுபடுகின்றனர் மற்றும் மக்களது உரிமைகளை சரிவர பெற்றுக் கொடுக்காமல் உரிமைகளை பறிக்கக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர்**. அத்துடன் **உதாரணமாக, இன்று இலங்கையில் நிலவி வரும் இக்கட்டான பொருளாதார நிலைக்கு காரணம் இங்கு காணப்படும் முறைகேடான அரசியல்வாதிகளின் செயற்பாடுகளே ஆகும்.** எனவே சோக்ரடீஸ் கூறுவது போல் அரசியல்வாதிகள் ஒழுக்கத்தினை கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்பது தீர்க்கமான ஒரு அம்சம் ஆகும்.

நல்லொழுக்க வாழ்வில் நட்பு இன்றிமையாதது என்றும் சோக்ரடீஸ் நம்பினார். உண்மையான நண்பர்கள் ஒருவரை ஒருவர் சிறந்த மனிதர்களாக ஆக்க உதவுகிறார்கள் என்றும் நல்லொழுக்கத்தை பின் தொடர்வது எளிதாகவும் நண்பருடன் சேர்ந்து செய்யும் போது மிகவும் விரைவாகவும் இருக்கும் என்றும் நம்புகின்றார். **உதாரணமாக இன்று பல வாலிபர்கள்**

**போதைவஸ்து, தீய பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் ஈடுபட காரணம் அவர்களது நண்பர்களே மற்றும் இன்று தமக்கு அமைந்த தீய நட்பின் காரணமாக பலர் தமது வாழ்வினையே சீர்குலைத்துக் கொண்டு வாழ்கின்றமையை சமூகத்தில் காணக்கூடியதாயுள்ளது**.

மேலும் மகிழ்ச்சிக்கு நல்லொழுக்கம் அவசியம் என்று சோக்ரடீஸ் கூறுகின்றார். ஒருவர் நல்லொழுக்கத்துடன் இல்லாவிட்டால் அவர்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்க முடியாது. இன்பம் மற்றும் பொருள் உடைமைகளை பின்தொடர்வது இறுதியில் நிறைவேறாது என்றும் நல்லொழுக்கத்தை பின் தொடர்வது மூலம் மகிழ்ச்சி அடைய முடியும் என்றும் நம்புகின்றார்.

நல்லொழுக்கத்தை தொடரவும் சிறந்த மனிதராக மாறவும் அன்பு அவசியம் என சோக்ரடீஸ் அன்பின் சக்தியை நம்புகின்றார். காதல் என்பது பாலியல் உணர்வு மட்டுமல்ல மாறாக அது தன்னலமற்ற இரக்கமுள்ள மற்றும் நல்லொழுக்கம் உள்ளவர்களாக ஆக்க ஊக்குவிக்கும் ஒரு சக்தி என்றும் அவர் நம்புகின்றார். எடுத்துக்காட்டாக இன்று பலர் தம்மீது தம்மை சார்ந்தவர்கள் காட்டும் அன்பினால் நல்லொழுக்கமுள்ளவர்களாக மாறி தமது வாழ்வினை செவ்வனே வாழ்ந்து வருவதனை காண்கின்றோம்.

மேலும் **"ஒழுக்கமே அறிவு"** என்ற வாசகமே சோக்ரடீசின் வாதமும் வேதமுமாக இருந்தது. ஒருவர் தவறு செய்வதற்கு காரணம் அவருக்கு சரியானது எது என்று தெரியாதது தான் என்றும் அவர் சரியானதை புரிந்து கொண்டால் அவர் தவறு செய்யமாட்டார் என சோக்ரடீஸ் வாதித்தார்,

**"கற்க கசடற கற்பவைகற்றபின்**

**நிற்க அதற்குத் தக**"

என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப தான் பெற்ற ஞானத்தின் அடிப்படையில் தனது வாழ்க்கையினை வாழ்பவராக சோக்ரடீஸ் இருந்தார். நேர்மையினை சோக்ரடீஸ் ஒரு நல்லொழுக்க வாழ்வின் இன்றியமையாத அங்கமாக கருதினார்.

சமூக எதிர் முறைகளுக்கு எதிராக அல்லது துன்புறுத்தலை எதிர்கொண்டாலும் தனிநபர்கள் எப்போதும் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும் என அவர் நம்பினார். நல்லொழுக்கமான வாழ்க்கை வாழ்வதற்கு பணிவு மிக முக்கியமான ஒன்று என நம்பினார். தனிநபர்கள் தங்கள் சொந்த வரம்புகள் மற்றும் குறைபாடுகளை அங்கீகரிக்க வேண்டும் என்றும், தனி நபர்கள் மற்றவரிடம் இருந்து கற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்றும், உங்களுக்கு ஏதாவது ஒன்று தெரியாத போது ஒப்புக்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்றும், நெறிமுறை கருத்துக்களை புரிந்து கொள்வதற்கும் நெறிமுறை படி முடிவுகள் எடுப்பதற்கும் தயாராக இருக்க வேண்டுமென கூறி ஒழுக்க வாழ்விற்கு பணிவின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றார். மேலும், எளிமையை முக்கியமான நட்பண்பாக சோக்ரடீஸ் வரவேகின்றார்.

எனவே மேற்குறிப்பிட்டவற்றை தொகுத்து நோக்கும் போது சோக்ரடீஸின் ஒழுக்க சிந்தனைகள் கிரேக்க கால மக்களுக்கு மட்டுமின்றி தற்காலத்தில் எமது வாழ்க்கைக்கும் பயனுள்ளதாக அமைகின்றது. அதாவது நல்லொழுக்கமுள்ள ஒரு மனிதனாலேயே ஒரு நல்ல சமூகத்தை உருவாக்க முடியும். அந்த அடிப்படையில் சோக்கிரட்டீஸின் ஒழுக்க கருத்துகளானது தற்கால வாழ்விற்கு மிகவும் தேவையான ஒன்றாக காணப்படுகின்றது. நாம் இன்றைய காலகட்டத்தை எடுத்துக் கொண்டால் அனைத்து இடங்களிலும் ஒழுக்க சீர்கேடுகளானது தலைவிரித்து ஆடுகின்றது. இதன் விளைவாக இன்று நாளுக்கு நாள் குற்றச்செயல்களும், வன்முறைகளும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. இன்று நீதி, நேர்மை, அன்பு, கருணை, உதவி செய்யும் மனப்பாங்கு போன்ற அனைத்து நல்லொழுக்க பண்புகளும் மனிதர்களை விட்டு வெகு தூரம் சென்று விட்டது என்று தான் கூற வேண்டும். தன் சுயநலத்திற்காக மக்கள் எவ்வாறான குற்றச்செயல்களிலும் மற்றும் ஒழுக்க மீறல்களிலும் ஈடுபட தயாராக உள்ளனர். இதன் காரணமாக அவர்களது நிம்மதி இழக்கப்படுவது மட்டுமல்லாது ஒட்டுமெத்தமாக சமூகத்தில் வாழும் ஏனைய மக்களது நிம்மதியும் இயக்கப்படுகிறது. எனவே அமைதியான, நிம்மதியான சமூக சூழல் கட்டியெழுப்பப்பட மேற்குறிப்பிட்ட ஒழுக்க கருத்துக்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பது ஒரு இறுக்கமான முடிவாகும். இருப்பினும் நாம் இன்று பல ஒழுக்கச் சீர்கேடுகள் நிறைந்த ஒரு சூழலில் வாழ்ந்து வருகின்றோம்.இவ்வாறான நிலையில் நாம் எப்பொழுதுமே ஒழுக்க சிந்தனைகளை பின்பற்றுவது என்பது இயலாத காரியமாகவே காணப்படுகிறது. அவ்வாறு எல்லா இடங்களிலும் நாம் ஒழுக்க வரையறைகளை பின்பற்றும் போது சில சந்தர்ப்பங்களில் ஏமாற்றமடைய கூடும். இருப்பினும் ஒழுக்கம் என்பது எவ்வாறான சூழலிலும் பின்பற்றக்கூடிய ஒன்றாகவே காணப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்தவகையில் சோக்ரடீசினுடைய ஒழுக்கக்கச் சிந்தனைகளானது தற்காலத்துக்கு மட்டுமல்லாது இனிவரும் எல்லா காலத்திற்கும் மிகவும் பொருத்தமான ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**M.N.F,ZAINAB**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு**
**மெய்யியல் சிறப்பு ( 2019/2020)**

# *22. பிரயோக ஒழுக்கவியலில் ஊடக ஒழுக்கவியல்*

ஊடக நெறிமுறைகள் என்பது ஒழுக்கவியலின் ஒரு பிரிவாகும், இது வெகுஜன ஊடகங்கள் மூலம் தகவல்களைப் பெறுதல், தயாரித்தல், சேமித்தல், வழங்குதல், பரப்புதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தார்மீக சிக்கல்களைத் தீர்க்கிறது. வெகுஜன ஊடகங்களில் அச்சு ஊடகம் (செய்தித்தாள்கள், பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள்), பதிவுகள், இயக்கப் படங்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் (வானொலி, தொலைக்காட்சி மற்றும் கணினி) ஆகியவை அடங்கும். ஊடக நெறிமுறைகள் ஊடகத் தொடர்புகளின் அனைத்துப் பகுதிகளிலும் எழும் பல்வேறு தார்மீக சிக்கல்களைத் தீர்க்க ஊடக பயிற்சியாளர்களுக்கு உதவ முயல்கிறது. பத்திரிகை, விளம்பரம், மக்கள் தொடர்பு, மற்றும் பொழுதுபோக்கு. ஊடகங்கள் பொதுமக்களின் உலகத்தைப் பற்றிய கருத்து மற்றும் புரிதலின் மீது வலுவான மற்றும் சிக்கலான செல்வாக்கை செலுத்துகின்றன, அதன் விளைவாக, ஒவ்வொரு நபரின் ஆளுமை மற்றும் தனிநபர்களின் ஒருவருக்கொருவர் தொடர்புகளை வடிவமைப்பதில். செய்திகள் மற்றும் அறிக்கைகள், விளம்பரங்கள், சோப் ஓபராக்கள் மற்றும் திரைப்படங்கள் இவை அனைத்தும் நீண்ட காலத்திற்கு மக்களின் பார்வைகள், தேர்வுகள் மற்றும் நடத்தை ஆகியவற்றில் அதிக அல்லது குறைவான நுட்பமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஊடகங்கள் எங்கும் பரவி வருவதாலும், அவை அதிகரித்து வருவதாலும், ஊடகப் பயிற்சியாளர்கள் எதிர்கொள்ளும் நெறிமுறைச் சிக்கல்கள் பெருகிய முறையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

புதிய ஊடகம் என்பது தற்காலத்தில் வளர்ச்சி பெற்று வரும் கணிமயப்படுத்தப்பட்ட, எண்மிய, பிணைக்கப்பட்ட தகவல் அமைப்பையும், தொடர்பாடல் தொழில்நுட்பத்தையும் குறிக்கிறது. சிறப்பாக இணையம் (வலைத்தளம், கணினி விளையாட்டு, மனித கணினி தொடர்பு, புதிய ஊடக கலை, சமூக வலைப்பின்னல்கள், வலைப்பதிவு, மெய்நிகர் உலகம்) போன்றவை புதிய ஊடகங்களாக கருதப்படுகின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சி, முழு நீளத் திரைப்படம், இதழ், நூல் (எழுத்துப் படைப்பு) போன்றவை புதிய ஊடகங்களாகக் கருதப்படுவதில்லை. சமூக ஊடகம் அல்லது முகநூல் மற்றும் டுவிட்டர் போன்ற சமூக வலைத்தள சேவைகள் புதிய ஊடகங்களின் மற்றொரு எடுத்துக்காட்டு. இதில் பெரும்பாலான பயனர்களும் பங்கேற்பாளர்கள்.

பாரம்பரிய ஊடகம் என்பது அச்சு ஊடகம் மற்றும் ஒளிபரப்பு ஊடகங்களைக் குறிக்கிறது. அச்சு ஊடகங்களில் செய்தித்தாள்கள், பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் உள்ளன. அதேநேரத்தில் ஒளிபரப்பு ஊடகங்களில் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஆகியவை அடங்கும். பாரம்பரிய ஊடகத்தின் முக்கிய பண்பு ஒருவழி தகவல்தொடர்பு ஆகும். இதில் அனுப்புநரிடமிருந்து பெறுநருக்கு தகவல் பாய்கிறது. இது புதிய ஊடகத்திற்கு முரணானது, பெறுநர்கள் அனுப்புநருக்கு கருத்துக்களை வழங்கக்கூடிய இருவழி தொடர்பு மூலம் வரையறுக்கப்படுகிறது. பாரம்பரிய ஊடகங்கள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன, மேலும் அதன் தோற்றம் குகை ஓவியங்கள் மற்றும் பழங்குடி டிரம்ஸ் போன்ற தகவல்தொடர்புகளின் ஆரம்ப வடிவங்களில் இருந்து அறியப்படுகிறது. சமீபத்திய ஆண்டுகளில் புதிய ஊடகங்கள் அச்சு மற்றும் ஒளிபரப்பை முறியடித்திருந்தாலும், பாரம்பரிய செய்தி ஊடகங்கள் இன்னும் சமூகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன, ஏனெனில் இது இன்னும் பலருக்கு தகவல்களின் முதன்மை ஆதாரமாக உள்ளது.

வலைப்பதிவுகள் மற்றும் சமூக ஊடக தளங்கள் போன்ற புதிய ஊடக ஆதாரங்களைக் காட்டிலும் செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் போன்ற ஊடகங்கள் நம்பகமானவை என்று பலரால்

கருதப்படுகின்றன. இதன் விளைவாக, பாரம்பரிய ஊடகங்கள் சமூகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

பிரயோக ஒழுக்கவியலின் ஒரு பகுதியாக ஊடக ஒழுக்கவியல் கருத்துக்களை மக்களுக்கு தெரிவிப்பதில் பல விதமான ஒழுக்க விதிகளை பின்பற்ற வற்புறுத்துகின்றது. ஆவையாவன சரியான மற்றும் துல்லியமான தகவலை மக்களுக்கு வெளியிட வேண்டும். ஊடகத்தினால் வெளியிடப்படும் தகவல்கள் புறவயத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். உண்மையான தகவல்களை மட்டுமே ஊடகங்கள் வெளியிட வேண்டும். நடுவுநிலைமையான தகவல்களை ஊடகங்கள் வெளியிட வேண்டும். ஊடக ஒழுக்கவியல் பௌதீக அதீத ஒழுக்கவியலின் கருத்துக்களையும் நியம ஒழுக்கவியலின் கருத்துக்களையும் பயன்படுத்தி ஊடக துறையில் காணப்படும் ஒழுக்க விதிகளையும் ஒழுக்க மீறல்களையும் ஆய்வு செய்கிறது. ஊடகம் எனும்போது அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் இணையதள ஊடகம் என்ற மூன்று பிரிவுகளை உள்ளடக்கி விதிகள் மற்றும் ஒழுக்க மீறல்கள் என்பவை ஊடக ஒழுக்கவியலில் இருக்கின்றது. இத்தகைய ஊடக பிரிவுகளில் காணப்படும் ஒழுக்க ஆய்வு விடயங்களாக இருக்கின்றன. முதலில் வளர்ச்சி அடைந்த பிரிவாக காணப்படுகின்றது. அச்சு ஊடக வரலாற்றில் அச்சு ஊடகப் பிரிவு வரலாற்று ரீதியாக ஊடகங்கள் தொடர்பான அதிக விதிகளையும் தகவல்களையும் நாம் காண முடிகின்றது. 1880 ஆண்டுகளில் அச்சு ஊடகம் தொடர்பான ஒழுக்க விதிகள் எழத் தொடங்குகின்றன. சர்வதேச அளவில் இதழியல் தொடர்பான விதிகள் 1890ம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. ஊடகத் துறையின் வர்த்தகமயமாக்க செயல் முறையும் அதனை ஒரு தொழிற்துறையாக மாற்றும் செயல் முறையும் 1890 ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் இதழியல் துறையினை ஆரம்பிக்க உதவியது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் இதழியல் கல்வித்துறை ஊடக ஒழுக்கவியல் தொடர்பான ஆர்வத்தினை ஏற்படுத்தியது. 1920 ஆண்டுகளில் இதழியல் தொடர்பான சில புத்தகங்கள் எழுதப்பட்டன. 1924ல் நெல்சன் குரோபோடினால் (Nelson Crow Ford) எழுதப்பட்ட இதழியல் ஒழுக்கவியல் (Ethics of Journalism) என்ற புத்தகம் அச்சு ஊடகம் தொடர்பாக எழுதப்பட்ட முதலாவது புத்தகமாக கருதப்படுகின்றது. இவர் பத்திரிகையினை ஒரு பண்டமாக கருதியதுடன் பத்திரிகை கருத்து வெளியீட்டு சுதந்திரத்தை கொண்டிருக்கும் அதேவேளை அது மக்கள் மத்தியில் தனது பொறுப்பினையும் கொண்டுள்ளது என்ற கருத்தினையும் முன்வைத்தார். 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புறவயத்தன்மையின் அறிமுகம் மற்றும் விஞ்ஞான இயற்கைவாதத்தின் முக்கியத்துவம் காரணமாக இதழியல் ஒழுக்கவியல் தொடர்பாக ஆர்வம் பத்திரிகை துறை சார்ந்தவர்கள் மத்தியில் ஏற்பட ஆரம்பித்தது. அதன் பின்னர் மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் வழங்காத ஒரு முறையும் புறவயத் தன்மையும் பத்திரிகை துறையில் செல்வாக்கு பெற ஆரம்பித்தது. அச்சு ஊடக வரலாற்றில் யுனெஸ்கோவின் அமைப்பான பல குரல்கள் ஒரு உலகம் என்ற அறிக்கை (Many voices one world, Mac Bride Report) முக்கியத்துவம் உடையதாகும். இந்த அறிக்கை உலகம் முழுவதும் இதழியல் ஒழுக்கவியல் முழுமையாக வளர்ச்சி பெறுவதற்கு பெரிதும் உதவியது எனலாம். 1980களின் பின்னர் அமெரிக்காவின் பல கல்லூரிகளில் இதழியல் தொடர்பான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பின்வரும் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளை ஊடகத்துறையில் அடையாளம் காணலாம்.

- பாரம்பரிய அச்சு ஊடக ஒழுக்கவியல் விதிகள் இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடக ஒழுக்க விதிகளுடன் பெரும்பாலும் இணைந்து செல்வனவாக இருக்கின்றன. அச்சு ஊடகங்களை காட்டிலும் மக்கள் மத்தியில் அதிகம் செல்வாக்கு பெற்ற ஊடகங்களாக இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடகங்கள்

இருக்கின்றன. பின்வரும் ஒழுக்க மீறல்களை நாம் இலத்திரனியல் நாம் இணையதள ஊடகங்களில் நாம் காண முடிகின்றது.

- வன்முறை மற்றும் பாலியல் சார்ந்த உணர்வின் வெளிப்பாடு: அதிகமான திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் வன்முறையும் பாலியல் சார்ந்த உணர்வும் முக்கிய இடத்தை பிடித்திருப்பதை நாம் காணலாம்.
- சமூகத்தில் புகழ்பெற்ற மனிதர்கள் தொடர்பாக அந்தரங்க தகவல்களை வெளிப்படுத்துதல் ஊடகங்களின் முக்கிய செயற்பாடாக உள்ளது. உண்மையில் இத்தகைய செய்திகளில் உண்மை இருப்பதில்லை. அறிவுடையவர்கள் இதனை உணர்வார்கள். பாமர மக்கள் இதனை நம்பி ஏமாறுவார்கள். இது ஊடகத்தின் ஒரு முக்கிய ஒழுக்க மீறலாகும். மேலும் இத்தகைய தகவல்களை வெளியிடுவதன் மூலம் ஊடகங்கள் ஒரு நபரின் உரிமைகளையும் மீறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.
- ஒரு உற்பத்தி பொருள் தொடர்பாக உண்மைக்கு புறம்பான தகவல்களை இணையதள ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன. பொருட்களை விற்பனை செய்வதற்காக இணையதளங்களில் விளம்பரம் செய்யப்படுகின்றன. இத்தகைய தகவல்கள் சரியானவையா? என்பது கேள்விக்குறியே.
- சிறுவர்கள் மற்றும் பெண்களை பயன்படுத்தி சில கம்பனிகள் தமது பொருட்களின் விளம்பரங்களை இலத்திரனியல் ஊடகங்களிலும் இணையதளங்களிலும் மேற்கொண்டு வருகின்றன. இது மிகவும் தவறான விளம்பர முறையாகும். இந்த விளம்பரங்களில் பெண்கள் போகப் பொருட்களாக காட்சிப்படுத்தப்படுகின்றனர்.
- நியம ரீதியான ஒழுக்கவியல் வழக்காறுகளையும் ஒழுக்க விதிகளையும் மீறுகின்ற வகையில் நிகழ்ச்சிகளையும் விளம்பரங்களையும் இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன.

தொடர்பாடல் தொழில்நுட்பபுரட்சி காரணமாக உயர்ந்தரக கைப்பேசிகள் உருவாக்கப்பட்டு அவற்றின் ஊடாக விம்பங்களும் படங்களும் எடுக்கப்படுதல். வேறு கைப்பேசிகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்படுதல்,வேறு கைப்பேசிகளுக்கும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் அனுப்புதல் தற்போது இடம்பெற்று வருகின்றது. சமூக ஊடகங்கள் இத்தொலைபேசியின் ஊடாக சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சமூக ஊடகங்களின் செயற்பாடு ஓரளவுக்கு அதிக சுதந்திரத்தைக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். சில வேளைகளில் அரசுகள் சமூக ஊடக செயற்பாடுகளை தடைசெய்யும் சந்தர்ப்பங்களையும் காண்கிறோம். செய்திகள் அரசின் நோக்கத்திற்கு எதிராக இருக்கும் பட்சத்தில் அச்செய்தியினை அனுப்புவோர் அரசினால் தண்டிக்கப்படுவார்கள். ஒரு நபர் தனது கருத்துக்களை இன்னொருவருடன் ஒரு நாட்டிற்குள் மட்டுமல்ல, ஒரு நாட்டினை கடந்து பரிமாறிக்கொள்வதற்கு இது உதவுகின்றது. மேலும் தனது கருத்துக்களை தன்னைப்போல பலருடனும் பகிர்ந்து கொள்ளவும் இது உதவுகின்றது.

ஒரு சம்பவம் நிகழ்கின்றபோது அந்த சம்பவம் தொடர்பாக புகைப்படம் அல்லது காணொளி எடுத்து அதனை சமூக ஊடகங்களுக்கு அனுப்பக்கூடிய வசதியினை இத்தகைய கைபேசிகள் கொண்டுள்ளன. இதன் காரணமாக ஒரு பிரச்சினை தொடர்பாக ஒருவர் தனது கருத்துக்களை தன்னை போன்ற நபர்கள் மற்றும் தனது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகையச் சூழலில் ஒரு பிரச்சினை தொடர்பாக தனது கருத்துக்களை தன்னைப் போன்ற நபர்களும் அவரது நண்பர்களும் அல்லது பெரும் சமூகமும் ஒரு தீர்மானத்தினை எடுத்து செயற்பட இது உதவுகிறது. இத்தகைய செயற்பாடானது அரசிற்கு எதிரானதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக:- தமிழ் நாட்டில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டு தடைக்கு

எதிரான போராட்டம் இத்தகைய கைப்பேசியினை அடிப்படையாக கொண்டே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தகைய கைப்பேசிகளை பயன்படுத்தி சமூக விரோதிகள் ஆபாச படங்களை எடுத்து பெண்களை மிரட்டுதல் மற்றும் பல்வேறு சமூக விரோத செயல்களை இக்கைப்பேசியின் துணையுடன் சமூக ஊடகங்கள் வழியாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய குற்றங்களுக்கான தண்டனைகள் வழங்கப்பட்டபோதும் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்வது குறிப்பிடத்தக்கது.

இக்கைப்பேசிகள் மூலம் தகவல்களை மட்டும் இதனை பயன்படுத்துவோர் அனுப்புவதில்லை. அத்துடன் தனது நோக்குக்கு ஏற்ற வகையில் படங்களையும் காணொளிகளையும் தொகுப்பு செய்து செய்திகளை உருவாக்கி அனுப்பக்கூடிய வசதியினை இக்கைப்பேசிகள் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய செய்திகள் மூலம் செய்தியினை பெறுவோர் சரியான தகவல்களை பெறுகின்றனரா? என்பது கேள்விக்குறியே. எல்லா விதமான தகவல் பரிமாற்றங்களும் கணப்பொழுதில் இடம்பெறுகின்றன. பாரம்பரிய தகவல் பரிமாற்றத்தை விட மிகக் கூடுதலான வேகம் கொண்டதாக உயர்தர கைப்பேசி ஊடக பொறிமுறைகள் காணப்படுகின்றன. இம்முறையில் வழங்கப்படும் தகவல்களின் உறுதித் தன்மை மற்றும் அதிகாரத் தன்மை உயர்வானது என கூற முடியாது. அதிகாரப் பூர்வமற்ற தகவல்கள், உண்மைக்கு புறம்பான போலியான தகவல்கள் மற்றும் செய்திகள் பரிமாற்றம் செய்யப்படலாம்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் யுனெஸ்கோ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட உலக தகவல் அமைப்பு தகவல் ஒழுக்க காங்கிரஸ் கருத்தரங்கினை 1998 மற்றும் 2000 ஆண்டுகளில் நடத்தியது. இதன் நோக்கம் உலக தகவல் அமைப்பின் ஒழுக்க ரீதியான தளம் பற்றிய விவாதமாகும். ஊடகங்கள் தகவல்களை எங்களுக்கு வழங்குகிறது என்பதை காட்டிலும் அவை குறிப்பிட்ட முறையில் தகவல்களை வழங்கியும் நாம் இப்படித்தான் புரிந்துகொள்ள வேண்டும் நடந்துகொள்ள வேண்டும் என்று வழிநடத்தும் முறையில் செயற்படுத்துவதாக பலர் சுட்டிக் காட்டுகின்றனர். சட்ட ரீதியான நடவடிக்கைகள் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் அநீதிகள் தொடர்பாக ஊடகங்கள் கருத்துக்களை எமக்கு வழங்குகின்றன. ஊடகங்களின் வார்த்தைகளை முழுமையாக நம்புவர்களாக பெரும்பான்மையான மக்கள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சு ஊடகமாயினும் வருவதற்கு முக்கிய பங்கினை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. எனவே சமகால ஊடக செயற்பாடுகள் ஊடக ஒழுக்கவியலின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு சவாலாக உள்ளது என்றே கூறலாம்.

**பு. தர்ஷினி**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு ( 2019/2020**

## *23.தமிழர் தத்துவ மரபில் சித்த தத்துவம்*

தமிழர் தத்துவ மரபு பல விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்துவதனை நாம் அறிய அந்த அடிப்படையில் தமிழர் தத்துவ மரபில் சித்த தத்துவம் மிகவும் முக்கியமான ஒரு அங்கமாகும். இது ஆன்மிகம், அறிவியல், மருத்துவம் ஆகியவற்றின் உச்சகட்டமாகவும் கூட்டுச் சேர்க்கையாகும் விளங்குவது சித்த தத்துவம் ஆகும்.

ஒன்றைப் பற்றி விரிவாக எழுதுவதும் பேசுவதும் எளிய செயல்கள். ஆனால் ஒன்றனுக்கு இலக்கண வரையறை செய்வது சிக்கலான செயல். சித்தருக்கு இலக்கணம் அமைப்பது சிக்கலிலும் சிக்கலான செயல். இலக்கணம் காண்பதில் உள்ள இடர்ப்பாடுகளை வாய்ப்பாக்கிக் கொண்டு எவரெவரோ தம்மைச் சித்தரெனச் சொல்லித் திரிவதைக் காண்கிறோம். **“வெட்டவெளிதனை மெய்யென் றிருப்போருக்குப் பட்டயம் ஏதுக்கடி ”** என்ற போக்குடையோர் தம்மை முன்னிருத்தித் தருக்கிக் கொள்ளமாட்டார்கள். புறத்தோற்றம், அகவுணர்வு, பேசும்மொழி. ஆற்றும் செயல்கள் எனப் பலவற்றையும் ஆராய்ந்தே சித்தர்களை அடையாளம் காண வேண்டும். சித்தர்கள் எனப்படுபவர்கள் தங்கள் ஆழமான அனுபவங்கள் மற்றும் ஆய்வுகளின் மூலம் உலகையும், மனித உடல் மற்றும் ஆன்மா பற்றிய அபாரமான உண்மைகளை கண்டறிந்தவர்கள் எனலாம். சுருக்கமாக கூறின் தமிழரின் பாரம்பரியத்தில் மிகவும் மதிக்கப்படும் ஆன்மிக அறிவியல் அறிஞர்கள் எனலாம்.

சமுதாய அரங்கில் இடம் பெறும் சித்தர் கூட்டம் இலக்கண வரையறைக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்படுகிறது. சித்தர் இயல்புகளை முற்றுமாகக் கூறி இலக்கணம் காணஇயலாதெனினும் சமுதாயத்தில் சித்தர்கட்கென்றதொரு தனி பங்கும் பணியும் உண்டென்பதை அறியமுடிகின்றது. சித்தர்களின் நெறிகளை அறியமுன்னர் “சித்தர் யார்?” என்ற கேள்வியை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். ‘நான் ஒரு சித்தன்’ என பலர் கூற கேள்விப்பபட்டிருப்போம். சித்தர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்களுள் வேறுபாடுகள் உண்டு. எனவேதான் ‘சித்தர் யார்?’ என்ற வினா எழுகின்றது.

‘சித்தர்’ என்ற சொல்லுக்குப் பொருள் வரையறை செய்வது கடினம் என்று தோன்றுகின்றது. ‘உலகியலைத் துறந்தவர்கள். மூஉலகியல் நடப்புக்கு மாறானவர்கள், சித்துக்கள் ஆடுவதில் வல்லவர்கள், சித்தத்தை சிவன்பால் வைத்தவர்கள், அலைபாயும் சித்தத்தை அடக்கியவர்கள்’ என்பன போன்ற பல சொற்றொடர்களெல்லாம் சித்தர்களின் ஏதேனும் ஒரு கூறு பற்றிய குறிப்புகளாக இருக்கின்றன மாறாக இவை ஒரு பொதுவான இலக்கணமாகவோ விளக்கமாகவோ அமைவதில்லை. பல தமிழ் இலக்கியங்களில் சித்தர் பற்றிய கருத்துக்கள் நிலவு இருப்பது பின்வருமாறு அறிய முடியும். திருமூலர், கோரக்கர், பொதிகை வீரர் போன்றோர்களை சித்தர்களாக கூறமுடியும்.

‘‘சித்தன்’’ என்ற சொல்லுக்குச் கிருதகிருத்தியன், செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன், ‘கண்மங்களைக் கழுவினவன்,எண் வகைச் சித்துக்களையும் உண்டாக்கினவன் என்றும் சீவன் முத்தர்கள், பிறப்பறுத்தவர்கள்’என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.
(சிலப்பதிகாரம் நாடு காண் காதை)

“கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றால். கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்’’ என்று சித்தர்களைப் பக்தர்களிலிருந்து வேறுபடுத்திக் குறிக்கின்றார். (டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்)

“பக்தி நெறியன்றி வேறு நெறியால் கடவுளைக் கண்டு தெளிந்து இருவினை யொப்பு நிகழுங்காறும் உடலோடு உலாவுவோர் சித்தர்.
(திரு. மு. அருணாசலம் )

இவ்வாறாக சித்தர் என்பதற்கான பொருள் விளக்கங்கள் தமிழ் இலக்கியங்களிலும் தமிழ் அறிஞர்கள் இடத்திலும் கூறப்படுவதை காணலாம் மேலும் சித்த தத்துவம் விளக்கம் முக்கிய விடயமாக சித்தர்களின் புறத்தோற்றம் காணப்படுகின்றது. சித்தர்கள் நடை, உடை. பாவனைகளால் பிற மக்களிடமிருந்து வேறுபட்டிருந்தனர். இந்திய நாட்டுச் சித்தர்கள் பலரும் தலையில் சடை முடியும் முகத்தில் நீண்ட தாடியும் கழுவாத உடலும் கந்தல் உடையும் தாங்கியவர்களாகவே காணப்படுகின்றனர்.

“உடுத்தற்கு ஒரு கோவணம் உண்பதற்குக் காய்கனிகள் உறங்குவதற்குப் புறத்திண்ணை வேர்த்தால் குளிப்பதற்கு வெள்ளிய ஆற்றுநீர்”
(பட்டினத்தார்)

இவ்வாறு மரபாகக் காட்டப்படும் சித்தர்களின் புறத் தோற்றத்திற்கு மாறானதொரு புறத்தோற்றத்தை அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளிடம் காணமுடியும். தூய உடலும் அவ்வுடலை முழுமையாக மூடிய வெள்ளை ஆடையும் எல்லோருடனும் இயல்பாகப் பழகும் தன்மையும் உடையவராக வள்ளலார் வாழ்ந்ததனூடாக அறியலாம். இவ்வாறாக சித்தர் பற்றிய பொருத்தோற்றமானது வேறுபட்ட சிந்தனைகளைக் கொண்டு காணப்படுகின்றது. எனவே சித்தர்களை அடையாளம் காண அவர்களுடைய புறத் தோற்றம் பொதுவானதொரு அளவு கோலாக இல்லை என்ற கருத்தை சித்ததத்துவத்தின் வாயிலாக அறிய முடியும்

## சித்த தத்துவத்தின் முக்கிய அம்சங்கள்

- உடல், மனம், ஆன்மா ஒருமைப்பாடு பற்றிய சிந்தனை சித்தர்கள் உடல், மனம், ஆன்மா ஆகியவை ஒன்றோடொன்று இணைந்த ஒரு அமைப்பு என்கின்றனர். உடல் நலமாக இருக்க மனம் நலமாக இருக்க வேண்டும். மனம் நலமாக இருக்க ஆன்மா நலமாக இருக்க வேண்டும் என்கின்றனர்.
- பஞ்சபூத தத்துவம் பற்றிய கருத்து பஞ்சபூதங்கள் (நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்) அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்தே உள்ளன என்பதை சித்தர்கள் வலியுறுத்துகின்றனர்.
- யோகமும் தியானமும் பற்றிய சிந்தனை சித்தர்கள் யோகம் தியானம் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தி உயர்ந்த நிலைகளை அடையலாம் என்கின்றனர்.
- மருத்துவம் பற்றிய சிந்தனை சித்தர்கள் இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி பல நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடித்துள்ளமை..
- உலகின் தோற்றம் பற்றிய சிந்தனை சித்தர்கள் உலகின் தோற்றம் பற்றிய தங்களது சொந்தக் கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

## இறைக் கோட்பாடு...

இவற்றோடு சித்தர் பற்றிய தத்துவத்தில் பிரதானமாக கூறப்படும் விடயம் இறைகோட்பாடாகும். .சித்தர்களை இறை மறுப்பாளர்களெனவும் கருதுகின்றனர். சித்தர்கள் உருவ வழிபாடுகளையும் அவற்றின் காரணமாக எழும் பொய்மைச் சடங்குகளையும் மறுக்கின்றனர், இறையுண்மையை அவர்கள் மறுக்கவில்லை. ‘கடவுள்’ என்பதை ஒரு நுண்பொருள் கருத்தாகக் (Metaphysical Concept) கொண்டு மேலைநாட்டார்

ஆராய்வதைப்போல் சித்தர்கள் செய்யவில்லை. சித்தர்களும், கடவுள் உண்மையை வாக்குவாதம் இன்றி ஏற்றுக்கொண்டு தம் கோட்பாட்டைக் கூறுகின்றனர். கடவுள் உண்டா இல்லையா என்பது இன்றும் முழுமையாகத் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளது.

எல்லாத் தத்துவ அமைப்புகளும் சமயங்களும் 'இறைவன்' என்பது பற்றி விளக்கம் தருகின்றன. ''இறைவன் இல்லை'' எனும் இறைமறுப்பு தத்துவங்களும் கூட அதற்கான விளக்கங்களைத் தருகின்றன. தத்துவ அமைப்புகள் இறைவன் என்பதைக் கருத் தளவில் விளக்குகின்றன. தத்துவ விளக்கங்களுக்கேற்ப இறைவ னுக்கு உருவும் பெயரும் தந்து சமய நிறுவனங்கள் வழிபாட்டு முறைகளை வருக்கின்றன

## இறைவன் உண்டு என்ற சிந்தனை

கடவுள் உண்டென்பதற்கு காரண-காரியத் தொடர்களாக விளக்கப்படுகின்றன.. இக் காரண- காரியச் சங்கிலியைப் பற்றிக் கொண்டு பின்னோக்கிச் சென்றால் எல்லாவற்றுக்கும் தொடக்கமாக இருக்கும் முதற்காரணமே இறைவன் கடவுள். ஒன்றின் இருப்பு நிலையிலிருந்து அதன் இல்லாமையையும், இல்லாமையிலிருந்து அது இருந்த தன்மையையும் அனுமானிப்பது மனித மனத்தின் ஓர் இயல்பு. நிறைவின்மை, நிலையாமை ஆகிய குறைபாடுகளை உலகியல் வாழ்வில் அனுபவிக்கின்ற மனிதன் நிறைவானதும் நிலையானதுமான ஒன்றை அனுமானித்து அதனை "இறைவன்" என்றழைக்கின்றான். அறச் செயல்கள் ஏன்? என்ற வினாவை கேட்டுக் கொண்டால் அது இறுதியில் கடவுளை ஆதாரமாகக் கொண்டு விளக்கமளிக்கின்றது. பிறப்புக்கு முன்... இறப்புக்குப் பின்... என்ற வினாக்களுக்கு விளக்கம் தேடும்போது கடவுள் உண்டு என நம்பவேண்டி உள்ளது.

## கடவுள் இல்லை என்ற சிந்தனை

எல்லாரும் ஒப்பக்கூடியச் சான்றுகளையோ ஏற்கக்கூடிய விளக்கங்களையோ 'கடவுள்' உண்டென்பதற்கு ஆதாரங்களாகத் தர இயலவில்லை. கடவுள் உண்டா இல்லையா என்ற விவாதத்தில் ஈடுபட்டு புதிய விளக்கங்கள் தருவதிலும் பிறர் விளக்கங்களை ஏற்பதிலும் மறுப்பதிலும் காலம், பொருள், சக்தி ஆகியவற்றை வீண்செய்ய சித்தர்கள் விரும்பவில்லை. வெட்ட வெளியில் இறையின்பத்தைத் துய்த்த அவர்கள் இறைவன் பற்றிய தத்துவ அறிவாராய்ச்சியில் முனையவில்லை. தங்களுடைய அனுபவத்தைக் கொண்டு கடவுள் உண்டென நம்பினார்கள்: தங்களுடைய நம்பிக்கைக்கும் காரணமோ விளக்கமோ தரவில்லை.

## இறைவன் - காட்சியும் செயலும்

சித்தரான பட்டினத்தார். இறைவனைச் சிவபெருமான் என்று உருவப்படுத்துகிறார். சிவபெருமானை பல பெயரிட்டு அழைக்கும் பட்டினத்தார் பிற சிவத் தலங்கள் பற்றிய பாடல்களில் அத்தலங்களில் எழுந்துள்ள சிவ பெருமாளின் பண்புகளையோ புராணச் செயல்களையோ பெயராக்கி அழைக்கிறார். பெயர்கள் பலவாயினும் அவையாவும் சிவபெருமான் என்ற ஒரே இறைவனைக் குறிக்கும் என்பதே அவருடைய கருத்தாகத் தெரிகிறது.

பட்டினத்தார் இறைவனின் அருவ நிலையையும் விளக்குகிறார். **“வாக்கும் மனமும் வடிவும் இலா வான்பொருள்”** என்றும் **“அணுவுக்கும் மேருவுக்கும் அகம்புறமாய் நின்றான்”** என்றும் கூறி, இறைவன் வடிவங்கட்கும் உருவங்கட்கும் அப்பாற் பட்டவன் என்பதை உணர்த்தப்படுகினீறது.. இறைவன். பிறப்பு – இறப்பு, தோற்றம் – மறைவு, வளர்ச்சி – தேய்வு, நிறைவு – குறைவு என்பன போன்ற வேறுபாடுகளும் நிலைமாற்றமும் இல்லாதவன்.

இறைவன் ‘இன்னதென்று சொல்லவொண்ணா எல்லை யற்ற வான்பொருள் போக்கும் வரவும் இலான் பொடுவரிய பூரணன்’’ என்றும் குறிக்கப்படுகிறான். என்றும் நிறைவாகவே இருக்கும் நிலை. ஒன்றை எடுத்தாலும் சேர்த்தாலும் பூரணத்தின் நிலை நிறைவாகவே இருக்கும்.இறைவனைக் ‘குணமிலி’ என்று கூறுகின்றனர். பட்டினத்தார், இறைவனை சகல குணங்களோடு வருணிக்கும்போது பக்தராகவும், எல்லாம் கடந்த குணமிலியாகக் கூறுமிடத்து வெட்ட வெளிதனை மெய்யென்றிருக்கும் சித்தராகவும் விளக்குகிறார்.

**“மண்ணும் விண்ணும் மறிகடல்கள் ஏழும் ஆன இயற்கையிலும் எண்ணமும் மொழியும் இசைப் பண்ணும் எனப்படும் செயற்கையிலும், கண்ணும் மணியும் கண்ணுள் ஆடும் பாவையும்”** என உடலமைப்பிலும் இயக்கத்திலு மாக இறைவன் எங்கும் உளான் என்பது சிவவாக்கியர் கருத்தாக உள்ளது.

‘‘இன்னதென்று விவரிக்க முடியாத பெருவெளியில் இறைவன் சிவமாகவும் சக்தியாகவும் இருக்கின்றான்.’’ உயிரினங்களின் உடலாக இருப்பது சிவம் உடலின் இயக்கமாக இருப்பது சக்தி என இறைவன் சிவம், சக்தி ஆகிய இரு நிலைகளை உடையவன். ஒருடல் வழியாகவன்றி சக்தி தனித்துச் செயல்பட இயலாது: சக்தியின்றி உடலுக்கு இருப்பும் இல்லை. இயக்கமும் இல்லை. சிவமும் சக்தியும் தனித் திருக்கவோ இயங்கவோ முடியாது.

## இறை வழிபாடு

இறைவனை வழிபடுகின்ற முறையில் சித்தர்கள் சமய நெறிகளிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றனர். வேத ஆகம விதிகள். புராண இதிகாசங்கள் காட்டும் வழிகள் என்ற பெயரால் சமுதாயத்தில் மலிந்துவிட்ட மூடப் பழக்கங்களைச் சித்தர்கள் வன்மையாகக் கண்டித்தனர். **“தன்னுள் உறைந்து ஒளிரும் இறைவனை அறியாத மூடர்கள் இறைவனைப் புறஉலகில் தேடியலைந்து புறச் சடங்குகளில் ஈடுபட்டு காலத்தை வீணே கழித்து வருந்துகின்றனர்.”** என்கிறார் சிவவாக்கியர்.

உருவ வழிபாட்டையும் அதற்கான சாத்திரச் சடங்குகளை யும் கண்டித்தனர்.‘‘கட்டையால் செய் தேவரும், கல்லினால் செய் தேவரும். மட்டையால் செய்தேவரும், மஞ்சளால் செய்தேவரும் சட்டையால் செய்தேவரும் சாணியால் செய்தேவரும் பொய்மை கள். வெட்டவெளியதன்றி வேறு தெய்வம் இல்லை என்பதே உண்மை’’ வெட்ட வெளியாய் விளங்கும் இறைவனுக்கு வெவ்வேறு பொருள்களில் உருவமைத்து வழிபடுவது அறியாமை யின் விளைவு என சிவவாக்கியர் முன்வைக்கின்றார்.

**“பூவும் நீரும் என் மனம் பொருந்து கோயில் என்னுள்ளம்”** என்ற சிவவாக்கியர் கருத்தானது திருக்குளங்களில் மூழ்கி எழுவதும் கோயிலை வலம் வருவதும் கற்சிலைக்கு அபிசேக ஆராதனைசெய்வதும் மலர்ச் சூட்டி மந்திரம் சொல்வதும் தேவையற்ற செயல்கள் என கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துள்ளே என்கின்றது.

‘**வெற்றெனெ செய்யும் புறப் பூசைகளை இறைவழிபாடென எண்ணி மயங்குவோரைப் பேதைகள்**’ என்கிறார் சிவவாக்கியர் அதாவது நீறு பூசுவதும் வேதம் ஓதுவதும் நீள் பெருங் கோயிலைச் சுற்றி வருவதும் ஆரவாரமுடைய புறச் செயல்கள். மனம் ஒன்றாத இப் புறச் செயல்கள் இறைவழிபாடாகாது.

இவ்வாறாக மனத்தால் செய்கின்ற இறைவழிபாடே சிறந்ததென்பது சித்தர்கள் கருத்து. இறைவன் எழுந்தருளச் செப்புத்தகட்டில் சக்கரம் வெட்டுவதும் இலிங்கத்தைக் கட்டி நிலைக்க வைப்பதும் உதடு குவித்து நாவசைத்து மந்திரம் ஒலிப்பதும் பிறர்காண நீராட்டிப் பூக்கள் சொரிவதும் பயனற்ற செயல்கள். இவை யாவும் மனத்தால் மனத்திலுள் செய்யப்பட வேண்டும். உள்ளத்தில் உறைகின்ற இறைவனை உள்ளத்தால் வழிபட்டுப் பெறுகின்ற இறையின்பம் நிலையானது. இறைவனை வார்த்தைகளால் வருணிக்க முடியாததே போல, இறையின்பத்தையும், இன்னது இப்படிப்பட்டது என்று விளக்கிவிட முடியாது. என்று இறை வழிபாடு குறித்த சித்தர் கருத்துக்கள் நிலவுகின்றது.

“இறைவன் உண்டென நம்பு அவன் புறத்தே இல்லை நம் உள்ளத்தின் உள்ளே இறைவன் இருக்கிறான் புறவழிபாடுகள் பொருளற்றவை, ஆரவாரமானவை: உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம் என்ற திருமந்திரத் தொடர்வழி அகவழி பாடே சிறந்தது”

இவ்வாறாக தமிழர் தத்துவ மரபில் சித்ததத்துவமானது ஏனைய தத்துவங்களை காட்டிலும் மாறுபட்ட ஒன்றாக விளங்குவதை காணமுடிகின்றது. சித்தர்கள் பற்றிய அறிதல் அவர்கள் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் சித்தர் தத்துவத்தில் இறை சிந்தனை, இறை மறுப்பு, வழிபாடு போன்ற பல கருத்துக்களை பல காலத்து சித்தர்கள் வாயிலாக அறிய முடிந்தது. இந்த அடிப்படையில் தமிழர் தத்துவ மரபில் சித்த தத்துவமானது சிறப்பான ஒன்றாக காணப்படுகிறது என்பதை அறியலாம்

**ப.கீர்தனா**

**3ம் வருட 2ம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு**

**(2019/2020)**

# *24.அறிவாராய்சியியலில் இம்மானுவேல் காண்ட்*

நவீன காலத்தில் நிலவிய அறிவாராய்ச்சியியலின் நியாயவாதம், அனுபவவாதம் எனும் இரு பெரும் பாரம்பரியங்களை காண்டினுடைய சிந்தனைகள் ஒருங்கிணைத்த தன்மையினையும், அவை சமகால மெய்யியலில் ஏற்படுத்திய தாக்கங்களையும் மதிப்பீடு செய்வதாக ஆய்வுக்கட்டுரை அமைகின்றது. உண்மை அறிவு எவ்வாறு எழுதுகின்றது எனும் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகள் (**அறிவு முதல் வாதம், அனுபவ முதல் வாதம்)** நவீன கால தத்துவ உலகில் நிலவின. அறிவு முதல் வாதம் நியாயித்தலையும், அனுபவ முதல் வாதம் புலன் அனுபவத்தையும் பிறப்பிடமாகவும் அடிப்படையாகவும் கொண்டது எனலாம். இவ்விரு தத்துவங்களுமே குறைபாடு உடையனவாய் காணப்பட்ட பொழுதிலும் இரண்டிலுமே உண்மை கூறுகளும் காணப்பட்டன. ஒன்றில் காணப்படும் உண்மைக் கூறு மற்றயதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது.

எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஒரு தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தைச் சேர்ந்த இம்மானுவேல் காண்ட் இப்பணியினை முன்னெடுத்தார். அவரது இப்பணியினை காலம், வெளி தீர்ப்புகள் என்பன பற்றிய சிந்தனைகள் தெளிவாக வெளிப்படுத்தின. இது அறிவாராய்ச்சியியலில் வரலாற்றில் ஓர் திருப்புமுனையாக அமைந்தது. காண்டினுடைய சிந்தனைகள் ஐரோப்பா முழுவதும் தனது செல்வாக்கினை விஸ்தரித்துக் கொண்டது. 19ஆம் நூற்றாண்டில் இம்மானுவேல் காண்டின் சிந்தனைகள் பெற்றிருந்த செல்வாக்கினை போல் வேறு எந்த சிந்தனைகளும் செல்வாக்கு பெற்றிருக்கவில்லை. எனினும் பிற்பட்ட காலத்தில் காண்டினுடைய சிந்தனைகள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டன. இதன் விளைவாக சமகால மெய்யியலில் காண்டினுடைய சிந்தனைகளை ஆதரிப்பதும் (கண்ட மெய்யியல்) விமர்சிப்பதுமான (பகுப்பாய்வு மெய்யியல்) இரு பெரும் தத்துவ பிரிவுகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இம்மானுவேல் காண்டின் அறிவாராய்ச்சியியல் தொடர்பான பகுப்பாய்வை நாம் பின்வருமாறு ஆராய்வோம்.

அறிவாராய்ச்சியியலில் மையமாக அமையும் பிரச்சனை உண்மை அறிவு எவ்வாறு எழுகின்றது? என்பதே ஆகும். இதற்கு நவீன காலத்தில் அறிவு முதல் வாதம், அனுபவமுதல் வாதம் எனும் இருவகையான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. அறிவு முதல் வாதம் நியாயித்தல் அல்லது பகுத்தறியும் திறனால் மாத்திரமே சரியான அறிவை பெற முடியும் என்றும் காரணப்படுத்தி பார்க்கும் பகுப்பாய்வுக்கு உட்படாத எதுவும் அறிவாகாது என்றும் விபரித்தது. ஆனால் அனுபவ முதல் வாதம் அறிவு முதல் வாதத்திற்கு மாறாக அனுபவமே சரியான அறிவினை தரவல்லது என்றும் அனுபவ எல்லைக்கும், சோதனைக்கும் உட்படாத எதையும் அறிவாக ஏற்க முடியாது என்றும் விவரித்தது. இவ்விரு தத்துவங்களும் வேறுபட்டவை மட்டுமல்ல முரண்பட்டவையுமாகும். எனினும் இவ்விரு தத்துவங்களும் ஒன்றை ஒன்று முற்றாக விளக்கவில்லை என்றே கூற வேண்டும். **டேக்கார்ட், ஸ்பினோா, இலைப்பினிஸ்ட்** போன்ற நியாயவாதத்தின் முன்னோடிகளாவர். **ஜோன் லொக் , பார்க்லி டேவிட் ஹீயூம்** போன்றோர் அனுபவ வாதத்தின் முன்னோடிகளாவர்.

இவர்கள் தாம் ஏற்றுக் கொண்ட கொள்கைகள் முறையானவையே என்று விளக்குவதோடு மட்டுமன்றி தமக்கு எதிரான கொள்கைகளின் குறைபாடுகளை விளக்கவும் முற்பட்டனர். இதன் விளைவாக இவ்விரு கொள்கைகளில் காணப்பட்டகுறைபாடுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டன.

புலன் உணர்ச்சிக் கொள்கையினர் அறிவு முதல் வாதத்தில் காணப்பட்ட குறைபாடுகளை தெளிவாக சுட்டிக்காட்டினர். அவர்கள் உள்ளுறை எண்ணங்கள் புலனுக்கு உட்படாதவை என்றும் விளைவற்றது என்றும் குறிப்பிட்டனர். அத்தோடு அது எதனையும் செய்ய முடியாததாய் உள்ளது என்றும் குறிப்பிட்டனர். உள்ளுறை எண்ணங்கள் இருப்பது உண்மையாகவே இருப்பினும் அவை அனுபவத்திற்கு பின்னரே வெளிப்படுகின்றன என்றனர். அத்தோடு உள்ளுறை எண்ணம் உண்டு எனின் நிறம் குறித்த அறிவு எல்லோரிடமும் இருந்தாக வேண்டும். ஆனால் பிறவிலேயே பார்வையற்ற ஒருவனுக்கு அது குறித்த அறிவு இருப்பதில்லை. அத்தோடு அறிவு முதல் வாதத்தினரின் கருத்துப்படி எல்லா அறிவும் பொதுமைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் கடவுள் குறித்த அறிவோ அல்லது ஒழுக்கம் குறித்த அறிவோ பொதுமையானதாக இல்லை. எனவே அறிவைப் பெற நியாயவாதம் போதுமானதல்ல. மாறாக நியாயவாதிகளும் புலன் உணர்ச்சி கொள்கையின் குறைபாடுகளை தெளிவுபடுத்தினர். இதன்படி அவர்கள் கணிதம், அளவையியல் போன்றன தரும் அறிவு நிச்சயமானது. அத்தகைய அறிவு எவ்வாறு புலன்வழி பெறப்பட முடியும். அது மாத்திரம் இன்றி மனிதனுடைய புலன்கள் வரையறைக்கு உட்பட்டவை. அவற்றினால் பெறப்படும் அறிவு நிச்சயத்தன்மை உடையவனாய் இல்லை. ஏனெனில் வரையறைக்கு உட்பட்ட புலன்கள் என்றும் ஏமாற்றத்தையே தரக்கூடிய என்றனர்.

இவ்வாறாக இரு தத்துவங்களிலும் குறைபாடுகளை கண்டறிந்த இமானுவேல் கான்ட் அவை இரண்டிலும் உண்மை கூறுகள் இருந்ததையும் கண்டறிந்தார். ஒன்றில் காணப்படும் உண்மை கூறு மற்றயதன் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. எனவே இவ்விரு தத்துவங்களையும் இணைத்து முழுமையான ஒரு தத்துவத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஜேர்மனிய தேசத்தை சேர்ந்த இமானுவேல் கான்ட் இப்பணியை முன்னெடுத்தார். இமானுவேல் கான்ட் அறிவியல் சாத்தியமானது ஆனால் பௌதீக அதீதம் சாத்தியமற்றது எனும் கருத்தினை தெளிவாக நிலைநாட்ட விரும்பினர். அறிவியலை எது சாத்தியமாக்கியது என்பது அவருடைய முன்னோர்களால் புரிந்து கொள்ளப்படவில்லை என்கிறார். அவர்களின் அறிவின் தோற்றுவாய் நியாயவாதமா? அனுபவ வாதமா? எனும் முரண்பாட்டில் சிக்கிக்கொண்டனர்.

நியாயித்தலினதும், அனுபவத்தினதும் இணைவினாலேயே அறிவு பெறப்படுகின்றது என்பதனை கான்ட் நிறுவ முயன்றார். பகுத்தறிவு இல்லா அனுபவம் குருட்டுத்தனமானது அல்லது நோக்கற்றது என்றும் அனுபவம் இல்லா பகுத்தறிவு உள்ளீடற்றது அல்லது வெறுமையானது என்றும் கான்ட் குறிப்பிடுகிறார். காண்டினுடைய இந்த சிந்தனை மூன்று கட்டங்களைக் கொண்ட வளர்ச்சிப் போக்கினுடையது. ஆரம்பத்தில் கான்ட் நியாயவாத கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருந்தார். இது அவரது அறிவாராய்ச்சியியலின் முதலாவது கட்டம். நியாயவாதத்தில் குறைபாடுகளை கண்டு கொண்ட கான்ட் பின் அனுபவ வாத கருத்துக்களை ஆதரிக்கத் தொடங்கினார். காலப்போக்கில் அனுபவம் முதல் வாதத்திலும் குறைபாடுகளை கண்டுகொள்ளத் தொடங்கினார். இதனால் அவரது அறிவாராய்ச்சியியல் சிந்தனைகளின் மீண்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

இந்த மூன்றாவது காலகட்டமே கான்டினது அறிவாராய்ச்சியில் இன்றியமையாததும், முக்கியமானதுமான காலகட்டமாகும். நியாயவாதத்திலும், அனுபவ வாதத்திலும் குறைபாடுகளை கண்ட கான்ட் அவற்றில் சில உண்மை கூறுகளையும் கண்டார். எனவே 1770இல் ஆரம்பமான இக்காலகட்டத்தின் உச்சநிலையாக 1781இல் நியாயவாதத்தையும், அனுபவவாதத்தையும் ஒன்றாக இணைப்பது என்ற எண்ணம் அவரது மனதில் உதயமானது. அவ்வாறே இணைத்து பெறப்பட்ட முறையை **விமர்சன மெய்யியல் (Critique Of Pure Reason)** என்ற நூலில் தெளிவாக வெளிப்படுத்தினார். இந்நூலானது தனிமங்கள் பற்றிய கொள்கை, முறை பற்றிய கொள்கை எனும் இரு பிரதான பகுதிகளை கொண்டது. தனிமங்கள் பற்றிய கொள்கை **புலன், அளவையியல்** எனும் இரு பகுதிகளை கொண்டது. அதில் அளவையியல் **பகுப்பியல், முரணாய்வு** எனும் இரு பகுதிகளை கொண்டது. இவற்றில் **புலன், பகுப்பியல், முரணாய்வு** எனும் மூன்றும் முக்கிய பகுதிகளாக காணப்பட்டன.

கான்ட் எல்லா அறிவுமே புலன்களில் இருந்தே தொடங்குகின்றது எனவும் புற உலக பொருட்களுடன் புலன்கள் பொருந்தும் பொழுது அனுபவம் கிடைக்கிறது எனவும் புலன் மட்டுமே அறிவுக்கு ஆதாரம் இல்லை, புலன் வழியாக அறிவு (ஒலி, ஒளி, சுவை, நாற்றம், உணர்வு) பலவகையானது. இதனை ஒன்றிணைப்பது, பகுப்பாய்வு செய்வது, பொதுமையாக்குவது, ஒழுங்கமைப்பது என்பதே பகுத்தறிவு என்கின்றார். கான்ட் புலன் எனும் பகுதியினூடாக தன்னுடைய கடந்த நிலை முறையை (விமர்சன முறையை) புலன், பகுத்தறிவு இணைக்கப்படும் தன்மையை விளக்குகின்றார். இதில் **காலம், இடம்** எனும் விடயம் தொடர்பாக பேசுகின்றார். காலம், இடம் இவற்றை பற்றிய பௌதீக அதீத இயல்பான விளக்க உரையில் நான்கு காரணங்களை முன்வைத்து அவை புலன் உணர்ச்சிக்கு முன்னதாக இருப்பில் உள்ளன என்பதனை விளக்குகின்றார். காலம், இடம் என்பன அனுபவ இயல்பற்றவை. தோற்றபாடுகள் இட உறவுகளைக் கொண்டுள்ளது. இவை புற உலகில் இருந்து பெற முடியாத தன்மை என்றும் காலம் இடம் என்பன உடனடி உணர்வுகள் ஆகும். இவற்றை பற்றி பேசும்போது எமக்கு அந்த உணர்வு முன்னதாக எமது உள்ளத்தில் உடன்பிறக்கிறது எனவும் எல்லைக்கு உட்பட்டது, அளவுக்கு உட்பட்டது, போன்றன அனுபவம் கொண்டுள்ளது.

ஆனால் காலம் அவ்வாறு இல்லை அனுபவ முன் அமைந்தவை. இவ்வாறாக கான்ட் நேரடியாக காலம், வெளி என்பவை நுகர்ச்சிக்கு முன் அமைந்தமை என்பதற்கான ஆதாரங்களை வழங்கினார். இதன் ஊடாக கான்ட் தனது நோக்கமான அறிவு முதல் வாதம், அனுபவ முதல் வாதத்தையும் இணைப்பதனை உறுதி செய்து கொள்கிறார். எது எவ்வாறாயினும் அவருக்கு பின் எழுந்த சிந்தனைகளின் விருத்திக்கு கான்டினது சிந்தனைகள் இன்றி அமையாததாக இருந்தது என்பதனை எவராலும் மறுக்க முடியாது எனலாம். அத்தோடு கான்டினது சிந்தனைகளை புரிந்து கொள்ளாமல் பின் எழுந்த சிந்தனைகளை புரிந்து கொள்ள முடியாது என்பது தத்துவ உலகில் நிலவுகின்ற கருத்தாகும். அது மாத்திரமன்றி கான்டினுடைய சிந்தனைகள் அனுபவ வாதம், அறிவு முதல் வாதம் என்பவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி புதியதொரு முறையினை தத்துவ உலகிற்கு வழங்கி உள்ளது.

கான்டினுடைய இந்த புதிய மெய்யியல் முறையானது கருத்து முதல் வாதம் மெய்யியல் உலகில் செல்வாக்கு பெறுவதற்கு வித்திட்டது. கான்டினுடைய சிந்தனைகளை தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் அந்நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஜேர்மனிய கருத்து முதல் வாதம் ஐரோப்பா முழுவதும் செல்வாக்கு செலுத்தி இருந்தது. பின்னர் பிட்சே, ஹெகல் போன்ற சிந்தனையாளர்களின் ஊடாக 19ம் நூற்றாண்டின் தத்துவ சிந்தனை மாற்றம் கண்டு கொண்டது. இமானுவேல் கான்டிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனம் தொடர்பாக பின்வருமாறு ஆராய்வோம்.

மெய்யியல் வரலாற்றில் விமர்சனங்கள் பெறாத கொள்கைகளே இல்லை என்று கூறலாம். அந்தவகையில் கான்டினுடைய கொள்கைகளுக்கு எதிராகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அந்தவகையில் நமக்கு புலப்பதிவுகள் தோன்றுவதற்குரிய காரணம் காணும் வகையில் கடந்த நிலையில் விளங்கும் உலகு ஒன்று இருத்தல் வேண்டும் என்று கான்ட் கொள்வது அனுபவவாதிகளினால் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது. மேலும் இன்றைய காலங்களில் பிறப்பியல் கூறுகளாலும், தனிநிலை வேறுபாடுகளாலும், சூழ்நிலைக் கூறுகளாலும் மனம் ஆக்கம் கொள்கிறது என்பது வலியுறுத்தப்படுகின்றது. இவ் உண்மையை கான்ட் விடுத்தது அவரது கொள்கையில் பெரும் குறையாக தோன்றுகின்றது. இவ்வாறாக கான்டினுடைய குறைபாடு தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவரது அறிவுத் தொடர்பான ஆராய்ச்சியின் வளர்ச்சி வளர்ந்து கொண்டே செல்கின்றது.

**முடிவுரை**

எது எவ்வாறாயினும் கான்டினுடைய சிந்தனைகள் அனுபவ வாதம், அறிவு முதல் வாதம் என்பவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி புதியதொரு முறையினை தத்துவ உலகிற்கு வழங்கியுள்ளது. அது மாத்திரம் இன்றி அவருக்கு பின் எழுந்த சிந்தனைகளின் விருத்திக்கு கான்டினது சிந்தனைகள் இன்றியமையாததாக இருந்தது என்பதனை எவராலும் மறுக்க முடியாது எனலாம். அத்தோடு கான்டினது சிந்தனைகளை புரிந்து கொள்ளாமல் பின்னெழுந்த சிந்தனைகளை புரிந்து கொள்ள முடியாது என்பது தத்துவ உலகில் நிலவுகின்ற கருத்தாகும். இவ்வாறாக கான்டினது அறிவாராய்ச்சிகளின் சிறப்பு வாய்ந்த தன்மைகளை நாம் மேற்கூறப்பட்ட விடயங்களின் மூலமாக தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

**த.ஹம்சலியா**

**மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2020/2021)**

# *25.நகைச்சுவையின் தத்துவம்*

நகைச்சுவை என்பது மனிதரின் அன்றாட வாழ்க்கையின் முக்கியமான பகுதியாய், சமூக, கலாச்சார, உளவியல் மற்றும் தத்துவ ரீதியாக பல்வேறு தளங்களில் ஆராயப்பட்டு வருகிறது. **நகைச்சுவையின் தத்துவம்** (Philosophy of Humour) என்றால் நகைச்சுவை எதன் மூலம் உருவாக்கப்படுகிறது, ஏன் மனிதர்கள் அதை இரசிக்கிறார்கள் மற்றும் நகைச்சுவை எவ்வாறு நமது சமூக மற்றும் நெறிமுறைகளை பாதிக்கிறது என்பதனை ஆராயும் துறையாகும். இந்தக் கட்டுரையில் நகைச்சுவையின் முக்கியமான தத்துவ கருதுகோள்களை, அதில் அடிப்படையாக உள்ள மூன்று முக்கியக் கோட்பாடுகளைப் பற்றி விபரமாக ஆராய்கையில், **மீறல் கோட்பாடு (Incongruity Theory)**, **மீம்ஸ் கோட்பாடு (Rerief Theory)** மற்றும் **அர்ப்பணிப்பு அல்லது தூக்குதல் கோட்பாடு (Superiority Theory).** இவற்றின் மூலம் நகைச்சுவையின் தத்துவத்தை வெவ்வேறு கோணங்களில் பார்க்க முடியும்.

## 1. மீறல் கோட்பாடு (Incongruity Theory)

நகைச்சுவையின் முதல் முக்கிய கோட்பாடாக **"மீறல் கோட்பாடு"** கருதப்படுகிறது. இது நகைச்சுவை குறித்த நவீன மற்றும் புகழ்பெற்ற கோட்பாடுகளில் ஒன்றாகும். இந்தக் கோட்பாட்டின் படி நகைச்சுவை உருவாகும் போது ஏதேனும் எதிர்பாராத மாற்றம் அல்லது முரண்பாடு இடம்பெற வேண்டும். சடல வாதத்திலும், கவனமயமற்ற உரையாடல்களிலும் காணப்படும் முரண்பாடுகள் மூலம் நகைச்சுவை எளிதாக சிரிப்பு உருவாக்கும்.

மீறல் கோட்பாட்டின் சிந்தனையாளர்களில் புகழ்பெற்றவராக **இமானுவேல் கான்ட் (Immanuel Kant)** மற்றும் **ஆர்த்தர் ஷோப்பன்ஹவுயர் (Arthur Schopenhauer)** கூறப்படுவார்கள். கான்ட் கூறுகிறார், **"நம்முடைய எதிர்பார்ப்புக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடு சிரிப்பை ஏற்படுத்தும்."** இந்தக் கோட்பாட்டின் முக்கிய அம்சம் என்னவென்றால், நகைச்சுவை உணர்வு எப்போதும் எதிர்பாராத முறையில் நிகழ வேண்டும். அது செறிவு மிகுந்த சிந்தனைக்குச் சமமாக இருக்க வேண்டும்.

**உதாரணமாக** ஒருவர் விலங்குகள் மீது ஏதேனும் கவனமிக்க உரையாடல் நடத்துவதாகக் கற்பனை செய்து பார்க்கலாம். ஆனால் அந்தப் பேச்சு முறையே கையுறைகள் போல் முடிந்துவிடுகிறது என்றால் அவ்வாறு சடலமாகச் சிரிப்பை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் எதிர்பாராத ஒழுங்கீனம் நகைச்சுவைக்கு வழிவகுக்கும்.

## 2. மீம்ஸ் கோட்பாடு (Relief Theory)

மீம்ஸ் கோட்பாடு நகைச்சுவையின் உளவியல் மற்றும் சமூகக் கண்ணோட்டத்தை எடுத்துக் கொள்கிறது. இந்தக் கோட்பாட்டின் முக்கிய வரலாற்று சிந்தனையாளர் **சிக்மண் பிராய்ட் (Sigmund Freud)** ஆவார்.

இந்தக் கோட்பாட்டின் படி நகைச்சுவை என்பது மனதின் அடக்கப்பட்ட உணர்வுகளின் வெளிப்பாடாகும். மனிதர்கள் தங்களை கட்டுப்படுத்தி உணர்ச்சிகளை அடக்கி வைத்திருக்கும் போது நகைச்சுவையின் மூலம் அந்த உணர்வுகளை வெளிப்படுத்துவர் என்று பிராய்ட் கூறுகிறார்.

மீம்ஸ் கோட்பாடு குறிப்பாக சமூக அளவில் முக்கியமானதாகும். நகைச்சுவை என்பது சமூகத்தில் நிலவும் விருத்திகள் மற்றும் மனச்சிக்கல்களுக்கு ஒரு வழிவகை ஆகும். **உதாரணமாக** அரசியல் நகைச்சுவை, அன்றாட வாழ்க்கையின் சிக்கல்களை ஒரு நகைச்சுவையான ஒளியில் வெளிப்படுத்துவதன் மூலம் மனதுக்கு ஒரு தூய்மையான வெளிப்பாடு அளிக்கிறது. இந்தக் கோட்பாட்டின் முக்கிய புள்ளி என்னவென்றால், நகைச்சுவை சிரிப்பின் மூலம் உளவியல் ரீதியாக சுதந்திரம் மற்றும் அமைதி கிடைக்கிறது. நகைச்சுவை மனிதர்கள் மனதில் இருந்த தடைகளை அகற்றுவதில் ஒரு சாதனையாக உள்ளது.

### 3. அர்ப்பணிப்பு அல்லது தூக்குதல் கோட்பாடு (Superiority Theory)

இந்தக் கோட்பாட்டின் படி நகைச்சுவை ஒருவருக்கு மற்றவர்களிடமிருந்து உயர்வு உணர்ச்சியை ஏற்படுத்தும். **அரிஸ்டோட்டில் (Aristotle)** மற்றும் **பிளேட்டோ (Plato)** ஆகியோர் இக்கோட்பாட்டின் முதன்மையான ஆதரவாளர்கள் ஆவார்கள். அவர்கள் மனிதர்களின் சிரிப்பு மற்றவர்களை தாழ்த்தும் உணர்வின் வெளிப்பாடாக இருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்தனர்.

பிறரின் தவறுகளை அல்லது குறைகளை பார்த்து ஒருவர் சிரிக்கிறார் என்றால் அது தன்னை மற்றவர்களைவிட மேலாகக் கருதும் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. அர்ப்பணிப்பு கோட்பாடு பல பண்டைய நகைச்சுவைகளில் காணப்படுகிறது. **உதாரணமாக** தாழ்ந்த தரப்பினரை அல்லது சமூகத்தின் கீழ்தரத்தவர்களை மையமாக வைத்து உருவாக்கப்படும் நகைச்சுவை இதற்குக் காணலாம். இந்தக் கோட்பாட்டின் முக்கியமான அம்சம் என்னவென்றால், சிரிப்பு சில சமயங்களில் அழிவு மற்றும் அவமதிப்பு உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடும். நகைச்சுவை ஒரு சாதாரண பொழுதுபோக்காக மட்டும் இல்லாமல் சமூகத்தில் நிலவும் அதிகார மற்றும் நடத்தை ரீதியான நெருக்கடிகளை வெளிப்படுத்தும் ஒரு வழியாகவும் செயல்படுகிறது. நகைச்சுவையின் தத்துவத்தை மேலும் விரிவாகப் புரிந்துகொள்ள நகைச்சுவையின் பரந்த பரிமாணங்களை அசையாமல் படிக்க வேண்டும். முன்பு விவாதிக்கப்பட்ட மூன்று முக்கிய கோட்பாடுகளும் நகைச்சுவையின் தன்மை, அதனை மக்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதற்கான அடிப்படையான வழிகள், ஆனால் இதையும் தாண்டி பல அங்கங்கள் இருக்கின்றன.

- **நகைச்சுவையின் உளவியல் செயல்முறைகள்**

உளவியல் ரீதியில், நகைச்சுவை மனித மனதில் சிரிப்பைத் தூண்டுகிறது. இதற்கான விளக்கமாக சிக்மண்ட் பிராய்ட் தனது **"மீம்ஸ் கோட்பாடு"** மூலம் நகைச்சுவை எவ்வாறு மனதின் அடக்கங்களை வெளிப்படுத்துகிறது என்று கூறினார். ஆனால் சமீபத்திய உளவியல்

ஆய்வுகள் நகைச்சுவையின் இன்னும் பல மனநிலை சார்ந்த விளைவுகளை ஆராய்கின்றன. மனிதர்கள் ஏன் சில நகைச்சுவைகளை இரசிக்கிறார்கள், ஏன் சில துறைகளில் நகைச்சுவை அபாயகரமாக மாறுகிறது என்பதற்கான விளக்கங்கள் உளவியல் கோணத்தில் இருக்கின்றன.

**உதாரணமாக**, மக்கள் குழுமங்களில் இருக்கும் போது நகைச்சுவை ஒரு விதமான இணக்கத்தை உருவாக்கி, குழுவில் உள்ளவர்களிடையே உறவை உருவாக்கும். இதனால், நகைச்சுவை சமூகமாக இணைப்பைக் கொடுக்கும் ஒரு கருவியாக விளங்கும். இதைப் பார்த்து **உணர்வுப் பகிர்வு** என்ற வார்த்தையை உளவியலாளர்கள் பயன்படுத்துகிறார்கள்.

- **நகைச்சுவை மற்றும் அதிகாரம்**

நகைச்சுவை பல நேரங்களில் அதிகார அமைப்புகளையும் விமர்சிக்க பயன்படுகிறது. குறிப்பாக **அரசியல் நகைச்சுவை (Political Satire)** என்பது அதிகாரத்தை நேரடியாக கேள்விக்குள்ளாக்கும் ஒரு பயன்முறையாகும். இது பழைய அரசியல் கருக்கோணங்களுக்கும் அரசுப் பொருளாதார அமைப்புகளுக்கும் எதிராக போராடுவதற்கான ஒரு வழியாக இருந்து வருகிறது.

அரசியல் நகைச்சுவை அதிகாரத்தின் பேச்சாற்றல்களை அல்லது அதிகாரி செயல்பாடுகளை மாற்றி அவற்றின் பக்கவிளைவுகளைத் தட்டிக்கேட்கிறது. பிரபலமான அரசியல் நகைச்சுவைகளில் சமூகத்தின் நிலையை விமர்சித்து வறுத்தெடுக்கப்படுகிறது. இது பிரான்ஸ் மற்றும் அமெரிக்கக் கலாச்சாரங்களில் குறிப்பாக நிலைத்துவமுள்ள நடைமுறையாக இருந்து வருகிறது.

- **நகைச்சுவை மற்றும் பண்பாட்டு விதிகள்**

நகைச்சுவை எந்த ஒரு பண்பாட்டுக்குள் கொண்டுவந்தாலும், அது அந்தப் பண்பாட்டின் சொந்தக் கட்டுப்பாடுகள், காட்சிகள் மற்றும் சின்னங்களைப் பயன்படுத்தி உருவாகிறது. ஒரு நாட்டின் நகைச்சுவையை மற்ற நாட்டின் மக்கள் முழுமையாக உணர முடியாது, ஏனெனில் அந்த நகைச்சுவையின் பின்னணியில் உள்ள கலாச்சார சொற்களும் ஒழுங்குகளும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா?

**உதாரணமாக,** ஒரு நாட்டின் அரசியல் நிலைமைகள், சரித்திர நிகழ்ச்சிகள், சமய வழிபாடுகள் போன்றவை அந்நாட்டின் நகைச்சுவையின் அடிப்படையைக் கொடுக்கின்றன. இதன் மூலம் நகைச்சுவை ஒவ்வொரு சமூகத்தின் உள்ளமைப்புகளை வெளிப்படுத்துகிறது.

- **நகைச்சுவையின் கலைச்சாலை**

நகைச்சுவை பல்வேறு கலை வடிவங்களின் பகுதியானது. நாடகம், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கார்டூன்கள் போன்றவை நகைச்சுவையை வெளிப்படுத்த பயன்படுத்தப்படும் முக்கிய ஊடகமாக விளங்குகின்றன. ஒரு நாடக கலைஞன் அல்லது திரைப்பட இயக்குனர் நகைச்சுவையை உருவாக்கும் போது, அவர்கள் கதைவளத்துக்குள் ஒரு கேலிச் சிற்றுண்டை போன்ற தன்மையை சேர்க்கின்றனர். நகைச்சுவை அரசியல் செயல்பாடுகளிலும் முக்கியப்

பங்கை வகிக்கிறது. சமூகத்தின் கட்டுப்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்க நகைச்சுவை சக்தியாக இருக்கிறது. அரசியல் நகைச்சுவைகள் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்குவதாகவும், மக்கள் தங்களது சமூகச் சிக்கல்களை ஆழமாக சிந்திக்க வழிவகுக்கக்கூடியதாகவும் இருக்கின்றன.

**உதாரணமாக,** சில புகழ்பெற்ற நகைச்சுவைக் கதைகள், ஜேன்ஆஸ்டினின் **"Pride and Prejudice"** போன்ற நாவல்கள் சமூகத்தின் எதார்த்தங்களை நகைச்சுவை ஊடாகப் பேசுகின்றன. மேலும், சார்லி சாப்ளின் போன்றவரின் திரைப் படங்களில் நகைச்சுவை மனித வாழ்க்கையின் சிக்கல்களை ஆழமாகவும் எளிமையாகவும் பேசுகிறது.

அதேபோல் நகைச்சுவை இலக்கியத்திலும் முக்கிய இடம் பிடிக்கிறது. சிக்கலான சமூக மற்றும் தனிநபர் சிக்கல்களை நகைச்சுவையின் மூலம் பேசுவது சாதாரணமாகவே உள்ளது. நகைச்சுவை என்றால் வெறும் பொழுதுபோக்கு அல்ல, அது சமூகத்தின் விழுப்புணர்வுகளை மேம்படுத்தும் ஒரு சக்தியாகவும் விளங்குகிறது.

- **நகைச்சுவை மற்றும் நெறிமுறைகள்**

நகைச்சுவை சமூக நெறிமுறைகளை மாற்றுவதாகவும் அமைப்பதை வேறுவிதமாகப் பார்க்கலாம். எப்போதும் நகைச்சுவை சிரிப்பை உருவாக்க மட்டுமே அல்லாமல், நமது சமூக நடத்தை, நெறிமுறைகளை மாற்றும் சக்தியாகவும் உள்ளது. தகுந்த சில நகைச்சுவைகள், குறிப்பாக **மன்ற நகைச்சுவைகள் (stand-up comedies),** சமூகத்தின் சுவாரஸ்யமான விதிகளை மாற்றி அமைக்கின்றன.

- **நகைச்சுவையின் சமூக பாதிப்புகள்**

நகைச்சுவை என்பது மனித சமூகம் முழுவதையும் பாதிக்கும் ஒரு சக்தியாக உள்ளது. நகைச்சுவையின் மூலம் சமூக நடத்தை, நெறிமுறைகள் மற்றும் அதிகார அமைப்புகளைப் பற்றி பேசுவது மிகவும் முக்கியம். அரசியல் நகைச்சுவை, சமூக சிக்கல்களைத் தட்டிக்கேட்கும் விதமாக உருவாகும். இதனால் சமூகத்தின் பரிமாணங்களை மாற்ற முயற்சிக்கின்றது. அதே நேரத்தில், நகைச்சுவை கலை எனப்படும் துறையில், மனிதர்களின் மனோவியல் பண்புகளை அறிந்துகொள்ளலாம். நகைச்சுவையின் மூலம் மனதில் உள்ள அடக்கப்பட்ட உணர்வுகள் வெளிப்படுகின்றன. இதனால் மனதில் சோர்வு மற்றும் மன அழுத்தங்களை குறைக்க நகைச்சுவை பயன்படுகிறது.

- **நகைச்சுவையின் எதிர்மறை விளைவுகள்**

நகைச்சுவை பல நேரங்களில் எதிர்மறையாகவும் விளங்கலாம். குறிப்பாக அர்ப்பணிப்பு கோட்பாட்டின் அடிப்படையில், நகைச்சுவை மற்றவர்களை தாழ்த்தும் வகையிலானது என்றால் அது சமூகத்தினரின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தலாம். குறிப்பாக சில நேரங்களில் அரசியல், சமய மற்றும் தனிநபர் தரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் நகைச்சுவை சமூகத்தினரிடம் மனவருத்தத்தை ஏற்படுத்தும். இதன் மூலம் நகைச்சுவை எந்தத் துறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதில் அதன் விளைவுகள் மிகுந்த வகையாக மாறும்.

நகைச்சுவையை அசட்டு மற்றும் அவமதிப்பு உணர்வுகளை உருவாக்கும் விதமாகக் கொண்டு செல்லக்கூடாது என்பதே இந்தக் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாகும். நகைச்சுவை எவ்வாறு நமது மானுடநிலையை மேம்படுத்துகிறது என்பதனைத் தத்துவ ரீதியாக ஆராய்வது அதன் பெருமதிப்பை வெளிப்படுத்துகிறது.

**க.ஹரண்யா**

**மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு**

**சிறப்புக் கற்கை (மெய்யியல்)**

## *26.இலத்திரனியல் கழிவுகள் மனித சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்.*

மாறிவரும் இவ் விஞ்ஞான உலகிலே மனித முயற்சியினை மட்டுப்படுத்திவிட முடியாது. நாளுக்கு நாள் பல்வேறுபட்ட புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் நம்மை வியப்பில் ஆழ்த்தவே செய்கின்றன. நாகரிகத்தினதும் விஞ்ஞான தொழில்நுட்பத்தினதுமான தேவை நம்மை அடிமைகளாக்கி வைத்திருக்கின்றது. உலக நடப்புக்களில் புதிதுபுதிதாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பலவற்றையும் நாம் முழுமையாக புரிந்து கொள்ள எடுக்கும் காலத்திற்குள் அதனையும் முந்திக்கொண்டு புதிய புதிய மாற்றங்கள் அரங்கேறுகின்றன. வேறு எந்தத் துறைகளையும் விட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையிலே இந்த மாற்றங்கள் அதிகளவில் உணரப்படுகின்றன. இத்தகைய வளர்ச்சியினால் உருவாக்கப்படுகின்ற பல சாதனங்கள் ஒன்றுக்கொன்று போட்டியாக வெளிவந்தவண்ணமே இருக்கின்றன. இன்றைய இயந்திரத் தொழில்மயமான யுகத்தில் புவியானது பல்வேறுபட்ட சூழல் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கின்றது. இன்று உலகில் உள்ள பெரும்பாலானவர்களால் ஒரு மாபெரும் பிரச்சினை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதும், காலதாமதம் இன்றித் தீர்க்கப்பட வேண்டும் என உணரப்பட்டதுமான பிரச்சினையாக உலக சூழல் மாசுபடுதல் காணப்படுகின்றது. அந்தவகையில் இன்றைய காலகட்டத்தில் புவிச்சூழலின் இயல்புநிலைக்குப் பெரிதும் அச்சுறுத்தலாக அமையும் மாசாக்கிகளின் வரிசையில் புதியவரவாக **இலத்திரனியல் கழிவுகள்** அமைகின்றன. இலத்திரனியல் கழிவுகள் சூழல் ரீதியாக அரசியல் ரீதியாக பொருளாதார ரீதியாக உளவியல் ரீதியாக மனித சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை நோக்குவோம்

நவீன தொழில்நுட்ப விருத்தியின் விளைவாகவும், மனிதனது தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், வேலைகளை இலகுவாக்கிக் கொள்வதற்கும், சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும், மின்னணுப் பொருட்களும், கருவிகளும் அதிகளவில் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படுவதுடன் இன்றைய சனத்தொகைப் பெருக்கத்தின் விளைவாக இப்பொருட்களிற்கான கேள்வியும் அதிகரித்து வருவதனால் மின்னணுப்பொருட்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்து சேருகின்றன.

அதாவது உலகளாவிய ரீதியில் நாளுக்கு நாள் **112,000 கணினிகள்** மற்றும் பல **இலட்சக்கணக்கான மின்கலங்கள், 140 மில்லியன் கையடக்கத் தொலைபேசிகளின் உதிரிப்பாகங்கள், வீட்டுப்பாவனை இலத்திரனியல் சாதனங்கள், இறுவெட்டுக்கள்** என சமயலறை முதல் தொழிற்சாலை வரை இலத்திரனியல் கழிவுகள் உருவாக்கப்படுகின்றன. இதனால் வருடத்திற்கு 40 மில்லியன் முதல் 50 மில்லியன் தொன் வரையிலான இலத்திரனியல் கழிவுகளை பூமி சேர்த்துக் கொள்கின்றது. அதிகளவான கழிவுகளை ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற கண்டங்கள் வெளியேற்றுகின்றன.

இந்தியா இலத்திரனியல் கழிவு வெளியேற்றத்தில் ஐந்தாம் இடத்தில் உள்ளது. ஆசிய நாடுகளில் சீனா, யப்பான் போன்ற நாடுகள் அதிகளவான கழிவுகளை வெளியேற்றுகின்றன.

ஆபிரிக்க நாடுகள் மிகவும் குறைந்த அளவான கழிவுகளையே வெளியேற்றுகின்றன. பல அபிவிருத்தி அடைந்த நாடுகள் அன்பளிப்பு என்ற போர்வையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற்கு தமது இலத்திரனியல் குப்பைகளை ஏற்றுமதி செய்கின்றன. இதனால் குறைவிருத்தி நாடுகள் கழிவுத்தொட்டியாகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இப்பிடியில் இலங்கையும் சிக்கிக் கொண்டது. இவ்வாறு நாட்டுக்கு நாடு மின்னணுக் கழிவுகளின் பெருக்கம் அதிகரித்த வண்ணமே செல்கின்றது. இவை இன்று மக்களை பாதிக்க காலம் எடுத்தாலும் காத்திருந்து அவர்களின் அடுத்த சந்ததிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டவையே.

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 13 கோடிக்கும் மேற்பட்ட கணினிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மில்லியன் கணக்கிலான கணினிகள் விற்கப்படுகின்றன. இதனால் உலகளாவிய ரீதியில் வருடாந்தம் **20-50 மெட்ரிக் தொன் இலத்திரனியல் கழிவுகள்** சூழலுக்கு விடப்படுகின்றன. அத்துடன் தினமும் **4-5 தொன் இலத்திரனியல் கழிவுகள்** சூழலில் குவிவடைகிறது. இலத்திரனியல் கழிவுகளை அதிகளவில் ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா முதலிய நாடுகள் வெளியிடுகின்றன. அண்மைக் காலங்களில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட சீனா, இலத்தின் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலியன வெளியிடுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. என்பதுடன் பெரும்பாலான நாடுகளில் குப்பை ஆக்கப்படும் இலத்திரனியல் கழிவுகளில் இருந்து தேவையான உலோகங்களைப் பெறுவதற்காக அவை உடைக்கப்பட்டும், பகுதி பகுதியாக வேறாக்கப்பட்டும், எரிக்கப்பட்டும், புதைக்கப்பட்டும் விடுகின்றன. **உதாரணமாக** நைஜீரியத் துறைமுகத்திற்கு இலட்சக்கணக்கான பாவிக்காத கையடக்கத் தொலைபேசிகளும், கணினிகளும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இலத்திரனியல் கழிவுகளின் விளைவுகள் எனும் போது இரண்டு வகையான விளைவுகள் பற்றி ஆராய வேண்டியது அவசியமாகின்றது. ஒரு நாட்டின் இலத்திரனியல் கழிவு இன்னுமொரு நாட்டினால் இறக்குமதி செய்யப்படுவதன் காரணம் இலத்திரனியல் கழிவுகளின் உள்ளே இருக்கின்ற நன்மையினை கருத்திற்கொண்டேயாகும். இலத்திரனியல் கழிவுகளில் பாரியளவிலான பாதிப்புக்கள் இருந்தாலுங்கூட சில குறிப்பிடத்தக்க சாதகமான விளைவுகளும் காணப்படவே செய்கின்றன. இலத்திரனியல் சாதனங்கள் அபாயகரமான பொருட்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. அவற்றுள் பெறுமதிமிக்க பொருட்களும் இருக்கின்றன. மடி கணினியை எடுத்துக்கொண்டால் அதில் கிட்டத்தட்ட 60 விதமான பொருட்கள் இருக்கின்றன. அவற்றுள் பலவற்றை மக்களால் மீண்டும் பயன்படுத்த முடியும். மின்னணுச்சாதனங்களில் தாமிரம், வெள்ளி முதலான உலோகங்கள் மட்டுமன்றி தங்கமும் கூட பயன்படுத்தப்படுகின்றது. உலக அளவில் அகழ்ந்து எடுக்கப்படும் தங்கம் மற்றும் வெள்ளியில் மூன்று சதவீதமானவை மின்னணுச்சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றது. உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் பல்லாடியம் என்ற உலோகத்தில் 13 சதவீதமும், கோபால்ட் என்ற உலோகத்தில் 15 சதவீதமும் மின்னணுச்சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

மிகவும் அபூர்வமான உலோகம் என அழைக்கப்படுகின்ற ஹ.ஃப்னியம் போன்ற உலோகங்களும்கூட மின்னணுச்சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இலத்திரனியல்

கழிவுகளினால் ஏற்படும் பாதகமான விளைவுகளை நோக்குவோமானால் மின்னணுக்கழிவுகளின் மிகையான அதிகரிப்பினால் பூகோளம் பாரிய பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. அவையாவன, **சூழல் பிரச்சினை, மானிடபிரச்சினை, பொருளாதார பிரச்சினை** என்பனவாகும். வளி மாசடைதல், நிலம் மாநடைதல், நீர் மாசடைதல் அதாவது இலத்திரனியல் உலோகங்களையும், சில தீவர நச்சு இரசாயணப் பொருட்களையும் கொண்டுள்ளன. இத்தகைய மின்னணுப்பொருட்களை முறையாக மீள்சுழற்சிக்கு உட்படுத்தாமல் வெறுமனே எரிக்கப்படுவதனால் அவற்றில் இருந்து நச்சு வாயுக்கள் கலந்து வளியை மாசடையச் செய்கின்றது. இந்த வளி மாசடைவதால் **அமிலமழை, பச்சைவீட்டுவிளைவு, ஓசோன்படைத்தாக்கம்** போன்றன ஏற்பட்டு பூகோளச்சூழல் பாதிப்படைகின்றது.

முறையான மீள் சுழற்சியும், அழித்தொழிப்பும் இல்லாமையால் இலத்திரனியல் கழிவுகள் உடலியல் சார் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன. அதாவது ஒரு கணினி உற்பத்திக்கு 22 கிலோ நிறை உடைய இரசாயணக்கலவை பயன்படுத்தப்படுகிறது. என்பதுடன் அக்கணினியை இயக்கப் பாரியளவிலான சக்தியும் செலவாகிறது. இத்தகைய சக்தி அனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக **20%** தொடக்கம் **40%** வரையான சக்தி வீணாக சூழலுக்கு விடப்படுகிறது. அவை தீவிர நச்சுத்தன்மையுடையதாக விளங்குகிறது. இத்தகைய செயற்பாடுகளால் உடல்நிலை பாதிப்படைவதோடு, உயிரின இனப்பெருக்கத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. **உதாரணமாக** ஒரு கணினியை உற்பத்தி செய்ய 7கிலோ நெகிழி (Plastic) பயன்படுத்தப்படுகிறது. அன்றாடம் இப்பொருட்களினை பயன்படுத்துவதால் புற்று நோய், சிறுநீரகி பாதிப்பு, சுவாசப்பிரச்சினை, ஆண்மைக் குறைபாடு, தைரொக்சைட், கருவின் வளர்ச்சி வீதம் குறைவு, வயதுக்கு முன் பூப்படைதல் முதலியன ஏற்படுகிறது.

குளிர்சாதனப்பெட்டிகள், குளிரூட்டிகளில் இன்றைய காலத்தில் குளோரோ புளோரோ காபன் குறைக்கப்பட்டிருந்தாலும் மின்னணுச்சாதனங்கள் மின்னணுக் கழிவுகளாக மாறும்போது அவை எரிக்கப்படுகின்றன. இதனால் **சல்பர் ஒட்சைட்டு, கந்தகவீர் ஒட்சைட்டு, ஓசோன்** போன்ற வாயுக்கள் வளிமண்டலத்துடன் கலந்து ஓசோன்படையை பாதிப்படையச் செய்கின்றன. வளிமண்டலத்தில் ஓசோன்படை அழிக்கப்படுவதனால் ஞாயிற்றின் அகச்சிவப்புக் கதிர்கள் (Ultraviolet Rays) பெருமளவில் புவியை வந்தடையும். இதனால் தாவரங்கள் மற்றும் உணவுப்பயிர்கள் குறைவடையும், மனித சுகாதாரம் பாதிக்கப்படும், வனவிலங்குகளில் இழப்பு ஏற்படும். இத்தகைய பாரிய விளைவிற்கு ஓசோன்படைத் தேய்வு காரணமாக அமைகின்றது. மின்னணுக்கழிவுகளை எரிப்பதனால் தோன்றுகின்ற மற்றுமொரு பிரச்சினையாக **அமிலமழை** காணப்படுகின்றது. அதாவது தொழிற்சாலை மயமாக்கலும், சுவட்டு எரிபொருட்களின் பாவனையின் அதிகரிப்பின் காரணமாகவும், கழிவுகளை கையாழ்வதன் காரணமாகவும் தோன்றிய ஒன்றாகவே அமில மழை காணப்படுகின்றது.

அமிலமழை என்பது எரிபொருட் படிமங்களை, மின்னணுக்கழிவுகளை எரிக்கும் போது தோன்றுகின்ற சல்பர் ஒட்சைட்டு, நைதரசன் போன்ற வாயுக்கள் இரசாயனமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு வளிமண்டலத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மீண்டும் மழையாக பொழிதலைக் குறிக்கும். மின்னணுக்கழிவுகளைக் கையாளுவதற்கான ஆலைகளில் இருந்து பல நச்சு வாயுக்கள் வெளியேற்றப்பட்டு அமிலமழையாக பொழிகின்றது. இதனால் நீர்வாழ் உயிரினங்கள் பாதிப்படைகின்றது, பயிர்கள் மற்றும் காட்டுச்சூழல் பகுதிகள் பாதிப்படைகின்றது, வன விலங்குகளும், மனிதனும் பாதிப்படையும் நிலை தோன்றுகின்றது, மண்வாழ் அங்கிகளும், மண்வளமும் பாதிப்படைகின்றது, வரலாற்றுச்சிறப்புமிக்க இடங்கள் பாதிப்படைகின்றது, ரயில் தண்டவாளங்கள் போன்றனவும் பாதிப்படைகின்றது.

வளிமண்டலத்தில் ஏற்படும் மற்றுமொரு பிரச்சினையாகிய பச்சைவீட்டு விளைவிற்கும்கூட மின்னணுக்கழிவுகள் காரணமாக அமைந்துவிடுகின்றன. பசுமைக் குடில் வாயுக்களான **நீராவி ($H_2O$), காபனீரொட்சைட்டு வாயு ($CO_2$), மீதேன் வாயு ($CH_4$), நைதரசன் ஒட்சைட்டு ($NO_2$), ஓசோன் ($O_3$), குளோரோ புளோரோ காபன் (CFC)** போன்ற வாயுக்கள் சூரிய ஒளிக் கதிர்களை வெளியே விட்டு விடாமல் தன்னகத்தே அடக்கி வைத்துக் கொள்கின்றன. இப்படி தேக்கிவைத்த கதிர்கள்தான் பூமியை சூடாக்கி வைத்திருக்கின்றன. இதுவே பச்சை வீட்டு விளைவு அல்லது **பசுமை இல்ல விளைவு** என அழைக்கப்படுகின்றன. இத்தகைய பசுமை இல்ல விளைவே புவி வெப்பமாதலுக்கு அடிப்படைக் காரணமாகும். பசுமைக்குடில் வாயுக்களானது பூமியின் மேற்பரப்பில் அதாவது பூமியில் இருந்து 15–60 கிலோமீற்றர் உயரத்தில் கண்ணாடிக் கூண்டுபோல் காணப்படும் ஓசோன் படலத்தை தாக்குகின்றன. ஓசோன் படையானது எம்மை புறஊதாக் கதிர்களில் இருந்து பாதுகாக்கின்றது. ஆனால் பசுங்குடில் வாயுக்கள் அதனைப் பாதிக்கின்றது. இத்தகைய மனித செயற்பாடுகளின் விளைவாக வரலாறு காணாத முறையில் அதிகரித்து வரும் வெப்பநிலை, உயர்ந்து வரும் கடல் மட்டம், வடதுருவத்தில் குறைந்துவரும் பனியின் அளவு, காலநிலை மாற்றம், ஓசோன்படைத் தேய்வு, பாலைவனமாதல், அமிலமழை, காட்டுத்தீ, சுற்றாடல் பிரச்சினைகள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இத்தகைய மின்னணுக்கழிவுகளின் முறையற்ற விதத்திலான செயற்பாடுகளினால் வளிக்கோளம் பெரிதும் மாசுபடுகின்றமையைக் காணலாம்.

நிலம் மாசடைதலில் முக்கிய காரணியாக இலத்திரனியல் கழிவுகள் செல்வாக்கு செலுத்துகின்றன. நிலம் மாசடைவதற்கு பல்வேறுபட்ட காரணங்கள் இருந்தாலும் மின்னணுக்கழிவுகளும் ஒரு முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. இலத்திரனியல் கழிவுகளை புதைப்பதனால் மண்ணின் இயல்பு நிலை, மண்ணீர், மண்வளம் என்பன பாதிக்கப்படுகின்றது. மண்வளம் பாதிப்படைவதால் தாவரங்கள் வளர்வது தடை செய்யப்படுகின்றன. அதனால் தாவரங்களில் வளர்கின்ற பூச்சிகள், பறவைகள், விலங்குகள் என்பன அழிகின்றன, மண்ணரிப்புக்களும் ஏற்படுகின்றது. இலத்திரனியல் கழிவுகள் பூமிக்குள் இட்டுப் புதைக்கப்படுகின்றன. இதன் காரணமாக மண்ணீர், மண்வளம், நிலத்தடிநீர் என்பன மாசடைகின்றன. நிலத்திற்குள் மின்னியல் சாதனங்கள் புதைக்கப்படுவதனால் மண்தரமிழப்பு ஏற்படுகின்றது. இலத்தீன், அமெரிக்க நாடுகளில் மண்வள இழப்பும், உவர்தன்மையின் அதிகரிப்பும் பிரதான பிரச்சினையாக உள்ளது.

வட ஆபிரிக்க பகுதிகளில் மண் தரமிளப்பினால் சூழல் அகதிகள் உருவாகிவருகின்றனர். மண்ணின் போசாக்கு குறைவடைந்து பயிர்ச்செய்கையும் பாதிப்படைகின்றது. மேலும் இந்தியாவின் மேற்கு டெல்லிப் பகுதியில் மின்னணுக்கழிவிலுள்ள தாமிரத்தை எடுத்துக்கொண்ட பின்னர் எஞ்சியுள்ள பாதரசக் கலவை மற்றும் ஈயம் போன்றவற்றினை விளைநிலங்களில் வீசிவிடுகின்றனர். இதனால் அந்த விளைநிலங்களில் வளரும் உணவு தானியங்கள் மூலம் ஆபத்தான நோய்கள் வரும் என்பதை அறியாமல் இப்படிப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறாக இலத்திரனியல் கழிவுகளினால் நிலமானது தரமிழந்து மாசுபடுகின்றது.

மேலும் இலத்திரனியல் கழிவுகளின் முறையற்ற அழித்தொழிப்பு இல்லாமையால் நீர் வளம் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. இன்று நீர் வளம் அருகி வருவதற்கும், விற்பனைப் பொருளாக மாறியுள்ளமைக்கும் இலத்திரனியல் கழிவுகள் ஒருவகை காரணமாக இருக்கலாம். உதாரணமாக, பழுதடைந்து வீசப்படும் கையடக்கத் தொலைபேசி ஒன்றின் மின்கலம் 30,000 டன் நீரை மாசடையச் செய்கின்றது. மின்னணுக்கழிவுகளின் வெளியேற்றத்தினால் புவிக்கோளத்திலுள்ள தரைக்கீழ் நீரும், மேற்பரப்பு நீரும் பல்வேறுபட்ட வகைகளில் மாசடைதலுக்கு உட்படுகின்றன. மின்னணுக்கழிவுகளால் தரைக்கீழ் நீர் மாசடைதலுக்கு உட்படுகின்றது. அதாவது அசுத்தமாக்கிகள் (Pollutants) தரையில் ஊடுருவி நீர்ப்பீடத்தை சென்றடைகின்றன. இதற்கு மின்னணுக்கழிவுகளும் காரணமாக உள்ளன. மின்னணுக்கழிவுகள் சில இடங்களில் புதைக்கப்படும் போது அவற்றிலிருந்து வெளியேறும் நச்சுவாயுக்கள் தரைக்கீழ் நீருடன் கலந்து விடுகின்றன. மின்னணுக்கழிவுகளில் இருந்து பல்வேறு வகையான இரசாயணக்கூட்டுக்களை இவை சேர்த்துக்கொண்டு நீர்நிலைகளுடன் கலந்து விடுகின்றன. இவ் நிலக்கீழ் நீரானது கிணறுகளையும் அடையும் நிலை ஏற்படுகின்றது. இந்நீர் மனித நுகர்விற்கு பொருத்தமற்றதாகக் காணப்படும். சில வளர்ந்த நாடுகளில் மின்னணுக்கழிவுகளை மண்ணுக்குள் இட்டுப் புதைக்கின்றனர். இதன் காரணமாக தரைக்கீழ் நீர் பெரிதும் மாசடைந்து காணப்படுகின்றது. இலத்திரனியல் கழிவுகளினால் எவ்வாறு மேற்பரப்பு நீர் மாசடைதலுக்கு உட்படுகின்றன என நோக்கும்போது இரசாயனத்தன்மை கொண்ட அசுத்தமாக்கிகளான சல்பேற்று, குளோரைட்டு, சோடியம் நைத்திரேற்று, பொசுபேற்று, கல்சியம் மற்றும் அயன்கள் ஆகியவற்றால் மேற்பரப்பு நீரானது மாசுபடுத்தப்படுகின்றது.

மின்னணுணக்கழிவுகளை நீர்நிலைகளில் தூக்கி வீசுவதனால் அந்த நீர்ச்சூழலானது பல்வேறுபட்ட வகையிலும் மாசடைவிற்கு உள்ளாகின்றது. இதனால் நீர்வாழ் உயிரினங்களும் தாவரங்களும் பாதிப்படைகின்றன. நீர்நிலைகளுக்கடியில் இரசாயனப் படிவுகள் தங்கி நீரை போசாக்கற்றதாக மாற்றிவிடுகின்றன. நீர்வாழ் உயிரினங்களின் பெருக்கம் குறைந்தும், மடிந்தும் விடும் நிலை ஏற்படுகின்றது. இரசாயணம்மிக்க கழிவுகளை உண்ணும் நீர்வாழ் உயிரினங்களை மனிதன் உண்ணும் போது மனித சுகாதாரமும் பாதிப்படைகின்றது. இவ்வாறு மின்னணுக்கழிவுகளின் வெளியேற்றத்தால் நீரானது பல்வேறுபட்ட முறையில் மாசடைந்து மனிதனுக்கும், சூழலுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. இலத்திரனியல் கழிவுகளினால் ஏற்படும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக உடலியல் பிரச்சினை காணப்படுகின்றது. இவற்றினால் ஏற்படுகின்ற உடலியல் ரீதியிலான பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வது முக்கியமானதாகும்.

இலத்திரனியல் கழிவுகளில் உள்ளடக்கப்படும் இரசாயனப்பதார்த்தமான ஈயத்தினை எடுத்துக்கொண்டால் அது மனிதனின் மத்திய நரம்பு மண்டலத்தையும், புறநரம்பு மண்டலத்தையும் பாதிக்கக் கூடியதாகும். இரத்தமண்டலம், சிறுநீரகங்கள் மற்றும் இனப்பெருக்க மண்டலத்திற்கு காரணமான சுரப்பிகளையும், குழந்தைகளின் மூளை வளர்ச்சியையும் பாதிக்கக்கூடியதாகும். அதுமட்டுமல்லாமல் இதனை சுற்றுப்புறச்சூழலில் எரிப்பதனாலும், புதைப்பதனாலும் தாவர, விலங்கு, மற்றும் நுண்ணுயிர்கள் பாதிப்படைகின்றது. அதேபோல் கட்மியம் எனும் உலோகம் குறிப்பாக மனித உடலின் சிறுநீரகத்தைப் பாதிக்கக் கூடிதாக காணப்படுகின்றது. மின்னணுக்கழிவுகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்ற பாதரசத்தினை எடுத்துக்கொண்டால் அது பெரும் பாதிப்பினை மனிதனிற்கும் ஏனைய உயிரினங்களிற்கும் ஏற்படுத்தக்கூடியது.

மூளை மற்றும் சிறுநீரகங்களிற்கு சேதம் விளைவிக்கின்றது. வளர்ச்சியடையும் கருவைக்கூட பாதிக்கக் கூடியது. மின்னணுக்கழிவுகளில் பெரிதும் பாவனையில் உள்ள பிளாஸ்டிக் வகைகளில் ஒன்றான P.V.C எரிக்கப்படும் போது அது மனித சுவாசத்திற்கு மட்டுமன்றி அனைத்து உயிரினங்களிற்கும், தாவரங்களிற்கும் தீங்காகிவிடுகின்றது. குறைந்தகால அளவிற்கு பேரீயம் பாதிப்புக்கு உட்பட்டாலே **மூளைவீக்கம், தசைத்தளர்வு, இதயம், கல்லீரல், மண்ணீரல்** போன்றவை சேதத்திற்கு ஆளாகும் என நவீன ஆய்வுகள் கூறுகின்றன. பெரிலியம், டோனர்ஸ் போன்ற பல நச்சு இரசாயனங்கள் மின்னணுக்கழிவுகளில் காணப்படுவதினால் அவற்றினை எரிக்கும் போதோ இல்லது மீள்சுழற்சி செயன்முறைகளில் ஈடுபடும் போதோ மனிதன் உள்ளிட்ட பல உயிரினங்கள் உடலியல் ரீதியான பாதிப்புக்குள்ளாகின்றது.

இவற்றினால் வயது வந்தோருக்கு உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, அதிர்ச்சி என்பனவும் ஏற்படுகின்றது. குழந்தைகள் வயதுவந்த தோற்றத்தினை அடையும் நிலையும் ஏற்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் இத்தகைய மின்னணுக்கழிவுகள் மீள்சுழற்சி தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெரும்பாலானோர் புற்றுநோய், குழந்தைப்பேறின்மை போன்ற பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான தொழில்களில் ஈடுபடும் சில தொழிலாளர்கள் கைக்கவசம் இன்றியும், முகக்கவசம் இன்றியும் தொழில்களில் ஈடுபடும் போது தோல் நோய்களும் ஏற்படுகின்றது. மேற்குறிப்பிட்டவாறு மின்னணுக்கழிவுகளினால் பல உடலியல் பிரச்சினைகளும், உயிர் ஆபத்துக்களும் ஏற்படுகின்றமையை அறியக்கூடியதாக உள்ளது. இலத்திரனியல் கழிவுகளினால் பல்வேறு வகையான உளவியல் தாக்கங்கள் ஏற்படுகின்றன. அந்தவகையில் மின்னணுக்கழிவுகளினால் பல்வேறு வகையான நோய்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக புற்றுநோய், குழந்தைப்பேறு இன்மை, சிறுநீரக நோய், மூளைநோய் போன்ற பலவகையான நோய்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான நோய்கள் சமூகத்தின் மத்தியில் மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற உளவியல் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. மின்னணுக்கழிவுகள் கரையோரங்களில் கொட்டப்படுவதனால் கடல் நீர் மாசடைகின்றது. இதனால் கடல்வாழ் உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது. இதனால் கடலை நம்பி வாழ்கின்ற மக்களின் பொருளாதாரம் பின்னடைவான நிலையினை அடைவதனால் அச்சமூகச்சூழல் உளவியல் ரீதியிலான பாதிப்பிற்கு உள்ளாகின்றது.

மின்னணுக் கழிவுகளின் மீழ்சுழற்சிப்பணிக்காக சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் போன்றோரை அமர்த்துவதனால் அதிகமான வேலைப்பழு காரணமாகவும், குறைந்த ஊதியம் கிடைப்பதனாலும், மின்னணுக்கழிவுகளை முறையற்ற விதத்தில் கையாழ்வதன் காரணமாக ஏற்படும் நோய்கள் மூலமாகவும் அவர்கள் இயல்பாகவே உளவியல் ரீதியிலான பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். இலத்திரனியல் கழிவுகளினால் பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ள நிலையில் இக்கழிவுகளினால் பொருளாதாரத்திலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் மின்னணுக்கழிவுகளினால் ஏற்படும் பொருளாதாரப்பிரச்சினைகளை நோக்கும் போது இப்பொருளாதாரப் பிரச்சினையானது மக்களுடைய வாழ்க்கையிலும் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. மின்னணுக்கழிவுகளை எரிக்கும் போதோ அல்லது மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் போதோ அதனால் ஏற்படுகின்ற கழிவுகளை நிலத்திலே புதைக்கின்ற போதோ பல பாதிப்புக்கள் இடம்பெறுகின்றன. இந்த மின்னணுக்கழிவில் உள்ள நச்சுக்கள் மண்ணினால் உறிஞ்சப்படும்போது வளமான மண் பாதிக்கப்படும். இதனால் விவசாய நடவடிக்கைகளிற்குத் தேவையான மண்வளம் அற்றுப் போகின்றது. இதனால் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளும் மக்கள் மண்வளத்தை சீர்செய்ய கூடுதலான பணத்தைச் செலவிடுகின்றனர். இதனால் மக்கள் பெரிதும் பொருளாதாரச் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இத்தகைய இலத்திரனியல் கழிவுகளினால் மக்களிற்கு ஏற்படுகின்ற நோய்களுக்காகவும் மக்கள் அதிகளவான பணத்தினை செலவிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இது அவர்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது. மக்கள் இவற்றினால் கடன்சுமைகளில் சிக்கிக் கொள்ளவும், வறுமைக் கோட்டினை அடையவும் காரணமாகின்றது. மின்னணுக்கழிவுகள் கரையோரங்களில் கொட்டப்படுவதனால் கடல் நீர் மாசடைகின்றது இதனால் கடல்வாழ் உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது. இதனால் கடலை நம்பி வாழ்கின்ற மக்களின் பொருளாதாரம் பின்னடைவான நிலையினை அடைவதனால் அவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்படுகின்றனர். மின்னணுக்கழிவுகளினால் நிலக்கீழ் நீர் மாசடைகின்றது. இதனால் மக்களின் அன்றாட தேவைக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக பணத்தை செலவிட வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

இவ்வாறான தாக்கங்கள் பொருளாதார ரீதியில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி மக்கள் வாழ்க்கையில் பெரும் பிரச்சினைகளையும் ஏற்படுத்திவிடுகின்றது.மனிதனின் பிரதான தேவையாக இடம்பிடித்துவிட்ட இவ் மின்னணுப்பொருட்களை மனித வாழ்வில் இருந்து அகற்றிவிடவோ, முற்றாக நிறுத்திவிடவோ முடியாது. எனவே இது சிக்கலான ஒரு பிரச்சினையே ஆகும். இச்சிக்கலான பிரச்சினைக்காக சர்வதேச ரீதியில் பல உடன்படிக்கைகள் இயற்றப்பட்டு உள்ளன. அபாயகரமான கழிவுகளின் எல்லை இடமாற்ற நகர்விற்கான **பேசல் உடன்பாடு, ரொடெர்டம் உடன்பாடு, ஸ்டொக்ஹோம் உடன்பாடு** போன்ற பல உடன்படிக்கைகள் இயற்றப்பட்டிருந்தாலும் அவை எந்த அளவிற்கு சிறப்பாக இயங்கிவருகின்றது என்பது கேள்விக்குறியான ஒன்றாகவே காணப்படுகின்றது. பல்வேறுபட்ட உடன்படிக்கைகளும், சட்டங்களும் இயற்றப்படுவது முக்கியமானதல்ல அவை சிறந்த முறையில் கடைப்பிடிக்கப்படவும், செயற்படவும் வேண்டும்.

இலத்திரனியல் சாதனங்கள் மீள்நிர்மாணத்திற்கும், மீள்சுழற்சிக்கும் ஏற்ற விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும் பாகங்களை இலகுவாக அடையாளம் காணும் வகையில் மின்னணுச்சாதனங்களின் பாகங்கள் கட்டாயமாக அடையாளப்படுத்தப்பட்டு எந்தவகையான பிளாஸ்டிக் அல்லது உலோகம் என குறிக்கப்படல் வேண்டும். அவ்வாறு மீள்சுழற்சி செயற்பாட்டின் போதோ, பிரித்தெடுப்பின் போதோ ஏதெனும் தீங்கு விளைவிற்கும் பொருட்களை மின்னணுச்சாதனங்கள் கொண்டிருப்பின் அது பற்றிய எச்சரிக்கைக் குறிப்பு வழங்கப்படல் வேண்டும். அனைத்து விதமான தீங்கு விளைவிக்கும் மின்னணுப்பொருட்களின் ஏற்றுமதியையும், மின்னணுக்கழிவுகளின் ஏற்றுமதியையும் உலக நாடுகள் தடை செய்ய வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகள், கொடை அல்லது மீள்பயன்பாடு என்னும் வகையில் வளர்முக நாடுகளுக்கு மின்னணுக்கழிவுகளை வழங்கி வருகின்றன. இத்தகைய விடயம் தொடர்பில் அந்நாட்டு அரசாங்கம் சிறந்த பகுப்பாய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும். மின்னணுக்கழிவு மீள்சுழற்சி இடம்பெறும் இடங்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் இயங்க வேண்டும். அவ்வாறு அரசாங்க அனுமதியுடன் இயங்கும் இடங்களை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். இத்தகைய இடங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பிலும் அரசு கவனம் செலுத்துதல் அவசியமானதாகும்.

இலத்திரனியல் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுவதை முற்றாகத் தடை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மின்னணுக்கழிவுகளை கொட்டுவதற்கு தனியான இடத்தை தெரிவு செய்ய வேண்டும். அதற்கான இடத்தினை தெரிவு செய்யும் போது மக்களிற்கும், சுற்றுப்புற சூழலிற்கும் பாதிப்பு ஏற்படாதவாறு அமைய வேண்டும். மக்களின் வாழ்விடங்களை அண்டிய பிரதேசங்களில் கொட்டப்படுவதை தவிர்த்து மக்கள் நடமாட்டமற்ற இடங்களை தெரிவுசெய்தல் வேண்டும். மின்னணுக்கழிவைக் கையாளும் தொழிலில் ஈடுபடுபவர்கள் தம் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் அவர்களிற்கான பாதுகாப்பினை உரிய நிறுவனம் பெற்றுக்கொடுக்க வேண்டும். இவ்வாறான தொழில்களில் ஈடுபடும் போது பாதுகாப்பான முகக்கவசம், கையுறை என்பவற்றை பயன்படுத்துதல் வேண்டும். ஆபத்துவிளைவிக்கக் கூடிய பொருட்களின் கையாளுகையானது முற்றாகத் தடை செய்யப்படவும், தவிர்க்கப்படவும் வேண்டும். மீள்சுழற்சி தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களிற்கு நீதியான சம்பளம் வழங்கப்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

இலத்திரனியல் கழிவுகள் எங்கு உற்பத்தியாக்கப்படுகின்றன. அவை எங்கிருந்து அனுப்பப்படுகின்றன. என்பது தொடர்பில் தெளிவுபடுத்துகைகள் இல்லாத போதும் கூட ஆசிய பசுபிக் நாடுகளான சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும், கானா, நைஜீரியா, செனகல், போன்ற சில ஆபிரிக்க நாடுகளும் இலத்திரனியல் கழிவுகளை மீள் சுழற்சி செய்யும் முக்கியமான நாடுகளாக உள்ளன. மேலும் இலத்திரனியல் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு மேலைத்தேய நாடுகள் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. உதாரணமாக, அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பான்போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் மட்டுமன்றி அபிவிருத்தி அடைந்து வருகின்ற மலேசியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளும் இலத்திரனியல் கழிவுகளை அகற்றாமல் மீள் சுழற்சிக்காக இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்குப் புதிய வடிவத்தில் திருப்பி அனுப்புகின்றது.

மேலும் 2006 ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் நிகழ்ச்சித் திட்டம் மூலம் இலத்திரனியல் கழிவுகள் தொடர்பான மதிப்பீட்டை ஆரம்பித்துள்ளது. இம்மதிப்பீட்டின் பிரகாரம் ஆண்டு தோறும் 20 - 50 மில்லியன் கழிவுகள் உருவாக்கப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் இலத்திரனியல் கழிவுகளை குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் கணினி, கையடக்கத் தொலைபேசி முதலியவற்றுக்கான விலைகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. இலங்கையில் இலத்திரனியல் கழிவுகளால் ஏற்படும் சூழலியல் அபாயத்தைக் குறைக்கும் நோக்கில் பழைய கையடக்கத் தொலைபேசிகளை சேகரிக்கும் திட்டத்தினை சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வளங்கள் அமைச்சு நடவடிக்கையை எடுத்து செயற்பட்டு வருகிறது.

அத்துடன் இலத்திரனியல் கழிவுகளை அழிப்பதால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு மத்தியச் சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபை இலத்திரனியல் கழிவுகளைப் பொறுப்பேற்பதற்காகச் சில நிறுவனங்களைப் பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனவே இலத்திரனியல் கழிவுகள் ஏற்படுத்தும் பாதக நிலை என்பது இன்றைய தலைலமுறையினை மட்டும் பாதிக்கும் விடயமல்ல என்பதை உணர்தல் வேண்டும். எம் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே பகுத்தறிவான மனிதனின் ஆக்க பூர்வமான இலத்திரனியல் கழிவுகள் மனித குலத்தையே அழிக்கும் பேராபத்தான நிலையினை உருவாக்கியுள்ளது. எனவே இது சாதாரண விடயம் அல்ல என்பதை அனைவரும் உணர வேண்டும். இத்தகைய பாரிய பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிவகைகளினை ஆராய்ந்து அதற்கேற்பச் செயற்பட வேண்டியது நம் அனைவரது கடமையாகும்.

**ர. கர்சனா**

**மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு**

**சிறப்புக் கற்கை (மெய்யியல்)**

# *27.இந்து மதத்தில் பெண்ணிய சிந்தனை*

இந்து மதத்தில் பெண்ணிய சிந்தனை என்பது ஒரு பெண்ணியக் கண்ணோட்டத்தின் மூலம் இந்து மரபுகள், நூல்கள் மற்றும் நடைமுறைகளை ஆராயவும், விமர்சிக்கவும் மற்றும் மறுவிளக்கம் செய்யவும் முயல்கின்ற ஒரு பன்முக மற்றும் வளர்ச்சியடைந்த துறையாகும். இந்து மதம் ஒரு ஒற்றை மதம் அல்ல, மாறாக பல்லாயிரம் ஆண்டுகளாக உருவான பலதரப்பட்ட மரபுகள். இந்த பன்முகத்தன்மை அதன் பல்வேறு சிந்தனைகள், நடைமுறைகள் மற்றும் புனித நூல்களின் விளக்கங்களில் பிரதிபலிக்கிறது. நம்பிக்கைகளின் இந்த வளமான திரைச்சீலைக்குள், இந்து மதத்தில் பெண்ணிய சிந்தனையானது ஆய்வு மற்றும் சொற்பொழிவின் குறிப்பிடத்தக்க பகுதியாக வெளிப்பட்டுள்ளது. பாலின உணர்திறன் வில்லை மூலம் இந்து நூல்கள், நடைமுறைகள் மற்றும் மரபுகளை மறுபரிசீலனை செய்வது, ஆணாதிக்க விளக்கங்களை சவால் செய்யும் அதேவேளையில் சமத்துவக் கொள்கைகளை வெளிப்படுத்துவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.

- **வரலாற்று சூழல்**

இந்து மதத்தில் பெண்ணியக் கருத்துக்களை ஆராய்வது பண்டைய இந்து சமூகங்களில் பெண்களின் பாத்திரங்கள் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வை உள்ளடக்கியது. அத்துடன் இந்து புராணங்கள் மற்றும் வேதங்களில் உள்ள முக்கிய பெண் நபர்களின் மறுவிளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது. பண்டைய இந்து சமூகங்களில் பெண்கள் பெரும்பாலும் அதிக சுதந்திரத்தை அனுபவித்தனர் மற்றும் பிற்காலத்தை விட முக்கிய பதவிகளை வகித்தனர் என்று வரலாற்று சான்றுகள் தெரிவிக்கின்றன. வேத இலக்கியம் பெண்கள், முனிவர்கள் மற்றும் தத்துவவாதிகள் பற்றி குறிப்பிடுகிறது, அவர்கள் அறிவார்ந்த மற்றும் ஆன்மீக நோக்கங்களில் பங்கேற்பதைக் குறிக்கிறது.

இந்து மதத்தில் பெண்ணிய சிந்தனையின் அறிமுகம் என்பது ஒரு நவீன நிகழ்வு மட்டுமல்ல, பாரம்பரியத்திற்குள் எப்போதும் இருக்கும் கூறுகளின் மறு கண்டுபிடிப்பு மற்றும் மறுவிளக்கம். இந்த அணுகுமுறை ஆணாதிக்க விளக்கங்கள் மற்றும் சமூக மாற்றங்களால் காலப்போக்கில் கவனிக்கப்படாத அல்லது அடக்கப்பட்ட குரல்கள் மற்றும் கதைகளை வெளிக்கொணரவும் பெருக்கவும் முயல்கிறது. பண்டைய இந்து சமூகங்களில் பெண்களின் பங்கு பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டம் சிக்கலானது மற்றும் மாறுபட்டது. பெண்கள் சமயச் சடங்குகளில் பங்கேற்பது, பாடல்கள் இயற்றுவது, தத்துவ விவாதங்களில் ஈடுபடுவது போன்றவற்றை வேத இலக்கியங்கள் சான்றுகளாக வழங்குகின்றன. அர்த்தநாரீஸ்வரரின் கருத்து, தெய்வீகத்தை பாதி ஆணாகவும் பாதி பெண்ணாகவும் சித்தரிப்பது, ஆண்பால் மற்றும் பெண்பால் ஆற்றல்களின் நிரப்பு தன்மையை அங்கீகரிப்பதை பரிந்துரைக்கிறது. இருப்பினும் வெவ்வேறு காலகட்டங்கள், பிராந்தியங்கள் மற்றும் சமூக அடுக்குகளில் பெண்களின் நிலை வேறுபட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்து தொன்மங்கள் மற்றும் வேதங்களில் உள்ள முக்கிய பெண் நபர்களின் ஆய்வு இந்து மதத்தில் பெண்ணிய சிந்தனையின் மைய அம்சமாகும். இந்த எழுத்துக்கள் பெண்மை, சக்தி மற்றும் ஆன்மீகத்தைப் புரிந்துகொள்வதற்கான பல மாதிரிகளை வழங்குகின்றன:

1. ***சீதா***: பெரும்பாலும் மனைவி பக்தியின் உருவகமாக காணப்படுவதால், பெண்ணிய விளக்கங்கள் அவளது வலிமை, சுயாட்சி மற்றும் பூமிக்கு இறுதி திரும்புதல் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன. ஆணாதிக்க தீர்ப்பை நிராகரிக்கின்றன.

2. **திரௌபதி**: பெண்களின் உரிமைகள், நீதி மற்றும் பெண்களை சொத்தாகக் கருதுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றிய கேள்விகளை அவரது கதை எழுப்புகிறது. அவளுடைய கடுமையான உறுதியும் நீதிக்கான கோரிக்கையும் பெண்மையின் செயலற்ற தன்மைக்கு சவால் விடுகின்றன.

3. **கார்கி**: ஜனக மன்னரின் அரசவையில் அச்சமின்றி விவாதம் செய்த ஒரு தத்துவஞானியாக, கார்கி பெண்களின் அறிவுசார் திறன்களையும் ஆன்மீக மற்றும் தத்துவ சொற்பொழிவின் மிக உயர்ந்த நிலைகளில் பங்கேற்கும் உரிமையையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

4. **மற்ற உருவங்கள்**: துர்கா மற்றும் காளி போன்ற தெய்வங்கள் கடுமையான, சுதந்திரமான பெண் சக்தியை உள்ளடக்கியது. அதே நேரத்தில் சாவித்திரி போன்ற உருவங்கள் அறிவார்ந்த வலிமை மற்றும் பக்தியை வெளிப்படுத்துகின்றன. போன்ற எடுத்துக்காட்டுக்களை கூறலாம்

- ## முக்கிய கருத்துக்கள் மற்றும் தத்துவங்கள்

இந்து மதம் பெண்ணிய சிந்தனைக்கு குறிப்பாகப் பொருத்தமான பல அடிப்படைக் கருத்துகளையும் தத்துவங்களையும் உள்ளடக்கியது. தெய்வீக பெண்மை, இருமையற்ற தத்துவங்கள், தாந்த்ரீக மரபுகள் மற்றும் பக்தி இயக்கம் ஆகியவை இதில் அடங்கும். தெய்வீக பெண்மையின் கருத்து, சக்தி மற்றும் தெய்வ வழிபாட்டின் கொள்கையில் பொதிந்துள்ளது, பல இந்து மரபுகளுக்கு மையமானது. சக்தி, ஆதிகால அண்ட ஆற்றல், பெரும்பாலும் ஒரு தெய்வமாக உருவகப்படுத்தப்படுகிறது மற்றும் யதார்த்தத்தின் செயலில் உள்ள கொள்கையாக கருதப்படுகிறது. துர்கா, காளி மற்றும் லட்சுமி போன்ற முக்கிய தெய்வங்கள் இந்த தெய்வீக பெண் சக்தியின் வெளிப்பாடுகளாக வழிபடப்படுகின்றன. இது உருவாக்கம், பாதுகாத்தல் மற்றும் மாற்றத்தின் பல்வேறு அம்சங்களைக் குறிக்கிறது.

வேதாந்த தத்துவம் குறிப்பாக இருமை அல்லாத கருத்து (அத்வைதம்), பாலின வேறுபாடுகளை கடப்பதற்கு ஒரு மனோதத்துவ அடிப்படையை வழங்குகிறது. இந்த தத்துவத்தின்படி, இறுதி யதார்த்தம் (பிரம்மன்) பாலினம் உட்பட அனைத்து இருமைகளுக்கும் அப்பாற்பட்டது. இந்த முன்னோக்கை ஆன்மீக சமத்துவத்திற்கான அடித்தளமாக விளக்கலாம். இருப்பின் ஆழமான மட்டத்தில், ஆண்பால் மற்றும் பெண்ணுக்கு இடையே எந்த அடிப்படை வேறுபாடும் இல்லை என்று பரிந்துரைக்கிறது. இந்து மதத்தில் உள்ள தாந்த்ரீக மரபுகள் பெரும்பாலும் பெண் கொள்கையை மிக முக்கியமான நிலைக்கு உயர்த்துகின்றன. தந்திரம்

பிரபஞ்சத்தை சிவன் (உணர்வு) மற்றும் சக்தி (ஆற்றல்) ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு என்று கருதுகிறது. சக்தி பெரும்பாலும் ஆதிக்கப் பாத்திரத்தை வகிக்கிறது. இந்த மரபுகளில் உடல் மற்றும் பொருள் உலகத்தை மதிக்கும் நடைமுறைகள் அடங்கும். பெரும்பாலும் பெண்பால் தொடர்புடையது, ஆன்மீக உணர்தலுக்கான பாதைகளாகும்.

ஆன்மீக விடுதலைக்கான வழிமுறையாக பக்தி அன்பை வலியுறுத்திய பக்தி இயக்கம், இந்து மதத்தில் பெண்களின் ஆன்மீக வெளிப்பாட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இடைக்கால இந்தியாவில் உச்சத்தை எட்டிய இந்த இயக்கம், சாதி மற்றும் பாலின எல்லைகளைக் கடந்த வழிபாட்டு முறைகளுக்கு அனுமதித்தது. இந்த காலகட்டத்தில் பல பெண் துறவிகள் மற்றும் கவிஞர்கள் தோன்றினர். பக்தி இலக்கியத்தின் நீடித்த பாரம்பரியத்தை விட்டுவிட்டு பாரம்பரிய சமூக நெறிமுறைகளை சவால் செய்தனர்.

இந்து மதத்தில் உள்ள தெய்வீகப் பெண்மை ஆணாதிக்க மதக் கட்டமைப்புகளுக்கு ஒரு சக்திவாய்ந்த எதிர்முனையை வழங்குகிறது. இந்து மதத்தின் பல வடிவங்களில் நிலவும் தேவி வழிபாடு, பெண் சக்தி, ஞானம் மற்றும் மாதிரிகளை வழங்குகிறது. **உதாரணமாக:**

**1. துர்கா பெரும்பாலும் ஒரு போர் தெய்வமாக சித்தரிக்கப்படுகிறார். தீமையை எதிர்த்துப் போராடும் மற்றும் நீதியைப் பாதுகாக்கும் சக்தியைக் குறிக்கிறது.**

**2. காளி மற்றும் சக்தியையும், ஆணவத்தை அழிப்பதையும் உள்ளடக்கியது. பெண்மை பற்றிய வழக்கமான கருத்துகளுக்கு சவால் விடுகிறது.**

**3. அறிவு மற்றும் கலைகளின் தெய்வமான சரஸ்வதி, அறிவார்ந்த மற்றும் படைப்புத் திறனைக் குறிக்கிறது.**

இந்த தேவி உருவங்கள் வழிபாட்டுப் பொருட்களாக மட்டுமல்லாமல், பெண்மையின் பல்வேறு அம்சங்களைச் சரிபார்க்கும் மற்றும் கொண்டாடும் தொல்பொருளாகவும் செயல்படுகின்றன. வேதாந்த தத்துவத்தின் இருமையற்ற கருத்து (அத்வைதம்) இந்து மதத்தில் பெண்ணிய சிந்தனைக்கு குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டுள்ளது. பாலினத்திற்கு அப்பாற்பட்ட ஒரு இறுதி யதார்த்தத்தை முன்வைப்பதன் மூலம், பாலின அடிப்படையிலான பாகுபாட்டை சவால் செய்வதற்கான ஒரு தத்துவ அடிப்படையை வழங்குகிறது. இருப்பினும் இந்த மனோதத்துவ சமத்துவம் எப்போதும் சமூக சமத்துவமாக மொழிபெயர்க்கப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இது அன்றாட வாழ்வில் இந்தக் கொள்கைகளைப் பயன்படுத்துவது பற்றிய விவாதங்களுக்கு வழிவகுக்கிறது.

தாந்த்ரீக மரபுகள் இந்து சிந்தனையில் பெண்மையின் சில வெளிப்படையான உயர்வுகளை வழங்குகின்றன. இதில் பின்வரும் முக்கிய அம்சங்கள் அடங்கும்,

**1. சிவன்-சக்தியின் கருத்து, உணர்வு மற்றும் ஆற்றல், ஆண் மற்றும் பெண் ஆகியவற்றின் பிரிக்க முடியாத தன்மையைக் குறிக்கிறது.**

**2. உடல் மற்றும் பொருள் உலகத்தை மதிக்கும் நடைமுறைகள், பெரும்பாலும் பெண்ணுடன் தொடர்புடையவை, ஆன்மீக உணர்தலுக்கான பாதைகளாகும்.**

**3. பெண் குருக்களின் உயர்வு மற்றும் சடங்கு நடைமுறைகளில் பெண்களை இணைத்தல்.**

இருப்பினும், தந்திரத்தை நுணுக்கத்துடன் அணுகுவது மிகவும் முக்கியமானது. ஏனெனில் அதன் சில நடைமுறைகள் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன அல்லது சுரண்டலை நியாயப்படுத்த தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பெண்களின் ஆன்மீக வெளிப்பாட்டில் பக்தி இயக்கத்தின் தாக்கம் பல வழிகளில் புரட்சிகரமானது.

**1. இது சடங்கு மரபுவழி மீது தனிப்பட்ட பக்தியை வலியுறுத்தியது. சாதி அல்லது பாலினத்தைப் பொருட்படுத்தாமல் பரந்த பங்கேற்பை அனுமதிக்கிறது.**

**2. இந்த காலகட்டத்தில் மீராபாய், ஆண்டாள், அக்கா மகாதேவி போன்ற பல பெண் துறவிகள் உருவானார்கள்.**

**3. இந்த பெண்கள் பெரும்பாலும் சமூக நெறிமுறைகளை சவால் செய்தனர், பாரம்பரிய குடும்ப பாத்திரங்களை விட தெய்வீக பக்தியைத் தேர்ந்தெடுத்தனர்.**

**4. இந்த இயக்கம் ஓரங்கட்டப்பட்ட குரல்களுக்கு ஒரு தளத்தை வழங்கியது மற்றும் மேலும் உள்ளடக்கிய ஆன்மீக நிலப்பரப்புக்கு பங்களித்தது.**

பக்தி பாரம்பரியம் சமகால இந்து நடைமுறையில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்துகிறது மற்றும் பெண்களின் ஆன்மீக தலைமை மற்றும் வெளிப்பாட்டிற்கான வரலாற்று முன்னோடிகளை வழங்குகிறது. இந்த முக்கிய கருத்துக்கள் மற்றும் தத்துவங்கள் இந்து மதத்தின் பெண்ணிய விளக்கங்களுக்கு வளமான பொருட்களை வழங்குகின்றன. பாலின சமத்துவம் மற்றும் பாரம்பரியத்திற்குள் பெண்களின் அதிகாரம் ஆகியவற்றிற்கான வரலாற்று முன்னுதாரணங்கள் மற்றும் தத்துவ அடித்தளங்களை வழங்குகின்றன.

- **நவீன பெண்ணிய விளக்கங்கள் மற்றும் இயக்கங்கள்**

சமீபத்திய தசாப்தங்களில், பெண்ணியக் கண்ணோட்டத்தில் இந்து நூல்கள் மற்றும் மரபுகளை மறுவிளக்கம் செய்யும் இயக்கம் வளர்ந்து வருகிறது. இந்த அணுகுமுறை பழங்கால வேதங்களில் உள்ள சமத்துவக் கொள்கைகளை வெளிக்கொணரவும், ஆணாதிக்க விளக்கங்களுக்கு சவால் விடவும், இந்து நடைமுறையிலும் சமூகத்திலும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முக்கிய இந்து பெண்ணிய சிந்தனையாளர்கள் பாரம்பரிய நூல்கள் மற்றும் நடைமுறைகளில் புதிய நுண்ணறிவுகளை வழங்குவதன் மூலம் இந்தத் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர். இந்த அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் இந்து ஆன்மிகத்திற்கும் நவீன பெண்ணிய சிந்தனைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க உழைத்துள்ளனர், பெரும்பாலும் மேற்கத்திய பெண்ணியக் கோட்பாடு மற்றும் பூர்வீக இந்திய பெண்ணிய மரபுகள் இரண்டையும் வரைந்துள்ளனர். சாதி, வர்க்கம் மற்றும் பிற சமூகக் காரணிகளின் அடிப்படையில் பாலின ஒடுக்குமுறை மற்ற வகையான பாகுபாடுகளுடன் குறுக்கிடுகிறது என்பதை உணர்ந்து இந்து பெண்ணிய உரையாடலில் குறுக்குவெட்டு கருத்து

பெருகிய முறையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த நுணுக்கமான அணுகுமுறை இந்துப் பெண்களின் மாறுபட்ட அனுபவங்களை ஒப்புக்கொள்கிறது மற்றும் ஓரங்கட்டப்பட்ட பல அடுக்குகளை நிவர்த்தி செய்ய முயல்கிறது.

சமகால இந்து பெண்கள் இயக்கங்களும் அமைப்புகளும் சமய உரிமைகள் முதல் சமூக நீதி வரை பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் உருவாகியுள்ளன. இந்த குழுக்கள் பெண்கள் கல்வி, பொருளாதார வலுவூட்டல் மற்றும் மத நிறுவனங்களுக்குள் சவாலான பாரபட்சமான நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளில் செயல்படுகின்றன.

- **சவால்கள் மற்றும் எதிர்கால திசைகள்**

இந்து மதத்தின் பெண்ணிய விளக்கங்களில் முன்னேற்றம் இருந்தபோதிலும், குறிப்பிடத்தக்க சவால்கள் உள்ளன. ஆணாதிக்க விளக்கங்களும் நடைமுறைகளும் இந்து சமூகம் மற்றும் மத வாழ்க்கையின் பல அம்சங்களை தொடர்ந்து பாதிக்கின்றன. இந்த பாரம்பரிய கருத்துக்கள் பெரும்பாலும் பெண்ணிய மறுவிளக்கங்களுடன் முரண்படுகின்றன. இது இந்து சமூகங்களுக்குள் தொடர்ந்து விவாதங்களுக்கு வழிவகுக்கும்.

இந்து மதத்தில் உள்ள ஆணாதிக்க விளக்கங்கள் மற்றும் நடைமுறைகள் பாரம்பரியத்திற்குள் பெண்ணிய சிந்தனைக்கு குறிப்பிடத்தக்க சவால்களை முன்வைக்கின்றன. சில முக்கிய சிக்கல்கள் பின்வருமாறு:

**1. நூல்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட விளக்கம்: புனித நூல்களின் ஆணாதிக்க வாசிப்புகள் பெரும்பாலும் ஆண் ஆதிக்கத்தை ஆதரிக்கும் பத்திகளை வலியுறுத்துகின்றன. அதே நேரத்தில் பாலின சமத்துவத்தை பரிந்துரைக்கும் விடயங்களைக் குறைத்து மதிப்பிடுகின்றன அல்லது புறக்கணிக்கின்றன.**

**2. சடங்கு விலக்கு: பல இந்து கோவில்கள் மற்றும் சடங்குகள் பெண்களை, குறிப்பாக மாதவிடாய் காலத்தில், தூய்மை மற்றும் மாசுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ந்து விலக்கி வைக்கின்றன.**

**3. பாலின பாத்திரங்கள்: பாரம்பரிய விளக்கங்கள் பெரும்பாலும் பெண்களை குடும்பம் மற்றும் தாய்மையை மையமாகக் கொண்ட பாத்திரங்களுக்குள் கட்டுப்படுத்துகின்றன, மத மற்றும் சமூக வாழ்க்கையின் பிற துறைகளில் அவர்களின் பங்கேற்பைக் கட்டுப்படுத்துகின்றன.**

**4. தேவி வழிபாடு முரண்பாடு: இந்து மதத்தில் பெண் தெய்வ வழிபாடு நடைமுறையில் உள்ளது. இது சமூகத்தில் மரணமடையும் பெண்களுக்கான மரியாதையை எப்போதும் மொழிபெயர்க்காது.**

**5. மாற்றத்திற்கான எதிர்ப்பு: இந்து சமூகங்களில் உள்ள பழமைவாத கூறுகள் பெரும்பாலும் பெண்ணிய மறுவிளக்கங்களை எதிர்க்கின்றன, அவற்றை பாரம்பரிய மதிப்புகள் மற்றும் நடைமுறைகளுக்கு அச்சுறுத்தலாகக் கருதுகின்றன.**

இந்தச் சவால்களும் எதிர்காலத் திசைகளும் இந்து பெண்ணியச் சிந்தனையின் இயக்கத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. அது தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், இந்து

மதத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலும், பாலின சமத்துவம் மற்றும் சமூக நீதி தொடர்பான பிரச்சினைகளில் அதன் ஈடுபாட்டிலும் இது முக்கிய பங்கு வகிக்கும்.

**முடிவுரை**

இந்து சமயத்தில் பெண்ணிய சிந்தனை மிகவும் ஆழமானது. வேதகாலம் முதல் தற்காலம் வரை பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. வேத காலத்தில் பெண்கள் அனைத்து உரிமைகளையும் பெற்றிருந்தனர். காலப்போக்கில் சமூக மாற்றங்களால் அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. ஆயினும், பக்தி இயக்க காலத்தில் பெண் சான்றோர்கள் பலர் தோன்றி சமூக மாற்றத்திற்கு வித்திட்டனர். தற்காலத்தில் பெண்கள் தங்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கோயில் நுழைவு உரிமை, பெண் அர்ச்சகர்கள் நியமனம் போன்ற விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பாரம்பரிய மதிப்புகளை காலத்திற்கேற்ப புதுப்பித்து, பெண்களுக்கு சம உரிமை வழங்குவதே இந்து சமயத்தின் அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும். பெண்களின் ஆன்மீக சுதந்திரம், சமூக சமத்துவம், மனித மாண்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் மூலமே இந்து சமயம் மேலுமவளம் பெறும்.

**கு. கேதுசாளினி**

**மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2020/2021)**

# *28.சூழல் ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்.*

சூழல் ஒழுக்கவியல் என்பது **மனிதர்கள் மற்றும் சூழல் இடையேயான நெறிமுறைகளை விளக்கும் தத்துவக் கொள்கையாகும்**. இயற்கை வளங்கள், வனங்கள், நீர் ஆதாரங்கள் மற்றும் உயிரினங்களை பாதுகாப்பதற்கான மனித கடமைகளை விளக்குவது இதன் அடிப்படை நோக்கமாக காணப்படுகின்றது. சூழலியல் நெருக்கடிகள் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் வரலாற்று காலப்போக்கில் மாற்றங்களை கருத்திற் கொண்டு ஒழுக்கவியல் அடிப்படையில் ஒழுங்கு நிலைநாட்டுவதற்கான வழிகளை இது முன்வைக்கின்றது. மேலும் சூழல் ஒழுக்கவியல் மனிதன் இயற்கையுடன் இணங்கி வாழ வேண்டுமென்றும் இயற்கை வளங்களை பாசாங்கில்லாமல் பயன்படுத்தி பாதுகாப்பது மனிதனின் கடமை எனவும் நினைவூட்டுகின்றது.

உலகில் குறைவான சனத்தொகை இருந்த காலத்தில் சூழலுடன் இணைந்து வாழக்கூடியதாக இருந்தது. எனினும் சனத்தொகை துரிதமாக பெருகியதால் அவர்களது தேவைகளும் பெருகி அவற்றை நிறைவேற்றிக் கொள்ள பெருமளவு கேள்வி ஏற்பட்டது. இதனால் சூழல் எமக்கு இயற்கையாக வழங்கியதை விட மேலதிகமாக சூழலில் இருந்து பெற முயன்றதால் சூழல் சமனிலை சீர்குலைந்தது. சூழல் வளங்களை அதிகளவு பயன்படுத்துவதால் தற்போது மிக சிக்கலான சூழல் பிரச்சினைகள் பல எழுந்துள்ளன. **பவளப்பாறைகள் அழிதல், வளிமண்டலம் வெப்பமடைதல், பனிமலைகள் உருகுதல், ஓசோன் படை தேய்வுறல், சூழல் தொகுதி அழிவுக்குள்ளாகுதல், விலங்குகளின் வாழிடம் அழிவுக்குட்படல்** போன்ற சூழல் பிரச்சினைகள் பெருமளவு ஏற்படுகின்றது.

சூழல் ஒழுக்கவியல் பல துறைகளை உள்ளடக்கியதில் முதன்மையானது. உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் இயற்கை வளங்களை பயன்படுத்த வேண்டும் என்பதை குறிக்கின்றது. பசுமை வளர்ச்சி கொள்கைகள், சுத்தமான தொழில்நுட்பங்கள், மீண்டும் பயன்படுத்தகூடிய **வளங்கள், ஆரம்ப நிலை மரியாதை கொள்கை, ஆசரணத்தீமைகள்** போன்றவை சூழல் ஒழுக்கவியலின் அடிப்படையான கோட்பாடுகள் ஆகும். பசுமை தொழிட்நுட்பங்கள் எனப்படும் முறைகள் சுற்றுச்சூழலை மாசுப்படுத்தாமல் மனித நலனுக்கான வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

சூழல் ஒழுக்கவியல் அறிவிப்பு எல்லாவற்றிற்கும் மேலாக மனித குலத்தின் நலனை பாதுகாக்கின்றது. மனிதன் இயற்கையுடனான உறவை புரிந்து கொண்டு அதை சீராகப் பாதுகாக்க வேண்டியது கடமை. இதனால் வரும் தலைமுறைகளுக்கான சூழலை நல்ல முறையில் பராமரிக்க முடியும். சூழல் சட்டங்கள் மற்றும் விதி முறைகள் சுற்று சூழலை பாதுகாக்கவும் இயற்கை வளங்களை சரியாக பராமரிக்கவும் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு நாடுகளிலும் சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல்வேறு சட்டங்களும் விதிமுறைகளும் அமுலில் உள்ளன. இவை மக்கள் நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் சார்ந்த சுற்றுச் சூழல் பொறுப்புகளை விரிவாக குறிப்பிடுகின்றன. **சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் (1986),** இது மொத்த சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான பராமரிப்பை வழங்கும் சட்டமாகும். **காற்றுச்சட்டம் (1981)** காற்றின் மாசுபாட்டை குறைத்து மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாகும். **நீர் சட்டம் (1974),** நீர் மூலங்களை மாசுபாடு இன்றி பாதுகாக்கும் சட்டமாகும். **இயற்கை அனர்த்த மேலாண்மை சட்டம் (2005),** இயற்கை பேரிடர்களின் தாக்கத்தை குறைப்பதற்கான மேலாண்மையை மேம்படுத்தும் சட்டமாகும்.

மாசு வெளியீட்டு அளவு கட்டுப்பாடு மீள்சுழற்சி மற்றும் கழிவுப் பொருள் மேலாண்மை இயற்கை வளங்ளை உபயோகிக்கும் அளவில் கட்டுப்பாடு போன்ற விதிமுறைகளும் வனப்பகுதி மற்றும் உயிரினங்கள் அகியவற்றின் அதிகப்படியான பயன்பாட்டை தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் சுற்றுச் சூழல் சமநிலையை பராமரிக்க அரசாங்கம் தொழில் முறை நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்த முயற்சியில் ஈடுபடுவதற்கான வழியைக் கொடுக்கின்றன.

சூழல் ஒழுக்கவியலில் வளமாக்குதல் மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியில் சீரமைப்பு முக்கியமான ஒன்றாகும். வளமாக்குதல் என்பது இயற்கை வளங்களை சிக்கனமாகவும் பொறுப்புடனும் பயன்படுத்தி எதிர்காலத்தில் காக்கும் முறையை குறிக்கின்றது. இவ் வளமாக்குதலில் பாரம்பரிய அறிவு மறுசுழற்சி மற்றும் மீள் பயன்பாடு பசுமை தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துதல் சிறந்ததொன்றாகும். வளர்ச்சி என்பது பொருளாதார முன்னேற்றம் சமூக நலன் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் சமநிலையை பெறுதல் மூலம் மனிதர்கள் மற்றும் இயற்கைக்கு இடையிலான ஒரு நெருக்கமான ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

கல்வியின் நோக்கம் மனித சிந்தனை நடத்தை போன்றவற்றை மாற்றியமைப்பதாகும். எனவே சுற்றுச் சூழல் நெருக்கடியை தீர்க்க சுற்றுச் சூழல் கல்வியின் நியமங்களை அறிந்தால்தான் சுற்றுச்சூழல் நெருக்கடியை தீர்ப்பதற்கு முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. **1972ம்** ஆண்டு ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்கோம் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் நடைபெற்ற மனித சுற்றுச் சூழல் குறித்த புதிய கவனங்களையும் அக்கறைகளையும் உலகில் ஏற்படுத்தியது. இதில் மனித சுற்றுச் சூழல் குறித்து ஐக்கிய நாடுகள் சர்வதேச சுற்றுச் சூழல் நிகழ்ச்சி திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு வளர்முக நாடுகள் முன்வர வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. பின்னர் **1974ம்** ஆண்டு ஐக்கிய நாடுகள் உத்தியோக பூர்வமாக சர்வதேச சுற்றுச் சூழல் கல்வி திட்டத்தை ஊக்குவித்து உலக நாடுகள் இவற்றை பின்பற்ற வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது.

**1977ம்** ஆண்டு **ஒக்டோபர்** மாதம் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ட்பைலீஸீ சுற்றுச் சூழல் கல்வி குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மாநாடு நடைபெற்றது. அதில் சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் அதன் தேவைகளை மேம்படுத்தவும் அந்தச் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்ற குறிக்கோள் அம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. மனப்பாங்கு அர்ப்பணிப்பு மற்றும் திறன்கள் கொண்டவையாக ஒரு தீர்மானம் வேண்டும். அந்தச் சுற்றுச் சூழல் கல்வித்திட்டங்கள் வளர்ச்சியில் ஒழுக்க பெறுமானங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். கல்வியின் நோக்கத்திற்காக விழிப்புணர்வு மற்றும் மதிப்புகள் அதனூடாக வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டும்.

கடந்த சில தசாப்தங்களில் இந்த துறையில் விழிப்புணர்வு அதிகரித்து பல்வேறு நாடுகளில் சட்ட நடவடிக்கைகள் அமைப்புகளின் செயற்பாடுகள் மற்றும் பொதுமக்கள் செயற்பாடுகள் மூலம் முன்னேற்றங்கள் கண்டுள்ளனர். மாறுதலுக்கான முக்கிய முயற்சிகளில் காற்று மாசுபாடு பிளாஸ்டிக் நச்சுத்தன்மை குறைப்பு பசுமை தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிரான கொள்கைகள் அடங்கும். கரிம வேளாண்மை இயற்கை வளங்களின் மீள் சுழற்சி மற்றும் மீள்பயன்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் விதமான திட்டங்கள் உலகம் முழுவதும் நடைமுறையில் கொண்டு வரப்பட்டுள்ளன. இன்னும் கூடுதல் முன்னேற்றத்தை அடைய வேண்டிய கட்டாயம் இருப்பதை

உணர்வது அவசியமாகும். ஏனெனில் காலநிலை மாற்றத்தின் தீவிர பாதிப்புகள் விலங்கினங்களின் அழிவு மற்றும் சூழலியல் அபாயங்கள் தொடர்ந்தும் எழுந்து கொண்டிருக்கின்றன.

புதிய கருவுகள் விஞ்ஞான ஆய்வுகள் மற்றும் அரசு சமூகத்தின் ஒற்றுமையான முயற்சிகள் தான் நிலைத்த முன்னேற்றத்தை உறுதி செய்யும் வழியாகும். எனவே சூழல் ஒழுக்கவியல் குறித்த விழிப்புணர்வை தூண்டி ஒவ்வொரு துறையிலும் சுற்று சூழலுக்கான பொறுப்பு நீடித்த அடிப்படையில் செயல்படும் போது மட்டுமே எதிர்கால தலைமுறைகளுக்கான நிலைத்த வளர்ச்சி உறுதியாகும்.

**அ. சரோதினி**

**மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2020/2021)**

## 29. மரண தண்டனையின் ஒரு ஒழுக்கவியல் நோக்கு

மரண தண்டனை என்பது ஒரு சட்டப்பூர்வ நடைமுறையாகும், அங்கு ஒரு கடுமையான குற்றத்திற்காக ஒரு நபரை அரசு தூக்கிலிடுகிறது. பொதுவாக கொலை அல்லது செயல்கள் குறிப்பாக கொடூரமாக கருதப்படுகின்றன. இரு தரப்பிலும் வலுவான வாதங்களுடன், குற்றவியல் நீதித்துறையில் இது மிகவும் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றாகும். உலக அளவில் மரண தண்டனையின் பயன்பாடு மாறுபடுகிறது. பல நாடுகள் குறிப்பாக ஐரோப்பா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் மரணத் தண்டனையினை முற்றிலும் ஒழித்துவிட்டன. சீனா மற்றும் மத்திய கிழக்கின் சில பகுதிகள் போன்ற பிற நாடுகள் கடுமையான நிபந்தனைகளின் கீழ் இருந்தாலும், அதைத் தொடர்ந்து செயல்படுத்துகின்றன. சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமை வழக்கறிஞர்கள் உலகளவில் மரண தண்டனையை முடிவுக்கு கொண்டு வர வேலை செய்வதோடு ஒழிப்பதை நோக்கி ஒரு உலகளாவிய போக்கு உள்ளது.

**"மரண தண்டனை என்பது நமது பொதுவான அனுபவத்தில் 21ஆம் நூற்றாண்டில் அகற்றப்பட வேண்டிய கடந்த காலத்தின் ஒரு அடாவடியான நினைவுச்சின்னம்"** என்று மனித உரிமைகளுக்கான ஐ.நா.வின் உயர் ஆணையர் வோல்கர் டர்க் ஏப்ரல், 2023 இல், மனித உரிமைகளின் 52வது அமர்வின் போது கூறினார். ஆதி காலத்திலிருந்தே மரண தண்டனை உள்ளது. அதன் வரலாறு அரசியல் மற்றும் பாகுபாடுகளில் ஊடுருவியது. வரலாறு முழுவதும் மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்களின் பார்வையில் மருத்துவமயமாக்கல் மற்றும் மருத்துவர்களின் ஈடுபாடு ஆகியவை மரணதண்டனையை சுவையானதாக ஆக்குகிறது. எந்தவொரு இயற்கையான வெறுப்பு உணர்வையும் அழிக்கிறது. ஆயினும் கூட மரணதண்டனை ஒரு தடுப்பு மற்றும் தார்மீக ரீதியாக தவறானது. அதன் மையத்தில் மரணதண்டனை என்பது ஒரு காட்டுமிராண்டித்தனமான நடைமுறையாகும்.

மே 15 அன்று மரண தண்டனைகள் மற்றும் மரணதண்டனைகள் பற்றிய அவர்களின் உலகளாவிய அறிக்கையை வெளியிட்டது, புள்ளிவிவரங்கள் 5 ஆண்டுகளில் அதிகபட்சமாக இருப்பதாக எச்சரித்தது. அதிகாரப்பூர்வமாக ஆவணப்படுத்தப்பட்ட மரணதண்டனைகள் 2021 இல் 579 இல் இருந்து 2022 இல் 883 ஆக 53மூ அதிகரித்தன. 2022 இல் உலகின் மிகச் சிறந்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள்: சீனா (ஆயிரம்), ஈரான் (576), சவுதி அரேபியா (196), எகிப்து (56) மற்றும் அமெரிக்கா (18) 93% உலக மரணதண்டனைகள், சீனாவைத் தவிர, மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவில் நிறைவேற்றப்பட்டன. 1966 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையான சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 6வது பிரிவு, "மிகக் கடுமையான குற்றங்களுக்கு மட்டுமே" மரண தண்டனையைப் பயன்படுத்துவதைத் தடை செய்கிறது. எவ்வாறாயினும், மரணதண்டனைகள் சர்வாதிகார ஆட்சிகள் நிலவும் பகுதிகளுடன் அடிக்கடி தொடர்புபடுத்துகின்றன, பெரும்பாலும் அரசியல் எதிர்ப்பை மௌனமாக்குகின்றன மற்றும் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் LGBTQ அடையாளங்கள் போன்ற பிரச்சினைகளில் பார்வைகளை செயல்படுத்துகின்றன.

2022 ஆம் ஆண்டில், ஈரானில் 255 மற்றும் சவுதி அரேபியாவில் 57 உட்பட போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக 325 மரணதண்டனைகளை அம்னெஸ்டி பதிவு செய்தது. உலகளவில், 11 நாடுகள் டுபுடீவுஞூ சமூகத்தில் உள்ளவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என அச்சுறுத்துகின்றன. உகாண்டாவில் "மோசமான ஓரினச்சேர்க்கை" என்று கூறப்படும் மரண தண்டனையை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது, பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளால் நெருக்கமாகப் பின்பற்றப்படுகிறது. மரணதண்டனை குறுக்கு வழியில் பாகுபாடு காட்டுகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஈரானிய சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த குறைந்தது 45 பேர் சமீப வாரங்களில் தூக்கிலிடப்பட்டுள்ளதாக ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. உலகளவில், குறைந்த சமூகப் பொருளாதாரப் பின்னணியில் இருப்பவர்கள் விகிதாசாரத்தில் மரணத்திற்கு இட்டுச் செல்லப்படுகிறார்கள். மரண தண்டனை என்பது கட்டமைப்பு, அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாகுபாடு, இனவெறி மற்றும் ஓரினச்சேர்க்கையின் மிகக் கொடூரமான வடிவமாகும்.

ஹிப்போக்ரடிக் சத்தியம் பெரும்பாலும் மருத்துவர்கள் மரணதண்டனைகளில் பங்கேற்பதைத் தடைசெய்வதாக விளக்கப்படுகிறது. பல நாடுகளில் மரணதண்டனைகளில் மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர். மரணதண்டனைக்கான மனத் திறனை அவர்கள் மருத்துவ ரீதியாக மதிப்பிடுகிறார்கள் மரணதண்டனைக்கு முன், போது மற்றும் பின் முக்கிய அறிகுறிகளை உடல் ரீதியாக பரிசோதித்து கண்காணிக்கவும் மற்றும் மரணத்தை சான்றளிக்கவும். தீவிர நிகழ்வுகளில், மரணதண்டனை நிறைவேற்றுபவரின் பாத்திரத்தை மருத்துவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள் மற்றும் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளிடமிருந்து சட்டவிரோத உறுப்புகளை வாங்குவதில் ஈடுபடுகின்றனர்.

பல தொழில்முறை அமைப்புகள் விவாதம் மற்றும் மருத்துவர் பங்கேற்பைக் கண்டித்தன. உலக மருத்துவ சங்கம் உறுதிப்படுத்துகிறது: "**மருத்துவர்கள் மரண தண்டனையில், எந்த வகையிலும், அல்லது மரணதண்டனை செயல்முறையின் எந்தவொரு கட்டத்திலும் பங்கேற்பது, அதன் திட்டமிடல் மற்றும் அறிவுறுத்தல் மற்றும மரணதண்டனைகளை நிறைவேற்றுவதற்கான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது உட்பட**". அமெரிக்க மருத்துவ சங்கத்தின் மருத்துவ நெறிமுறைகள் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மரணதண்டனைகளில் பங்கேற்கக் கூடாது என்று கூறி, மருத்துவரின் நெறிமுறைப் பொறுப்பை நேரடியாகப் பேசுகிறது, இன்னும் பல அமெரிக்க மருத்துவர்கள் மரண தண்டனை நிறைவேற்றுவதில் உதவுகிறார்கள். மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் உட்பட பல மனித உரிமை அமைப்புகள், மரணதண்டனைகளில் சுகாதாரப் பாதுகாப்பு வல்லுநர்கள் பங்கேற்பதைக் கடுமையாக எதிர்க்கின்றன.

பிறகு ஏன் மருத்துவர்கள் தொடர்ந்து உடந்தையாக இருக்கிறார்கள்? ஒரு நபரின் இறுதித் தருணங்கள் முடிந்தவரை பாதுகாப்பாகவும் வலியற்றதாகவும் இருப்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கிறார்கள் என்று சிலர் வாதிடுகின்றனர். துன்பங்களைக் குறைப்பதற்கான தார்மீகக் கடமையாகும். மற்றவர்கள் அடக்குமுறை மாநிலங்களில், மருத்துவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் மற்றும் நிர்பந்தத்தின் கீழ் செயல்படுகிறார்கள் என்று வலியுறுத்துகின்றனர். இன்னும் மரண தண்டனை விதிக்கும் பல நாடுகளில் **(சீனா, ஈரான்**

**மற்றும் சவுதி அரேபியா),** மருத்துவ சங்கங்கள் மருத்துவர் ஈடுபாட்டின் நெறிமுறைகள் குறித்து மௌனமாக இருக்கின்றன. மரண தண்டனை குறித்த ஹர்மு இன் நிலைப்பாடு தெளிவாக இல்லை. நாங்கள் பத்திரிகைக்குச் செல்வதற்கு முன் அதன் பத்திரிகைக் குழுவால் தி லான்செட்டை எந்த பொது அறிக்கைகளுக்கும் வழிநடத்தவோ அல்லது அமைப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவோ முடியவில்லை. இந்த நிச்சயமற்ற தன்மை ஒரு ஆபத்தான வெற்றிடத்தை உருவாக்குகிறது, அங்கு உலகளாவிய சுகாதார தலைமை அவசரமாக தேவைப்படுகிறது.

மரண தண்டனை மனிதாபிமானமற்றது மற்றும் வாழ்வதற்கான அடிப்படை உரிமையை மீறுகிறது. மருத்துவரின் ஈடுபாடு மனித உரிமைகளை தொடர்ந்து துஂபிரயோகம் செய்வதை செயல்படுத்துகிறது மற்றும் மருத்துவ நெறிமுறைகளின் நான்கு தூண்களான நன்மை, தீங்கற்ற தன்மை, சுயாட்சி மற்றும் நீதி ஆகியவற்றைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சங்கங்கள் மூலம் மரண தண்டனைக்கு உலகளாவிய கண்டனம், ஒழிப்பு பாதையில் இன்றியமையாத படியாகும். மனித உரிமைகள் மற்றும் பராமரிப்புக் கண்ணோட்டத்தின் நெறிமுறைகள் இரண்டிலும், மரணதண்டனை மிகவும் சிக்கலானது. மனித உரிமைகள், ஒழுக்கம் மற்றும் மீள முடியாத தவறுகளின் அபாயம் பற்றிய கவலைகளுக்கு எதிராக நீதி மற்றும் பொதுப் பாதுகாப்பின் வாதங்களை சமநிலைப்படுத்தும் ஒரு துருவமுனைக்கும் பிரச்சினையாகவே உள்ளது. சமூகங்கள் உருவாகும்போது, மரண தண்டனை என்பது நீதி மற்றும் மனித உரிமைகள் பற்றிய நவீன கோட்பாடுகளுடன் ஒத்துப்போகிறதா என்று பலர் மறுபரிசீலனை செய்கிறார்கள், இது வாழ்க்கையின் புனிதத்தை புறக்கணிக்கிறது, மீளமுடியாத தவறுகள் மற்றும் இரக்கம் மற்றும் மறுவாழ்வு மதிப்புகளுடன் முரண்படுகிறது. இந்த நெறிமுறை மற்றும் மனித உரிமை வாதங்கள், நீதிக்கான மனிதாபிமான அணுகுமுறைகளுக்கு ஆதரவாக மரண தண்டனையை ஒழிக்க அழைப்பு விடுக்கும் உலகளாவிய இயக்கங்களை தூண்டிவிட்டன. இது தொடர்ந்து சட்ட மற்றும் தார்மீக விவாதங்களுக்கு வழிவகுக்கிறது.

**Thahira Rahman**

**இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு**

**மெய்யியல் சிறப்பு (2021/2022)**

# 30.இலத்திரனியல் கழிவுகளும் எதிர்காலமும்

பூகோள மயமாகி வரும் இவ்நவீன உலகில் மின்னணு உபகரணங்களின் பாவனை என்பது இன்றியமையாதது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. தற்கால நவீன தொழில்நுட்பத்தின் அபரிவிதமான வளர்ச்சி இலத்திரனியல் உபகரணங்கள் மீதான மக்களின் நாட்டம் அதிகரித்தமை, வணிக நிறுவனங்களின் புதிய முயற்சிகள் கண்டுபிடிப்புகள் என்பன இதற்கு அடிப்படை ஆகும். நாம் எமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் தொலைபேசி, குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி, வாயு சீராக்கி போன்றவற்றை இலத்திரனியல் உபகரணங்களுக்கு சில எடுத்துக்காட்டாக முன்வைக்கலாம்.

எமது தேவைகளை இலகுவாக பயன்படுத்தும் இத்தகைய உபகரணங்கள் எமது எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? ஆம் நாம் பயன்படுத்தும் மின்னணு சாதனங்களே நாம் அறிந்தும் அறியாமலும் எமது சூழலை மாசுபடுத்தி அதனூடாக எமது எதிர்காலத்தை பாதிக்கின்றது. அதாவது நாம் பயன்படுத்தும் மின்னணு சாதனங்கள் அவற்றினுடைய பாவனைக்காலம் முடிந்தவுடன் இலத்திரனியல் கழிவுகளாக மாறி சூழலை மாசுபடுத்துகின்றன.

ஆரம்பக் காலத்தில் இலத்திரனியல் கழிவுகள் மீதான கவனம் குறைவாக காணப்பட்ட போதிலும் தற்காலத்தில் அது தொடர்பான ஆய்வு மிக முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது எனலாம். காரணம் 2020ஆம் ஆண்டு 55.5% ஆக காணப்பட்ட இலத்திரனியல் கழிவுகள் 2023 74.7% ஆக அதிகரித்துள்ளமையே ஆகும். அவற்றுள் 2022ஆம் ஆண்டு 22.3% இலத்திரனியல் கழிவுகள் மாத்திரமே முறையாக மீள்சுழற்சிக்கு உட்பட்டமை கவனத்தில் கொள்ள வேண்டிய ஓர் விடயமாகும். எமது முன்னோர்களின் இயற்கையுடனான உறவே நாம் ஆரோக்கியமான சுற்றுச்சூழலில் வாழ வழிவகுத்தது. ஆனால் இத்தகைய ஒரு நிலை எமது எதிர்கால சந்ததிக்கு கிடைக்குமா என எண்ணினால் அது வினாக்குறியே? அதற்கு காரணமும் நாமே என்றால் மிகை ஆகாது.

நாம் பயன்படுத்திய பழுதடைந்து போன மின்னணு சாதனங்கள் எங்கே? என ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் இதன் நிதர்சனம் புரியும். இவ்வாறு நாம் பயன்படுத்திய மின்னணு சாதனங்கள் அனைத்தும் சுற்றுச்சூழலிலே அவற்றில் காணப்படும் கடுமையான இரசாயனங்கள் நீரிலோ அல்லது நிலத்திலோ கசிந்து சூழலை மாசுபடுத்துகின்றன. இச் செயற்பாட்டினால் சூழல் மட்டுமா மாசடைகின்றது என்றால் அது நிச்சயமாக இல்லை. அத்தகைய நச்சுத்தன்மையான நிலத்திலிருந்து உற்பத்தியாகும் உணவு பொருட்களை உட்கொள்வதனாலும் நச்சுத்தன்மையான நீரைப் பருகுவதனாலும் நாமும் சிறிது சிறிதாக இறந்து வருகின்றோம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. இவ்வாறு எமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் இலத்திரனியல் கழிவுகளை மீள்சுழற்சி மூலம் இல்லாத ஒழிக்க முடியுமா? என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் எழத்தான் செய்கிறது.

எனினும் தற்போதய காலத்தில் இலத்திரனியல் கழிவுகளின் அளவு அதிகரித்துள்ளமையால் அவற்றை முழுமையாக மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியாமையும் சில நாடுகளில் இத்தகைய

இலத்திரனியில் கழிவுகளை பாதுகாப்பாற்ற முறையில் மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதனாலும் மீள்சுழற்சி செயன்முறையின்போது விடுவிக்கப்படுகின்ற பக்க விளைவுகளினால் ஏற்படும் சுகாதாரத் தீமை, போதிய பாதுகாப்பு இன்மை, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இன்மை போன்ற காரணங்களினால் இது சாத்தியமாகின்றது எனினும், இலத்திரனியில் கழிவுகளால் ஏற்படும் தாக்கத்தை உலக நாடுகள் அறிந்து அதற்கான தீர்வை காண்பது முக்கியமாக உள்ளது. இலத்திரனியல் கழிவுகளால் ஏற்படும் தாக்கத்தை உலக நாடுகள் அறிந்து அதற்கான தீர்வை காண்பது முக்கியமாக உள்ளது. தற்போது விஞ்ஞானிகள் இலத்திரனியல் கழிவுகளை முற்றாக அளிப்பதற்கு அவற்றை நானோ துகள்களாக மாற்ற முயற்சித்து வருகின்றனர். அதேபோன்று இலங்கையில் 2008ஆம் ஆண்டு முதலாம் இலக்க சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) கட்டளை வழிகாட்டலின் 15வது வழிகாட்டியின் பிரகாரம் இலத்திரனியல் கழிவுகள் முகாமை செய்யப்பட்டன.

எனினும் அவற்றுள் அகற்றப்பட்ட செல்லிடத் தொலைபேசிகள், மின்சார விளக்குகள் மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட கணினிகள் மற்றும் உபகரணங்கள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டமை ஓர் பாதமான செயற்பாடாகும். சூழல் நேய பொருட்களைக் கொண்டு மின்னனு சாதனங்களை உருவாக்கும் புதிய முயற்சிகளை மேற்கொள்வதனாலும், முறையான மீள்சுழற்சி நடவடிக்கைகள் ஊடாகவும், நீண்ட நாள் பாவனை கொண்ட மின்னனு உபகரண உற்பத்தியின் ஊடாகவும் நாம் இலத்திரனியல் கழிவுகளை குறைத்து சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யலாம். இது சடுதியான மாற்றம் ஒன்றாக இல்லாவிடினும் எம் ஒவ்வொருவரினதும் முயற்சியால் எதிர்காலத்தில் அது சாத்தியப்படலாம்.

**“இலத்திரனியல் கழிவுகள் அற்ற**
**எதிர்காலத்தை உருவாக்குவோம்”.**

**க.பிரியநிலுக்ஷினி**
**இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு**
**மெய்யியல் சிறப்பு (2021/2022)**

# Academic Staffs



Mr. V. Alagaratnam, HOD
B.A. (Hons.) (EUSL), MLIS (Col), M.Phil. (UOJ), PGDE (OUSL), CTHE (Col).
Senior Lecturer-Gr. I



Mr. M. Ravi
B.A. (Hons) (EUSL). UPDN, M.Phil (UPDN).
Senior Lecturer-Gr.I



Dr. S. Jeganathan
B.A. Hons. ((EUSL).Ph.D in Philosophy; (Annamalai University))
M.Phil (UPDN), PGD in Psychology (UPDN)
Senior Lecturer-Gr. I



Dr. R. Premkumar
B.A.(Hons.) (EUSL), M.A. (Annamalai University), Ph.D. (Madras University)
Senior Lecturer- Gr.I



Mr. Marimuthu Prahasan
BA. Hons (EUSL), MA (TUNE),
Dip in Counselling (NISD), Reading Ph.D
Senior Lecturer- Gr.II



Ms. N.R. Jancy Rosairo
BA. Hons (EUSL), MA (Reading)
Assistant Lecturer

# Degree in Philosophy (2018/2019)



T.Paraskanth



T.Tharshankumar



Abdhulla Mohammed Issath



R. Priyanka Tharshini



K. Thanujika



S. Gopika



P. Vithushika



A. Panuja



J. Jethusha



R. Ramani



T. Nimesha



N. Vijaynanthini



T. Sutharsika



V. Krishanthy

## Those who have authored articles for this volume from 2019/2020 Batch



D. Romitta



S.A.G.F.Zuha



P. Vidhurshani



S. Geethanjali



M.N.F.Zainab



P. Dharshani



P. Keerthana

# Those who have authored articles for this volume from 2020/2021 Batch



T. Hamsaliya



T. Haranya



I.R.Karshana



K. Kethusalini



A. Sarothini

## Those who have authored articles for this volume from 2021/2022 Batch



**Thahira Rahman**



**K. Priyanilukshi**